
கீர்த்தனைக் கொத்து : மலர் 1 —

சீர்காழி - அருணாசலக்கவிராயர்

இயற்றிய

இராமநாடகக் கீர்த்தனை



LONGMANS, GREEN & CO.,
167, MOUNT ROAD, MADRAS.
BOMBAY AND CALCUTTA.

1915

Copyright Registered.] [ரிஜிஸ்தர் செய்தது.

1852b

MADRAS.
Reprinted by Thompson & Co., at the "Minerva" Press,
33, Popham's Broadway.



இராமநாடகக் கீர்த்தனை

இயற்றிய

அருணாசலக் கவிராயர்

சரித்திரம்.

சோழதேசத்தில் உள்ள தில்லையாடி என்ற திவ்ய க்ஷேத்திரத்தில், இற்றைக்குச் சுமார் நூற்றெழுபது வருஷங்களுக்கு முன் நல்லதம்பிப்பிள்ளை என்பார் ஒருவர் இருந்தனர். அவர் சைனமதத்திற் பிறந்து, பின் சைவசமயத்திற் புகுந்து சீறுபூசி வேளாளப் பூவைசியர் ஆயினர். அவருக்குக் கற் பொழுக்கம் நிறைந்த வள்ளியம்மை என்பார் மனைவியாக வாய்த்தனர். அவ்விருவரும் முற்பிறப்பிற் செய்த புண்ணிய மூதிர்ச்சியால், இதிகாசங்களுள் ஒன்றாகிய இராமாயணத்தைக் கீர்த்தனையாகப் பாடித் தமிழுலகத்தைத் தமக்குக் கடமைப்படுத்திப் பெரும்புகழ்பெற்ற அருணாசலக் கவிராயர் என்பவர் அவர்களுக்கு அருந்தவச் செல்வக் குமாரராக வந்து திதித்தார். இவருக்கு மூன் பிறந்தார் மூவரிருந்தனர்.

நல்லதம்பிப்பிள்ளை, இவ்வருமந்த குமாரரை, பிறந்த ஐந்தாம் வருஷம், ஐந்தாவது மாதம், ஐந்தாநாளன்று தம் குலமுறைப்படிப் பள்ளிக்கனுப்பி வித்தியாரம்பஞ் செய்வித்தனர். 'வினையும் பயிர் முன்னையிலே தெரியும்' என்ற பழமொழி பொய்யாதவண்ணம் இவர் பன்னிரண்டு வயதிற்

குள், மக்களெனப் பிறந்தார் ஒவ்வொருவர்க்கும் இன்றி யமையாது வேண்டப்படுவனவாகிய சாமானியக் கல்விகளைக் கற்று முடித்தனர். ஆனல், அந்தோ, பாவம்! தம் புதல்வர் பேரும் புகழும் அடைவதைக் கண்டு களிக்கும் பாக்கியம் இலராய், தந்தை தாய் இருவருள் தாய் முன்னும் தந்தை பின்னுமாக இவ்வுலக வாழ்வை நீத்துச் சென்றனர்.

ஆகவே, கவிராயர் பாதுகாப்பு அவரது தமையன்மார் மூவரையும் பொறுத்ததாயிற்று. ஆயினும் அவர் அத் தமையன்மாரது மேற்பார்வையில் இருந்திலர். விதியின் வழி வேறாக இருந்தது. அவ்விதியால் உய்க்கப்பட்டுக் கவிராயர் தம கல்வியை அபிவிருத்தி செய்துகொள்ளுதற்பொருட்டு, தாம் பிறந்த இடத்திற் கருகாமையிலுள்ள தருமபுரம் எனனும் ஸ்தலத்தில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள சைவமடத் திற்குச் சென்று, ஆண்டிருந்த சில தம்பிரான்களிடம், வடமொழி தமிழ் இரண்டையும் கற்றுவந்தார். தமது பதினெட்டாவது வயதிற்குள் அவர் அவ் விருமொழிகளிலும் மிகுந்த தேர்ச்சி யடைந்தார். பிறகு அவர், கிரந்தத்திலும் தமிழிலுமுள்ள சைவாகமங்கள் பலவற்றையும் கற்று வருவாராயினர். அன் றியும் அவர் அம்மடத்திலிருந்த அம்பலவாணக் கவிராய னிடத்தில் தம் தமிழ்க் கல்வியை விருத்திசெய்து அதிற் பூரண பாண்டித்தியமடைந்தார்.

அவரது அதிதீவிர பக்குவத்தையும், அறிவை வளர்ப்ப தில் அவர்க்குள்ள அடங்கா அவாவினையும் உணர்ந்து, அம் பலவாணக் கவிராயர் என்னும் அப்பண்டாரச் சுவாமி அவரை நோக்கி, "நீர் இவ்வாதீனத்தின் தலைமையை வகிக்க ஒருப்படுவீரா?" என்றுகேட்டனர். அதற்கு அருணாசலக் கவிராயர், "சுவாமி! தாங்கள் என்னை ஒரு பொருட்டாக

எண்ணி, இவ்வாறு கூறுங்கால் அடியேன் யாது செய்ய மாட்டுவேன்? ஸ்ரீராமாயணத்தில், தசரத சக்கரவர்த்தி முன்னம் இல்லறத்திலிருந்து பிறகே துறவறத்தை இச்சித்ததாகவும், அவரது திருக்குமாரராக வந்த ஸ்ரீராமபிரானும் சகல ஞானமும் உணர்ந்தும் இல்லறத்தையே கைக்கொண்டிருந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. அன்றியும் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் இயற்றிய தமிழ் வேதமாகிய திருக்குறளில் முன்னதாக இல்லறம் கூறிப் பிறகே துறவறம் கூறப்பெற்றிருப்பதாலும், அடியேனும் அவ்வான்றோர் சென்ற முறையிற் செல்ல விரும்புகிறேன்" என்று விடையளித்தனர். பண்டாரச்சந்நிதி இதைக் கேட்டு "ஆனல் உம் விருப்பப்படியே செய்யும்" என்று சொல்லி அவரை ஆசீர்வதித்தனர்.

ஆயினும் கவிராயர் அப்பொழுதே விவாகஞ் செய்து கொண்டு இல்லறத்திற் புகுந்தாரல்லர். 'விவாகம் வித்யாகாசம்' என்ற ஆன்றோர் வாக்கையும் அவர் அறிந்திருந்தார். ஆதலால், மேலும் சிலகாலம் தேனினும் இனிய தமிழ் மொழியைக் குறைபோகக் கற்றுத் தமிழ்ப் புலமை நிரப்பிக் கொண்டார்.

பிறகு தமது முப்பதாவது வயதில் கவிராயர், கருப்பூரில் தம் இனத்தவரில் ஒரு புண்ணியவதியை விவாகஞ் செய்து கொண்டனர். இதுவரையில் பிரமசரியத்திலிருந்து அறிவீட்டல் ஒன்றிலேயே மனம் பற்றியிருந்த கவிராயர், இல்லறம் புகுந்தபின்னர் அவ்வறத்தைச் செவ்வையாய் நடத்துவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகிய பொருளீட்டுங் கூட்டோடையராயினர். ஆகவே அக்கடப்பாட்டை நிறைவேற்றுவிக்க வேண்டி காசுக்கடை ஒன்று வைத்து வர்த்தகம் செய்துவந்தனர்.

இறைவன் திருவிளையாடல்தான் இருந்தவாறு என்னே என்னே!! கவிராயரது கல்வித்திறம் மழுங்காது, நாளேற நாளேறப் பிறை மதிபோல் ஒளிமிகுந்து ஒருகாலத்து நிறை மதியாகித் தென்னடெங்கும் தண்டமிழ் நிலவுற்று இன்னிலைவிசி விளங்குதற் பொருட்டே போலும் அவர்க்குக் காசுக்கடை வர்த்தகத்தாற் பொருள் வருவாய் விதித்திருந்தது! இத்தொழிலிற் சாவகாசம் மிகுதியும் இருந்தமையால், அவர் அவகாசம் நேர்ந்தபோதெல்லாம், தமக்குமுன் இருந்த தமிழ்ப்புலவர் இயற்றிய நூல்களை ஆராய்ந்து வந்தார். அன்றியும் தம் லௌகீகத் தொழிலில் பொன் முதலிய உலோகங்களை உரையிட்டு மாற்று நிச்சயிப்பது போலத் தாம் ஆராயும் நூல்களையும் தம் மதி நுட்பத்தால் உரைத்து இஃது இத்தனை மாற்று, இஃது இத்தனை மாற்று என்று நிச்சயித்து வந்தனர். அங்ஙனம் மாற்றாராயுங்கால் மற்ற நூல்கள் யாவற்றினும், தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் இயற்றிய திருக்குறளும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இயற்றிய இராமாயணமுமே மாற்றுயர்ந்து விளங்கக் கண்டார். இவ்விரு நூல்களிலுமுள்ள சீரிய தீஞ்சொற்களும் செவ்விய பொருள்களும் அவர் மனத்தைக் கவர்ந்தன.

ஆதலால், அவர் அவ்வரும்பெரும் நூல்கள் இரண்டையும் இடையறாது படித்து வந்தார். அப்பொழுது திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாகச் சங்கப்புலவர் காற்பத்தெண்மரும் பாடிய திருவள்ளுவமாலையில்,

> "எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
> செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்—மூப்பாற்குப்
> பாரதம் சீராமகதை பழையமனுப் பண்டைமறை
> நேர்வனமற் றில்லை நிகர்."

என்ற செய்யுளில் திருக்குறளுக்கு ஒப்பாகச் சொல்லப் பட்ட நூற்களுள் சீராமகதை அதாவது இராமாயணம் ஒன் றுதலை அவர் நோக்கி நோக்கிச் சிந்தித்து வந்தார். அதன் மேல் திருக்குறள் நீதிசாரமெனவும், இராமாயணம் அந் நீதிசாரம் இடையிடையே விரவி நிறைய அதனை ஒப்புயர் வற்ற ஒரு தலைவன்மீதும் தலைவிமீதும் ஏற்றி இயற்றப்பட்ட ஓர் இதிகாசம் எனவும் தெளிந்தார் ; திருக்குறள் இலக்கண மாகவும் அதற்கு இலக்கியம் இராமாயணமாகவும் அமைத் திருத்தலைக் கண்டார். அதனோடு தாம் முன்னமேயே செய்துவந்த நூல் உரைமாற்றுப் பரிட்சையில், திருக்குற ளும் கம்பராமாயணமுமே மாற்றுயர்ந்தனவாகத் தெரிந் தெடுத்து வைத்திருப்பதை உன்னினர் ; பிறகு இவ்விரு நூலுள் எதனை உலகிற்கு எவ்வாறு பயன்படுத்தலாமென்று சிந்தித்தார். அப்போழ்து, திருக்குறள் நீதிசாரமாக நிற்ப தால், பாமரர்க்கு இனிமை பயவாது, பண்டிதர்க்கே பயன் பட்டு வருதலையும், இராமாயணம் நீதிசாரத்தோடு ஒரு புண்ணியசரிதத்தையும் கூறி நிற்பதால் பண்டிதர்க்கும் பயன் பட்டுப் பாமரர் மனத்தையும் கவர்ந்து வருதலையும் உணர்ந் தார். இக் காரணங்களோடு அவர்க்கு இயற்கையாகவே இராமசரிதத்தில் உள்ளம் பற்றியிருந்ததென்பது, அவர் தாம் தருமபுர மடத்தலைமை வகிக்க விரும்பாது இல்லறம் புகுதற்கு ஓர் ஆதாரமாகத் தசரதர், இராமர் இவர்களுடைய சரித்திரத்தை உதாரணமாக எடுத்துக்காட்டியதாலும் பெறப் படும். இங்ஙனம் பலகாரணங்களாலும் அவர் இராமாய ணத்தை உலகிற் பிரபலப்படுத்த வேண்டுமென்ற ஒரு மூடி வுக்கு வந்தார். ஆதலால் அவர் இராமாணத்தையே அதிக மாகப் பயின்றும், பயில்வார்க்குப் போதித்தும், பண்டிதர் பாமரர் நிறைந்த சபைகளிற் பிரசங்கித்தும் வந்தனர்.

இவ்வாறு நிகழ்ந்து வருகையில் கவிராயர் தம் வர்த்தகத்திற்காகப் பொன், வெள்ளி முதலியன கொள்ளவேண்டிப் புதுவைமாநகர்க்குப் புறப்பட்டுச் சென்றனர். எவெனில் அக்காலத்தில் புதுவையில் பொன் வெள்ளி முதலியன நயமிலக்குக் கிடைத்தன. சீர்காழி வழியாகவே புதுவைக்குப் போகவேண்டியிருந்தமையின் அவர் சீர்காழி சென்றதும், அங்கு மடத்தில் தங்கினர். அம்மடம் தருமபுர மடத்தைச் சார்ந்ததாய் இருந்தது. அந்த மடத்திற்கு அப்பொழுது கட்டளைத் தம்பிரானாக இருந்தவர் சிதம்பரம்பிள்ளை என்ற ஒரு கார்காத்த வேளாளர். இவர் தருமபுர மடத்தில், கவிராயரோடு ஒருங்குகற்றவர். இல்லறம்பூண்டிருந்த இவர் பண்டாரச் சன்னிதியின் ஏவலால் துறவுபூண்டு சீர்காழிமடத்திற்குக் கட்டளைத் தம்பிரானாக வந்திருந்தார்.

சிதம்பரம்பிள்ளையும், அருணாசலக்கவிராயரும், ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து நெடுகாளாயினமையின், இப்பொழுது தற்செயலாய்ச் சந்திக்கவும் உவகை மேலிட்டு ஒருவர்க்கொருவர் சேஷமலாபங்களை விசாரித்தனர். பிறகு சிதம்பரம்பிள்ளை தாம் அம்மடத்துக்கு வந்தபிறகு கட்டளை வருவாய் முன்னையினும் அதிகமாயினதெனவும் அதன்மேல் தாம் கட்டளைமாலை என்று ஒரு சிறு நூல் பாடியிருப்பதாகவுங் கூறி, அந்நூலை அருணாசலக் கவிராயர்க்குக் காட்டினர். அவர் அதனைப் படித்துப் பார்த்துவிட்டுத் தமது நல்லபிப்பிராயத்தினைத் தெரிவித்து ஒப்பமிட்டார். பிறகு சிதம்பரம்பிள்ளை, கவிராயரிடம் தாம் சீர்காழித்தலத்திற்கு ஒரு *பள் பாடுவதற்காகப் பீடிகை போட்டதாகவும், ஆனால் பலவகை

* பள் என்பது, உலா, மடல், பரணி என்பனபோல ஒருவகைப் பிரபந்தம்.

அனுவல்களால், அதை நிறைவேற்றத் தமக்கு அவகாசம் கிடைக்கவில்லையெனவும் தெரிவித்து, அதை இருந்து முடித்துக் கொடுத்துவிட்டுப் போகவேண்டுமெனவும் கவிராயரை வேண்டி, தமது பிடிகையையும் அவரிடம் கொடுத்தனர்.

அருணாசலக் கவிராயர், அன்றிரவிலேயே அந்தப் பிரபந்தத்தைப் பாடி முடித்துவிட்டு, மறுநாள் அதிகாலையில் எழுந்து கட்டளைத்தம்பிரான் அடியார்களுள் ஒருவன் வசம் அதைக் கொடுத்து அதைத் தம்பிரானிடம் சேர்த்துவிடுவதோடு, தாம் அவசர காரியமாய்ப் புதுவை செல்லவேண்டியிருக்கிறதாகவும், ஆதலின் அங்குச் சென்று திரும்பி வருங்கால் மடத்தில் தங்குவதாகவும், தம்பிரானுக்குத் தெரிவிக்கும்படி சொல்லிவிட்டுப் புதுவைக்குப் புறப்பட்டுப் போய்விட்டனர்.

தம்பிரான், பொழுது விடிந்ததும் தம் நண்பர் முடித்திருந்த பள்ளுப் பிரபந்தத்தைக் கண்டும், அவர் புதுவைக்குச் சென்று விட்டசெய்தியைக் கேட்டும் மிகவும் ஆச்சரியமுற்றார். கவிராயர் திரும்பிவருவதற்குள் அவரைச் சீர்காழியிலேயே தங்கச்செய்யவேண்டும் என்ற விருப்பம் தம்பிரான் மனத்தில் தோன்றியது. உடனே தம்பிரான் தம் நண்பருக்கென்று பெரிய வீடொன்று சித்தம் செய்து, தில்லையாடிக்கு ஆள் அனுப்பி அவர் குடும்பத்தாரை, அவரே அழைப்பதாகச் சொல்லி சீர்காழிக்கு அழைப்பித்து அவ்வீட்டில் அவர்களைக் கிரகப்பிரவேசம் செய்வித்தனர்.

புதுவைக்குச் சென்ற கவிராயரோ, தம் காரியத்தைச் சில நாட்களில் முடித்துக்கொண்டு திரும்பி வருங்கால், முன்னடியாணிடம் கூறிச் சென்றபடி சீர்காழி மடத்தில் வந்து

தங்கினர். சிதம்பரத்தம்பிரான் தம் கண்பரைக் காணவும், தம்மிடம் சொல்லிக்கொள்ளாமல் அவர் புதுவைக்குப் போனதைப்பற்றிச் சிறிது சலித்துக்கொண்டு பின் உலாவப் போகிறவர்போல் அவரையும் உடன் அழைத்துக்கொண்டு அவர் குடும்பத்தார் உறையும் புதுமனைக்குச் சென்றார். தம்பிரானோடு, கவிராயர் அம்மனைக்குள் நுழைந்தபோது, தம்மனைவி தம்மை எதிர்கொண்டு வரக் கண்டார்! அவர் கொண்ட ஆச்சரியத்திற்கு ஓர் அளவில்லை. பிறகு அவர் தமது மனைவி மூலமாகவே தாம் புதுவைக்குச் சென்ற பிறகு நடந்தவை அனைத்தையும் அறிந்துகொண்டார். இனி என்றும் தம் குடும்பத்தோடு சீர்காழியிற்றானே வசித்து வரும்படித் தம்பிரான் அவரை வேண்டிக்கொண்டார். அவரும் அவ்வேண்டுகோளுக்கு இணங்கி அதுமுதல் சீர்காழியிலேயே வசித்து வந்தார். அன்று முதலே அவர்க்குச் சீர்காழி-அருணாசலக் கவிராயர் என்ற திருநாமம் வழங்கி வருவதாயிற்று.

கவிராயர் சீர்காழியில் வசிக்கையில் தம்பிரானுக்குப் பாடிக்கொடுத்த தனிக்கவிகள் அநேகம். அவைகளே யல்லாமல், தமக்காகவே பாடிய நூல்கள் பல. அவையாவன, அசோமுகி நாடகம், சீர்காழித் தலபுராணம், சீர்காழிக் கோவை, அனுமார் பிள்ளைத்தமிழ் முதலியனவாம். இதுநிற்க.

சீர்காழிக்கடுத்த சட்டநாதபுரம் என்னும் கிராமத்தில், அக்காலத்தே, வேங்கடராமய்யர், கோதண்டராமய்யர் என்று இரண்டு பிராமணர்கள் இருந்தார்கள். அவர்கள் சங்கீத சாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவ்வி வரும் நமது கவிராயரை அடுத்து அவரிடத்தில் மு னதாகச் சில சிறு நூல்களைக் கற்றுப் பிறகு கூம்பார் அ

னிச்செய்த இராமகதையைப் பாடங்கேட்டு வந்தனர். அப் பொழுது, ஒருநாள் அவர்கள் தம் தமிழாசிரியரை நோக்கி, "ஐய, தாங்கள் இதுகாறும் வெளிப்படுத்தியுள்ள புராணம், கோவை முதலிய நூல்களால் தங்கள் பெயர் எங்கும் பரவவில்லை. ஆதலால் தாங்கள் இதிகாசம் இரண்டனுள் ஒன்றைத் தெரிந்தெடுத்து அதை ஒருவகைப் பிரபந்தமாகச் செய்து முடித்தால் நல்லது" என்று கூறினர்.

அதன்மேல், அருணாசலக் கவிராயரும் "இவர்கள் சொல்வது உண்மையே. நாமும் முன்னமேயே சகல நூல்களிலும் இராமாயணமே சிறந்ததென்றும் ஆதலால் அதையே ஒரு பிரபந்தமாகச் செய்து முடிப்போம் என்றும் தீர்மானித்திருக்கிறோம். அதை விரைவிற் செய்து முடிப்போம்" என்ற முடிவுக்கு வந்தார். இனித் தீர்மானிக்கவேண்டியது, தாம் தெரிந்தெடுத்த அவ்விராமாயணத்தை எவ்வகைப் பாவால் எவ்வகைப் பிரபந்தமாகச் செய்வதென்பதே. கம்பர் முன்னமே இராமாயணத்தை விருத்தப் பாவாற் பாடி முடித்திருந்தார். அவரையன்றி பாலபாரதியார் என்பார் ஒருவர் அதனைச் சந்த விருத்தமாக இயற்றியிருந்தனர். மற்றும்பலர் பலவாறுகச் செய்திருந்தனர். அவைகளின் வேறுக வேறெவ்வகையில் தாம் தெரிந்தெடுத்த நூலை இயற்றலாமென்று கவிராயர் சிந்தித்தார். அப்பொழுது கீர்த்தனையாக இயற்றினால் நலமென்று அவர்க்குத் தோற்றியது. அதற்கு அநேக காரணங்கள் அனுகூலமாய் இருந்தன. முதலாவது, அதுவரையில் இராமாயணத்தைக் கீர்த்தனரூபமாகச் செய்தவர் ஒருவருமிலர். இரண்டாவது, தாம் இயற்றும் கீர்த்தனைகளுக்கு இராகதாளங்களை நிச்சயிப்பதற்குத் தம்மிடம் இயற்றமிழ் கற்று

வரும், இரு சங்கீத வித்வான்களும் வேண்டிய உதவிபுரி வார்கள். மூன்றாவதும் முன்னைய இரண்டினும் அதி முக்கியமான தொரு காரணமும் என்னவெனில், பண்டு தர்க்கே பெரிதும் பயன்படக்கூடிய கம்பராமாயணம் போலல் லாமல், கீர்த்தனை, பெண்களும் பேதையரும் கூடப் படித் தானந்திக்கத்தக்கது. இக் காரணங்களால் கவிராயர் இராமாயணத்தைக் கீர்த்தனையாகப் பாடத் தொடங்கினர். முதன்முதல் அவர், யுத்தகாண்டத்தில் 'அடடா வெளியே புறப்பட்டார்' என்ற கீர்த்தனைவரையுமே பாடித் தம் பிராமணசீஷர்கள் இருவரிடத்தும் கொடுத்தனர். அவர்கள் அக் கீர்த்தனைகளுக்கு இராகதாளங்கள் அமைத்துக் கொடுத்தது மன்றி, சென்னைக்குச் சென்று அவைகளைப் பாடிப் பரிசு பெற்றனர்.

சிலகாலத்திற்குள் கவிராயர் கீர்த்தனைகள் தமிழ் நாடெங்கும் பிரபலப்படுவதாயின. அதனால் ஊக்கமுறுத் தப்பெற்றும் தமது பிராமண சீஷர்களால் மேலும் தூண் டப்பெற்றும் கவிராயர் இராமாயணத்தின் எஞ்சிய பாகத் தையும் கீர்த்தனைகளாக்கி, யாவற்றையும் சேர்த்து ஒரு கோவைப்படுத்தி என்று மழியாப் பெருமைவாய்ந்த இராம நாடகக் கீர்த்தனை என்னும் நூலை உலகிற் களித்து ஒழியாப் புகழ்க்கு உரியராயினர். இத்தகைய பெரும் புகழ்க்குச் சாதனமாக அக்கீர்த்தனைகளுள் காணப்படும் நலங்கள் பல வற்றில் சிறந்தவை இரண்டு. அவையாவன' அவைகள் எல்லோரும் எளிதிலறிந்து ஆனந்திக்கத்தக்க இனிய எளிய நடையில் வாய்ந்திருப்பதும், கவிச்சக்கரவர்த்தியா கிய கம்பர் இயற்றிய இராமாயணத்தையே பெருதும் பின் பற்றி அவர் பதப்பிரயோகங்களையே பெரும்பாலும் கொ ண்டு இயன்றிருப்பதுமே. இதுநிற்க.

நூல் முடித்தபிறகு கவிராயர் அதை அரங்கேற்ற விரும்பினர். முன்னம் கம்பர் தாம் பாடிய இராமாயணத்தை சீரங்கம் என்னும் ஸ்தலத்தில் அரங்கேற்றினது ராதலால் தாமும் தமது நூலை அங்கு அரங்கேற்ற எண்ணி அங்குச் சென்றார்.

அப்பொழுது சீரங்கநாயகர் திருக்கோவிற்முறையார்கள் கவிராயரை நோக்கி, "ஐயா, பூர்வம் கம்பநாட்டாழ்வார், இராமாயணத்தைப் பாடி, அதை பூர்வாசாரியராகிய ஸ்ரீமந் நாதமுனிகள் திருமுன்னர் பிராட்டியார் சந்நிதானத்தில் பெருமாள் எழுந்தருளியிருக்க அரங்கேற்றினார். அக்காலத்தில் பல தருணங்களில் பல அற்புதங்களை அவர் உலகத்துக்குக் காண்பித்தார். அவர் பாடிய நூலையே நீர் கீர்த்தனையாகப் பாடியிருக்கிறீர். ஆதலால் பெருமாள் எங்களுக்கு உத்தரவு கொடுத்தால் நாங்கள் இதை இங்கு அரங்கேற்றச் சம்மதிப்போம்" என்றார்கள்.

அதன்மேல் கவிராயர் ஏகாந்தமாக ஓர் இடத்திலிருந்து ஒரு கீர்த்தனையால் சீரங்கநாயகரை ஸ்தோத்தரித்தார். அக்கீர்த்தனை வருமாறு:—

தரு - மோகன ராகம். ஆதி தாளம்.

பல்லவி.

என்பள்ளிகொண்டீர் அய்யா-ஸ்ரீரங்கநாதரேநீர்
என்பள்ளிகொண்டீர் அய்யா

அனுபல்லவி.

ஆம்பல்பூத்தசயபருவதமடிவிலே அவதரித்த
இரண்டாற்று நடுவிலே.

சரணங்கள்.

1. கோசிகன்சொல்குறித்தற்கோ-அரக்கி சூலையில் அம்பு தொடுத்ததற்கோ
ஈசன்வில்லைமுறித்ததற்கோ-பரசு ராமன்உரம்பறித்ததற்கோ
மாசிலாதமிதிலேசன்பெண்ணுடன் வழிநடந்தஇளைப்போ
தூசிலாதகுகன்ஓடத்திலேகங்கைத் துறைகடந்தஇளைப்போ
மீசரம்ஆம்சித்ரகூடச்சிகரக்கல் மிசைநடந்தஇளைப்போ
காசினிமேல்மாரீசன்ஓடிய கதிதொடர்ந்தஇளைப்போ-ஓடிக்
கலைத்தோதேவியைத்தேடி இளைத்தோமரங்கள்ஏழும்
தொளைத்தோகடலைக்கட்டி வளைத்தோஇலங்கையென்னும்
காவல்மாநகரை இடித்தவருத்தமோ
ராவணன்திகிலே அடித்தவருத்தமோ (என்)

2. மதுரையிலேவரும்கலையோ முதலே வாய்மகனைத்தரும்கலையோ
எதிர்எருதைப்பொருங்கலையோ கன்றை எடுத்தெறிந்தபெருக்கையோ
துவை ஆனமுலை உண்டுபேயின்உயிர் போக்கிஅலுத்தீரோ
அதிரவோடிவரும்குருவிவாயைஇரண் டாக்கிஅலுத்தீரோ
துதிசெய்காலிஞல்காளிங்கன்மணிமுடி தாக்கி அலுத்தீரோ-மருதம்
சாய்த்தோ ஆடுமாடுகள் மேய்த்தோசகடுலே
தேய்த்தோகஞ்சன்உயிரை மாய்த்தோ அர்ச்சுனனுக்காச்
சாரதியாய்த்தேர் விடுத்தவருத்தமோ
போரிலேசக்கரம் எடுத்தவருத்தமோ (என்)

3. படிதனிலேமெத்தவும்நானே உம்மைப்பரம்எனவேஅடுத்தேனே
அடிமைகொள்வீர்என்னைத்தானே செம்பொன்அணிஅரங்கப்பெருமானே
தடம்உறைந்தகரும்பாறைசாபமது தடுத்துரட்சித்தீரே
விடஒண்ணுதகாகாசுரனுக்கொருகண் விடுத்துரட்சித்தீரே
கொடுமைகொண்டமூததுரோபதைக்குத்-துகில்கொடுத்துரட்சித்தீரே
மடுவில்ஆனைமுன்ஓடிமுதலையை மடித்துரட்சித்தீரே-அதுபோலே
வாரும்திருமைக்கண்ணுலே பாரும்மனக்கவலை
தீரும்எனைத்தவரம் தாரும்தாரும்என்சாமி
வட்சமேவும்மக வட்சுமியுடன்பெரும்
பட்டம்அகனன்னே ரட்சிக்கஎழுந்திரும் (என்)

இக்கக் கீர்த்தனையால் பெருமாள் திருவுள்ளம் உவந்து, கவிராயர் சொப்பனத்தில் ஒரு வைஷ்ணவரைப்போல வந்து "இராம நாடகம் இயற்றிய இன்றமிழ்ப் புலவரே, பூர்வம் கம்பர் தாம் பாடிய இராமாயணத்தை அரங்கேற்ற வந்தபொழுது 'நம் சடகோபனைப் பாடினையோ?' என்று பெருமாள் கேட்டார். அப்பால் அவர் நம்மாழ்வார்மீது ஒரு கல்லந்தாதி பாடினர். பிறகே அவர் இயற்றிய இராமாயணம் அரங்கேறியது. அவ்வாறே நீரும் உமது நாடகத்தில் நம்பெருமாளின் பரிசனங்களைப் பாடினால் உமது நூல் அரங்கேறும்" என்று கூறி மறைந்தருளினர். பிறகு அன்றிரவே கோவிற் றுறையார்களுக்கும் பெருமாள் வைஷ்ணவர் வடிவாகச் சொப்பனத்தில் தோன்றி "கவிராயரால் நம் பரிசனங்களைப் பாடுவித்துக்கொண்டு அவர் இயற்றியுள்ள இராமநாடகத்தை அரங்கேற்றச் செய்யும்" என்று கூறி மறைந்தருளினர்.

மறுநாள் பொழுது விடிந்தபிறகு கவிராயரும் கோவிற் றுறையாரும் சந்தித்துத் தாம்தாம் கண்ட சொப்பனங்களைக் கூற, ஒன்றுக்கொன்று பொருத்தமுற் றிருப்பதுணர்ந்து "இறைவன் திருவுளம் இதுவாகும்" என்று அறிந்து கொண்டார்கள்.

பிறகு கவிராயர் தம் நாடகத்திற்குத் 'தோடயம்' பாடி, அதில் பெருமாளின் பரிசனங்களாகிய அனந்தகருட விஷ்வசேனர், பஞ்சாயுதங்கள், ஆழ்வார், ஆசாரியர்கள் ஆகிய அனைவரையும் அமைத்தார். *

* தோடயத்தில் அமைத்துள்ள விநாயகர், ரங்கநாயகர் கோவிற் பரிவார தேவதைகளுள் ஒருவர். பாயிரத்துள் கூறியுள்ள விநாயகர். சேனை முதலியார் பரிவாரத்துள் ஒருவர்.

அப்பால் அவர் தூல், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இயற்றிய இராமாயணம் அரங்கேற்றப்பட்ட திருமண்டபத்திலேயே, பங்குனி அஸ்தமாகிய அதே திருகட்சத்திரத்தில் திருவரங்கத் திருமுற்றத்து அடியார்சபை நடுவே முதன் முதல் அரங்கேற்றப் பெற்றது. அக்காலை, அக்கோவிலார் கவிராயர்க்குச் செய்த மரியாதைகளும், சிறக்கத் தந்த பரிசுகளும் பல.

பிறகு, கவிராயர் தஞ்சாவூர் சமஸ்தானாதிபதி ஆகிய துளசி மகாராஜாமுன் தமது காடகத்தை அரங்கேற்றச் சென்றார். அச்சமயம் தஞ்சைக்கோட்டை சென்னாகர் கவாப்பாயிருந்த மதார் மல்க்கின் தாணையால் முற்றுகையிடப்பெற்றிருந்தது. ஆதலால் கவிராயர்க்கு அரசரைக் காண ஏது வில்லாதுபோயிற்று. ஆகவே கவிராயர் புதுவை நகரத்திலிருந்த ஆனந்த ரங்கப்பிள்ளை யென்னும் ஒரு பிரபல பிரபுவின் முன்னிலையில் தமது தூலை அரங்கேற்றக் கருதி, அவரிடம் சென்றார்.

ஆனந்த ரங்கப்பிள்ளை, துளசி மகாராஜர்க்கு அத்யந்த நண்பர். ஆதலால் தமது நண்பர் கேட்பதற்முன் தாம் கேட்பது தகாதென்று மறுத்துவிட்டார். ஆயினும் அவர், கவிராயர்க்குப் பலவகையான வெகுமதிகள் செய்து, சென்னையிலிருந்த தமது நண்பர், மணலி-முத்துகிருஷ்ண முதலியாருக்கு ஒரு தகவுரைப் பத்திரிகை (சிபார்சுக்கடிதம்) எழுதிக்கொடுத்து அவரிடம் அனுப்பினர்.

கவிராயர் அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு சென்னைக்குச் சென்றார். சென்னையை அடைந்ததும், மணலி-முத்து கிருஷ்ணை முதலியாருக்கு வந்த ரங்கப்பிள்ளையின் கடி-

தத்தை அனுப்பினர். அதனோடு பின்வரும் சீட்டுக்கவியை யும் எழுதி யனுப்பினர் :—

சித்திதரு நிறவல்லி புத்திதரு நிறவல்லி தேவர்கள் வணங்கும்வல்லி
நல்லோநா யக்வல்லி சிவகாம வல்லிஇரு திருவிழிக் கருணையாலே
சத்தியவா சகன்என்று பூமண்ட லாதிபர்கள் தாம்எங்கணும் துதிக்கும்
சகலபா ஷாகவி புண மணிலிமுத் துகிருஷ்ண சதுரர் வாழிகண்டாய்
நத்துமலர் குவளைநான் மதியம்நீ செஞ்சாலி நான்சருவி மழைமேகம்நீ
கனிஎம்நான்பரிதிநீபிள்ளைநான்அன்னைநீநான்கவிஞன்வழுதிநீகாண்
சுத்தமுன ராமாய ணத்தினைக் கொண்டுனது சுகமுமது பெறவருகின்றேன்
சொற்பொருள் அறிந்தளவு செல்லுவேன் கேட்டவே தணைய வேணுமிதமே.

இதை, முதலியார் அங்கீகரித்துக், கவிராயரைத் தம்மி டத்துக்கு அழைப்பித்து தக்க மரியாதை செய்தார். கவி ராயர், "ஐய, அடியேன் ஸ்ரீ ராமசரிதத்தைக் கம்பர் இயற் றிய இராமாயணத்துக் கிணங்க, கீர்த்தனரூபமாக இயற்றி யிருக்கின்றேன். அதைத் தங்கள் சமூகத்தில் கூற விரும்பு கிறேன்" என்றார். அப்போது முதலியார், கவிராயரை நோக்கி, "ஐயா, இகாலத்துக்கு முன் இருவர் பிரா மணர்கள் இராமநாடகம் ஒன்றைக் கொண்டுவந்து இங்கே பாடினர்களே, அதுதானே இது?" என்று கேட்டார். கவி ராயர் அதுவும் நான் பாடியதுதான்; ஆனால் அது இராமா யணத்தின் ஒருபாக சங்கிரகம். அதையே இப்பொழுது விரித்து முடிவுவரையிற் பாடியிருக்கிறேன்" என்றார்.

அதன்மேல் முதலியார் "அப்படியானால் தாங்கள் அதைப் பிரசங்கிக்கலாம்" என்றார். கவிராயர், அந்தப் பாடியே பலர் கூடிய சபையில் தமது இராமநாடகக் கீர்த் தனையை விரித்துப் பிரசங்கித்தார். ஸ்ரீராமர் பட்டாபிஷே கம் பிரசங்கம்செய்து முடிவுமெற்றபோது, முத்துகிருஷ்ண

முதலியார் அவருக்குப் பலவகையான பரிசுகள் கொடுத்து மரியாதை செய்தார். அதன் சிறப்பு, கவிராயர் பாடிய இன்வரும் செய்யுளால் விளங்கும்.

கணம்தந்தான் கனகாபி ஷேகந் தந்தான்
களங்கம்இல்லாக் கருப்பொருளே அழைத்துத் தந்தான்
மனம்தந்தான் முடிசூட்டி மாலை தந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசை தந்தான்
இனம்தந்தான் ராமகதை எவர்க்கும் தந்தான்
எனைராமா யணக்கவிஞன் எனப்பேர் தந்தான்
அனம்தந்தான் மணலிமுத்து கிருஷ்ண பூபன்
அகம்தந்தான் இருமையிலும் சுகந்தந் தானே.

இவ்வாறு மணலி முத்துகிருஷ்ண முதலியாரால் சன்மானிக்கப்பெற்ற கவிராயர், அப்பால் லிங்கப்பச் செட்டியார், என்பாருடைய குமாரர் தேப்பெருமாள் செட்டியாருக்குப் இன்வரும் சிட்டுக்கவி யொன்றை எழுதியனுப்பினர்.

கணிகொண்ட பஞ்சலட் சணமும் ராமாயணக்
கடலையும் உணர்ந்த புலவன்
கவிராசர் புகழ்கின்ற காழி அருணைசலக்
கவிராயன் எழுதும் ஓலை
மணிகொண்ட மார்பிலிங் கப்பமகி பாலன்
மகிழ்ந்த சுதன் வணிகாதிபன்
வருஞ்சீர் படைத்ததேப் பெருமாள்ம கீபன்இதை
மனமுவந் தினிது காண்க
அணிகொண்ட தியாகேசர் வண்ணமுரை செய்ததும்
அதற்கு வெகுமதி செய்ததும்
அதிகமக் குபகார மானதும் இப்புவியில்
அறியாத பேரு முளரோ

பணிகொண்ட ராமகீர்த் தனையும்அப் படியே
பரிந்துநீ கேட்க வேணும்
பாரில்ஒ ராயிரம் பிறைகண்டு நீபொருள்
படைத்து வாழ்ந்திடுக மாதோ.

இக் கவிதையைக் கண்ட செட்டியார் கவிராயர்க்குத் தக்க பரிசளித்து மரியாதை செய்தார். இது நிற்க.

மதார்மல்க் ஈவாப்பும் துளசிமகாராஜாவும் ஒருவர்க் கொருவர் சமாதானப்பட்டார்கள். ஆதலால் கவிராயர் துளசி மகாராஜரையும், அப்பால் ஒரு பஞ்சரத்தின மூல மாய் ஆனந்த ரங்கப்பிள்ளையையும், பின்பு உடையார் பாளையத் துரையாகிய உவாங்கப்புடையாரையும், வேறு சில பாளையப்பட்டுத் துரைகளையும் கண்டு, தமது ஸ்தல அவர்கள் முன்னிலையில் பிரசங்கித்து அவர்களால் பல கௌரவப் பரிசுகள் பெற்றார்.

இங்ஙனம் இவர், தாம் ஈட்டிய பொருளைக்கொண்டு சீர்காழியில் தானே இருந்து குடும்ப சம்ரக்ஷணை செய்து வந்து விகாரிஷ ஆனிமீ இறைவன் திருவடி சேர்ந்தார்.

கவிராயர், தலையில் தாழ்வடம், இடையில் வெள் ளாடை, மேனியில் திருநீற்றுப்பூச்சு முதலிய சிவசின்னங் கள் பூண்டு, சைவப்பண்டாரக் கோலத்தோடு விளங்கினர். இவர் தமது விவாகத்துக்குப்பின் பன்னிரண்டு வருஷம் நில்லையாடியில் வசித்து, அப்பால் சீர்காழியில் இருபத் தைந்து வருஷம் வசித்தனர். உயிர் துறக்குங்கால் இவர்க்கு வயது 67. இவர் தமது 60-ஆவது வயதில் இராமசாடகச் சீர்த்தனைப் பாடி முடித்தனர்.

இவரது சரித்திரக் குறிப்புகள் பல இவர் சந்ததியா ரால் உலகிற் களிக்கப்பெற்றன.

உதவிச்சிறப்பு.

சிற்றேரி-அருணகிரி முதலியார்பேரில்

அருணசலக்கவிராயர் பாடியது.

தரு. புன்னாகவராளி ராகம். ஆதிதாளம்.

பல்லவி.

அருணகிரிவள்ளல்போலே இசை ஆர்பெற்றார் இத்தபுவிமேலே

அனுபல்லவி.

தெருண்மிகுத்திடு தீரன்-சிற்றேரிஎன்னும்ஊரன்
அருஞ்செங்குவளைத் தாரன்-அற்புதம்சேர்வசீரன்
ஆழிசூழ்உலகம்எழும்மதித்திட உற்ற
வாழ்வினுல்உயர்வு சூழ்வுறலிலக்கப்பெற்ற (அரு)

சரணங்கள்.

1. சண்பைஅருணசலப் பண்புறுகவிஞன்சொல்
திண்பெறுராமநாட கம்பெருகப்புவிமேல்
தன்இதயத்துள் மதித்துப்-புலவர்களால்
நன்னயம்ஆகச் சோதித்து-இசைதாளங்கள்
முன்னிலும்பாங்கா யமைத்து-நற்சரஸ்வதி
என்னும்அச்சினிற் பதித்து-விளங்கச்செய்த
இன்னிலும்நற்சுவையைத்தரும் அற்புதசொற்புகழ்விற்பனம்உற்றிடு
சசன்மீதுமலர் வீசியசுகந்தமாரன் [கொற்றவன்
மாசிலாதநிதி பூசிதமிகும்குபேரன் (அரு)

2. தேசமையும்செங்கோல்வி லாசமாகடத்தும்
ராசர்களும்புகழ்ந்து பேசவாழும்புருஷ
சிங்கம்எ னும்கெம்பீரன்-குளோதிங்குபோர்டில்
தங்கிய விவகாரன்-பலபாஷாப்பிர
சங்ககன ஒய்யாரன்-பலம்கொள்சது
ரங்கதள வில்வீரன்-தீனவிசிஷ்ட
அத்துவி தப்பரிசுத்தன் எவர்க்கும்அனைக்கு நிகர்த்தமனத்தன் அனைத்
காதிபன்கனக சோதிமுடிபுனைதூயன் [துல
வேதமும்துதிசெய் மாதவனைநினைநேயன் (அரு)

3. தலத்தினில்உயர்ந்தசன் னலத்தைஉற்றிடும்கங்கா
குலத்தினில்அவதரித்து சுலட்சணம்உற்றமிகு
சத்வகு ணவிலாசன்-முத்துபூபன்த
வத்தில்உ தித்தபாலன்-மாதாமகிழ்வி
சித்திரஇங் கிதலோலன்-செல்வம்நிறைந்த
நீத்தியமங் களசீலன்-மனதில்என்றும்
நிர்ப்பயம்உற்றிடு சற்சனர் மிக்கவி யப்பின் உரைத்துமதிக்கும் அருட்
நீடுமேருஎன நாடுபுயசுந்தரன் [கடவ்
ஈடிலாதபுகழ் கூடியசுதந்தரன் (அரு)

உதவிச் சிறப்பு.

மண்ணடி

வேங்கட சுப்பராய பிள்ளை பேரில்

அருணாசலக்கவிராயர் பாடியது.

கியால்மெட்டு.

தரு. பைரவி ராகம். அடதாள சாப்பு.

பல்லவி.

இப்போதே அழைத்துவா போடி சேடி நீபோய்.

ஒப்பில்லீராசாமிசெய்த வப்பயன்எல்லாம்உருக்கொ
டிப்புவியில்வந்ததெனும் சுப்பராயமகிபனே(இப்)

ஆவலுடன்பாடிவரும் பாவலர்க்கருள்கரனே
மாவலமைஉடையோனே கோவைசியசிகாமணியை(இப்)

நீடியபுகழ்சேர்ஆயர் பாடிவளர்கண்ணன்அடி
காடியமலர்சூடி இசை பாடியகுணகரனே(இப்)

ஓங்குபுகழ்கெவர்ன்மெண்டு பாங்கியில்டிப்டிமானேஜர்
வேங்கடாசலசெட்டியார்பாங்கனே இன்றிங்கென்முன்னே(இப்)

முத்தமிழிலுல்உயர்வு பெற்றபுலவோர்கள்இடர்
உற்றசமயத்தினில் அடித்துசெய்சகாயனே(இப்)

ஆரம்எறிகடல்சூழும் பார்உள்ளோர்புகழும்எழு
மூரினில்வாழ்ந்திடும்முல்லைத் காரனேஉதாரனே(இப்)

சென்னைபுரிமன்னிவளர் நன்னயக்கவுண்டர்ண்டு
சென்னல்ஆபீஸ்தன்னில்மிகு உன்னதஉத்தியோகனே(இப்)

மாபாவிகளைக்கொன்றேஇப் பூபாலனம்செய்யதெவ்
வீபாலன்வளர்ந்ததந்த கோபாலகுலமணியை(இப்)

உதவிச்சிறப்பு.

அக்கம்மாள்பேட்டை

வேங்கடாசல செட்டியார்பேரில்

அருணாசலக்கவிராயர் பாடியது.

தரு. தோடி ராகம். ஆதிதாளம்.

பல்லவி.

செய்தால்புலவர்க்கேசகாயம் செய்தகவிபெறுதல்நியாயம்.

அநுபல்லவி.

செய்யேஅனம் சேர் அக்கம்மாள்பேட்டைவாழ்
செயமுத்துவேங்கடா சலசெட்டியார்குமாரா
மெய்யேஉருக்கொண்டு வந்தஎன்னவந்த
வேங்கடாசலதீரா ஓங்கும்புகழ்கெம்பீரா
வீரா அரிவையர் மனமகிழ்மாரா
காராகரம்உள கன்னுவதாரா. (செய்

சரணங்கள்.

1. சிதமதிவதனின் ஏதமிலியகங்கன்
செய்தசகாயம்தன்னை மதித்து-பவனந்தி
நிறந்தனன்னூலில் அவன் இறந்தும்இறவாமலே
செய்தானே பாயிரத்துள் [illegible]

தீதில்அருணகிரி நாதருக்குபகாரம்
செய்துமனமகிழத் துதித்து-பிரவுட
தேவமகாராயனும் மேவித்திருப்புகழில்
திகழ்ந்திருக்கப்பெற்றுன்பார் கதித்து-நாளும்

கோதிமொழிகள்ராக வீணைப்போலமொழியும்சீலா
குணசிகாமணிஎன எவரும்புகழும்மேலா
குணமில்பரமலோ பியர்பிரதிகூலா
குணம்உடையபுலவர் குலபரிபாலா (செய்)

2. சங்கையில்லாமல் அந்த கொங்கராயர்முன்செய்
சகாயத்தினல் அல்லவோநற்றூர்-வில்லிபுத்தூராள்
சந்திரசூரியர்உள்ள அளவும்தம்புகழ்நிற்க
சயபாரதத்தில்பாடப்பெற்றூர்-கார்போற்சொரியும்

அங்கைஉடையதிரு வெண்ணெய்நல்லூர்ச்சடை
யப்பமுதலியாரும் கற்றூர்-கம்பருக்குமூன்
அகம்மகிழ்ந்திடவேச-காயம்செய்தேராமா
யணத்தில்என்றைக்கும்நிலை யுற்றூர்-ஆகலிணலே

மங்களம்ஆம்செந்தேன்றி மாலைமருவும்மார்பா
வையியகுலம்இலங்க வந்துதித்திடும்தீபா
மதுரம்ஒழுகமிருது மொழிபகர்பூபா
வரும்இரவலர்மகிழ அருள்பிரதாபா (செய்)

3. அழிவில்வேதங்கள்ஓதிக்-கிழிஅறுத்திட்டபெரி
யாழ்வாருக்கோர்சகாயம் புரிந்து-பல்லாண்டிஸ்
அகன்றஉலகீரேழ்உள்ளளவும் செல்வரம்பியும்
அமர்ந்திருக்கின்றுன்புகழ் விரிந்து-எங்கும்நிறைந்த

வழுவில்மாயவன் பால்வாள் வலியால்மந்திரம்கொண்டு
மங்கையர்கோனுக்குமுன் பரிந்து-சகாயம்
மகிழச்செய்தேபல்லவ ராயன்திருமொழியில்
வாழ்ந்திருக்கின்றன் நீபார்தெரிந்து-ஆன்னமும்சொல்வேன்

ஒழிவில்லாமல்உல கோருக்களித்துச்சொன்னம்
ஓங்குகவிபெற்றுரே உலகில்பிரபுக்கள்முன்னம்
உடல்பொருள்களவையும் நிலையிலின்னம்
உறுதியிதுவேறுவேறு துதியிலின்னம் (செய்)

4. சுவமன்மதனைப்போல்உருவம்இருந்தென்சௌபாக்கியம்
நலம்இருந்தென்னன்றுள்ளம் வைத்தாய்-பாடும்
நாவலமைஉடைய பாவலர்க்களித்துப்பா
நாம்கொள்வோம்என்றனந்தம் உற்றாய்-இந்தப்

புவியில்இப்படிசெய்தகவிகள்பெற்றார் என்றுன்தன்
புத்தியிலும்ஆலோ சித்தாய்-யேயும்
புகழ்பெறஎங்கள்மனம் மகிழ்வுறச்செய்தெங்களால்
புத்தகமும்போலக்கவி பெற்றாய் இனிஓர்

கவியில்லாமானிடர்இப்பு விமேல்இருந்துமென்ன
தனகனகவஸ்துவாகனம்அனுபோகித்தென்ன
சதியினில்உதவிசெய் பவர்களில்உன்னை
தானேஇனிவர்கள்ளி னும்புகழ்துன்ன (செய்)

இராமாயண ஒரடிக் கீர்த்தனை.

விருத்தம்.

வர்கொண்ட ஞான்மறையின் பொருளே யெல்லாம்
இனியதமி ழாற்செய்து தொண்டர்க் கீந்த
பார்கொண்ட குருகூர்வாழ் சடகோ பாழ்வார்
பதமலரைப் பணிந்துதிருச் சென்னை மேவுந்
தார்கொண்ட புயாசலன் ஓய்வில்லா வீரன்
சதுரன் அயன்றிருமூம் ராமச்சந் திரமாலின்
சீர்கொண்ட திரு அருளின் பெருமை தன்னைத்
தேறுவேன் மனமகிழ்ந்து கூறு வேனே.

தோடி ராகம். ஆதிதாளம்.

பல்லவி.

கோதண்ட தீக்ஷாகுருவே பக்தரிர்தய
கோகனக மலர் மருவே.

அனுபல்லவி.

தாதண்டுபலர்ச்சோலை - விண்கற்பகத்தின் மேலே
தழைக்குஞ்சென்னைநகர்வாழ் - ஸ்ரீவேங்கடேச மாலே
பூதலிழுலேஉண்ணல்போல் - ஆவிஉண்டோரு காலே
போற்றும்யாதவர்க்கின்பம் - தேக்கச்செய்தாய்பரி வாலே
பூத்தமுதத்தினே நற்சுரருக்குமூன்
ஊற்றிடமிக்க அளித்திடுசற்குண

பூஜிதம்பெறு ராமசந்திர
னேசவுந்தர ரூபரஞ்சித
புகழுலர்மகள் தழு வியஅதிபுஜபல
மிகுபரிமளமுறு துளவணிரவிகுல
புண்யநீடும்அண்ட பகிரண்டங்களீரேழுண்ட
திண்யனே அகண்ட புகழ்கொண்டபிரசண்ட (கோதண்ட)

சரணங்கள்.

தசரதன் சுதனெனுதித்து
தரணிமன்னர் மன்னவன் அதிபுஜபல (தசரதன்)
தகைமைவாய்ப்பவுயர் மனுநெறிமுறைகொடு
தருமயோத்திநகர் அரசுசெய்ரவிகுல (தசரதன்)
சர்ப்பராஜசய னத்தின்மீதுதயில்
உற்றுவீறுபர வஸ்துவானதொரு
தசமுகனுல்இடர்ப்படும் உயர் அமரர்கள்
நசையுடனேதுதிதரநரஉருவொடு (தசரதன்
தார்புனைசனும்விண் சூரியனும்வேதனும்
மாமகவானும்அவன் பாலனுந்தேயுவுஞ்
சீர்அனுமான் சுக்ரீவனற்சாம்பவன்
வாலிஅங்கதனீலன் ஆய்வரவானவர்
வானரங்கள் ஆய்மண்ணினில் வந்திடச்செய்தமட்டி
தானவர்குலத்தைவிண்ணிற் சேர்த்திடக்கண்கட்டி
சங்குசக்கரமு மங்களத்தினில்மி
குந்தஅற்புத அனந்தநிறவனும்
வந்துதித்திட மினைந்திடத்தரையில்
சம்ப்ரமத்தில்இல குஞ்சுமித்திரையின்
தன்னிடம்லட்சுமணன் சத்துருக்கனும்மகேசி
மின்வயிற்றிற்பரதனுந் தம்பியர் ஆய்ச்சனிக்கத்
தான்எண்ணிக்கோசலை வயிற்றிற்சித்திரைமாதம்
ஆனநவமிபுனர் பூசநக்ஷத்திரமதில் (தசரதன்

சந்த்ரவிம்பமுக முங்கிர்பைவளர்தரு
கின்றகண்களு நெடுஞ்சிலை னுநுத
லுஞ்சிறந்தபவளந் தணிகரத
ரந்தருந்தஞ்ளிர் குண்டலம்அணிசெவி
களுலவெறிகமு கிணைகிகர்களமொடு
விரைகமழ்துளவணி புயமலைகளும்அலர்
கமலமலர் அனைய கரமலர்களும்நெடு
உலகம்அதனைஉணும் அழகியவயிறுடு
தாரணிமார்பும்வண் டாமரைத்தாள்களுஞ்
சாமளமேனியும் ராமகன்தாமமுந்
தயங்க அருமறை உணர்புங்கவர்மிகு
ஜெயவிஜயபவ எனுமங்களமொடு (தசரதன்)
தசரதன்சுதனு வுதித்து தனுவிற்கதித்து
தாடகைப்பாவியை வதைத்து
விசுவாமித்திரனுடன் மிதிலைக்குச்செல்லும்போது
வேதச்சிரத்தில்நடம் ஆடும்சீர்பாதப்போது
இசைவுறப்பட்டளவில் அகலிகைஎன்னுமாது
எழுந்தாள்கல்லுருமாறி இதுஅல்லாமல்மண்மீது
இந்த்ரபோகசன கன்வில்லைரண்டு
துண்டமாகஒடித் தான்அதைக்கண்டு
சுந்தரிசீதையைத் தந்தனைமகிழ்
கொண்டிடவேமண மானபின்னேவரு
கின்றவழிஅதனிற் பரசுராமன்வில்லு
நிந்திடவேசெய்து சனகியோடையோத்தி.
வந்துகூனிகல கந்தனுல்அரசி
ழுந்துரீடுபுகம் தம்பியோடுமலர்

மங்கைசீதைபதம் நொந்துவாடிவர
கங்கைமாநதி கடந்துவாசமலர்க்
காவிரிதருசித்ர கூடபர்வதத்தில்
மேவிப்பரதனுக்குப் பாதுகைஅளித்தபின்
விரிதண்டகவனம் வலிகொண்டதில்அத்
திரிசன்மிதேவ முனிவன்கிர்பைபெற்
றிட்டபின்புவிராதன் இருகைஅது
மூட்டவிண்டிட வேசெய்துசரபங்க
முனிவன்ஆசிர மந்தனிலேஎழிற்
சனகியோடெய்தி இந்திரன்போனபின்
தண்டகாரண்ய வாசிகள்பதியர்
கண்டனேர்இடர் தீர்தரஇணைஅறு
கருணைகொண்டேஅந்த வனமதிற்பத்து
வருடம்மின்றுவரும் வழியிற்சதிட்ட
மாமுனிவரங்கொண்டே அகஸ்தியன்றனைக்கண்டு
சேமவிற்சரங்கொண்டு தந்தவன்றனைவிண்டு
சென்றுசடாயுஉற வாடப்பஞ்சவடியில்
நின்றுவிடாதமய லோடுகெஞ்சியபெரு
மீளிசூர்ப்பனகை காதுமூக்கரிந்து
காலனுர்க்குகிகர் ஆகப்போர்க்குவந்த
கரதூஷணத்திரி சிரசன்ஆதியரை
அரைநாழிகைதனில் மூறலிநாடதனில்
அனுப்பிமான் உருவாய்வந்தமாரி
சன்கையாற் பிடித்திடவேபோன
தருணங்கண்டிராவணன் தபசிபோல
விரைவில்வந்துசீதையை மிலத்திஞ்சே
மேல்எடுத்துச்செல்லும் போதுசடாயுவின்
ஆவியினைவதைத் தசோகவனத்தினில்

அரியசிறையில்இட வேசானகிதன்னைப்
பிரியும்அதிசதுயர் ஆலோசனம்நண்ணிச்
பின்மதிக்கவக்தனைச் சொர்க்கம்வற்றிச்சுவரி
சொன்னவிதங்கொடு சுக்கிரீவனைத்தன்து
சொந்தம்ஆக்கி அக்ரமமிகுவாலிதனை
முந்தவாட்டிவிக்ரம அணுமானைஅளி
மொய்த்தகுழற்சீதைதனைத் தேடவிடுக்கஅவன்
உத்தமசம்பாதிதன்னல் உளவறிந்துகொண்டு
ஒப்பில்லாதவிஸ்வரூபங் கொண்டுமேருத்திரம்வதிச்
செப்பமாய்க்கடலைத் தாண்டியிலங்கையிற்சேர்ந்து
திடமுறுலங்கணியை முதற்பலியிட்டுச்சீதையைக்
கடிபெறுலங்கைனங்குத் தேடிக்காணுமற்பின்பு
காவல்மிகும்அசோக வனத்திற்றிரிசடையன்பு
மேவக்காத்திடவட முகம்பார்த்திருக்கக்கண்டு
விஜையமேகாதண்டராம தூதன்நான்என்றுசொல்லி
நசைதருங்கணையாழி கொடுத்துத்திடமுங்கூறி
நாயகிசீதைதத்த சூடாமணிகைக்கொண்டு
தீயகிங்கரர்எண்ப தாயிரம்பேர்களோடு
செழித்தஅசோகவனத்தையும் அழித்திடக்கண்டெதிர்த்தக்
கொழுத்தராட்சதசேனை யொடுசம்புமாலிமிகுத்த
கொடுமைசெய்பஞ்சசேனை திபர்களும்அகூடனும்
மடியநாற்பதுவெள்ளம் அரக்கரோடிந்திரசித்தன்
வந்துபோர்செய்ய அணுமன்தன் அற்புதவித்தைச்
சிந்துசிந்தாக்கிஇந்திர சித்தன்தேரைஅழித்துச்
சிலையைமுறித்துமுடித் தலையைஉடைக்கஅவன்
வலியப்பிரம்மபாசத்தாம் கட்டராவணன்அப்போ
வாலில்நெருப்பையிட அத்தநெருப்பைலங்கையின்
மூலைக்குமூலைஇட்டுக் கொளுத்திரீருக்கிவிட்டு

உளமகிழ்கொண்டுமீண்டு வந்துசாமியைச்சேவித்து
அளிதிகழ்சூடாமணி தரக்கண்டுமகிழ்ந்தபின்பு
அடல்மிகுத்த எழுபதுவெள்ளவானரப்
படையும்ஒப்பில்அதின் அதிபரும்நீடிய
பரிவொடு தென்கடல் அருகில்சிறைந்தபின்
சரணம் அடைந்துநின் தூணைஅடி தந்தருள்
சாமிஎன்றவி பீஷணன்றனக்குலங்கா
பூமிதந்துவிகாதஞ் செய்தவருணன்மேற்
பொற்கணைவிடுத்தவனை வரச்செய்துபுஜபல
சித்திரக்கவி இனங்கள் அதைக்கொடுவிரைவொடு
சேதுபந்தனஞ்செய்வித்து நீள்கடல்வளைந்திடு
மாதிரம்பயந்திடச் செயராவணன் இலங்கைதன்னை
வந்துமுற்றுகைசெய்துகொண்டு தம்பிஅங்கதன்மீதும்
மூந்துவிக்கிரம அனுமந்தன் அம்புயந்தன்னிலும்எதி
மூதண்டகந்திகில் மேவிஅதிர்ந்திட
கோதண்டந்தனில் காணெலிகாண்டுற
குரைகடல்வெருவிட நெடுநிலம்அதுதுணை
ஒருசுமைஎனஉறும் உரகன்உடல்நெளிய
உயர்மதிகதிர்வழி பிசகிடநெடுவரை
அயர்தரவுடுஇனம் அதுதரையில்உதிர

அணிரதகஜபரி பரிசனவகைமிக
அணிஅணியொடுவா அதிவலிமைகள்சொலி
அனல்கக்கிடும் அத்திரசத்திரமழு
கனசக்கரம் நெட்டயில்பட்டயமொடு
கதிர்வீசுங்கதிர் முத்தலைசூலங்
கதைதவார் அஞ்சிலைகைக்கொடுதாளங்

காளஞ்சின்னந்தாரைகள் மத்தளபேரிகள்பலவித
மேளம்பின்னும் நாகசரத்தொடுபூரிகைஒலிதர
வீரராவணன்தேரில் ஏறிப்போர்க்களத்தில்வந்து
சேரவேஅவன்சேனை வீரர்யாரும்பேரில்முந்த
தீயவச்சிரமுஷ்டி- துன்முகன்சுபாரிசன்
மாயபிரகஸ்தன்கெட்ட வன்மனங்கொள்நீசரை
வானரவீரர்கள்கொல்ல ராவணன்இவரைவெல்ல
சானகிமணாளன்வில்லிற் சோணமாரிஎன்றுசொல்ல
தகுஞ்சரங்களைவிட்டு அவன்தேர்வில்லைமுறித்துத்
திகழ்மணிமுடிபத்தந் தரைமேல்உருளச்செய்து
திடமொடுசண்டைசெய்ய ராவணாஇன்றுபோவென்று
விடைதரமனம்நொந்து தனியாய்ப்போய்லங்கைசேர்ந்து
வெற்றிசேர்கும்பகன்னனை மித்திரையில்இருந்தெழுப்பி
அத்தகியில்சண்டைக்கும் விடுத்திடஅவன்களத்தை
அடுக்கராகவன் அம்பு தொடுக்கவேகும்பகன்னன்
கொடிச்சுள்காலுங்கையும்போய் படிக்குள்ளேமுண்டமாகி
தொத்துபின்சாமிதனைச் சிந்தனைபேசி
இறந்ததைராவண னறிந்துதிகாயனை
அனுப்பஅவன் பரிசனத்திரளினொடு
மூனைத்தலைவர்களுஞ் சமர்க்களம்அணுகி
முச்சிரத்தன்வயமஸ்தன் கும்பன்தேவாந்தகனும
அச்சமற்றரணமஸ்தன் வம்பன்நராந்தகனும்
அனுமான்முதலோர்கையால் மடிந்திட அதிகாயன்
சினமாகியிளையோனொடுமர் செய்துடிவாகச்
செய்திதெரிந்திந்திர சித்தன்தேறில்லாமி
வெய்யசதுரங்கம் மொய்க்கப்போரில்வீறி
விஞ்சுசுக்ரீவன் பனசன்சாம்பன் அனுமான்
வஞ்சம்அற்றநீலன் முதலினோர்கள்தமையும்

வாட்டக்கண்டு லட்சுமணன்தன்வில்லிற்சரம்
பூட்டஇந்திரசித்தன் ரதகஜபரிஜனம்
புரவியாவுறீறும்மாண்டு தானும்மிகமெலிந்து
இரவில்நாகபாசத்தை ஏவஅதனுல்நொந்து
இலக்குமணன்மூதலோர்க ளத்திற்படுக்கராமன்
அக்கணமவ்விடமேவி திகைத்துவருந்தும்வேளை
அடல்சேர்கருடன்வர நாகபாசந்தெறித்து
விடையாவரும்எழுந்து போரில்வீறிக்கதிக்க
மிதம்அற்றசேனை சூழ உக்கிரகங்கொண்டுவந்தெதிர்த்த
மதம்உற்றசூரியகேது வச்சிரதந்தன்பெரும்பக்கன்
மாலிசிங்கன்பேயன் பரிதிக்கண்ணனையும்
ஆலம்அஞ்சுந் தீயகுருதிக்கண்ணனையும்
ஆர்க்குங்கவித்தலைவர் மாய்க்கராமலட்சுமணர்
தாக்கமகரக்கண்ணன் அக்கினிகேதுமடிய
தசமுகன்அதைத்தெரிந் திந்திரசித்தனைவிட
வகைகொள்ளும்அவன்களம் வந்துலட்சுமணனுடன்
வாதுசெய்யஓலோயோன் அப்போதுசரமாரிவெய்யன்
மீதில்எய்யஅதனுல் அப்பாதகன்திரேகம்மையல்
விண்ணில்மறைந்துதன் னூரைச்சேர்ந்துசூது
பண்ணிவெல்லஎண்ணி போருக்ககம்புகுந்து
பாவிமகோதரனை ஏவஅவர்களம்
மேவிபலத்துடனே ராவில்அமர்புரிய
வீறும்அனுமான்தன்னுல் அகம்பன்சிரும்பன்சிரங்களுருண்டுவீழ
சீறும்மகோதரன் கைச்சரங்கள்அழுந்திட வருந்திஓலையவன்
திகைக்கும்வேளையில்இந்திர சித்தன்அங்குவந்து
மிகுத்தபிர்ம்மாஸ்திரம்விடுக்கத் தம்பிமுதலோர்சாய்ந்திட
வித்தகஸ்ரீராமன்கண்டு மெத்தவும்ஆகுலங்கொண்டு
சித்தப்பிரமைஆகஅன்றுஉத்தமஅனுமான்சென்று

திசழித்தசஞ்சீவிபரு வதத்தைக்கொண்டுவந்தான்
பிழைத்தனவரும்போருக் கெதிர்க்கஇந்திரசித்தென்னும்
மித்தன்மாயாசீதையை வெட்டிஇகும்பஜோபா
கத்தின்சாலேசோ அதைதத்தெரிந்திளையவன்
கணைமழைபொழிந்தரக்கன் செய்யும்யாகமழித்து
கூணமதில்அவன்சிரத்தைக் கொய்துதேவர்துதிக்கச்
சாமிபாதநேரில்வைக்க ராவணனிந்ததன்மேலமர்செயவிட
பூமிபாரமானதுஷ்டமூலபலங்கள் ஓர்ஆயிரம்வெள்ளமும்
போரிலேறுதல்கண்டுவானர வீரரோடவேஒன்றியாகிய
தீரராகவன்சண்டமாருதம் ஆகிசேர்கள்பஞ்சுபோலேகெட
திவ்வியமோகாஸ்திரம்எவி எங்கும்ராமனுகத்தோன்றிட
வெய்யர்யாரும்பார்க்குள்தாவித் தங்களிற்முங்களேமாண்டபின்
வேதனையேசெய்யும் சாதகசாதக
பாதகனன மகோதரன்போர்செய்து
படையும்போய்ராகவன்கைக் கணைதன்னல்ஆவியுண்டு
மடியவேராவணன்தூர்ச் சகுனம்மென்மேலுங்கண்டு
வந்துபெருஞ்சண்டைசெய்யச்சாமி ராவணன்பத்துசிரத்தையும்
விந்தைஅம்புகொண்டுகொய்யத்தொய்ய மீண்டுமீண்டுமுளைக்கஅவன்
வேளையிலேஇதமாக பிரதாபசு
ளைவிபீஷணன் ஓதும்உபாயத்தி
னல்இனையறுபிர மாஸ்திரம்அதனைவிட்டு
ஆலம்அனையவிழி ராவணன்காயிலில்வைத்த
அமிர்தகலசத்துடன் மூடிகள்சிதறச்செய்து
இமையவர்முனிவர்கள் படுதுயரம்ஒழித்து
இனையில்எழிற்சனகி தியினிற்குளிர்தபின்பு
துணைவன்கவிப்படைவி பீஷணனுங்கற்பிலங்கு
மயிலைதனதெழுபுஷ்பக மீதிலேறிமுன்வினைமுற்றிலுட
னுயிவைசெய்கின்றமகத்துவ மானசேதுஅண்டையில்ஒப்பறு

மாதேவற்கன்றுநீராட்டிஇறங்கித்திரும்பிமுன்வந்தவழியே
சீதேவிக்கன்பொடுகாட்டிமகிழ்ந்துநடந்து பண்ணருந்தவனே
திகழும்பரத்துவாசனே மடத்தினிற்சேர்ந்தபின் திடத்துடனுமானே
புகழும்பரதராஜன் இடத்தினிற்கேவிடகொடிக்குள்ளே அவன்போனே
போதுசாமிவரவைக் காணெனென்றுபரதன்
ஓதுந்தீயினில்விழப் போகக்கண்டு அனுமன்
மோதிரந்தந்துபதறுதேரகுபதிவரமுனிமடம்வந்து சேர்ந்தானென்று
ஓதரவுஞ்சபமுங்கூறி பரதனிடம் விரைவில் விடைகொண்டு ஆஞ்ச
அக்கணந்திரும்பிலோ கரட்சகன் உண்ணும்வேளைக்க [நேயன்
ரைக்கணம்மூர்த்திவந்தோதப் பட்சங்கொண்டவீணைக்
வைத்துவரதன்புகித்துப் புஷ்பகமதிற்கதித்து [கூட
சத்யபரதன் துதிக்க உத்தமகுகன்மதிக்கத்
தகைமைமேவிய அயோத்திநகரில்வந்து
திகழும்மூவுலகம் போற்றஒளிசிறந்த
சித்திரமிகுந்த சிங்காசனமீதினில்
அற்புதம்உற்றசெந் தேன்மொழியாள்சமே
தன்னீசீதையோ டமர்ந்துபேரிகையு
மன்னுதாளமிரு தங்கநாகசுர
வாத்தியம்ஒலிக்கவரு சுரர்மருமலர்கொடு
காற்றிசை இறைக்கவெகு முனிவர்கள் மணிமுடி
நரபதிகளும்வா னரபதிகளும்பூ
சுரர்துதிசொலவே கவரிகள் அருகே
தூயலட்சுமணனுடன் சத்துருக்கனும்வீசிட
நேயம்உற்றபரதன்உட் களித்திதம்பேசியே
நிலவெறித்தருசந்திர வட்டக்குடைகவிக்க
பலமிகு அனுமந்த னற்றுணைஅடிபிடிக்க
பகர்வசிஷ்டனல் மகுடாபிஷேகங்கொண்டு
ஜகதலத்துள்ளோர் துதிபேசச்சிறைவதற்று

தினதயாநிதியே அடியார்உள
மேநிலையாய்நிதம் வாழ்வரதாஉயர்
வேதாஅரிஅணை மேவுஷிணேதா
தாதாசுரர்முதலோர் துதிபாதா
சதுரனேசரா சரங்களைத்தருமூலா
துதிசெய்ராஜசே கரன்றமிழ்க்கனுகூலா
சுமுகசுகுணசுந்த ராங்கசுகிர்தய
விமலவிபவவிந்தை யோங்கிடுமிகுஜய (கோதண்ட)
கோதண்ட தீக்ஷாகுருவே-பக்தரிர்தய
கோகனகமலர் மருவே.

இராமாயணை ஓரடிக்கிர்த்தனை

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இராம நாடகம்.

ஆக்கியோன் பெருமை.

கொச்சகக்கலிப்பா.

கம்பராமாயணப்பாற்கடலிலுண்டு
கம்பவரும்ராமநாடகமாம்மாமழையை
அம்புவியில்காழி அருணாசலமேகம்
கும்பமுடியிற்பயிர்க்குப்பெய்துவினைகொய்கதுவே (1)

மேற் காப்பு.

வழிபடுகடவுள் வணக்கம்.

விநாயகர் தோத்திரம்.

நேரிசை வெண்பா.

ஆனை முகனே அரனர் திருமகனே
சேனையர்கோ னைகவளஞ் செய்வோனே—ஞானமே
நாடகத்தைக் கொண்டுன்றன் நல்லருளா லேராம
நாடகத்தைச் சொல்லுவேன் நான்

1. தரு-ஸௌராஷ்ட்ர ராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

விநாயகாசரணம்-ஜயஜய-விநாயகாசரணம்.

அ னு ப ல் ல வி.

அநாதரட்சகனே-கஜமுகனே ஐங்கரனே சிவசங்கரன்மகனே (விநா)

ச ர ண ங் க ள்.

1. அன்பிலாத பேயேன்-என்னுடைய
அறிவுவிளங்கவேதுணை வருவாயே
என்குலதெய்வம் நீயே-இந்த
ராமநாடகத்துக் கணுக்கிரகிப்பாயே (விநா)

2. வானவர்பணி வோனே-நல்ல
வாக்குத்தந்துகாத்தருள் சீமானே
நான்உனதடி யேனே-ராம
நாடகத்துக்கருள்புரி நீதானே (விநா)

3. உண்மைஞானம் தோணும்-உன்றன்
உதவியாலேநல்லபுத்திகள் பூணும்
நன்மையெய்திடும் காணும்-ராம
நாடகத்தைச்சொலநீ முன்னிற்கவேணும் (விநா)

பாயிரம்

வற்புடைக்கட்வளர் வணக்கங்கள்.

அனுமார் தோத்திரம்

நேரிசை வெண்பா

கோதண்ட தீக்ஷா குருராம நாடகத்தைத்
தீதண்டா வாறடியேன் செப்பவே-கோதண்டா
மாருதியே அஞ்சனையாள் மைந்தனே நற்கருணை
வாருதியே நீதுணையா வா. (3)

2. தந-கல்யாணி ராகம்-மிஸ்ர சாப்பு தாளம்.

ப ல் ல வி.

துணைவந்தருள்புரிகுவாய்—* அனுமந்தாநீ
துணைவந்தருள்புரிகுவாய்.

அ னு ப ல் ல வி.

துணைவந்தருள்வாய்நல்ல சொற்பொருளதுல்ல
இணை ஒன்றிலாதவல்ல ராமகாடகம்சொல்ல (துணை)

ச ர ண ங் க ள்.

1. துஷ்டவாலிதோழமையை விண்டோனே-விண்டு
சுக்கிரீவன்தோழமையைக் கொண்டோனே-வெகு
திட்டமாராகவனைப்போய்க் கண்டோனே-அவன்
செப்பியசொல்அமிர்தத்தை உண்டோனே-சுக்கிரீ
கஷ்டமும்அரசிழந்த [வன்
நஷ்டமும்அவனிருப்பும்
சட்டமாச்சொன்னமாருதி
இஷ்டகருணைவாருதி (துணை)

2. அஷ்டதிக்கில்தென்திசை உகந்தோனே-சீதைக்கா
அரியபிலத்தினுள் புகுந்தோனே-அப்போது
பொட்டெனப்பூமியினைப் பிளந்தோனே-உயிரைப்
போக்கவேமிகபனம் தளர்ந்தோனே-சம்பாதி
னட்டவே இருந்தமெள்ளக்
கிட்டவேவர அவற்குப்

* இந்தப் பல்லவியை இரட்டிப்புப் பாடும்போது அனுமந்தா நீ என்கிறதற்குப் பிரதியாக (என்றனச்குற்ற) என்றும் (எனச்குப் பக்க) என்றும் சொல்லிக்கொள்ளவும்.

1826.

பட்டதைச் சொல்லும்தூயனே
முட்டிலா ஆஞ்சநேயனே (துணை)

3. உக்கிரமாவிஸ்வசொரூபம் எடுத்தோனே-மயேந்திரத்
தூதைந்துகடலைத்தாண்டி விடுத்தோனே-பொல்லாத
அக்கிரமலங்கணியைக்கீழ்ப் படுத்தோனே-நற்றிரு
ஆழியைத்தேவிகையினில் கொடுத்தோனே-ஆறுபோல்
மிக்கவேரத்தங்கள்வாயால்
கக்கவே ராட்சதர்எல்லாம்
மக்கவே செயும்ருத்திரனே
மூக்கியமாம் வாயுபுத்திரனே (துணை)

4. தேவிசூடாமணிகையில் தரித்தோனே-சொன்ன
சேதிகள்எல்லாம்அங்கி கரித்தோனே-படு
பாவிராவணன் லங்கையை எரித்தோனே-ராமன்
பக்கல்வந்துற்றசேதிகள் விரித்தோனே-இந்தப்
பூவுலகத்தோரும் தேவர்
கோவும்முனிகணமும்ப
ராவியசிரஞ்சீவியே
மேவிய எனதாவியே (துணை)

5. அருமையாம்சஞ்சீவிமலையை ஏற்றோனே-பிர்ம்ம
அஸ்திரவேதைகள்எல்லாம் தீர்த்தோனே-சீதையை
உரிமையாம்ராகவன்பக்கல் சேர்த்தோனே-பரதன்
உயிரைவிடுமுன்னமேபோய்க் காத்தோனே-தவத்தில்
பெருமையார்முனி விருந்தினில்
தருமராமனை டருந்தின
ஒருமையார் ஸஞ்சீவிராயனே
பிறம்பட்டம்பெறும் உபாயனே (துணை)

பெருமாள் தோத்திரம்.

விருத்தம்.

அண்டர்தம் துயரழ் தீர அயோத்திமா நகரில் வந்து
தண்டகா ரணியஞ் சென்று சமுத்திரமீ தணையைக் கட்டிக்
கொண்டு ராவணனை மாட்டக் கோதண்டங் கையில் ஏந்தும்
புண்டரீகக் கண்ணன் ராமன் பொன்னடிக் கமலம் போற்றி. (4)

3. தரு-ஸௌராஷ்ட்ர ராகம்-த்ரிபுடைதாளம்.

பல்லவி.

எனக்குன் இருபதம் நினைக்கவரம் அருள்வாய்-ஸ்ரீராமச்சந்திரா
எனக்குன் இருபதம் நினைக்கவரம் அருள்வாய்

சரணங்கள்.

1. எனக்குன் இருபதம் நினைக்கவரம்அருள்
இனித்தகசரதன் தனக்குமகன்எனும்
மனத்தினுடன்அவ தரித்தமுனிவரன்
மகத்தில்அரக்கியை வதைத்தஅரசே (எனக்கு)

2. நடக்கையிலேஅக லிகைக்குக்ருபைசெய்து
நடத்திச்சனகன்வில் ஒடித்துச்சனகியை
பிடித்துப்பரசுரா மனுக்குமமதையைப்
பிரித்துநகரில்வந் திரிக்கும்அய்யனே (எனக்கு)

3. தரிக்குமுடிப்பர தனுக்குதவிநி
தடத்திற்குகனுடன் அடித்துச்சித்ரகூட
வரைக்குள்சனகியொ டிருக்கத்துணைவன்நல்
வணக்கம்செயமகிழ் குணக்குஞ்சரமே (எனக்கு)

4. திடித்தபரதனும் ஓடிக்கமுடன்வரத்
கொடுக்கமிகியடி கொடுத்தரசுசெய

வடக்கில் அவனையும் விடுத்துநடவிலே
வனத்தில்வரும்விரா தனைக்கொன்றவனே (எனக்கு)

5. விடுக்கரியசடா யுவக்குறவுசொலி
விடுத்துக்கொண்டுபஞ்ச வடிக்குச்சென்றவுடன்
அடுத்தசூர்ப்பநகி கொடுத்தகரதூ
ஷணத்திரிசிரர்மூடி துணித்தராகவா (எனக்கு)

6. தனித்துவருமாரீ சனைக்கொன்றுருகவந்
தனுக்கருளிஅனு மனைக்கண்டொருசுக்ரீ
வனுக்குதவிவாலி தனைப்பொருதுவா
னரப்படையை ஆதரித்ததுரையே (எனக்கு)

7. இருக்கும்அனுமன்வந் துரைக்கநிசிசரர்
இருக்கைஅறிந்தபின் எரித்தகடலிலே
பெருக்கஅணைசெய்து வருக்கம்வருக்கமாப்
பெலத்தஅரக்கரைத்தொலைத்ததெய்வமே (எனக்கு)

8. கொடியஇந்திரசித்தன் பிரகஸ்தன்முதலாகக்
கொள்ளுமூலபல வெள்ளஅரக்கர்தம்
முடியும்கும்பகர்ணன் முடியும்ராவணன்
முடியும்பொடியாக விடுபுங்கவனே (எனக்கு)

9. நினைத்தபடிவிபீ ஷணர்க்கரசுபெற
நிறுத்திஒருபுஷ்ப ரதத்தில்ஏறிவந்து
தனத்தில்உயர்தரும் அயோத்தியிலேசிம்மா
தனத்திருக்கும்ரகு குலகுமரனே (எனக்கு)

அபசாரக்ஷமை.

விருத்தம்.

கனமான வர்ல்மீகர் சுலோகஞ் செய்தார்
கம்பரும்ரா மாயணத்தைக் கவியாச் செய்தார்
உனதாசை யாலேநா டகமாச் செய்தேன்
உளமிஞல் என்னபலன் உண்டாம் என்ரூல்
மூனிமார்சொல் லியராம மந்தி ரத்தை
மூவரும்ஓ தியராம மந்தி ரத்தை
வனவேடன் மராமரா மென்ற மூத்தி
வழிகண்டான் அதுகொண்டே மொழிகின் றேனே (5)

4. தரு-ஸாவேரி ராகம்-சாப்பு தாளம்.

பல்லவி.

ஐயனேரகுராமனேஎன்சொல் அபசாரம்உபசாரம் ஆக்கிக்கொள்வாயே

அனுபல்லவி.

கையில்ஆகாதான் ஏதேதுசொன்னலும்
காக்கக்கடன்என்பிழையை நீக்கக்கடன்உன்பாரம்(ஐயனே)

சரணங்கள்.

1. எள்ளத்தனையுங் குற்றம்
இல்லாதசுப சத்தம்
தெள்ளித்தெளியேன் மொத்தம்
செய்தேன் இதோ சுத்தம்
வெள்ளைக்கவி என்றும்-இதுசின்னப்
பிள்ளைக்கவி என்றும்-சொல்வதல்லால்
விள்ளத்தகுமோ பழுதுகள்
உள்ளத்தகுமோ சாமிநீ
கள்ளத்தகுமோ திருவுளம்
கொள்ளத்தகுமோ யுகிகிலேன் (ஐயனே)

2. நற்பொருள் நீதமும்
நவரச பேதமும்
வைப்புள கீதமும்
வண்ணவி நோதமும்
ஒப்புத் தெரிவேனே-அதில்உள்ள
தப்புத் தெரிவேனே-இலக்கணச்
சொற்பிக்கமியேன் உன்புகழ்
கற்பிக்கமியேன் சொல்லி
மெய்ப்பிக்கமியேன் சாமி
ஒப்பிக்கமியேன் எங்கள் (ஐயனே)

3. உத்தமமுனி முன்னம்
உரைக்கக்கம்பர் சொன்ன
நற்றமிழ்தன்னைச் இன்ன
நாடகம்ச தென்ன
வைத்திப்படி கண்டேன்-பெரியோர்முன்
புத்திப்பிழை கொண்டேன்-என்சாமி
பித்துச்சொல வைப்போலே
சத்திக்கவு ருக்காலே
நத்திச்சொலும் என்மேலே
சித்தத்தில்இ தத்தாலே (ஐயனே)

நூற் பெருமை.

விருத்தம்.

தூதர்பெறும் ராம காதை சதகோடி பிரபந்தம் ஆகும்
அதில்ஓர் அக்ஷரம் சொன்னாலும் அருவினை போகும் என்றே
விதியினால் முனிவால் மீகி விளம்பிய உறுதி கொண்டு
மதியினால் அறிந்த மாதிரம் வகுத்தநா டகம்சொல் வேனே.

நந-ஸாவேரி ராகம்-த்ரிபுடை தாளம்.

பல்லவி.

மகத்துவம்உள்ளகஸ்ரீராமகதை இதுவேகேட்கவேணும்-முனி
வருக்கும்பலமனிதருக்கும் இதுபொதுவே.

அநுபல்லவி.

மிகுத்தமிகுத்தபுராணம்சொல்லும் கதை
விரும்புமோமறுகாள்சொன்னால் அதை
அகத்தில்ஆனந்தம்தருமே இதுசொல்ல
அடிக்கடிச்சொல்லினும் வெறுக்குமோநல்ல (மக)

சரணங்கள்.

1. சேர்க்கும்பொருள்களில் என்னஇணச்செவிஏற்கும்
[பொருள் இது மாத்திரம்
செபமும் இதுபெருந்தவமும் இதுஎன்றுதெளிவதேகல்ல சூத்திரம்
பார்க்குள்இதைஅறியார்க்கெல்லாம்பிறந்தெடுத்தஉடம்பவ பாத்திரம்
பக்தியால்இதுகற்றவர்க்குப்பலிப்பதுபரமபத கோத்திரம்
தீர்க்கமாஇதைக்கேட்கின்றோர் பெரும்
திருமனையில்வருவாரேதே வரும்
ஏற்கும்இதின்குணமியார்க்குச்சொல்ல வரும்
இகபரங்களில் சகலமும் தரும் (மக

2. தருமராஜன்கைநேரும்போதினில்ஒருமையாஅதைத் தடுக்குமே
சற்றேபடிக்கினும்புத்திரபாக்கியமும்சகலபாக்கியமும் அடுக்குமே
பெருகுநவக்கிரகம்எனதசப்பலனைப்பிரியமுடன்வந்து கொடுக்குமே
பூதமும்நோயும்சுனியமும்பிணிசெய்யாதபடி விடுக்குமே
மரணஜனனவியாதிதமக் கின்னம்
வருந்துவார்வருந்தாதபடி இன்ன
நியமருந்திது ஆம்என்றே முன்னம்
ஆதிசிவன்உமைகாதிலே சொன்ன (மக

3. சேஷதனிற்கங்கையுனேமுதற் பெருந்திவ்யதெய்வநதி ஸ்சானமும்
சேணுமாகிலம்பாணுமுதல்ஆகச்செய்யும்பலபல தானமும்
ஆயிதாம்என்றுதேறுகின்றவேதாந்தம் முதல்கலைக் ஞானமும்
அறிவும்அல்லாமல் எதுநினைத்தாலும் உதவும்அந்தரி தானமும்
சாமிகாரகமுனிவன்சொல்லி வைத்த
சரித்திரம்வால்மீகர்உரைத்தபடி கொற்ற
ராமன் அவதார ஆம்முன்னே மெத்த
கபம்கொண்டாதிகாவியம்என்றே பெற்ற (மக)

அவையடக்கம்.

வி ரு த் த ம்.

முத்துமுதல் விலையில்லா மணிகள் பெற்ற
முகியகடல் ஆடுகின்றோர் அதிலே ஏழு
சற்றும் உதவாத மணியாம் பருக்கை
தான்பாடக் களிப்பான சமுத்ரம் போலக்
கர்த்தன்எனும் ராமசந்திரன் கதைப்பாக் கேட்கும்
காதிலே காடகமா பதனைச் சொல்லிக்
குற்றமிகச் செய்தாலுங் குணமாக் கொண்டு
கூட்டுவீர் என் கவிபா ராட்டு வீரே.

இதுவும் அது

அரன்முடிமேல் கங்கை பகீரதன் கொணர்ந்தே
அந்நாள்செய் தர்ப்பணம்போல் இந்நாள் இந்த
நாரும்அந்தக் கங்கையிலே தர்ப்பணத்தை
கடத்திமுத்தி பெறுகின்றார் அதுபோல் ஆதிப்
பிரமன்முகத் தினில்வந்த ராமன் காதை
பெருமுனிவால் மீகிசொல்லக் கம்பர் சொன்னார்

விரவுதமிழ்ப் பதத்தாலே நானும் சொன்னேன்
மேற்கொள்வீர் என் பிழைதீர்த் தாட்கொள் வீரே. (8)

6. தந்-மத்யமாவதி ராகம்-ஆதி தாளம்.

பல்லவி.

பிழைபொறுக்கவேணும்-பெரியோரே-பிள்ளைஉமக்குநான்காணும்.

அநுபல்லவி.

மழைநிறத்தராமசாமிகதை இன்ன
வகையென்றறிந்தும் அறியாமலும்நான் சொன்ன. (பிழை)

சரணங்கள்.

1. ஆதியில்பிரம்மதேவர் நூறுகோடிவிஸ்தாரம்
ஆதிகாவியமென்றித்தை மதித்தாரே
வேதமில்இருபத்துநாலாயிரம்ஆகப்
பிறகுவால்மீகிசொல்லி விதித்தாரே
போதாயனர்முதல் மாதவர் இக்கதையைப்
புனைந்துவடமொழியால் துதித்தாரே
ஓதியகம்பர்பன்னீராயிரம் கவியாக
உரைசெய்தி தமிழிலே பதித்தாரே
காதலால்இவர்செய்ய நான்அதுக்கிப்பாலே
கருடன்பறக்க ஒரு கொசுவும்பறந்தாற்போலே
ஈதொரு நாடகமா ஓதினேன் புவிமேலே
எட்டும்இரண்டுந்தெரியா ஏழைநான் ஆகையாலே (பிழை)

2. வாவியபெருவெள்ளம்பாயுங்கடலிலே
வாய்க்காலும்பாயும்அல்லோ இல்லாமல்
யாவிதும்கற்றோர்சொல்லைக் கேட்கிறீங்களும்
என்சொல்லும்கேளும்தடை இல்லாமல்

காசியும்பஞ்சலட்சணமும்தெரியக்
கற்றஉங்கோப்போலே சொல்லாமல்
சேவலம்நான்இதைப் பாகவதர்படிக்கும்
கீர்த்தனையாய்ச்சொன்னேன சல்லாமல்
தேவதேவராமன்பேரே உற்றது
தேடிஅந்தப்பேர் இந்நாடகத்தில் வைத்தது
பூவாடைகூடியநாரும்மணம் பெற்றது
போலேவினங்கும்அதிலேசொன்னேன் கற்றது(பிழை)

3. திருந்தும்நாராயணநமசிவாயஎன்று
செபிக்கும்மந்திரம்இரண்டும் மெய்தானே
உரைக்கும்மந்திரம்இரண்டில்இரண்டாம் எழுத்திரண்டும்
ஒருராமன் ஆகிவந்த பெருமானே
அருள்செய்தகதைதனைஇலக்கணம் ஆகச்சொல்ல
அறிவேனோநான்சின்னம் சிறியேனே
பரப்பியபாலியும்சோற்றையும்குழந்தைகள்
பாச்சிச்சோச்சியென்னும் படிதானே
பொருத்தம்இல்லாச்சொல்லால்உரைசெய்தாலும் தள்ளப்
போமோஉங்களால்ஆமெனிருத்திக் கொள்ள
அரைச்சொல்கொண்டம்பலம்வறினல்மெள்ள மெள்ள
அரைச்சொல்லும்மூழ்ச்சொல்லாம்ஆகையால் இதில்உள்ள(பிழை)

மங்களம்.

விருத்தம்.

மூவருக்கும் தேவியர்க்கும் தேவரோடு
முனிவருக்கும் முன்னிற்கக் கதையைச்சொன்ன
நாவருக்கும் தசரதர்க்குந் தேவிமார்க்கும்
நற்றம்பி மார்களுக்கும் சீதையோடு

மாவருக்கம் கோவருக்கம் அனுமான் மற்றோர்
ஆழ்வார்க ளாரியரைம் பலடைய னந்தன்
மாவருக்க மிதைப்படிப்போர் கேட்போர்க் கெல்லாம்
வளம்சொல்வேன் ராகவன்மங் களம்சொல் வேனே. (9)

7. தரு. ராகம்-அஸாவேரி. தாளம்-ஆதி.

பல்லவி.

ஸ்ரீராமசந்திரனுக்கு ஜயமங்களம்-நல்ல
திவ்வியமுகசந்திரனுக்கு சுபமங்களம்.

அனுபல்லவி.

மாராபிராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈராறுகாமனுக்கு இரவிகுலசோமனுக்கு (ஸ்ரீரா

சரணங்கள்.

கொண்டல்மணிவண்ணனுக்குக் கண்ணனுக்கு மங்களம்
கோசலைகுமாரனுக்குவீரனுக்கு மங்களம்
புண்டரீகத் தாளனுக்குப்
பூச்சக்கர ஆளனுக்குத்
தண்டுளவத் தோளனுக்குச்
சானகிம ணாளனுக்கு (ஸ்ரீரா

கோவைமணிவாயனுக்குமாயனுக்கு மங்களம்
கோதண்டக்கையனுக்குமெய்யனுக்கு மங்களம்
தாவுகுண சீலனுக்குச்
சத்தியவி லாசனுக்குத்
தேவர்அதி கூலனுக்குத்
தசரதன் பாலனுக்கு (ஸ்ரீரா)

3. பகிரண்டநாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனுமன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்
சகலஉல் லாசனுக்குத்
தருமந்த காசனுக்கு
அல்லவி லாசனுக்கு
அயோத்தியா வாசனுக்கு (ஸ்ரீ ர)

பாயிரம் முற்றிற்று.

கொச்சகம்-1, வெண்பா-2, விருத்தம்-6, ஆக-9. தருக்கள்-7

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

முதலாவது

பாலகாண்டம்

கடவுளர் வணக்கம்

விருத்தம்

ஆதியாய் நடுவாகி முடிவு மாகி
அண்டபகி ரண்டமுமா யனைத்து மாகிப்
போதினையா லினைவெள்ளிப் பொருப்பை விட்டுப்
புகழ்பொறைகள் தருமமெல்லாம் பொலிந்து நல்ல
நீதிசே ரயோத்தியில்வாழ் தசர தேந்த்ரன்
நெடியமா தவத்தினில்வந் துதித்த எங்கள்
சோதியா கியராமன் நாட கத்தைச்
சுயஞ்சொல்வான் மகிழ்ந்ததோ டயஞ்சொல் வேனே. (1)

1. தோடயம். ராகம்-நாட்டை. தாளம்-ஜம்பை.

சரணங்கள்.

1. எவரும்வணங்கியரகுராமன்-ஏதுவும்னினைந்ததுதருராமன்
ரவிகுலசுந்தராஜயராமன்-நாடகத்தைச்சொலமே-ஆ-ஆ
கவளநெடுங்கரதலசாமி-கமலதிரியம்பகமூளசாமி
பவனிவரும்கஜமுகசாமி-பாதபத்மந்துணையே-ஜயஜயா

2. துணிவுளபுஜபலராவணே-சுரன்முடிபொடிபடமோதுமால்
அணிபெறுதசரதராமநாடகமதுரைசெயவே-ஆ-ஆ

திணிதருபுயகிரிநா லுசேர்-திசைமுகன் இசைபெறுநாவில்வாழ்
மணிமுகரஸ்வதிபாததா-மரையென துதுணையே-ஜயஜயா

8. கோலஞ்செவானவர்தேடவொரு-கோசலேயர்கள்வீரியாடவரு
ஞானகிருபாகரராமகதை-நாடகமாச்சொலவே-ஆ-ஆ
வானவனும்மணவாளமுனி-மாருதிகீள்கருடாதிபதி
சேனையர்கோனுடனேபதின்மர்-சேவடிகள் துணையே-ஜயஜயா

4. வாசவன்மாசுரரொடுலோகாந்த-ரவாசிகள்பூசுரர்இவர்ஏகாந்த
பூசிதராகவனகாராய்ந்த-புகழ்துரைசெயவே-ஆ-ஆ
காசினிமீதினில்மிகுமூடாந்த-காரமதோடவேவருவேதாந்த
தேசிகர்தாமரைமலரேபோன்ற-திருவடிகள் துணையே-ஜயஜயா

5. திருமகள்சானகிசேரும்வாமன்-ஜயமொடுகோசலம்வாழும்சேமன்
கருமணியேயிகர்ஆகும்ராமன்-கதையதுரைசெயவே-ஆ-ஆ
குருகையில்மேவியகாரிமாறர்-குணநிதிஆயபாஷியகாரர்
மருளறுதேசிகர்மாசிலாத-மலரடிகள் துணையே-ஜயஜயா

6. மைக்கடல்வாய்விண்டுபொங்கவே-வைத்தொருபாணம்துரந்திலங்
விக்கிரமராமன்பிரபந்தம் ஆம்-விந்தையதுசொலவே-ஆ-ஆ
பக்குவமாமன்புகொண்டுவாழ்-பத்தரைஆளும்திறங்கள்சேர்
சக்கரகோதண்டம்தண்டம்வாள்-சங்கம்இலவதுணையே-ஜயஜயா

அரசியல்

கடியம்-வசனம்.

ஸ்ரீகோசாஜாதிராஜன்-மகாதேசப்பிரகாசன்
ராஜபரமேசுரன்-தேசசரமேசுரன்
ராஜமார்த்தாண்டன்-ரணரங்கதீர்த்தண்டன்
ராசகம்பீரன்-நேசசம்பீரன்
பாஸ்கரகுலதீரன்-திலகக்கியமூளவீரன்
புத்தியில்பிரகஸ்பதி-வித்தையில்சரஸ்வதி

நயகுணசீலன்-பயசனபாலன்
நல்லார்க்குமித்துரு-பொல்லார்க்குச்சத்துரு
சுசரிதகுணசேசன்-தசரதமகராஜன்
மறுநீதிகோணமல்-ஜனவேதைதோணமல்
ஆறிலொருகடமைகொண்டு-மாறுபடுபகையைவென்று
திங்கள்மும்மாரிபெய்ய-எங்கும்முப்போகஞ்செய்ய
செங்கோல்முகம்சாயாமல்-வெங்கோல்முகம்பாயாமல்

அறுபதினாயிரம்வருஷம் பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் உண்ண ராஜ்யபரிபாலனம் பண்ணின கீர்த்தியைச் சொல்லுகிற மார்க்கம்:

விருத்தம்

மகராசன் அசமகா ராசன் என்ற
மகராசன் மிகுசூர்ய வம்ச ராசன்
சுகராசன் கௌசலேசா யகிகை கேசி
சுமித்திரையாம் தேவியர்கை தொட்ட ராசன்
மிகராசர் பணிந்திடஇந் திரனைக் காத்த
விஜயதச ரதராசன் அயோத்தி வாழும்
ஜெகராசன் ஒருவன்மனு நீதி யாலே
தேசமெல்லாம் ஒருகுடைக்கீழ்ச் செய்தான் டானே. (2)

2. தரு. ராகம்-சாவேரி. தாளம்-த்ரிபுடை.

பல்லவி.

ராசராசர்க்கும்-ராசன் தசரத-ராசனிருந்தானே.

அனுபல்லவி.

[illegible]நிலகன [illegible]யோத்திகர்க்கொரு
[illegible]ன்ரவிகுலதிலக ஞகவே (ராச)

சரணங்கள்.

1. மந்திரதந்திரமும் வித்தியாகமித்தமும்
மகாங்களுற்றினம் செழிக்கவே
வன்புலியோடு பசுவும் ஓர் துறைநீர்
உண்டுகொண்டுபய மொழிக்கவே
இந்திரபதமும் குபேரதனங்களு
மெவரும்சிறிதென்று பழிக்கவே
எங்கெங்கும் முப்போகம்விளையவே
இங்கள்தோறும்மும்மாரி கொழிக்கவே(ராச)

2. நாலுவர்ணசிரமங்களும் சொன்ன
நடைபுரண்டு பாயாமலே
நரர்க்கும்வேறுள்ள உயிர்க்கும்வயதுகள்
நடுவிலே தேயாமலே
கோலமாகிய மிருகமும்பறவையும்
குறிகடந்து மேயாமலே
குடியிலாயிலொரு கடமைகொண்டுசெங்
கோலின்முகம் சாயாமலே (ராச)

3. மறுமங்கையருக்கும் மறுமன்னவருக்கும்
மார்பும்முதுகும் கொடாமலே
வளரும் அஷ்டலட்சுமியும்தன் அரண்
மனைவிட்டடியை எடாமலே
அறுபதாயிரம்வருஷமுமே
காதிபத்தியம் விடாமலே
யாரும்மனதில்விசாரத்தாலா
ராய்ச்சிமணியைத் தொடாமலே(

சக்கரவர்த்தி மக்கள்வேண்டி வருந்தல்

விருத்தம்

இருந்தசர தராச்சன் நெடுநாளாய்ப் புலியாண்டேன்
இனிமேல் இந்தப்
பெரும்புவியை யாள்வதற்கும் முத்தியிலே சேர்ப்பதற்கும்
பிள்ளை காணேன்
அருந்தவனே குலகுருவே வசிஷ்டமுனி யேபிள்ளை
யதைநான் காண
வருந்துவதில் லாவகையை மொழியென்றன் இதற்கென்ன
வழியென் றனே. (3)

3. தந. ராகம்-த்விஜாவந்தி. தாளம்-ஆதி.

பல்லவி.

பின்னையில்லாத பாக்கியம்-தான் பெற்றிருந்தென்ன சிலாக்கியம். -

அனுபல்லவி.

வள்ளலேஜன்மமடனென் றெருகாலே
வசைகொண்டேன்தசரதன் நான்புவிமேலே
கள்ளி யானதுநெடுகவ ளர்ந்ததாலே
காயுண்டோகனியுண்டோ அதுபோலே(பின்)

சரணங்கள்.

1. மறுவில்லாதிக்ஷ்வாகுசூரியவம்ச மிது
வளரும்வம்ச மாச்சே-யிது
மழைபெய்தடிமறைத்தாற்போல வென்
மட்டிலேயின்று போச்சே
அறுபதாயிரம்வருஷமும் வருந்தும்
அரசதானினி யாரைக்கொண்டு திருந்தும்

குறைவில்லாத வந்தச் சஞ்சீவி மருந்தும்
கொடுக்கும்தெய்வமும் நீதானே கிடைத்திருந்தும்(பிள்)

2. பெருக்கக்காண்பதேகாண்பதல்லாமல்
பெறுவதென்றும் கிணை-மிகு
பிச்சர்போலேநெடுநாளுமுண்ட வண்ட
எச்சிலை யுண்ண லானேன்
விருத்தன்றானினைத்தவிலே செல்ல
வேணுமல்லாமல் புவி யாள்வதுசிறப் பல்ல
இருத்தும்வாழை யடிவாழை யாய்ப் புல்ல
இவன்மகனிவனுமென்றுபோர் சொல்ல(பிள்)

3. மோந்தால்முத்தியும் வரும்பரத்திலே
முத்தியும்கூட வருமே-மேலே
சாய்ந்தாலுடம்பெங்கும்குளிருமே
தழுவ இன்பம் தருமே
வாய்ந்தபொன்னுலகளவும்போய்ச் சனி
மண்டலமும்திருத்திக்கொண்டேன்புவி தனில்
வந்தினேன் இல்லையே ஒருபிள்ளைக் கனி
என்னவீடென்னவாசல்எனக் கினி (பிள்)

பெருமாள்சந்நிதியில் தேவர்கள் முறைபாடு

விருத்தம்

மன்னவனும் தசரதபூ பதியிவ் வாறு
மக்களில்லாத் துன்பத்தை வசிஷ்ட னோடே
சொன்னவுடனந்தமுனி வணும்த்யா னித்தான்
சுரர்முத லானவர்கள் மகமேரு மேலே
சின்னவரக் கரைநடுங்கி வாழ்த்தும் போது
சிறைக்கருடன் மீதினிலச் சுதனும் வந்தான்

பொன்னின்மலர் அவன்பதத்தில் இறைத்தே கண்ணீர்
பொழிகின்றார் அரக்கர்குண்பம் மொழிகின் றதே. (4)

4. நந். ராகம்-அஸாவேரி. தாளம்-ஆதி.

பல்லவி.

கடைக்கண்ணால் இரங்கிப் பார் அய்யா-பார்த்துக்
காவாவிட்டால் இனிமேல் ஆர் அய்யா

அநுபல்லவி.

அடைக்கலம் எனவடி வந்தோமே-நாங்கள்
ஆலக்கரும்புபோல நைந்தோமே-சாமி(கடை).

சரணங்கள்.

1. சொர்க்காதிபுவனம்எல் லாம்தாவிக்-கொண்டு
தூரத்தக்கும்பகர்ன தனேயேவி-மற்ற
பக்தம் இந்திரசித்தி தன்னும் பெருங்கோவி-ஆளப்
பண்ணிவைத்தானேரா வண்ணபாவி
செக்குள்ளே அகப்பட்ட எள்ளுப் போலே-அரக்கர்
கைக்குள்ளே அகப்பட்டோம் எங்கள் மேலே-உனது(கடை)

2. ஆளேகசன்புஷ்பகம் தனேவிட்டான்-இலங்
கையிலேசூரியன்தேரும் வரஓட்டான்-மெத்தத்
தனா இந்திரனைக்கூடச் சிறையிட்டான்-அரக்கன்
சருவகொள்ளே அடிக்கத் தலைப்பட்டான்
எளியோர்களே இப்படி ஈனர் ஓடுக்கல்-ஆமோ
இனியைவளர்த்துப்பூனைக்கிட்டக் கொடுக்கல்-ஆமோ (கடை

3. பாவி அரக்கன்பேச்சே மேலாச்சு-நாங்கள்
டத்தபலங்கள்எல்லாம் மேல்பூச்சு-நல்ல

பூவைவண்ணு அரக்கன் கைவீச்சு-வெள்ளிப்
பொருப்பே அழியும் இனி ஏன்பேச்சு
ரரவணன்வதைக்கிறான் எங்கள்மேல் என்னகண்டோ
தேவரீகேளாவிட்டால் திக்குதிசை இன்னும்-உண்டோ (கடை)

தேவர்களுக்குப் பெருமாள் அருளிப்பாடு

விருத்தம்

இசையும்வா னவர்கள்கூடி இப்படிச் சொல்ல மாயோன்
அசையும்வாள் அரக்கர் தம்மை அகற்றுவோம் அஞ்ச வேண்டாம்
தசரதன் மதலை யாகித் தரணியில் வருவோம் நீங்கள்
திசைதொறும் கவிகளாகிச் சேருமென் றுரைசெய் வானே. (5)

5. நரு. ராகம்-மோகனம். தாளம்-அட.

பல்லவி.

அவதாரஞ்செய் திடுவீரே*நீங்கள்
அரக்கர்பயத்தை விடுவீரே

அனுபல்லவி.

கவனவாலியும்சுக்கிரீவனும் ஆகிக்
கண்ணுயிரவனும்கதிரோனும் போகி (அவ)

சக்கணங்கள்

அதிகம் ஆனருத்திரன் அம்சம் அனுமன் சீலன்
அக்கினியேசேனைக்கதிபன் ஆன நீலன்
சதுர்முகப்பிரம்மாவேசாம்பவன்எனும் காலன்
தகும் உபேந்திரன்வாலிதனக்குப் பாலன்-ஆக (அவ)

* 'நீங்க'ளுக்குப் பிரதியாக "இனிமேல்" என்று சொல்லிக் கொள்ளவும்.

2. சங்கமும்சக்கிரமும்சேஷனும் பரிவாகத்
தம்பியர் ஐவரத்தானேகாம் பூலோகத்
தங்கள் ஆனதசரதராசன்குலம் போகச்
சுருக்காவருவோம்எவரும்அதின்முன் ஆகப்போய் (அவ)

3. வானரவடிவாலும் மானிடவடிவாலும்
தான் அல்லாதரக்கன் சாகானேஒருகாலும்
ஆனபடியினலே அனைவரும்புலிபோலும்
கானத்திலிரும்வந்து காகுதரமென்மேலும்வந்து (அவ)

பேருமாள் திரு அவதாரம்

விருத்தம்

இவ்வகையா மாயவன்முன் நடந்த தென்றே
எண்ணிமுனி கலிக்கோட்டு முனிவ னலே
அவ்வகையாம் புத்திரகா மேஷ்டி யாகம்
அயோத்தியர சனைக்கொடுசெய் வித்த போதி
பைவளரும் பாம்பணைமேற் பள்ளி கொள்ளும்
பரமனே தசரதன்செய் பாக்யத் தாலே
மெய்வகைசேர் உலகெல்லாம் மனுஷிக் கியான
விதிசெய்வான் அவதார மதுசெய் வானே. (6)

6. தந்ு. ராகம்-கௌளிபந்து. தாளம்-ஆதி.

பல்லவி.

பரப்பிரம்ம கொருபமே-ஸ்ரீராமன் ஆகப்-பாரில்வந்ததுபாரும்

அனுபல்லவி.

வரத்தினல் அரக்கரை வானத்தில் எற்றவும்
வான்தில் தேவர்கள் மலர்மாரி தூற்றவும் (பரப்)

சரணங்கள்.

1. பக்திமுனிவன் கலைக்கோட்டு மாமுனி
பண்ணிய யாகபலன் தேற
சத்திய தசரதற் கறுபதினாயிரம்
சம்வத்சரபலன் ஹிறை வேற
சித்திரமாசம் நவமி கடகம்
செழும் புனர்பூசம் தேன் ஊற
ஒத்த கிரகங்கள் கால்வரும்பதினொன்றில்
உச்சத்தில் ஐவரும் ஏற ஆதி (பரப்)

2. சீர்ஆரும் லட்சுமணன் சத்ருக்னன் சுமித்
திரை வயிற்றில் இன்று பேர
பாரார் புகழ் கை கேசிவயிற்றில் இன்று
பரதன்வந்துபுவி சேர
ஆராலும் கொள்ளாத ஆநந்தம் மேல்கொண்டு
அம்புவியோர் இடர் தீர
கார்ஆரும் குழல்வல்லி இருவர்க்கும் மேலான
கௌசலை கண்களி கூர ஆதி (பரப்)

3. தேவர் முனிவர் பகை தீர்த்தோம் என்று
சென்னியில் பூந்துழாய் முடிக்க
பூவுலகத்துள வேதியர் எல்லோரும்
புகழும் வேதாகமம் படிக்க
பாவி இலங்கையின்மேல் சூரியன்தேரில்உள்ள
பச்சைப்பரி ஏழும் நடிக்க
ராவணன் ஆதிஇருக்கின் றராட்சதர்
[illegible] இடக்கண்கள் துடிக்க ஆதி(பரப்)

கௌசிகர் ஸ்ரீராமரைக்குறித்துக் கேட்குதல்

விருத்தம்

மைந்தர் இவ்வாறுரைத்து வசிஷ்டனுல் பேரும் பெற்றுச்
அந்தநாள் விசுவாமித்திரன் அணித்தச ரதன்முன் வந்தான்
இந்தநாள் எனது வேள்வி இராமனுல் முடிய வேணும்
தந்திட இதுதல் வேளை தாவென்றுன் சாவென் றூனே. (7)

7. தரு. ராகம்-மோகனம். தாளம்-சாபு.

பல்லவி.

ராமனைத்தருவாயே-ஜகத் ரட்சக-ராமனைத்தருவாயே

அனுபல்லவி.

தாமசம்நீ செய்யாதே-தசரதேந்திரா-இப்போதே (ராமனை)

சரணங்கள்.

1. ஹரன் பக்கம் செல்வேன்
ஹரிமுன்னே சொல்வேன்
இரண்டும் தப்பினுல் உனைவிட்
டெவரால் பகை வெல்வேன் (ராமனை)

2. தாடகைப் பாவி
தவிர்த்தாள் என் வேள்வி
பீடை வராமற் காத்தால்
பிழைக்கும் என் துவி (ராமனை)

3. உம்பர்வி சாரம்
ஒழிக்க அந் நேரம்
சம்பரனைக் கொன்றூயே
தயவாய் இந் நேரம்(ராமனை)

4. கோபத்தில் ருத்திரன்
குரு விசுவா மித்திரன்
ஆபத்து காக்கவேணும்
அதனல் உன் சக்திரன்(ராமனை)

சக்கரவர்த்தி அதை மறுத்தல்

விருத்தம்

சொல்லிது முனிவன் சொல்லத்துடித்தனன் தசர தேசுத்ரன்
சில்லிது வேள்வி காக்கச் சிறுபிள்ளை ராமன் என்றான்
சல்லியம் செய்யும் அந்தத் தாடகை தனைநான் கொல்வேன்
பற்பல உரையேன் இராணி பார்என்பான் சேர்என்பானே(8)

8. தரு. ராகம்-ஸ்ரீராகம். தாளம்-சாபு.

பல்லவி.

ராமன் எதுக்கு-இதுக்கோ அவன் வர வேணும்
நான் வருகிறேன் காணும்

அனுபல்லவி.

பூமி அரசன் என்று நான் இருந்தென்னகொள்ளே
ஸ்வாமி அவன் வந்து குழந்தைப்பிள்ளே(ராமன்

சரணங்கள்.

1. ஏன் இந்த தோத்திரம்-தாடகை
எனக்கெம மாத்திரம்
வானுலோர்கள் வந்து தடுத்தாலும் அடிக்கிறேன்
நானே வந்துன் வேள்வியை முடிக்கிறேன் (ராமன்

பேயைக் கொல்வ தரிதோ-காரியம்
பெரிதோ வீரியம் பெரிதோ
ஆயுதம்பிடிக்கறியான் கேளாய்ஒரு சொல்லே
வாயில் முலைப்பால் மணம்மாற வில்லே (ராமன்)

3. கவலே என் கொண்டாய்-சன்முன்
காலும் வராள் கண்டாய் [ஒரு
அவளையும் படையையும் அடக்கிநேன் பாராய்பாராய்
இவனல் என்ன எழுந்திரும் வாராய்வாராய் (ராமன்)

வசிஷ்டர் தகவுரைத்தல்.

விருத்தம்

இனமதில் அயோத்தி வேந்தன் இதுசொல்ல விஸ்வா மித்ர
முனிவனும் கோபம் செய்தான் முன்னின்ற வசிஷ்டன் கண்டான்
உனதுமைந் தனுக்கு மன்னு யோகநாள் வந்த தென்று
கனமுடன் விரித்துச் சொல்லிக் காட்டுவான் கூட்டு வானே. (9)

9. தரு. ராகம்-மூகாரி. தாளம்-ஆதி.

பல்லவி.

தரிதோ வாராதையா நான் சொன்ன வார்த்தை
மோசம் வாராதையா.

அனுபல்லவி.

கோசிகன் பின்னே ராமனைக்கூட்டிவிடுவாய் சென்னேன். (மோச)

சரணங்கள்.

1. உப்புநீர் மேகம் சேர்ந்தால்-உலகில் பிர வாகம்
அப்படி உன் மகனுக்கு-அடுத்ததே யோகம்(மோச)

2. மறுவுண்டோவசிஷ்டன்சொல்-வார்த்தைக்கும் ரண்டோ
பொறுபொறு மூளைப்பாரைப்-புதைப்பாரும் உண்டோ(மோச)

3. சோதிக்க வேண்டாம் நான்-செல்வதே சீலம்
ஆதித்தன் குலத்துக்கின்-றனகூல ... காலம். (பே

கௌசிகர் ஸ்ரீராமருக்கு நீதி சொல்லுதல்

விருத்தம்

முனிவரிஷ்டன் இவ்வாறு சொல்ல வேந்தன்
முறையாலே ராமனிலட் சுமண னேடே
இனிதழைத்துக் கூட்டிவிட்டான் வழிக்கு வேண்டி
இருவரும்பங் கிரங்கொண்டார் வெயில் படாமல்
தனிகடந்தார் வேள்வியில்தா டகையும் வந்தாள்
சாமியும்பெண் ணெனவினைந்தான் முனிவன் அந்த
வினைவதித்தான் பெண்இவளோ அல்ல ராமா
பில்லைன்றன் இப்பொழுதே கொல்லன் றனே. (10)

10. தரு. ராகம்-கல்யாணி. தாளம்-ஆதி.

பல்லவி.

பெண் இவள் அல்ல ராமா-தாடகை
வண்ணம்கொண்ட சமன் இவள் ராமா

அனுபல்லவி.

மண்ணில்மெத்த உயிரை-வதைத்திந்த பிர்ம்மூடி
கண்ணிற் கண்டது சோடி-காண தனந்தம் கோடி (பெ)

சரணங்கள்.

1. இஷ்ட மாமுனிவர் என்றொரு பேர்தரித்
திருக்கும் கடனுக்கிவள் பெருத்த மந்த்ரகிரி
அட்டகாசம் செய்தால் அதுவொரு பாடாவிசி
அண்டகூடம் எங்கும் இடியுமே ஹரிஹரி

எட்டுதிசையிலும் ஓடிமூட்டுமே இவள் *ஆதாளி
மூட்டுஞல்மலையும்பிளந்திட்டிடுமே தூளிதூளி
எட்டியும்டார்க்கக் கூடுமோ இட்டிஒரு காளிகூளி
விட்டு நான்சொல்லவேணுமோ மட்டிலாப்பாபி சண்டாளி (பெ)

2. ஆயிரம்குணம் ஒரு லோபருணத் தால்தட்டும்
அதுபோல் இம்மருந்தை அழித்தாலும் அழிக்கட்டும்
மாயை இவள்பேர் சொன்னுல் மூனிவர்க்கும் பல்கிட்டும்
வற்றல் என்றெம்மைத் தள்ளி வைத்தாளே இந்தமட்டும்
தூயதிசை ஆனையெட்டும் ஈ எறும்பாய் விழக்காட்டி
வாயி லொரு பல்லிடுக்கி லே அடக்கு வாளே கூட்டி
தீய வடவாக்கினிபோல் பாயுவாள் கை களே நீட்டி
பேயையும் பிடுங்கித்தின்னும் பேய்எனவந்த வெளாட்டி (பெ)

3. ஒருகுமதிஎன்னும்பெண்ணைப் பிளந்தான்இந்த்ரன் அப்போது
ஒருபெண் கியாதியை மாயன் ஒழித்தானே புவிமீது
பெருமானே இவள் அந்தப் பெண்ணனவும் கூடாது
பெண்என்றுல் பேயும்இரங் குமே அதிவ ளுக்கேது
இருடிகள் உடம்பை மெத்த உருசிஎன்றுகண்டு கொண்டோ
பெருமகம்செய்வோரைக்கொல்ல வருகிறுள் இதென்ன †மூண்டோ
‡ சிருதிஇவளைப்பெண்என்று கருதுகிறுய் என்னதண்டோ
ஒருகொடியில் கொல்லவேணும் குருமொழி தனக்குமன்டோ(மெ)

தாடகைமுதலானவர்கள் வதம்.

விருத்தம்.

செய்திகளே யிவ்வா றுரைக்கச் சிரமேற் கொண்டே ரகுராமன்
வெய்து வணங்கிக் குருவிசுவா மித்திரன் சொல்லே வேதச்சொல்

---

* ஆதாளி = சத்தம், கூச்சல்.
† மூண்டு = மூரட்டுத்தனம்.
‡ சிருதி = இராட்சசி.

மையலினலே மகம்காக்க வரிவில் வளைத்தான் தாடகையும்
வெய்த பாணம் பட்டுருவி எழுந்தாள் மலைபோல் வீழ்ந்தாளே. (11)

11. கந. ராகம்-நாதநாமக்கிரியை. தாளம்-சாபு.

பல்லவி.

கொடிய தாடகைபாவி விழுந்தாள்-பொல்லாக்
கொடிய தாடகைபாவி விழுந்தாள்

அனுபல்லவி.

கொடிய தாடகைபாவி விழுந்தாள் செம்பொன்
முடியன் ராவணன் வெற்றிக் கொடிவீழ்ந் தாற்போல் (கொடி)

சரணங்கள்.

1. உரைத்த தேவர் துன்பம் மறக்கக்-காலன்
ஒருகாலுங் காணுதருகி கண்டு பறக்க
அரக்கர் ஆதிக்கங்கள் இறக்க-நல்ல
அனுகூல காலங்கள் முனிவர்க்குப் பிறக்க (கொடி)

2. மூதண்டமேகாடிக்கப் பாலே-ஓசை
முழங்கவிசு வாமித்திரன் சாலைக்கிப் பாலே
கோதண்டபாணி அம் பாலே-ஜிலே
குலேந்து புரண்டலறிக் கொண்டுமண்மேலே (கொடி)

3. நடலே வஞ்சனை மாயம் தடுக்க-ஸ்வாமி
நாள்கொண்டு முதல்பலி அரக்கரைக் கொடுக்க
சுடின சுவாகு பட்டுப் படுக்க-ராமன்
கணையாலே மாரீசன்கடல் ஓட்டம் எடுக்க (கொடி)

அகலிகை சாபவிமோசனமும் சரித்திரமும்.

விருத்தம்.

நாடகைதான் விழுந்தபின்பு தேவர் சொல்லச்
சகலபடை களுங்கொடுத்தே முனிவரெல்லாம்
கூடவரக் கௌசிகையே முதலாம் தீர்த்தம்
கொண்டாடி கௌதமரு சிரமம் சேர்கால்
காடதிலே ரகுராமன் பதத்தூள் சிந்தக்
கல்லுருப்போய் நல்லுருவாய் விளங்கி நின்ற
பாடகக்கால் அகலிகையை இவளா ரென்னப்
பரிந்துவில்வா மித்ரமுனி பகர்கின் றானே. (12)

12. நந. ராகம்-அஸாவேரி. தாளம்-சாபு.

பல்லவி.

தேவி இவள் ராமா-கௌதமன்-ஆசி இவள் ராமா

அனுபல்லவி.

ஆவலினால்	பண்டு
மேவல் மனம்	கொண்டு
அந்தரம்	நாடிய
இந்திரன்	கூடிய (தேவி)

சரணங்கள்.

1. மாபக்திபால் கங்கை ஆடத்தடை — பெற்ற
மாமுனி கண்டு வெ குண்டுபயம் — சுற்ற
கோபத்தினல் இடும் சாபமொழி — மெத்த
கூறையிலே கருங் பாறை வடி — வுற்ற(ருவ)

2. வெம்பிய மாமுனி கண்ணில் எதிர்ப் — பட்ட
வேளையில் கண்டுபொறுமல் முனி — திட்ட

அம்பொன் முடிதொட்டடி அளவும் முட்ட
ஆயிரம்கண் அந்த வாசவனுக் கிட்ட (தேவி)

3. ஞானத்தினால் உன்னை ஒதினபோக் கெந்த
நன்மையுண்டாமோ அறியேன் இப்போ திந்த
கானத்திலே உன்றன் பாதத்தூள்கள் சிந்த
கல்உரு மாறி அகலிகையாய் வந்த (தேவி)

ஸ்ரீராமர் சீதையைக்கண்டு ஐயுறல்.

விருத்தம்.

இடமாம்விசுவா மித்திரனிந்தச் சேதி யுரைக்க லட்சுமணன்
உடனே நடந்து மிதிலையிற்போய் ஒருமா மணிமே டையில்சீதை
மடவாள் காணத் தன்னையந்த மயிலைத் தானும் ரகுராமன்
கடல்வாய் வருசெந்திருவெனவே கண்டான் விரகம்கொண்டானே ()

13. தரு. ராகம்-ஸாவேரி. தாளம்-ஆதி.

பல்லவி.

ஆரோ இவர் ஆரோ-என்ன-பேரோ அறியேனே

அனுபல்லவி.

கார்உலாவும் சீர்உலாவும் மிதிலையில்
கன்னிமாடந்தன்னில் முன்னே நின்றவர் (ஆரோ)

சரணங்கள்.

1. பண்ணிப்பதித்தாற்போல் இருஸ்தனமும்-கூடப்
பாங்கியர்கள் இனமும் சூரைத்தனமும்
ரண்ணத்தாலும் வண்ணத்தாலும் பங்கயப்
பெண்ணைப்போலக் கண்ணிற் காணும் மங்கையர் (ஆரோ)

2. பாக்கியம் என்பதிவர் தெரிசனமே அதிங்கே
பலித்ததென்ன புண்ணி யமோமனமே
மூக்கும் விழியும் தீர்க்க மாய் இன்னமும் பெண்கள்
பார்க்கப்பார்க்க நோக்கம் கொள்ளுமே கண்கள் (ஆசோ)

3. சந்திரவிம்ப முக மலராலே என்னைத்
தானே பார்க்கிறார் ஒருக்காலே
அந்தநாளில் தொந்தம் போலே உருகிறார்
இந்தநாளில் வந்து சேவை தருகிறார். (ஆசோ)

கௌசிகர் ஸ்ரீராமர்வரலாறு சொல்லுதல்.

விருத்தம்.

மனதி லிந்தப் படிநினைந்து மறுநாளெழுந்து மகம் செய்யும்
தனகமணி மண்டபத்தினில் போய்க் காகுத்தனுந் தம்பியுமிருந்தார்
அனேயகாலத் திவர்பெருமை அருமைதெரிய உரையு மென்றே
சனகனுரைக்கக் கௌசிகனுத்தரிப்பான் விவரம் விவரிப்பானே. (14)

14. நடை. ராகம்-சங்கராபரணம். தாளம்-ஆதி.

பல்லவி.

ஆர் என்றெண்ணுமேல நாளும்-இவன்
அதிசயங்களைச்சொல்லக் கேளும்.

அனுபல்லவி.

சூராதிசூரன் ராமன் எனும் பேரன்
சுகுணதீரன். ரவிகுல குமாரன் இவனே (ஆர்)

சரணங்கள்.

1. ஆதியில் தசரதன் புத்திரகாமேஷ்டி
யாகம் செய்யவென்று தொடுத்தான்-வந்த

தூசும் தந்த பர மானத்தை நால் ஆகப்
பொன்னின் கமலத்திலே எடுத்தான்-அதில்
சோதிகோசலைக்கொன் றும் கைகேசிக் கொன் றும்
சுமித்திரைக்கிரண்டுமாய்க் கொடுத்தான்-மூத்த
பேதைகோசலை இடத்திந்தராகவன்
பிறந்தான் எனகவலையை விடுத்தான்-இவனே ( )

2. தலைஆம் பரதன் லட்சு மணன் சத்ருக்னன்
தம்பியர் இவனுக்கு நேயம்-மிகக்
கொலையாளன் சுவாகுவையும்சேனையையும்இவன் அம்பு
கொண்டுபோன தென்ன மாயம்-தான்
உலையாதென் வேள்வியை முடித்தான் இவன் அம்பால்
உருண்டதேதாடகை காயம்-மெத்த
மலைபோலைவந்ததும் பணிபோலே போச்சிந்த
மகராஜன் செய்தச காயம்-இவனே (ஆர்)

3. ஆரத்தும்சாபம் அகலிகைக்குக்காலினலே
தடைத்தானே அவள் உடல் மாசை-சொல்லும்
பெருக்கம் என்ன இவன் பிறக்கவே உலகெங்கும்
பிறந்ததே மங்கள ஓசை-உங்கள்
பருத்தவில் இவன் கைக்குப் போதுமே போதுதோ
பார்க்கவேணும் இன்னோர் ஆசை-இங்கே
வரச்சொன்னதும் வரக்கிடைக்குமோ வலிவிலே
வந்தானே நீங்கள் செய்த பூசை-இவனே (ஆர்)

———

ஸ்ரீராமர் வில்வளைத்தல்.

விருத்தம்.

புங்கவனும் முனிவனிந்த வாறு சொல்லப்
போர்வில்லி அறுபதினா யிரம்பே ராலே
அங்குவரும் படிசெய்தானிதைநாணேற்ற
ஆகுமென்றால் மருமகனே யாகுமென்றான்
சிங்கமெனும் சனகனுடன் விண்ணும் மண்ணுங்
திடுக்கிடவே யெல்லாரும் ராமன் கையால்
துங்கமுள்ள அந்தவில்லை வளைவு காணத்
தொடக்கண்டாரிரண்டுதுண்டாய் விடக்கண் டாரே. (16)

15. தரு. ராகம்-தோடி. தாளம்-ஆதி.

ப ல் ல வி.

வில்லானது ரண்டாய் ஒடிந்து விழுந்ததே பாரில்

அ னு ப ல் ல வி.

கல்வியாணராமன்-அனகன்கையால்-மிதிலையில் வாழ்சனகன் (வில்)

ச ர ண ங் க ள்.

1. சுத்திபெறும் முனிவோர்கள் மங்கள சோபனங்கள் பல கூற
பத்துத்திசை வானவர் எல்லோரும் பனிமலர்மாரிகள் தூற
சித்தப்பிரமையாலே நால்இரு திசையானைகள் தலை பீற
கத்திப்பிடியிடையாள் சானகிகாத்தல் எண்ணம் ஆனது நிறைவேற()

2. சிங்காரமகா ரவிகுலமே சிலாக்கியம் என்ன ஒளிர் வீச
உங்காரம் செய்தராசர் எல்லோரும் ஒருத்தர்போலமுகம் கூச
இங்கே பெண்சீதை செய்தவப்பலன் லபிச்சுதென்று பலர் பேச
சிங்காதரன் அல்லால் ஒருவருக்கும் இளப்ப ஒண்ணுத

[மகாப்பிரயாச ()

3. தருமாகம சாஸ்திரகோடிகளும் சகலவேதங்களும் பாட
வருமாமுனி விசுவாமித்திரன்சொல் மறுவில்லாதபடி கூட
ஒருகாலனும் இந்த ஓசை தன்னை ஓர்க்கொணுமல் செவிமூட
இராமா இனிஇவனே கோதண்டதீட்சா குரு என்று கொண்டாட ()

மிதிலேக்குச் சக்கரவர்த்தியின் எழுச்சி.

விருத்தம்.

கண்ணரிய வில்லதுதாஞெடிந்த பின்பு
நடைத்தூதர் கலியாண வோலை காட்ட
அண்ணலெனும் தசரதனும் பயண பேரி
அதிமுழங்கத் தேவியரும் படையுங் கூடத்
தண்ணுலவு சந்த்ரகிரி பிறவுஞ் சென்றுன்
சனகேசன் சதுரங்க தளத்தி ணேடே
எண்ணரிய களிப்பாக வழிமேற் கொண்டே
எதிர்வந்தான் உடன்மிதிலைப் பதிவந் தானே. (17)

16. தரு. ராகம்-சாவேரி. தாளம்-ஆதி.

பல்லவி.

ராசன் அம்தசரதராசன்-சனகமகா-ராசன்பதிக்குவந்தானே.

அநுபல்லவி.

வாசவன் பணிராக வேசன்கல்யாண ஓலை
வாசகம்கண்டுவிசு வாசமேசம் உண்டாகி(ராச)

சரணங்கள்.

1. கொட்டம் இடும்கைசமும்-அட்டம் இடும் துசமும்
எட்டியகு திரையும்-கட்டியதேர் தியும்

இட்டமுள்ள ராசரும்-அட்டாள தேசரும் ஆய்
பட்டவர்த்தனர் இணங்க-கப்பணம்
இட்டமற்றவர் வணங்க
வட்டவெண் குடையும்முடிகளும் துலங்க
மகரதோரணங்கள் முறைமுறை இலங்க
சட்டம் ஆனதிசை எட்டின்மேலும்படை
மட்டில்லாமல்கூட-கட்டியம்போட-பெண்கள்பாட-கொண்டாட

2. உச்சமாணிக்கத் தாலே-தச்சபல்லக்கின் மேலே
அச்சுதன்தாய் முதலா-மெச்சிய தேவிமார்கள்
இச்சையால்முன்னேபோ-கச்செய்துபின்னுகவே
பச்சைப்பசுங்கிளி என்னவே-பாங்கியர்
மொய்ச்சுக்கொண்டு துன்னவே
வச்சிரபாணிஎன்னமலர்முகம் மின்ன
மண்ணும்விண்ணும்என்னஅதிசயம் என்ன
உச்சிமீது கரம் வைச்சு மன்னவர்கள்
எச்சரிக்கைபேச-கவரிவீச-வெகுவிலாச-உலா [illegible]

3. மெத்தப்பெருஞ் சேனைகள்-சுற்றத்துந்துமி போரி
சத்தமேகம்போல் ஆர்க்க-அத்திசையிலே நின்று
சத்திரபதி சனகன்-நெற்றிநேர் ஆக வர
முற்றியகடல் மேலே-புகுந்த
மற்றொருகடல் போலே
பத்தியாக இருபடைகளும் கலந்து
பார்த்திரண்டுராசரும்முகம் மலர்ந்து
வெற்றி ஏறிய புச்சித்திலே அவனே
ஒற்றிஅணைத்துமாற்றி-மிகுத்தகீர்த்தி-படைத்தமூர்த்தி-அயோத்தி

ஸ்ரீராமர் பவனி வருதல்.

விருத்தம்.

வந்ததசரதராஜன் தன்னை முன்னே
வந்திருந்த ராமனுந்தம் பியும்போய்க் கண்டார்
அந்தவிரு வருந்தந்தை யருளைக் கொண்டார்
அரசரிரு வரும்பின்னே வரமுன் சென்றார்
பந்தமுள்ள மிதிலையீ தியிலே தேர்மேல்
பவனிவரும் ராமனைக்கண் டாசை கொண்டு
சென்றிருவை கிகரான பெண்கள் பின்னே
செல்லுவார் மதிமயங்கிச் சொல்லு வாரே. (18)

(1) 17. திபதை. ராகம்-கௌளிபந்து. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. சோதிமெடுத்தேர்மிதிலை வீதியினில்வரக்கண்டு
சுவாமிமுகம் காணவந்தார் வெகுமாதர்
பூதலம்தனில் இந்தவூர் மாதவம்என்னசெய்ததோதா
புண்ணியன் இங்கேவந்தான் என்றார் வெகுமாதர்

2. ஆடகலோகத்தழுதை ஈக்கள்மொய்த்துக்கொண்டதுபோல்
ஐயனை மொய்த்துக்கொண்டார் வெகுமாதர்
கோடைதனிலேதண்ணீர்ஓடைகண்டமான்கள்போலக்
கூடிக்கொண்டோடிவந்தார் வெகுமாதர்

3. ஆழியும்வளையும்செம்பொன் ஓலையும்மாலையும்விட்டாள்
ஆடைவிடாமல் நின்றாள் ஒருமாது
கேள்விமுறையில்லையோ சுவாமி உன்முன்னே அம்பாலே
கிழிக்கின்றான் மாரன் என்றாள் ஒருமாது

4. பெருத்தமலைபோல் வில்லை ஒடித்தாயே சீதைக்காகப்
பெலத்தவன் நீயே யென்றாள் ஒருமாது

வருத்தமோ மாரன்கையில் கருப்புவில்லை யொடித்த
மாட்டாரோ சுவாமி யென்றாள் ஒருமாது

5. கண்ணுக்கோ ருருவாய்ப் பார்ப்போர் கண்ணில் எல்லாம்
தோன்றும் இவன்
கண்ணனே ஆகும் என்றாள் ஒருமாது
மண்ணும்விண்ணும் கடந்தானைக் கண்ணால் வளைத்துக்
கொண்டாளே
வைதேகியே பெண் என்றாள் ஒருமாது

6. சாய்த்தொருவரையும் காணாள் சாமிதனையே கண்டாள்
தனியனே ராமன் என்றாள் ஒருமாது
வார்த்தையும் உடமைகளும் பூந்துகிலும் சோர்ந்தாள் உயிர்
மாத்திரம் சோராமல் நின்றாள் ஒருமாது

7. இங்கே என் உளம்புகுந்தான் கண்கதவினாலே மூடி
இறுக்குவேன் இவனை யென்றாள் ஒருமாது
மங்கையரே என்மனது வள்ளல்பின்னே போச்சுதங்கே
வரக்கண்டதுண்டோ என்றாள் ஒருமாது

8. தன்மருகன் ஆக இந்த மன்னனைப்பெற்றசனகன்
தர்மவான்என் றுசொன்னாள் ஒருமாது
கன்மனதுக்காரன் இவன் தன்மகளுக்காகவில்லை
வன்வனைக்ருச்சொன்னன் என்றாள் ஒருமாது

சீதை சபாமண்டபத்துக்கு வருதல்.

விருத்தம்.

பாஷையரிப் படியுருகப் பவனி வந்தான்
படையரசர் தசரதனும் பலரும் வந்தார்

ஸுஷேணவா னரர்களுடன் தம்பி மாரும்
மருங்கிருக்க ராகவனு மிருந்தாளிப்பாரில்
தாவுபுகழ் வசிஷ்டமுனி வார்த்தை கொண்ட
சனகனுரை கொண்டுமணி மண்ட பத்தில்
பூவுலகில் தேவர்சிறை மீட்க வந்த
பொருளினுள் சீதைபெழுந் தருளி னாளே. (19)

18. தரு. ராகம்-சாவேரி. தாளம்-ஆதி.

பல்லவி.

அன்னைசானகி வந்தாளே - ராசாதிராசர்
அனைவர்க்கும் காக்ஷி தந்தாளே.

அனுபல்லவி.

கன்னிமார் என்னும் தாரா கணத்தில் சந்திரனே நேரா
பொன்னின் ஒளியும் பூமணமுங் கொண்டு தொடர்ந்து
மன்னன் சனகன்மணி மண்டபத்தில் நடந்து(அன்)

சரணங்கள்.

1. சுந்தரப்பாதம் வைக்கவே ரத்தினச்சிலம்பின்
சோதிநிலத்தில் மொய்க்கவே பூமி ஆகிய
தன்தாய் மகளுக் கென்னவே விரித்த தேமாந்
தளிர்போல் எங்கெங்கும் மின்னவே
அந்த அழுர்தம்கண்ட இந்திரன்போலே தாக
மாகியராமன் முன்னே தோகையர் நடுவாக
தந்தமலர்க்கைவளைச் சோதியினாலே ரண்டு
கடைக்கண்கள் கொண்டு ராமன் வடிப்பங்கள் கண்டுகொண்டு(அன்)

2. வீரராமன்கை தீண்டியே தொடும்போதவன்
மென்கைபிடிக்கவேண்டியே அம்மன்கைஆல்

வாரீசமலர் விரித்துக்காட்டுஞ்சூரியன்போற்
மாணிக்கக்கங்கணம்தரித்து
சோராதகடைகண்டு சேர்ஆகாமல் மெத்த
தவஞ்சும்அஞ்சுங்கள்போலக் சவரியங்கையர்சுற்ற
ஸ்ரீராமனைவிடுத்து ஆர்ஆரூர்க்குப்தாய்ய
தெய்வம்இவள்என்றெண்ணிக் கைகள் அஞ்சலிசெய்ய ( )

3. சீயகூந்தல் மேமேல பூர்ணசந்திரன்போல்
தெரிந்திடஒரு காலே மாலினகூடி
தாழ்வில்லாமல்முன்னுலே தேவர்கள்செய்த
தவம்வெளிவந்தால்போலே
மூவுலகும்செலுத்தும் ராவணனுக்குப்பண்டு
முத்திகொடுக்கவந்த சித்திரவடிவைக்கண்டு
தேவிஇவள்என்றால் ராகவன் இந்தச்சின்ன
மேலையோடிப்பான்எழு மலையும்ஓடிப்பான்என்ன(அன்)

4. தெரிசனம் காணப் போகுமோ சொல்லஎன்றுலும்
சேஷனுலேயும் ஆகுமோ இந்திராணிமுதல்
அரிவையர்க்கு மெய் நாணுமே ராமனும்காண
அனந்தம்கோடி கண்வேணுமே
பிரமன்முதல் எதுவும் பெற்றவளுக்கு நல்ல
உருவினில் இனிவேறு உடமைகள் என்ன சொல்ல
அருமையா உலகில்கல் யாணகுணத்தில்பெண்கள்
திருமங்கிலியத்தில்இடும் திருஆகியஎங்கள்(அன்)

ஸ்ரீராமர் மணக்கோலங்கொள்ளுதல்.

விருத்தம்.

சீலங் கொண்டிப் படிவந்த சீதை மாத மொடுஞ்சென்றுள்
மூலங் கொண்ட கௌசிகனும் முகூர்த்தம் நாமோ வென்றுசொன்னான்

ஓலங்கொண்ட வேதன்முதலோரா யிரத்தெட்டண்டமும்தன்
கோலங்கொண்ட ராமன்மணக் கோலங்கொண்டான் கொண்டானே.( )

19. நந. ராகம்-அசாவேரி. தாளம்-ஆதி.

பல்லவி.

ராமசாமிகொண்டகோலம்-என்னலே சொல்லப்போமோ

அனுபல்லவி.

கோமிதிலைராசன்முன் அனேக கோடிமன்மதனேக்கர்ஆக(ராம)

சரணங்கள்.

1. பாதகடகம் சேர்த்தி மருங்கினில்
பசும்பொன்னாடை போர்த்தி மார்பின்
மீதுபொன்னூல் ஏற்றி தன்காமமும்
விளங்கவே சாத்தி
சீதைஆசைஇது எனப்பாராட்டி
தெரிந்தசந்திரசூரியர் அதைகாட்டி
ஓதிமாமுகாதிலே ஒளிகாட்டி குண்ட லங்கள் பூட்டி(ராம)

2. சுழுகப்பட்டம் வரித்து சுவரத்தின
தொங்கல்மாலை பரித்து முடிமேல்
விமலமகுடம் தரித்து பீதாம்பரம்
மேனிமேலே விரித்து
கமலமாமலர் ஆனது நாண
கங்கணங்கள்செங் கையினில் பூண
அமுர்தகிரண சந்திரன்போல் முகம்காண யோககல்யாண ( )

3. ஆகமீது வன்ன வன்னம்
ஆனபணிகள் மின்ன பச்சை
மேகம்போலே காத்தி விளங்கும்
மேனியில்கலவை வந்தி

வாகுமந்தர கிரிமுறுக் குண்டே
வாசுகீஎன மணிவகை கொண்ட
நாகரீககேயூரப் ஒளி மண்டவீரகோ கண்ட(ராம)

கலியாணச்சடங்கு செய்தல்.

விருத்தம்.

சக்ரபதி யாதியரர கவனிவ் வாறு
சமைந்தகல்ல மணவாளக் கோலங் கொண்டானன்
அக்கணமே தம்பியரும் கோலங் கொண்டார்
அரசர்களுந் தசரதனு மந்திரி மாரும்
திக்கிலுள்ள முனிவரும்வே தியருங் கூடித்
திரைகடல்போல் மிகப்பொங்கி மிதிலே தன்னில்
முக்கியமுள்ள பலசடங்கின் விதிகளெல்லாம்
முறைசெய்தார் கலியாணத் துறைசெய் தாசே. (21)

2. திபதை. ராகம்-மோகனம். தாளம்-அட சாப்பு.

கண்ணிகள்.

1. கல்லியாண பேரிகை அடித்தார்-சனகன்
சொல்லியவார்த்தையைப் படித்தார்
எல்லாரும்ஆனந்தம் கூடினர்-அவர்
எங்கெங்கும் கின்றுகூத் தாடினர்

2. வாழை கமுகுகள் நாட்டினர்-நெடு
வான்மட்டும் பந்தல் ஓட்டினர்
ஆழிபோலே திரை [illegible]மைத்தார்-அ
காரவேதிகை மைத்தார்

3. தூணுக்குத் தூண் உறை
சூரியர்போல் கண்ணுடி
சாணுக்குச்சாண் மாலே
தாலமும் கும்பமும்

பூட்டினர்-சந்திர
மாட்டினர்
தொடுத்தார்-தங்கத்
தடுத்தார்

4. பொன்னரி மாலைகள்
பொன்னும் பவளமும்
இன்னரி வீணைகள்
கேளிக்கை மாதர்கள்

வீக்கினர்-முத்தும்
தூக்கினர்
பாடினர்-மெத்த
ஆடினர்

5. பூரண கும்பங்கள்
பூசுரர் வேதத்தால்
தோரணத்தால் வெளி
சொர்ணவருஷமா

பதித்தார்
துதித்தார்
மறைத்தார்-எங்கும்
இறைத்தார்

6. மாணிக்கத் தீபங்கள்
வாடை கஸ்தூரிகள்
ஆணிப்பொன் ஆடைகள்
ஆகத் தெருவெங்கும்

ஏற்றினர்-நல்ல
தீற்றினர்
சாத்தினர்-பனிநீர்
ஊற்றினர்

7. சந்தனத்தால் கோலம்
தருவையும் நன்றாக
சுந்தரப் பாலிகை
தூபமும் தீபமும்

தீட்டினர்-பஞ்ச
காட்டினர்
கூட்டினர்-நறுங்
காட்டினர்

8. பொன் ஆலவட்டமும்
புஷ்பமும் விந்தமும்
தன்னர வண்ணமாக்
தங்கப் பொடிகளாக்

பட்டமும்-இவ்ய
சந்தமும்
கட்டினர்-எங்கும்
கொட்டினர்

9. மத்தளம் மல்லரி
வாத்தியம் நாகசுர

தாளங்கள் பஞ்ச
மேளங்கள்

திக்குகளால் சக்கர வாளமும்-ஓசை
செவிடுபடமே அண்ட கோளமும்

10. சனகனும் தசரத ராசனும்-வர
சவனுடனே அள கேசன்போல்
கனிவுள சந்தோஷம் மீமிசை-வந்து
கலியாண மண்டபம் ஏறினர்

11. வெள்ளை விடையினை ஊர்ந்தார்-உமை
வேணி அரன்வந்து கோர்ந்தார்
வள்ளியும் கந்தனும் சேர்ந்தார்-மூத்த
மைந்தன் வல்லபையும் சார்ந்தார்

12. வேதனும் வாணியும் நாடினர்-தேச
வேந்திரன் இந்திராணியும் கூடினர்
மாதவர் தேவர்மென் மேலே-அந்த
மண்டபம் சேர்ந்தார்இப் பாலே

13. மங்களம் ஆம்ராமச் சந்திரன்-சூரிய
வம்மிசமணி ஆன கந்திரன்
கங்கைமுதல் தீர்த்தம் ஆடினன்-பிசுக்
கலவைச் சலவைகள் சூடினன்

14. மாலைமகுடமு கத்தணி-பட்டம்
வாகுவலயமச் ரப்பணி
காலணிகைவளை பாரித்தார்-பதக்
கங்கள் முதல் அலங் காரித்தார்

15. தனதாம் பரதன்கை நீட்டவே-மற்ற
தம்பியர் சாமரை ஆட்டவே

கனகரதம் கண்டு தாவிஞன்-ராமன்
கலியாண வேதிகை மேவிஞன்

16. எப்பொருளும் பெற்ற கோதையை-அஷ்ட
லட்சுமியும் ஆன சீதையை
ஒப்பனை செய்யவும் தேடுமோ-என்
ஒருத்தனுலே சொல்லக் கூடுமோ

17. பூமி உள்ளோர்க்கெல்லாம் ஆவியை-நல்ல
பூவை எனும் சீதா தேவியை
சாமி அருகினிலே தந்தார்-வ
இஷ்டரும் தருப்பைகொண்டுவெந்தார்

18. முத்தான தண்டுலம் விரித்தார்-வேத
முறையே சடங்கெல்லாம் தரித்தார்
உத்தம மந்திரம் விளைத்தார்-முனிவர்
ஓமாக்கினியை வளர்த்தார்

19. தான தருமங்கள் ஓங்கவே-ரா
கூத்தர்போய்ப் பூமிபாரம் வாங்கவே
வானவருக் கின்பம் சுற்றவே-ஓமம்
வலம்கொண் டெழுந்தது மெத்தவே

20. சல்லாபன் ஆகிய நேசன்-சீதை
தன்னை அந்தமித் லேசன்
னல்லாருங் காணமுன் னூலே-சொல்லி
ஈந்தானே ராமன் கை மேலே

21. ஐயனும் தையல்கை பிடித்தான்-கலி
யாண விதியெல்லா முடித்தான்

செய்யவளும் திரு மாலும்-போலச்
சேர்ந்திதழுந்தாரே மென் மேலும்

ஸ்ரீராமர் அக்கினி வலம் வருதல் முதலியன.

விருத்தம்.

ராகவன்சீ தையைப்பாணி க்ரகணம் செய்து
நற்றீயை வலம்வந்தான சீதை பாதம்
மோகமுடன் பற்றியம்மி மீதில் வைத்தான்
மூக்காலும் அருந்ததிமுன் காட்டி னின்பின்
ஏகமன துடன்முனிவர் தந்தை தாய்மார்
எல்லார்க்கும் சேவித்தான அப்பா லின்பம்
ஆகவொரு கன்மணியில் சீதை யோடும்
அமர்ந்திட்டான் அண்டமெல்லாம் சுமந்திட் டானே. (22)

சோபனம் பாடுதல்.

இதுவும் அது.

மணமுள்ள மலர்மாரி யந்த வேளை
வானவர்கள் பொழிந்திட்டார் முனிவ ரெல்லாம்
கணமுள்ள ஆசீர்வா தங்கள் சொன்னார்
காவலர்கள் பொன்மலர்கள் சொரிந்தார் தாய்மார்
பணமுள்ள தல்வரிசை பலவு மீந்தார்
பக்தியுள்ள பந்துக்க ளெல்லாம் மொய்த்தார்
தினமுள்ள சுமங்கலிக ளங்கே வந்து
கூடினர் சோபனங்கள் பாடி னாரே. (23)

19. தரு. ராகம்-மத்தியமாவதி. தாளம்-ஆதி.

ப ல் ல வி.

சோபனம் சோபனம்-ராம-சுவாமிக்கும் சீதைக்கும்
சோபனம் சோபனம்.

அ னு ப ல் ல வி.

பூபன் தசரதபதிக்கும் சோபனம்
புண்ணியசனக பூபதிக்கும் சோபனம்(சோபனம்)

ச ர ண ங் க ள்.

1. தாமம்மே வியரதிக்கும் ரதிசுந் தரனுக்கும்-சோபனம்
சீர்மகள் இந்திராணிக்கும் இந் திரனுக்கும்-சோபனம்
மாமதிபெருகும் வாணிக்கும் அவள் வரனுக்கும்-சோபனம்
தாமரைமலர்த் திருவுக்கும் தாமோ தரனுக்கும்-தேவிக்கும்
[அரனுக்கும்-சோபனம்(சோபனம்)

2. கேர்வரு சுமந்திரன் முதல்மந்திர நேசர்க்கும்-சோபனம் [பனம்
எர்பெறுவதிஷ்டன்கௌசிகன்முதல்ஆம்யோகீசர்க்கும்-சோ
வார்முலை அரம்பைமாதர்க்கும் எண்டிசை வாசர்க்கும்-சோபனம்
சேவைசெய்து மனம்மகிழும் ஐம்பத்தாறு தேசர்க்கும்-ராசாதி
[ராசர்க்கும்சோபனம் (சோபனம்)

3. வருகௌசலேகைகைகேசுமித்திரைஎனும் தாய்மாருக்கும்-சோபனம்
பெருகுபரதன்முதல் ஆகிய மூன்று பேருக்கும்-சோபனம்
ஒருமையாஇதுசொன்ன வால்மீகர்கம்பர் இருவோருக்கும்-சோபனம்
அருளுசலகவி நாடகம் இதுபடிப் பாருக்கும்-கேட்கும் எல்
[லாருக்கும்-சோர்பனம்-(சோபனம்)

ஸ்ரீராமருக்கும் பரசுராமருக்கும் சம்வாதம்.

விருத்தம்.

திருமகளாம் சானகிகல் யாணம் செய்து
செயமூளதம் பியர்க்கும்விவா கங்கள் செய்து
வரும்வழியில் சகுனவிரோ தத்தி னலே
மலைபோலே முனிபரசு ராமன் வந்தான்
பெருகுதச ரதன்கண்டு நடுங்கும் போது
பிரசண்டகோ தண்டகுரு ராமன் தானும்
ஒருவரும்நே ரில்லையென வில்லை யேந்தி
உரஞ்சொல்வா னுடனேயுத் தரஞ்சொல் வானே. (24)

3. திபதை. ராகம்-கலியாணி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. மண்ணினில் அரசர்போலக் கானுகிறுயே ஆசீர் வாதம் ரகு — ராமா
கண்ணினில் வேதியர்போலத் தோணுகிறுயே நமஸ் காரம் பரசு — ராமா

2. தாடகையென்னும்பெண்மேல் சண்டைகொள்ள ராசர்க்குத் தான்விதியோ — ராமா
வேடர்கள் தொடுக்கும் வில்லைப் பிராமணர் தொடத்தலை விதியோ பரசு — ராமா

3. ஆனல்பெண் கொலைசெய்யல் ஆமோ உனக்கிது அடைவோ ரகு — ராமா
தான்ஆகப் பெற்றெடுத்த தாயைக்கொலை செய்தாயே தகுமோ பரசு — ராமா

4. தருமமா் என்னைப்பெற்றத் தகப்பன் சொற்படி சொல்லேன் தாய்க்கொலையோ — ராமா

குருவார்த்தை தடுக்காமல் நானும் செய்தேன்பெண்
கொலையோ பரசு ராம

5. சொத்தையில் ஒடித்ததை மெத்த மெத்தவே எண்ணித்
துள்ளாதே ரகு ராமா
கற்றவேதியன் என்று பொறுத்தேன் பொறுத்தேன் குதிக்
காதே பரசு ராமா

6. அந்தவில் வளைத்தாயே இந்தவில் வளை இந்தா
அடடா ரகு ராமா
இந்தா வளைத்தேன் இதில் வைத்த அம்புக்கு வழி
எங்கே பரசு ராமா

7. அம்புக்கு வழியில்லை நான்பிராமணன் இணி
அணுக்கிரகம் செய் ராமா
பின்புத்திக்காரன் இரு பிறப்பன் உன்னோடே என்ன
பேச்சு பரசு ராமா

8. சந்திசெபதபங்கள் எல்லாம்உன் சரத்துக்கே
தந்தேன் ரகு ராமா
வந்தவழி பார்த்துக்கொண் டோடிப்போவதே நல்ல
மார்க்கம பரசு ராமா

ஸ்ரீராமர் திருவயோத்தியைச் சேர்தல்.

விருத்தம்.

இன்னவகை சொன்னரா கவனை வாழ்த்தி
இனியதவம் செயப்பரசு ராமன் போனன்
வெண்ணவண்கைக் கொண்டவில்லை வருண ரீசன்
வடைக்கலமா வைத்துவிட்டு ராம சந்த்ரன்

மன்னவரும் தம்பியரும் தேர்மேற் கொண்டு
வரவருகே தானும்மணித் தேர்மேலேறி
மின்னனைய சேதையுட னேசந் தோஷம்
மிகவந்தான் அயோத்திமா நகர்வந் தானே. (25)

பாலகாண்டம் முற்றிற்று.

வசனம்-1-விருத்தங்கள்-24-ஆக-25.

தோடையம்-1-திபதைகள்-3-தருக்கள்-18-ஆக-22.

ஆகப் பாயிரம்-1-க்கும் காண்டம்-1-க்கும்-கூடிய

கொச்சகம்-1-வெண்பா-2-வசனம் - 1-விருத்தம்-30-ஆக-3:

தோடை யம்-1-திபதைகள்-3-தருக்கள்-25-ஆக-29.

சக்கிரவர்த்தித் திருமகனர்

திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இரண்டாவது

அயோத்தியா காண்டம்.

சக்கிரவர்த்தி முடிசூட ஸ்ரீராமரை வேண்டுதல்.

விருத்தம்.

வனிதைமணிச் சனகியுடனயோத்தி மேவி
மணவாள ராமனென விருக்கும் நாளில்
கனிவுபெறப் பரதனைச்சத் துருக்க ளேடே
கைகயன்பால் விடுத்துச்சின் னாள் கழிந்த பின்பு
இனியதச ரதன்வதிஷ்டன் மந்திரி மாரும்
இசைந்தபடித் துறந்திடாக வலனைக் கூவித்
தனிமகுடம் புனையெனவே அவனுக் கன்பாய்ச்
சாற்றுவான் தன்கவலை ஆற்று வானே.

1. தந. ராகம்-மத்தியமாவதி. தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தமனுத்தரவேணும்மகனே - ராமா-இந்தமனுத்தரவேணும்மகனே

அனுபல்லவி.

இந்தமனுத்தரவேணும் மகனே-ராமசி
சந்திரனேபுவி ஆளத்தகும் நீ உத்தமனே(இந்த)

சரணங்கள்.

1. அறுபதினாயிரவருஷ காலம்-வாழ்ந்தேன்
அதிலேகாணுதெல்லாம் கண்டறிந்தேன்இந்திர சாலம்
பருவதமோ என்காய ஸ்தூலம்-இனிப்
பார்க்கவேணும் என்கண்ணுல் நீ பாராளும் கோலம் (இந்த)

2. முடியாததோகாந்த காரம்-இத்தை
மூதுமையிலும் தறவாமல் இருந்தென்ன சாரம்
குடிதாங்கி எனக்கோர்உப காரம்-இந்தக்
குவலயம்கைக்கொண்டுமுத்திகொடுப்பதுன்தன் பாரம்(இந்த)

3. ஒருவன் அறுபதினாயிரத் தோரை-கங்கை
உதவிமுத்திகொடுத்தானே பகிரதன் முன்னேரை
இருநிலத்தில் அதுபோல்உன் பேரை-உதவ
எனக்கு முத்திதர ஆன்வாய் இனி இந்தப் பாரை (இந்த)

4. உள்ளத்தை உன்னுடேசொன் னேனே-முன்னுன்
ஊமைகண்டகனவாக உள்ளடக்கி னேனே
பிள்ளைக்கலி தீர்த்தபெரு மானே-இந்தப்
பெரும்புவிநீகொள்ள முத்திபெறவேணும்காணே (இந்த)

5. மலர்க்கையால் பிடிப்பாய்செங் கோலே-என்தன்
வார்த்தை தடுக்காய் எனவே உரைத்தேன்ஒரு காலே
தலைச்சுமைதந்தான் என்றென்தன் மேலே-சற்றும்
தாழ்வாயெண்ணுதே யினித்தாங்கா தென்னுலே (இந்த)

6. வாழைஅடி வாழையது போலே-இந்த
மண்டலத்தை ஆண்டதுண்டு மன்னர்ஒருகாலே
சூழ்மதில் அயோத்தியை அது போலே-நீயும்
சுமக்தானவேணும் என்தன் சொல்வழியிலே (இந்த)

7. சூலத்தில் உள்ளகுறை எல்லாம் வாங்கும்-உன்தன்
குணத்தாலே உலகெல்லாம் மென்மேலே ஓங்கும்
மலைக்குமலை அல்லவோ தாங்கும்-இந்த
மண்டலத்தை நீ தாங்கினால் என்கவலை நீங்கும்(இந்த)

ஐம்பத்தாறுதேசத்து ராஜர்கள் வருதல்.

விருத்தம்.

ஈங்கிவையிப் படிமகனே யிசையக் கூறி
இனியதச ரதராசன் கணிதர் சொல்லப்
பாங்குபெறு தேசரா சர்க்கு ராமன்
பட்டாபி ஷேகமின்றைக் கறிவீ ரென்றும்
நீங்களெல்லா மயோத்திநகர் வருவீ ரென்றும்
இனைப்பினால் தன்னேலை யனுப்பி விட்டான்
ஆங்கவரும் மிகமிகச்சந் தோஷ மீறி
அந்தந்தத் தேசம்விட்டே யணுகி னாரே. (2)

2. நந. ராகம்-மத்தியமாவதி. அட தாளம்-சாப்பு.

பல்லவி.

வந்தனர் எங்கள் கலியாண - ராமச்சந்திரன் திருமுடிகாண.

சரணங்கள்.

1. வந்தனர் அந்தந்தத் தேசத்துள்ளோர் நாடும்
மன்னன் இராமனைச் சோர்ண முடிசூடும்
சந்திரிக லீலையைக் கண்டெதிரே கொண்டு
தம்தலைமேல்வைத்துக் கண்களிலே ஒற்றி (வந்)

2 வங்களர் சிங்களர் மாளவர் சோளர்
மராடர் கர்ணடர் மகதர் குருதர்கள்

கொங்கணர் டங்கணர் குச்சரர் மச்சர்
குலிங்கர் கலிங்கர் தெலுங்கர் முதலாக(வர்)

3. சேரலர் சாளுவர் உற்களர் பப்பரர்
சேதிபர்குரீ தளர்சிந்தர் அவந்திகர்
ஆரியர்சீனர் விதர்ப்பர் விதேகர்கள்
ஓளட்டர் பராஷ்டிரர் சுராஷ்டிரர் முதலாக(வர்)

4. புண்டரீகக்கண் ராமனுக்கு முடி
பூணச்செய்தான் இதுகாணப் பெற்றேரும் என்று
மண்டும் ஐம்பத்தாறு தேசத்து ராசரும்
மன்முடிமன்முடிக் கொண்டாடிக் கொண்டாடி(வர்)

திருஅயோத்தியை அலங்கரித்தல்.

விருத்தம்.

தேசதேச சத்தில்வந்த ராசரெல்லாம்
தசரதரா சன்சமூகந் தனிலே கூடி
நேசமுடன் ராமனுக்கு மகுடஞ் சூட்ட
நினைத்தபடி செய்யெனவே மகிழ்ந்து கூற
ஆசகலு மயோத்திமா நகரில் வேந்தன்
ஆணைமேல் தந்துமிக ளடிப்பீ ரென்னப்
பூசுரரும் ராசர்களு மழிந்து கொண்டு
பூரிப்பார் நகரமலங் காரிப் பாரே. (3

1. தீப்தை. ராகம்-புன்னகவராளி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. விசையதந்துமி அடித்தார் நகர் எ
தசரதன் அருளிய மொழி படித்தார்

திசைதிசைசொல்லி விடுத்தார் வாசலில்
அசையும் விசையகேதனம்எடுத்தார்

2. பூரணகும்பம் அமைத்தார் தெருவெங்கும்
தோரணம் அழகுடனே சமைத்தார்
வாரணம் அலங்கரித்தார் முனிவர்கள்
ஆரணம் முறைமுறை ஆர்ப்பரித்தார்

3. மாலிகை தொடுத்து வைத்தார் முத்துமுளைப்
பாலிகைபலபல படுத்து வைத்தார்
ஆலயம் விளக்கு வித்தார் பூமலர்ச்
சோலையும் சாலையும் அலங்குவித்தார்

4. அத்திகள் பொருவாரும் வெள்ளை வட்ட
முத்துக்குடைபிடித்து வருவாரும்
சித்திரம் புனைவாரும் சந்தன
கஸ்தூரிகளபத்தால் நுனைவாரும்

5. சிந்தூரம் எழுதிடுவார் பரிமளச்
சந்தனத்தால் தரை மெழுகிடுவார்
கந்தப்பொடிகள் இறைப்பார் மாவணப்
பந்தல் இட்டந்தரவெளிமறைப்பார்

6. வானவர்வந்து திரிவார் அடிக்கடி
மேனகை ஊர்வசி நடம்புரிவார்
கானவித்தகர்கள் படிப்பார் அதுக்கினம்
ஆனகோகிலம் போலச் சுதிபிடிப்பார்

7. அங்கே எதிர்செல்லுவார் இடம்காட்டி
இங்கே இரும்இரும் எனச்சொல்லுவார்
சிங்காசனம் அணிவார் கேள்சீலை
கண்காணவே இணை அடி பணிவார்

8. சடங்குகள் செய்வாரும் சமித்துகள்
இடம்புடு தருப்பைகள் கொய்வாரும்
உடன்தையூர்த் திரிவாரும் பொன்மழை
இடம்கண்டவர்க்கெல்லாம் சொரிவாரும்

9. ரம்பையர் நடமாட வீணையில்
தும்புருநாரதர் இசைபாட
செம்பொன் மவுலிசூட ராமற்குச்
சம்பிரமம் சொல்லமன்னர் எழுந்தோட

10. சல்லரி பேரிதாளம் துந்துமி
மல்லரியொடுநர கெசமேளம்
சொல்லிய அண்டகோளம் கிழிபட்ட
எல்லையும் குமுறிடு மேகீளம்

11. இப்படி கொண்டாடி ராமனுக்கு
ஒப்பணைசெய்வதே தெனநாடி
அப்போது தோய்ப்பாடி கூனியும்
வெப்புடனே வந்தாளே குடிமேகடி.

கூனி கைகேசியைக் கலைக்க வருதல்.

விருத்தம்.

துதித்திடும் அயோத்தி ஆளும் சொன்னமா முடிரா மற்கே
பதித்திட வேணும் என்று பலருமார்ப் பரிக்கக் கண்டாள்
இதைக்கலைத் திடுவேன் என்று ராமன்வில் உண்டை யாலே
கொதித்திடும் மனத்தா ளான கூனியும் தான்வந் தாளே. (4)

3. தரு. மோகனம்-ராகம். ஆதி-தாளம்.

பல்லவி.

கூனிவந்தாளே பொல்லாத கூனிவந்தாளே.

அ னு ப ல் ல வி.

போனநாள் ராமன்செய்த பகையால் காய்ந்து
பூனைபோல் இருந்து புலிபோல் பாய்ந்து(கூனி)

ச ர ண ங் க ள்.

1. அடுக்குமோராமனுக்குஅரசொருக் காலே
ஆர்கொடுக்கிறார் அத்தை அறிகிறேன் மேலே
கெடுக்கிறேன் நான் என்று புறக்கடத் தாலே
கிணறுவெட்டப் பூகம்புறப்பட்டாற் போலே(கூனி)

2. பூமிபரதனுக்குத்தகும் என உரைக்க
பூவைகைகேசி தன்மனமதைக் கரைக்க
ராமன்பகையை நினைந்தடிவாய் நரைக்க
நடுங்கிவிழுந்தலைந்து பெருமூச் சிரைக்க(கூனி)

3. கொட்டியபஞ்சுபோல் உடம்பெல்லாம் தளர்ந்து
கூனிகுறுகுறுத்து வில்லைப்போல் வளைந்து
பட்டம்கட்ட ஓட்டுவேனே என் றுளைந்து
பழையபகையை யெண்ணிப்பழமுள்ளு களைந்து(கூனி)

4. சந்தானது போய்முடங்கி காலி
சணல்போலே நரைத்துத்திரங்கிய தோலி
இந்திராதி தேவருக்கனு கூலி
இலங்கைராகூதர்கள் குடிக்கொரு நீலி(கூனி)

கைகேசி கூனியைக் கோபித்தல்.

வி ரு த் த ம்.

வந்ததொரு கூனிமன தெரிச்ச லாலே
வல்லியெனும் கைகேசி தனையெ ழுப்பி

இந்தமன்னன் ராமனுக்கு மகுடம் சூட்ட
எண்ணினான் என்னுமொழி சொல்லு முன்னே
விந்தைமுக மலர்ந்துநவ ரத்ன மாலை
வெகுமானம் செய்திடவும் அவமானித்துச்
சிந்தைவஞ்சத் தொடுகலைத்த கூனி நாக்கைச்
சேதிப்பேன் என்றுகைகை போதிப் பாளே. (5)

4. தரு. ராகம் – ஆனந்தபைரவி. தாளம்-ஆதி.

பல்லவி.

ராமனுக்கு மன்னன் முடிதந்தாலே நன்மையுண்டொருக்காலே

அனுபல்லவி.

பாமரமே உனக்கென்னடி பேச்சே
பழம் நழுவிப்பாலில் விழுந்தாற்போல் ஆச்சே(ராம)

சரணங்கள்.

1. இந்தவார்த்தை சொன்னாய் எனக்கெவர் நேரடி
பிரமாதிகளும்வரு வாரடி
இதுவேகல்ல சீரடி
வாயாடாமே பாரடி
ஆரடி எனக்குச்சரி(ராம)

2. பரசுராமன் கெர்வம் தீர்த்தவனடி
நம்மையெல்லாம் காத்தவனடி
பட்டம்கட்ட ஏற்றவனடி
நாலுபேரில் மூத்தவனடி
அவன் என்கண்மணி(ராம)

3. பரதன்பட்டம் கட்டாவிட்டால் கட்டியோ
அவன் சர்க்கரைக் கட்டியோ

என்பிள்ளே ராமன் எட்டியோ
நான் தான் என்ன முட்டியோ
வெட்டிப் போடுவேன் உன்னை (ராம)

இதுவும் கைகேசியைக் கூனி கலைத்தல்.

தங்கமாம் அயோத்தி ஆளச் சொல்லிய ராம னுக்கே
தங்கமா முடிகொ டாமல் சடைமுடி கொடுப்பேன் என்று
பங்கமாம் கூனி முன்னுள் பகையினு லேகை கேசி
மங்கையாள் எதிரே பின்னும் வார்த்தையால் கலைக்கின் ருளே. (6)

2. தீபதை. ராகம் - அசாவேரி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. ராமன் முடிசூடும் என்றபேய்மதி உனக்குவந்தது
ஏதம்மா-என்ன-வாதம்மா அடி
சீமாட்டி உன்பிள்ளை பரதன் காமாட்டி ஆனனே என்ன
செய்கையே-அம்மா-கைகையே

2. உன்மகன் ஊரில்லாவேளைத் தன்மகனை முடிசூட்ட
உன்னிருள்-கோசலை-எண்ணிருள் அந்த
மன்னவனும் அவள்சொன்னவார்த்தைகடவாமலுன்னை
வாதித்தான்-ஏதை-போதித்தான்

3. கண்உன்னை போதல்லவோ கண்காட்சி யென்பதறியாயோ
கன்னியே-என்ன-உன்னியே ஆர்க்கும்
பண்ணியபயிரில் அல்லோ புண்ணியம் தெரியும்அடி
பாவியே-என்தன்-ஆவியே

4. ஓடம்விட்ட ஆறும் அடிச்சுடும் என்று சொல்லும்வார்த்தை
உள்ளதோ-பெண்ணை-இல்லதோ அதுபோல்

ஈடழிந்துன் தாய்தந்தைமார் உன்னைவந்தடைந்த போதில்
என்செய்வாய்-எவரைக்-கெஞ்சுவாய்

5. ஊருக்கோபார்வார்த்துண்பதுடலுக்கோபால்வார்த்துண்பது
ஓதடி-செய்கை-தேதடி அடி
ஆருக்கும் பெண்ணே மண்பிள்ளை ஆனலும் தன்பிள்ளை என்ப
தறியாயோ-ஒன்றும்-குறியாயோ

6. கவுசலைபிள்ளைக்குப் பட்டம் கட்டினால் உன்பிள்ளைக்கென்ன
கட்டுவாய்-எவரைக்-கிட்டுவாய் பரதன்
தவசிஆய்ச் சந்நியாசி ஆகிப் பரதேசம்போவதெல்ல
சமர்த்தடி-கோபத்தை-அமர்த்தடி

7. சீர்ஆன கோசலைவீட்டுச் சிறுக்கிக்கும் சிறுக்கி ஆகச்
செருத்தாயோ-என்னை-வருத்தாயோ அடி
யார்யார்கையில் என்னென்னபட வேணுமோ அதெல்லாம்பட
லபித்ததே-தெய்வம்-சபித்ததே

8. பலநாளும் உன்னோடே நான்தான் பாடுபட்டதெல்லாம் வீணே
பாதகி-அடி-தேதகி அய்யோ
இலவுகாத்தகிளிபோலே போகவோ நான் உன்னைநம்பி
எண்ணினேன்-ஏமப்-பண்ணினேன்

9. கண்ணும் தன்மகன்மேலேபோல் உன்மகன்மேலேகோசலை
நைவாளோ-பட்சம்-செய்வாளோ
கண்ணில் எண்ணெயேகரிக்கும் பிடரியில் எண்ணெய்தான்
என்ன-கரிக்குமோ-அன்பு-தரிக்குமோ

10. நாயகன்கோசலைபிள்ளை ஆகில்உனக்கென்னவரும்
நன்மையே-சொல்லாய்-உண்மையே ஆர்க்கும்
தாய்கையிற் பசும்பொன்னிலும் தன்கையில் தவிடேமேல் ஆம்
தையலே-இதென்ன-நீமையலே

11. சொன்னசெய்வேன் என்கிறாயே முன்னேகொண்டவரம்ரண்டும்
இல்லையோ-தரச்-சொல்லையோ அந்த
மன்னவன்உனக்குச்சொன்னவார்த்தைக்கிரண்டுசொல்வாயே
வாங்கடி-இதுவே-பாங்கடி

12. ஒருவரம் பரதன்நாடாள ஒருவரம் ராமன் காடாள
ஓதடி-இதே-சூதடி இந்த
இருவரமும்கொண்டால் உனக்-கிதிசாடுண்டோடிமக
ராசியே-என்கண்ணை-கேசியே

கைகேசிக்கும் சக்கரவர்த்திக்கும் சம்வாதம்.

விருத்தம்.

அந்தவகை கூனிசொல்ல மனது வேறாய்
அப்படியே செய்வெனென மானம் செய்து
கொந்தளகம் சோரவீசோர மண்மேல்
குப்புறவே கிடந்திதிகை கேசி தன்னை
வந்தகச ரதராசன் கையால் தூக்கி
மலர்மேனி துடைத்தெனது மானை தேனே
பைங்கொடியே உன்குறையே தெனப்பட் டோலை
படிக்கின்றாள் தசரதனும் துடிக்கின் றானே (7)

3. தீபதை. ராகம்-நீலாம்பரி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. இந்த அலங்கோலமும்இந்த மனைதுக்கமும்
என்வந்த தோகைகை மின் அரசே-உன்தன்
சிந்தையில்லினைந்ததை உள்ளங்கை நெல்லிக்களிப்போல்
தெரியச் சொல்லாய் தோகைகை மின் அரசே

2. மருவும் மலரும்போலப் பாலும்நீரும்போல
மானம்வைத்தாண்டீரே மன்னவரே உன்தன்
கருவிழி மணிபோலக் காரிசனம் ஆக எண்ணைக்
கண்ணுண்டாய்க் காத்தீரே மன்னவரே

3. காத்ததற்கென்ன குறை இப்போதும் என்னஉன்னைக்
கைநழுவவிட்டேமே மின் அரசே நீ
பார்த்தது கேட்கிலும் எந்தவரம் ஆனாலும்
பரிந்து தருகிறேன்காண் மின் அரசே

4. மற்றொன்றும் இல்லைவரம் எனக்கு மூன்றீர்கொடுத்த
வரம் இரண்டும் கேட்கிறேன் மன்னவரே என்னும்
உற்றது சொன்னால் அல்லால் அற்றதுபோருந்தும் தான்
உள்ளது சொன்னேன் காணும் மன்னவரே

5. அந்தவரம் இரண்டும் தந்தேன் இனி உனக்கு
அட்டி சொல்லவேணை கைகை மின் அரசே உன்
மைந்தன் இராமன் ஆணை வார்த்தை புரட்டலியேன்
வாங்கிக்கொள்வாய் கைகை மின்அரசே

6. மூன் ஒருவரம் பரதன் நாடாளமாணிக்க
முடிபெறவேணும் அய்யா மன்னவரே அதின்
பின் ஒருவரம் ராமன் காடளாச் சடைமுடி
பெறவேணும் தாரும் அய்யா மன்னவரே

7. மலைப்போ ஒருவர்செய்த வஞ்சனையோ என்ன
வார்த்தை சொன்னாய் கைகை மின்அரசே அது
கலைப்பார் கலைத்தாக்கால் கல்லும் கரையும் என்ற
கதையைப்போல்ஆச்சுமே தகைகைமின்அரசே

8. கலைப்பாள் கவசலை உமக்குண்டெனக்குவேறே
கலைப்பார் ஒருவர் இல்லை மன்னவரே நீர்

சுவத்தாற் சொல்லுகிறீரோ சொன்னதே சொன்னது நான்
தமாறிச் சொல்லறியேன் மன்னவரே

9. மூத்தவனைத்தள்ளிவிட்டு இளையவனைப் பட்டம்கட்டல்
முறைமை அல்லவேகைகை மின் அரசே யாரும்
ஏத்தும் மனுவிக்கியான சாஸ்திரத்தினில் முன்னம்
இசைத்த படியிதுவே மின் அரசே

10. மூத்தவன் இந்திரனேஉபேந்திரனே அகிலாண்டம்
முழுதும் செலுத்துகிறன் மன்னவரேவெகு
நேர்த்திஇது முன்சொன்ன வார்த்தையை விட்டுச் சாஸ்திர
நெறிகள் போதிக்கல் ஆமோ மன்னவரே

11. ஆனை இருந்து கொண்டு அரசாளும் மண்டபத்தில்
அறியாப் பிள்ளைபரதன் மின் அரசே சிறு
பூனை இருந்துகொண்டு புலம்புகிறது போலப்
புலம்பல் ஆமோகைகை மின் அரசே

12. ஆனையும் பூனையும் நீர்பெற்றபிள்ளை அல்லால்
அசலார் பெற்றபிள்ளையோ மன்னவரே நீர்
மானம்வைத்தால் போதும் அணுவும்மலை ஆம்அந்த
வகையை நான் அறியேனே மன்னவரே

13. ஆயிரம் ஆனையும் பெண்புத்தியை அறிய
ஆராலும் முடியுமோ மின் அரசேகல்லது
போயினது போகட்டும் ராமனைஊரைவிட்டேன்
போகச் சொல்என்கிறாய் கைகை மின்அரசே

14. ஏதுக்குராமனைஊர்விட்டுப்போ என்றுப்
என்றுகேட்க வந்தீரே மன்னவரே நடுச்
சாதிக்குள் பரதனைஊரில் தங்கவொட்டாமல்
பண்டேன் துரத்திவிட்டீர் மன்னவரே

15. அவனும் சம்மதிக்கவே பாட்டன் ஊர்போவென்றேன்
அதியரீயும் சொன்னேனே மின் அரசே உனக்குக்
கவனம் இல்லேபோ என்ன காரணமோ இந்த
கபடம் பேசாதேகைகை மின் அரசே

16. கவனமும் உண்டு ஒருகாரணமும் இல்லை
கபடமும்பேச இல்லை மன்னவரே இன்று
இவனும்சம்மதிக்கவேஊர் விட்டுப்போகச்சொல்லும்என்றேன்
என்ன தப்பிதம்சொன்னேன் மன்னவரே

17. பூமியும் தருகிறேன் பரதற்குப் பொன்முடியும்
பூட்டுகிறேன் கைகை மின்அரசே எண்ணை
சாமியை என்உயிரை ராமனைப்பிரிந்தால் நான்
தரிக்கறியேன் கைகை மின் அரசே

18. என்னுயிர் அவன்போலை இருக்கறியா தென்றீர்
என்ன சத்தியம் இது மன்னவரே அவனை
சின்னம் சிறுவயதில் முனிபின் போகச்சொன்னீர்உம்
சிவனுக்குண்டோ தன்பம் மன்னவரே

19. கும்பிடுகிறேன் உன்தன்காலியும் பிடிக்கிறேன்
கோபம் செய்யாதேகைகை மின் அரசே
எம்பெருமானே என்தன் கண்மணிராமனை இங்
கிருக்கச்சொல் என்பாய் கைகைமின் அரசே

20. தாரைநீர் ஏற்றபோதே என்சரீரம் உமது
தம்சரீரம் அல்லவோ மன்னவரே நீர்
ஆரைக்கும்பிடுகிறீர் ஆர்காலில் விழுகிறீர்
அசலார் என்றெண்ணல் ஆமோ மன்னவரே

21. அடியில் விழுவேன் என்றும் அடங்கிஒடுங்கியேநான்
அனந்தம் வார்த்தை சொல்லியும் மின் அரசேசற்றும்

கடினம் இல்லாதுபோல ஈரச்சீலைப்போட்டு
கழுத்தை அறுக்கலாமோ மின் அரசே

22. காட்டுப் புறவுக்காகச்சதை அரிந்தமன்னவனைக்
கதைபிலும் கேட்டிலீரோ மன்னவரே உந்தன்
வீட்டுப்பெண்சாதிக்காக இத்தனை சாகசமும்
வேணுமோபோதும் போதும் மன்னவரே

23. கண்ணும் கருத்தும் ராமன் கண்ணுளனும் ராமன்
காப்பவனும் ராமனே மின் அரசே நான்
எண்ணும்தெய்வமும் அவன் அவன் போலுல் என்னுயிர்போம்
இருக்கச் சொல்என்பாய் கைகை மின்அரசே

24. எனக்குப் பொய்வாராது பொய் சொன்னுல் தோஷம் என்றீர்
எந்தமதிபால் சொன்னீர் மன்னவரே நான்
வனத்தில்போகச்சொல்லும் என்றசொல்திருப்பிவிட்டால் அது
மகத்தானபொய் அல்லவோ மன்னவரே

25. ஆனல்ராமனை வனத்தில் போகச் சொல்வதால்
ஆவதுண்டோ கைகை மின் அரசே அருங்
கானிலேராமனைப் போகச்சொல்வதிலும் என்
கண்கேட்கிலும் தருவேன் மின் அரசே

26. நானைச்சொல்ல இல்லைதெய்வம் சொல்லியத்தக்கு
நான்என்ன செய்வேன்காணும் மன்னவரே ராமன்
போனலும் கானகத்திலே அவனுக்குவரும்
பொல்லாங்கு உண்டோசொல்வீர் மன்னவரே

27. போஎன்று சொன்னவுடன் பொறிகலங்கி என்சீவன்
போய் விடுமேகைகை சண்டாளி நான்
ஆனன்று போனபின்னை அள்ளியிடுவார் உனக்
காரடிகைகேகி சண்டாளி

28. ஒட்டாரம் கட்டுகிறுய்ராமன்போனுல் என்சீவன்
உடனேபோமடி கைகை சண்டாளி
கட்டிய தாலிக்கயிற்றை உன்மகற்குப் பட்டங்கட்ட
காப்புக் கட்டடி கைகை சண்டாளி

29. வரகமுனிவன் ஆனவதிஷ்டமுனியே உன்னை
வரம் கேட்கிறேன் தாராய் என் தெய்வமே அந்த
பரதன்வந்தால் அவன்உற்றுரிமை செய்யாமல்
பத்துதரமாச்சொல்என் தெய்வமே

30. அண்டர் முனிவர் அல்லபகையாளிகள் அல்ல
அசலார் ஒருவர் அல்ல தெய்வமேதீமூன்
கொண்ட பெண்சாதிதானே தசரதன் ஆவிக்கு
கூற்றுவன் ஆய்வந்தாளை தெய்வமே

31. ஒளிவாய்இருந்துகொன்ற பிள்ளைப்பழிக்குமுனி
உரைத்தசாபம் இதுவோ தெய்வமே உலகம்
எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத்தெய்வம் கேட்கும்
என்பதும் இதுதானே தெய்வமே

32. பண்ணிட்ட எறும்புக்கா புருஷ்னைக் கொல்லவந்த
பாவிதன் பெண்இவள் அல்லோ தெய்வமே இந்த
மண்ணுக்குள் தாயைப்பார்த்துப் பெண்ணைக் கொன்றது
வசனம் பிசகுவருமோ தெய்வமே [சொன்னும்

33. உதிக்கும் கண்போலுன்னன்ன உயிர்போனலும் என்
உத்தமன் ராமன்மாத்திரம் தெய்வமேஅயோத்தி
பதிக்குப்பதி ஆகியே இருக்கிறுன்என்று காணப்
பாவிநான் ஆயினேனே தெய்வமே

கைகேசி ஸ்ரீராமரை வனத்துக்கு ஏவுதல்.

விருத்தம்.

கொன்றவன்போற் றசரதனிப்படிபு லம்ப
கூற்றுவன்போற் கைகேசி ராமன் தன்னை
யின்றிலைக் கழைத்துவர என்ன வந்து
கெடுமீனவா சலுக்குள்ளே புகுந்த போதில்
என்றும்அர சன்சொல்லான் காளை சொல்வேன்
என்றேழ் வருஷம்ரா மாடீ காட்டில்
சென்றுதவம் செய்பரதன் உலகை ஆள்வான்
செல்என்றாள் இதுவேந்தன் சொல்என் றாளே. (8)

ஸ்ரீராமர் வனமேகக் கைகேசியின் விடைபெறல்.

இதுவும் அது.

உளம்மகிழ்ந் தொருகை கேசி உரைத்தவாய் மொழியைக் கேட்டு
களங்கம்இல் லாத ராமன் கானகம் செல்ல நாளை
தெளிந்தபார் பரதன் ஆளச் செய்கதே மென்மை யென்று
தளர்ந்திடாத் தாயை வாழ்த்தித் தாழ்ந்துபின் விடைகொண் டானே.

5. தரு. ராகம்-சுருட்டி. தாளம்-திரிபுடை.

பல்லவி.

என்பாக்கியமேபாக்கியம் எவர்க்குண்டிந்தசீலாக்கியம்.

அனுபல்லவி.

அன்பாகவனம்போக அனுக்கிரகம் செய்தாயே (என்)

சரணங்கள்.

1. குழியிற் பயிர்தனைஎடுத்துக் கூரைமேல்வுறவிட்டு
வழுவான் களைமாற்றி வளர்க்கிறதுபோலே
சுழலும் இந்தமாச்சியத்துக்குச் சூடுமணி முடிமாற்றித்
தழுவும்முத்திராச்சியத்துக்குச் சடைமுடிதந்தாயே (என்)

2. கொக்கரித்தபேர் எல்லாம் கூடத்தீப்பாய்வாரோ
பக்கம்உள்ளபேர்என்னைக்காப் பாற்றினைப் பாரோ
சித்திக்கும்இந்தவலிநீக்கித் தேடும்பாகதிசேரத்
தக்கதவம்செய்யென்றுநீ தயவுசெய்தாயே (என்)

3. ஒருபிள்ளைராமன்பர லோகசாதகம்செய்ய
ஒருபிள்ளைபரதன் இந்த உலகம்தன்னை ஆள
இருபிள்ளையாலும்கைகை இகபரம்பெற்றுள் என்ன
வருசொல்உண்டாச்சுதென்ன மாதவம்செய்தேனே (என்)

ஸ்ரீராமர் வனம் ஏகுதற்காகக் கோசலை புலம்பல்.

விருத்தம்.

இப்படிச் சிறுதா யாரை இறைஞ்சியே அனுப்பிக் கொண்டு
மைப்படி வண்ண ராமன் வந்துகோ சலையம் மைக்குத்
தப்பிலா தடிவா ரெல்லாம் தான்சொல்லக் கன்றைத் தேடி
வெப்புறும் பசுப்போல் அன்னை விழுகின்றுள் அழுகின்றுளே. (10)

4. திபதை. ராகம்-மூகாரி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அயர்வேயாரகுராமா-வனம்போக-தெய்வம்சம்மதிஆமாஉனைநான்
எவ்வகைபிரிவேனே-நான்இனி-செய்குவதறிவேனே

2. எண்ணருந்தாயகமே-ரவிகுல-மன்னவர்நாயகமே-அரசன்
உன்னையும்வெறுத்தாளே-வெறுத்தும்-தன்னுயிர் பொறுத்தானே

3. சூடாமணிமுடிபோச்சோதலைமேல்-சடைமுடிவரல்ஆச்சோகேட்க
உடல்பதறுதேமகனே-மனம்விட-விட உதறுதேமகனே

4. தாய்வரம் அதுகண்டு-பூமியை-காவல்பரதன் கொண்டு-ஆளட்டும்
நீவனம்போவான்ஏன்-இப்படி-தீவினை ஆவான்ஏன்

5. கவியுகம்மேலிட்டதோ-சூரிய-குலமுறைபோய்விட்டதோநீ இந்த
பூலைமைவிண்டிடல் ஆமோ-பரதன்-தலைமைகொண்டிடல்ஆமோ

6. எப்படிநான்சகிப்பேன்-உனைப்பிரிந்து-எப்படிநிற்பேன்-ராவினில்
எப்படிகண் விழிப்பேன்-உயிர்கொண்டு-எப்படிநாள்கழிப்பேன்

7. பொன் அடிகசங்காதோ-மேனியில்-வன்னமும்மசங்காதோ-வெயில்பட்
என்னென்றுகுறிப்பாயோ-கல்லும்முள்ளும்-என் என்றுகுறிப்பாயோ[டால்

8. நீசெல்லும்வனம்தானே-உன்னுடனே-செல்லுவேன்நானேஎன்னிட
ஆசைஎல்லாமறந்தேன்-இதுக்கோ-தோசலேபெண்பிறந்தேன்.

ஸ்ரீராமர் கோசலையைத் தேற்றி விடை கொள்ளல்.

விருத்தம்.

தாய்வருந் திடஇவ் வாறு தளருவாள் தன்னை நோக்கிப்
பாய்வரும் பதினால் ஆண்டும் பதினாறு நாளே அம்மா
நீவருந் திடுவ தேனை நின்கிரு பையாலே கானிற்
போய்வரு வேன்கேள் என்று போற்றுவான் தேற்று வானே.

6. நாகம்-புன்னாகவராளி. தாளம்-ஆதி.

பல்லவி.

வனம்போய்வருகிறேன் அம்மா-கோசலை அம்மா
வனம்போய்வருகிறேன் அம்மா.

சரணங்கள்.

னம்போய்வருகிறேன்நானே பெற்றமாதாபிதாவசனம்தானே
ூனம்தணிமந்திரமும் அது சகலதந்திரமும்அது
சத்தியமும்அதீபர முத்தியும்அதுதானே (வ)

2. கானகம்நான்போகவேணும் நீர்கணவனைக் காப்பாற்றும்காணும்
நானிலம்பரதனுக் கல்லஎன்னப்போமோ
நான் இருந்தர்சனைப் பொய்சொல்லச் சொல்லல் ஆமோ (வ)

3. ஆதிகதைஅறிவீர்நீரும்-சகரர் அறுபதினாயிரம்பேரும்
தாதைசொற்படிதங்கள் உயிர்கொடுத்தாரேமுனம்
தகப்பன்சொற்படிக்குநான் தவம்செய்வதோகடினம் (வி)

4. ஈன்றவன்சொல்வேதம்தானே பரசுராமன் தாயைவெட்டினானே
ஆண்டபதினாலும்போய் வருவான்எனக்கண்டோ
அரசன்எனப்போஎன்றால் திருவாக்கெதிர்வாக்குண்டோ (வ)

ஸ்ரீராமர் வனம் ஏகலேப்பற்றி லட்சுமணர் கோபங்கொள்ளல்.

விருத்தம்.

சந்தையைக் கவுசலைக்குத் தேற்றிய ராமன் மீண்டு
சுந்தரி மித்திராதேவி தூணையடி வணங்கும் போதில்
இந்தமா மகுடம் சாமிக் கீகிறேன் இப்போ தென்ன
அந்தமாம் லட்சு மணன்தான் ஆக்கிரகம் செய்கின் றானே.

7. தந. ராகம்-கௌளிபந்து. தாளம்-ஆதி

பல்லவி.

னேலட்சுமணன்-ஆளல்கொடுக்கிறேன்-ராமனுக்குமகுடம்.

அனுபல்லவி.

சேணுபேர்என்றே டெதிர்க்கட்டும்குதிக்கட்டும்
சித்திரக்கணை யால்வென்று அத்தணைபேரையுங்கொன்று(கா)

சரணங்கள்.

1. குருடன்ராசமுழி முழிக்கிறப்போலேபட்டம்
கொள்ளுமோபரதற்கு முடிசூட
தரணியில்சர்க்கரையும் மாவும்சரியாயெண்ணும்
தசரதனும்கிடந்து மனம்வாட
இரவிமூன்பனிபோல என்றேடெதிர்த்தமன்னர்
எவரும்பயந்துவிரு துகள்போட
அரசிட்டசாமிக்குத் தவசிட்டநீலிமகன்
ஆட்டுக்குட்டிபோலேஓட கேட்டுக்கைகையும்தள்ளாட(கா)

2. தொகுத்தகான்றடிக்க கூளிதாளம்பிடிக்க
துண்டங்கள் எதிராகப் படவாட்டி
பகைத்தராசர்தலை பனங்குலைபோல்உதிர
படுகளமன்குமுரத்தக் கடல்மூட்டி
இகத்தில்நானேஅடிமை ராமனே ஆண்டவன்
என்பதெல்லார்க்கும்தெரி வுறக்காட்டி
வகுத்தபிர்மாதிதேவர் வந்தாலும்அவர் அவர்
மர்மம்எல்லாத்தையும்ஓட்டி தர்மத்தைநிலைக்கநாட்டி (கா)

3. சுட்டமண்ணும்பச்சைமண்ணும் ஒட்டுமோசாமி
துணைஅல்லால்எனக்குண்டோ உபகாரம்
எட்டிப்பறந்தாலும் ஊர்க்குருவிகருட்ன்ஆமோ
இந்தப்பரதனுக்கேன் அதிகாரம்
வெட்டித்தலைதலையாய்க் குவியாவிட்டால்என்னைக
ஷில்லாலேஅவதாண் டோவீரம்

பொட்டெனவே அயோத்திப் பட்டணம்எல்லாம்வந்து
போர்கொடுத்தாலும்விட்டோம்ஆர்தொடுத்தாலும்இந்நேரம் (கா)

ராமர் ஸ்ரீலட்சுமணர் கோபத்தைத் தணித்தல்.

விருத்தம்.

சினம்கொண்ட இளையோன் இங்கே சிறியே சொல்லும் ஓசை
கனம்கொண்ட ராமச் சந்த்ரன் காதிலே விழக்கண் டோடி
இனம்கொண்ட தங்கத வார்த்தைக் கெதிர்உண்டோ தம்பீ என்று
மனம்கொண்டு தேற்றிக் கோபம் மாற்றுவான் ஆற்று வானே.

8. தரு. ராகம்-மோகனம். தாளம்-ஆதி.

பல்லவி.

இத்தனைகோபமும்நல்லாய்-வந்தது-ஏதடாதம்பி இதுசொல்லாய்

அனுபல்லவி.

தத்துவம்ஆகஉன்தன் புத்திஎல்லாம்வெள்ளை
தகப்பன்பேர்விளக்கிற பிள்ளை அல்லோபிள்ளை(இத்

சரணங்கள்.

1. இரும்போதாய்மனம்காட்டிலே போய்த்திரி
என்னவும்வாய்வருமோ நீ அத்தைப் பரிகரி
கரும்புகசப்பதெல்லாம் வாய்க்குற்ற மேசரி
காலம்செய்ததல்லாமல் ஆர்செய்தார் அரிகரி(இத்)

2. தகப்பனைச்சத்தியவாக்கியன் அல்லன்என்றுகழிக்கவோ
தாய்கொண்டவிரதத்தைமுடியாமல் அழிக்கவோ
அகத்தினை ஆம்பரதன்செல்வத்தை ஒழிக்கவோ
அப்புறம்உனைக்கண்டபோல்எல்லாம் பழிக்கவோ(இத்)

3. ஊரம்ஆகும் தவம்செய்தால்நல் லதோதீதோ
ஒன்றும்பேசாதேகோட்டைக்குள்ளேபடைவெட்டாதோ
அரசுபரதன்கொண்டால்நம்க்கினி மேல்வாராதோ
ஆக்கப்பொறுத்தமைக்காறும்மட்டும் பொருதோ (இத்)

சுமித்திரை லட்சுமணருக்குப் புத்திசொல்லல்.

விருத்தம்.

அற்புதத் தம்பி கோபம் ஆற்றியே ராமன் தாயார்
பொற்பதம் வணங்கும் போது பூவைகை கேசி ஏவ
வற்கலே மாதர் காட்ட வாங்கிலட் சுமண னீன
சொற்படி கொடுபோ என்று சுமித்திரை கூறு வாளே.

5. திபதை. ராகம்-பைரவி. தாளம்-அடசாப்பு.

கண்ணிகள்.

1. இந்தமரவுரி அந்தவனத்திற்கொண்
டேகுடன்ஈதென்வார்த்தை லட்சுமண
அந்தவர்த்தையேமந்திரமாஅண்ணன்
அடிபூசைசெய்அடா லட்சுமண

2. அண்ணன்இவன்மணிவண்ணனேஎன்றெண்ணி
அரைநொடிபிரியாதே லட்சுமண
கண்ணின்இமைபோலேஎண்ணம்எல்லாஞ்செய்து
காட்டிக்காத்திடா லட்சுமண

3. வெம்பியகாட்டினில்அரக்கர்வந்தால்அண்ணன்
முன்போய்நீயில்அடா லட்சுமண
தம்பிஉடையவன் படைக்கஞ்சான்என்னும்சொல்
காதிற்கொள்ளடா லட்சுமண

4. அலைஆழிபுரண்டாலும் அண்ணன்இருக்கஉன்னை
ஆரால்என்னசெய்யல்ஆம் லட்சுமண
மலைமீதில்இருப்பாரைப் பன்றிபாய்வதுண்டோ
மயங்காதேதியங்காதே லட்சுமண

5. உளம்கொண்டுஅண்ணன்எப்படிசொல்வான் அப்படி
ஊழியம்கேள்அடா லட்சுமண
இளங்கன்றுபயம்அறியாதென்றுற்போலீ
எதிர்த்தொன்றும்சொல்லாதே லட்சுமண

6. தாயேசீதைஉன்தகப்பன்ராமன்இத்தத்
தலமேவனம்அடா லட்சுமண
ஆயாசம்பாராதேஎன்னென்றும்முன்னெண்ணைய்
ஆகச்செய்துவாடா லட்சுமண

7. பின்னுஞ்சடையும்மரவுரியுங்காணவோராமன்
பிறகேவந்தேன்என்று லட்சுமண
குன்னமாஎண்ணுதேதெய்வம்பண்ணியிருக்
கூத்துக்கென்னசெய்யலாம் லட்சுமண

8. கர்த்தன்ஆனராமன்சித்தத்திலேஎண்ணும்
கட்டளைப்படிதானே லட்சுமண
புத்திஆகச்செய்தால் அப்போதல்லோஎன்தன்
புத்திரன்நீபோய்வாடா லட்சுமண

ஸ்ரீராமர் பிரிதலைக்குறித்துச் சீதை இரங்கல்.

விருத்தம்.

மண்ணும்இரங்க மரம்இரங்க மறுதா யாரை அனுப்பிக்கொண்
டெண்ணும் இரங்கும் லட்சுமணன் இசைந்து வரவே ரகுராமன்

கண்ணும் சனகி தனைப்பார்த்து நான்யேசீய் வருவேனு ரேழு
பண்ணும் பருவம் வனம்என்றுன் பரந்தாள் சீதை கரைந்தாளே. (15)

9. தரு. ராகம்-உசேனி. தாளம்-ரூபகசாப்பு.

பல்லவி.

எப்படிமனம்துணிந்ததோசாமி வனம்போய்வருகிறேன்
என்றால்இதை ஏற்குமோ பூமி

அநுபல்லவி.

எப்பிறப்பிலும்பிரியவிடேன் என்றகைதொட்டீரே
வனழனசீதையைநட் டாற்றிலேவிட்டீரே (எப்)

சரணங்கள்.

1. கரும்புமுறித்தாப்போலேசொல்லல் ஆச்சுதோ-ஒரு
காலும்பிரியேன்என்று சொன்னசொல்லும்போச்சுதோ
வருந்திவருந்தித்தேவரீர் வெல்ல
வார்த்தையாற்கொல்லாமற் கொல்ல
இரும்புமனதுண்டாச்சு தல்லோ
என்னைவிட்டுப்போகிறேன்என்று சொல்ல(எப்)

2. அன்னைகொண்டவரம்என்னைஎன்னைத் தள்ளவோ-நீர்
அழகுக்கோவில்எடுத்ததுலிலம்வனற்றிக் கொள்ளவோ
குன்னமோஉமக்கென்னைத் தாரம்
கொடுத்தவன்மேல் அல்லோ நேரம்
என்னையிட்டுக்கொண்டுபோவதோ பாரம்
இதுவோ ஆண்பிள்ளைக்கு வீரம்(எப்)

நாடிநீர்போயிருக்கும்வனத்தின்போர்சொல்லவேணும் அத்தை
நான்னினைத்துக் கொண்டிறந்தாலங்கேபிறக்கில் ஆம்காணும்
கூடிநாம்உகந்திருக்கும் காடு
குறைவில்லாஎன்பிதில்லை நாடு

காடுநீர் இல்லாத வீடு
கால்வயம்தரியும்என் பாடு(எப்)

ஸ்ரீராமர் வனம் ஏகலால் புரசனங்கள் புலம்டல்.

விருத்தம்.

ஆவதனுல் சீதைமன தறிந்த ராமன்
அப்படியே வருகவென்றுன் வெளியே வந்தாள்
தேவர்களும் முனிவர்களும் கலங்கி நின்றூர்
செயராமன் லட்சுமணன் சீதை என்னும்
மூவர்களும் மரவுரியை உடுத்திக் கொண்டார்
முறையாலே அயோத்திநகர்த் தெருவின் மேலே
போவதுகண் டவ்வூரின் ஆணும் பெண்ணும்
புலம்பினர் கண்ணீர்விட் டலம்பி னரே. (16)

6. திபதை. ராகம்-காம்போதி ; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. அரசுமணிமுடியோடும்ஆனைமேல்
வருகிறதிருக்காட்சியைக்காணுமல்
அந்தந்தத்தெருவீதியிலேவந்து நொந்தார்சிலபேர்
மரவுரியும்சடைமுடியும்காணு [கண்
வதற்கோகுதித்தோம்எனத்தங்கள்
வாயோடுவாய்பேசாமலேமனம் மடிந்தார்சிலபேர்கள்

2. அய்யோ இந்தஅருமைத்திருமகன்
மெய்யேவனம்போனுல்நமக்கினி
ஆறுதலேஎதெனக்கண்பிசைந் தழுதார்சிலபேர்கள்
செய்யாவினைசெய்திடும்பா தகி

கைகேசிக்கு இன்றைக்குநெஞ்சுக்கல் [கள்
திடுக்கென்னவேவிழுந்ததோஎனமனம் திகைத்தார்சிலபேர்

3. கண்ணுக்குக்கண் அருமேகவண்ணின
எண்ணம்எல்லாம்போச்சேசாமி அந்தக்
காடேகதியாய்ப்போவோம்என்று கரைந்தார்சிலபேர்கள்
பண்ணினதவம்இதுக்கோதசரதன்
புண்ணியவான்ஆனல்ஒருதரம்
பழிகாரிசற்றழையாளோ என்று பதைத்தார்சிலபேர்கள்

4. சொல்லியவரம்தா என்றுகணவனைக்
கொல்லவேவழிபார்த்தாள் அல்லாமல்
தூரதிர்ஷ்டியாய்ப்பார்த்தாளோஎன்று துடித்தார்சிலபேர்கள்
கல்உருகவும்புல்உருகவும்கண்ட
கைகேசிக்குத்தன்மகன்மாத்திரம்
கரும்போஇவன்வேம்போஎனமனம் கசிந்தார்சிலபேர்கள்

5. முறையோஎன்னமூடப்பிள்ளையாகிலும்
மூந்தினபிள்ளைஎன்றுசொல்லும்பழ
மொழிஆகிலும்ராமனுக்கில்லையோவென் றழுதார்சிலபேர்
குறையாமலிருக்கின்றசூரிய [கள்
குலத்திலேநல்லமரத்திற்புல்லுருவிபோல்
குடிகேடிஎங்கிருந்தாள் எனக்குலை குலைந்தார்சில்பேர்கள்

6. மைஆர்கண்ணி இளையவள்தீதாக
வலையிலேசிக்கித்தலைமகன்ராமனை [பேர்கள்
மன்னவன்செய்ததென்னசொல்வோம்என்று வைதார்சில
கைகேசிபிள்ளையும்கூனியும்
கட்டாந்தரை அட்டையைப்போல்மண்ணைக் [கள்
கட்டிக்கொண்டிளைப்புராட்டும்எனக்கூடிக்கலந்தார்சிலபேர்

7. சானகிஎன் னும்லட்சுமிபோனபின்
மாநகர்த்தில் ஆர்இருப்பார்அவள்
தமக்கைஅல்லோ இருப்பாள்எனத்தவி தவித்தார்சிலபேர்
கானகம்புகுவதன்முன்னே தசரதன் [கள்
வானகம்புகுவதுமீலேவரம்என் றே
கரைகாணக்கப்பலோர்போலவே பரிவார்சிலபேர்கள்

8. சத்தியமாராமனேவரச்சொல்லி
மற்றொருவற்குமுடி கொடுத்தான்இந்த
தசரதன்மெத்தநல்லவனேஎன்று தளர்ந்தார்சிலபேர்கள்
எத்தனேபேர்சந்தைக்குவந்தாலும்
எல்லாரும்தனேஆவாரோ ராமனுக்கு
இனேயவனேதனே இந்தவூரில்என்று இடிந்தார்சிலபேர்கள்

9. மணிமுடிவரச்சொல்லியமுகூர்த்தத்தில்
சடைமுடிவரச்சொன்னேனே இந்த [பேர்கள்
வசிஷ்டனேப்போலவசிஷ்டன்உண்டோஎன்று வைதார்சில
தனியுமோமனம்அடடாஉண்கிற
சோற்றிலேநஞ்சுகலந்தாற்போலவே [சிலபேர்கள்
தொடுத்தாள்பழிகெடுத்தாள்கைகையென்று சொன்னார்

10. பாவமும்வரும்பழியும்மிகவரும்
தீபம்இல்லாமனேபோலேஇந்த
பட்டணம்பறிபோமேயென்றுமண் படிந்தார்சிலபேர்கள்
ஸ்தாவரம்இல்லா இளங்கொடிபோலவும்
பாய்மரம்இல்லாமரக்கலம்போலவும்
தாமரைஇலைத்தண்ணீர்போலவும் கவிந்தார்சிலபேர்கள்

சுமந்திரன் புலம்பல்.

விருத்தம்.

மாநகர்இப் படிப்புலம்பத் தேர்மேற் கொண்டு
வழியில்ஒரு சோலையிற்போய்ப் பாதிச் சாமம்
ஆனதிது வந்தவரோ உறங்கி விட்டார்
அயோத்தியிலே அவர்போக வேணும் தேரைத்
தான்உருவ வடதிசையில் விட்டால் என்னைத்
தான்மீண்டான் எனப்பலரும் அங்கே மீள்வார்
என்இனிதா மதம்என்று ராமன் சொல்லி
எழுகின்றான் சுமந்திரன்நொந் தழுகின் றானே.(17)

7. திபதை. ராகம்-நீலாம்புரி ; தாளம்-ஆதி.

1. செகம்மகிழும்ராமச் சந்திரன் போகாமல்தேரை
திருப்புவான் அல்லோ சுமந்திரன் என்தன்
மகன்வருவானென் றிருப்பானே ராசனுக்கெந்த
வாய்கொண்டுசொல்ல இருப்பேனே

2. ஊரில்என்னைக்கண்டபேர் சொல்ல தசரதனுக்
கோர்உடம்பீர்உடம்பாம் அல்லோ உன்பிள்ளைகளைத்
தேர்இறக்கிவிட்டேன்என் பேரை முகம்அறியாத்
தேசத்திலேவிட்டேன்என் பேரை

3. மக்களைவிட்டோடிவந் தானே என்றவுடனே
மன்னவனும்உயிர்நைந் தானே இப்போதுதான்
தெற்கிலேஇன்றல்லோ போகுவேன் எனமன்விடுத்த
சேவகன்போல்அல்லோ ஆகுவேன்

4. இன்னம்உன்னைக்கூவிச் சூவி தசரதனுக்
[illegible]நக்குமேல் நல்உயிர் மேவி நான்இந்தவார்த்தை

சொன்னவுடன்போமே ஆவி இந்தப்பழியை
சுமக்கிலேனான்வந்தேன் பாவி

ஸ்ரீராமர் சுமந்திரனுக்கு நீதி ஓதுதல்.

விருத்தம்.

மந்திரி சுமந்திரன் இந்த வண்ணமே கூற ராம
சந்திரன் அவனை நோக்கிச் சகலமும் தெரிந்த நீரே
வந்தனன்தாய் சொன்ன வார்த்தைக் கிரண்டுதான் செப்பல் ஆமோ
நிந்தைஎன் இனிமேல் என்று தெளிவிப்பான் தெளிவிப் பானே. (18).

10. தந. ராகம்-பைரவி; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

சொல்லும்சொல்லும்-சுமந்திரரே-நில்லும்நில்லும்

அனுபல்லவி.

கல்லராத்திரி இதுபோல்இல்லை காணும்
நகர்உள்ளோர்களும்நீரும்போக வேணும்
அல்லகீர்வேறேசொன்னால் விரும்புமோ
அணைகடந்தவெள்ளம்அழைத்தால் திரும்புமோ (சொல்)

சரணங்கள்.

1. வீரம்பேசிக்கொண்டெழுந்தசேவகன்
வெட்டெம்க்ளம்கண்டுமுதுகை இடல்ஆமோ
ஆரும்காணவேதவசுக்கென்றுவந்து
அதுக்கெல்லாம்பயந்தச்சப் படல்ஆமோ
வாரும்காணும்பெற்றதாய்சொல்விரதத்தை
மறந்துபின்னேஒருவிரதத்தைத் தொடல்ஆமோ

சூரியகுலத்திலேபிறந்துமுந்திமுந்தி
தொடுத்தகாரியத்தைநடுவே விடஸ்ஆமோ(சொல்)

2. மன்னன்பரதற்குநான்இருக்கிறேன்
வருகிறேன்இளக்கரிப்ப தேன்என்றும்
பின்னும்அறிந்தறியாத்துக்கும்மன்னன்
பெரியஉதவியேஉறுதி தான்என்றும்
என்இடத்தில்வைத்தஅன்புபோல்கைகை
இடத்தில்வைக்காவிட்டால்வனம்போறேன்என்றும்
அன்னைமார்க்கும்மன்னனுக்கும்பதிலுஆ
ஆண்டுபோய்வந்துவணங்கு வேன்என்றும்(சொல்)

3. உலகிலேஒருநன்மைசெய்யஇடை
யூறுமெத்தவரும்ஆகை யால்அதை
நிலையதென்னல்ஆமோகாலம்போம்வார்த்தை
நிற்குமேபின்வேறே உண் டோவதை
பலரும்தவிக்கின்றார்என்றுதாய்மொழி
பழிக்கவோநான்வந்தேன் என்னகதை
மலைவிழுந்தாலும்தலையேதாங்கவேணும்
மலைத்தவர்க்கும்பலன்பலிக்கு மோஇதை(சொல்)

ஸ்ரீராமரை நினைந்து சக்கரவர்த்தி புலம்பல்.

விருத்தம்.

வீரன்எனும் ராமன்உரை சுமந்திரன் கொண்டான்
மீண்டதேர் வழிபலரும் மீண்டார் சேதி
ஊரதிலே வசிஷ்டமுனி உடன்போய்ச் சீவன்
உண்மைஎன்று நிலம்வேந்த னுடனே சொன்னான்

கூர்எரியி லேவிழுந்த வெண்ணெய் போலும்
கொதித்திடும்கொப் பரையில்விழும் புழுவைப் போலும்
சிருளதன் மகனைநினைந் தேங்கிச் சிந்தை
சிதறினன் தசரதனும் கதறினனே. (19)

8. நீபநை. ராகம்-கண்டா ; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. சின்னம்சிறுதாமரைப்போல்பொன் ஆனபாதங்கள்நோவ
தேடிவனம்ஓடிவிட்டாய் ரகுராமா-ராமா
என்னைஇந்தவேளைநடுத்தண்ணீரில்கைவிட்டாற்போல
எப்படிதுணிந்துவிட்டாய் ரகுராமா-ராமா

2. முடிக்குமகுடஞ்சூட்டிமுகம்பார்க்கஇருந்தேனை
மோசம்கைகேசிசெய்தாள் ரகுராமா-ராமா
உடுத்தபுடவைதானைபாம்பாய்க்கடிக்குமென்னும்
உளவறியாமற்போனேன் ரகுராமா-ராமா

3. மாலைஇட்டகைகேசிதான் காலனைப்போலேவந்தென்
வாஞ்சைக்கொண்டாள் அய்யோ ரகுராமா-ராமா
வேலிக்குமுள் இடவேளன் காலுக்குமுள் ஆகவந்து
வினைந்ததென்விதிவசம் ரகுராமா-ராமா

4. ஆனைமேல்பவனி ஆக அபிஷேகமுடிசூடும்
அலங்காரம்என் றுகாண்பேன் ரகுராமா-ராமா
நான்ஒன்றுநினைக்கத்தெய்வம்தான்ஒன்றுநினைத்ததையோ
நான்செய்தபாவம்சீதா ரகுராமா-ராமா

5. தாயும்நீ தந்தையும்நீ சற்புத்திரமாணிக்கமும்நீ
சகலபாக்கியமும்நீயே ரகுராமா-ராமா
நீஇல்லாதாடிதெல்லாம் நிலவிலாமுற்றம்போலே
நெடும்பாழ்அடைந்ததையோ ரகுராமா-ராமா

6. படித்துப்படித்துச்சொல்லிக் காலும்பிடித்துக்கொண்டேன்
பாவிகைகேசி அய்யோ ரகுராமா-ராமா
அடிக்கடிக்கப்பந்து விசைகொண்டெழுந்தாற்போல்என்
ஆயுசுக்குலேவைத்தாளே ரகுராமா-ராமா

7. குடைமகுடந்தரித்துக் குவலயம்தன்னை ஆளும்
கோலம்காணுமுன் ஆக ரகுராமா-ராமா
சடைமகுடந்தரித்துக் காட்டிலேபோவென்றேனை
சண்டாளன்என்போல்உண்டோ ரகுராமா-ராமா

8. தேறுதல்எங்கும்காணேன் திக்குதிசையும்காணேன்
தெய்வமும்துணைகாணேன் ரகுராமா-ராமா
ஆறுதல்எங்கும்காணேன் அந்தரத்தில்கோல்எடுத்த
அந்தகன்போல்ஆனேன் அய்யோ ரகுராமா-ராமா

9. பார்எல்லாம்பரதன்கொள்ள உன்னையும்என்கண்ணின்முன்னே
பறிகாட்டிநீர்போவென்றீரே ரகுராமா-ராமா
கீரைக்குப்புல்லுருவி கீழேமூர்த்தாற்போலே
கெடுகாலிஎங்கேவந்தாள் ரகுராமா-ராமா

10. சேனைகாவலர்கூட நான்கூடமுடிசூட்டி
சிங்காசனம்வைக்கும்முன்னே ரகுராமா-ராமா
ஆனைமிழலைப்பார்க்கத் தவனைகலங்கினற்போல்
ஆனதேகூனி அய்யோ ரகுராமா-ராமா

11. சற்றேபொறுத்துச்சென்றால் சகுனதோஷம்என்றிருந்தான்
சாவேன்என்றறிவாயோ ரகுராமா-ராமா
சற்றும்அழுகைக்குரல்கேட்கிறத்துக்குமுன்னே
கருக்காடந்துவிட்டாய் ரகுராமா-ராமா

12. குலத்தைதவிளக்கவந்தமகனேஉனக்குப்பட்டம்
கொடுத்துவாங்கிக்கொண்டது ரகுராமா-ராமா
கலத்திலேகோற்றைஇட்டு கைப்பிடித்தாற்போல்ஆச்சே
காலம்இப்படிஆமா ரகுராமா-ராமா

13. பாயும்அமுதமும்பொன் பள்ளியமும்இங்கிருக்க
யிகாட்டிலேநடந்து ரகுராமா-ராமா
காயும்கிழங்குதின்னல் ஆச்சோதெய்வத்துக்கும்
கண்இல்லையோமகனே ரகுராமா-ராமா

14. வீசும்நெருப்பைப்போலே கடுங்கோடையும்கானலும்
வெய்யிலும்மேல்படுமே ரகுராமா-ராமா
காசாம்புமேனியெல்லாம் வேர்வைமுத்துமுத்தாகக்
காண்பாளோகவுசலை ரகுராமா-ராமா

15. பூமேலேவிழுந்தாலும் தழும்புபடுமேஉன்தன்
பொன்ஆனமேனி அய்யோ ரகுராமா-ராமா
மாமலையும் கொடியும் செடியும் பொடியும்தாக்க
வழிநடந்தறிவாயோ ரகுராமா-ராமா

16. முடிக்கபிஷேகம்செய்துன் அடிக்கீழேஓடும்தண்ணீர்
மூந்திக்கொண்டாராணலும் ரகுராமா-ராமா
பிடித்தொருபடிதந்தால் குடிக்கேனேகுடித்திதன்தன்
பெருந்தாகம்தணியேனே ரகுராமா-ராமா

17. இழைஆயிரம்பொன்பெற்ற பீதாம்பரம்உடுத்த
இடைமீதிலேமகனே ரகுராமா-ராமா
பணிகாரிதான்கொடுத்த மரவுரிதான்உடுக்கப்
பார்த்தாரோஊர்உள்ளோர்கள் ரகுராமா-ராமா

18. பார்த்தாலும்பசிபோமே பால்வடியுமேமுகன்தன்
பவளவாய்முகந்தன்னை ரகுராமா-ராமா
காற்றோட்டம்ஆகவந்து சற்றேநீகாட்டிஎன்னை
கறையேற்றிவிடஎண்ணுதே தா ரகுராமா-ராமா

19. பிள்ளைதன்தொடைமேலே பெற்றவன்சீவன்விட்டால்
பெருங்கதிஉண்டென்பாரே ரகுராமா-ராமா
கள்ளக்கைகேகிகையில் காட்டிக்கொடுத்துவிட்டு
கடக்கப்போய்நிற்கல்லாமா ரகுராமா-ராமா

20. கண்ணும்இருண்டதைதையோ கருத்தும்அழிந்ததையோ
கைகாலும்ஒய்ந்ததைதையோ ரகுராமா-ராமா
எண்ணம்குலைந்ததையோ என்றுநான்காண்பேன்உன்தன்
எழுதருமுகம்தன்னை ரகுராமா-ராமா

ஸ்ரீராமரைக் குகன் தன் ஊரில் இருக்க வேண்டல்.

விருத்தம்.

புலம்பியமன னவன்இவ்வா றிடிந்து சீவன்
போயினன் வைகுண்ட புரத்தைச் சேர்ந்தான்
பெலம்தரும்மன னவர் அவனை யெடுத்கார் எண்ணெய்ப்
பெருந்தோணி யினில்இட்டார் இப்பால் ராமன்
கலம்தரும்மலந்த மனன்சீதை யுடனே கங்கா
நதியடைந்தான் முனிவரொடும் கலந்தான் அந்த
சலம்தனையும் குகன்விடித்த தோணி யாலே
தாண்டினன் அவன் இருக்க வேண்டி னனே. (20)

11. தரு. ராகம்-கலியாணி; தாளம்-ஆதி.

பல்லவி.

இங்கேஇருங்கர்ணும் தரிசனம்தந்தென்னே ரட்சிக்கவேணும

அநுபல்லவி.

மங்கைஆம்என்தாயும் ராமாநீயும்இந்த
வரிசைத்தம்பியும்அய்ய ஒருபத்தன்குகன்உய்ய(இங்)

சரணங்கள்.

1. பூவுண்டுகனியுண்டுஊன்உண்டுதேன் உண்டு
புதுமரஉரிகளும்போர்வை உண்டு
தாழ்வுண்டு தடம்உண்டு கங்காநதி உண்டு
தான்வேணபட்சணம்உண்டு நானேசெய்ரட்சணம்கண்டு()

2. எட்டுத்திக்கிலும் செல்லுவேன்கிழங்குவகைகெல்லுவேன்
எதிர்த்தவரைவெல்லுவேன் வழிசொல்லு வேன்
கட்டிக்காத்துநானே கண்இமைபோலே தானே
காலாலேகாட்டினதெல்லாம் தையாலேசெய்குவேனே(இங்)

3. சித்தியம்உம்மைப்பிரியேன் மற்றொன்றையும்குறி யேன்
நிணறுமறக்கறியேன் நான்சிறி யேன்
முற்றிலும்நிறைதிங்கள் எனவேவிளங்கும் உங்கள்
முகம்கண்டாற் பசிபோமே முத்திமோட்சம் உண்டாமே ()

ஸ்ரீராமர் குகனைச் சினேகங்கொள்ளல்.

விருத்தம்.

தனது புகலும் குகனேஎன் தம்பி உனது தம்பிகண்டாய்
எனது தினைவன் நீகண்டாய் இச்சி தையும்உன் மதனிகண்டாய்
மனது பொருந்தத் தாய்சொன்ன வரத்தால் காட்டில் இருப்பதல்லால்
உனது நாட்டில் இருப்போமோ ஊரைப்பாய் இதைஆ தரிப்பாயே. ()

20. திபதை. ராகம்-சங்கராபரணம்; தாளம்-அடசாப்பு.

கண்ணிகள்.

1. காட்டில்இருக்கவந்து காட்டுக்கருகான
காட்டில்இருக்கல்ஆமோ குகனே
பூட்டகமோஇது குளிக்கப்போயும்சேறு
பூசிக்கொள்ளல்ஆமோ குகனே

2. பதினலுவருஷம்போய் நாம்எல்லாம்ஒருமிக்கப்
பதியில் இருக்கல்ஆமே குகனே
மதிமோசமோ ஆனே எறியும்திட்டி
வாசலில் நுழைவான்என் குகனே

3. உன்பரிசனம்என்னது உன்ஊரும்என்னதுஉன்
உறவும்என்உறவாச்சே குகனே
என்பிறகேவந்தால் இந்தவரவைக்காக்க
எவர்உண்டுசொல்லுவாய் குகனே

4. பொறுத்தளவதுதவம் முடிக்கவேணும்அந்தப்
பொறுப்புஉனக்கில்லையோ குகனே
குறுக்கப்பேசாதேமுதல் கோணிஎல்லாம்ஒட்டக்
கோணும்தடை சொல்லாதே குகனே

5. ராமன்பாதன்லட்சுமணன் சத்துருக்கன்என்ன
நால்வர்சிறந்திருந்தோம் குகனே
ஆம்உன்உடனேஐந்துபேர் ஆனும்சீர் ஆனும்
அதிகபலவான்களானும் குகனே

6. குருவியின்தலைமேலே பனங்காய்ப்போற்புவி ஆளக்
குழந்தைபரதனடா குகனே

அருகில் இருக்கிறபே நான் இருக்கிறப்போலே
அடிக்கடி பார்த்துக்கொள்வாய் குகனே

7. உடன் ஆன தம்பி இவன் உனது மதனி இவள்
உனது துணைவன் நானே குகனே
இடர்வன் படுகிறாய் நான் என்றும் நீ என்றும்
இரண்டாக எண்ணாதே குகனே

8. சற்றே காணும் முன்னே கங்கைக்கரை வற்றினன்
தேனும் கரை வற்றின குகனே
சித்திரகூடத்துக்கு வழி எங்கே இங்கே
திரும்பவொன்றும் பேசாதே குகனே

ஸ்ரீராமர் சீதைக்குச் சித்திரகூட வளம் காட்டல்.

விருத்தம்.

வரதன் எனும் ரகுராமன் குகனே இந்த வகை தேற்றிப் பரத்து வாசக் குரவன் அனு மதியாலே தம்பியும் சீதையும் தானும் கூடிப் போனான் பரம் உள சித்திரகூட மலை சேர்ந்தான் முகமலர்ந்து பார்த்தான் அங்கே கரதலத்தைச் சீதை முன்னே நீட்டுவான் மலைவளங்கள் காட்டு வானே.

21. தரு. ராகம்-மூகாரி ; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

பாராய் பெண்ணே பாராய் பெண்ணே-பாக்கியசனகன் கண்ணே

அனுபல்லவி.

சீர் ஆகமக்குரோர் ஆகிற இந்த சித்திரகூடமலை ரத்தினபீடம்போல()

சரணங்கள்.

1. மாதவர்முனிவர்சொல் வேதங்களைக்கிளி
வாடிக்கைபாற்கற்று வனமெங்கும் படிப்பதும்
கோதும்தினைக்கொல்லையினிற் பம்பைகள்எடுத்து
குரங்குகள் அடிப்பதும்
ஆதவன்குதிரையைப்போல் பசும்பாறைஒளிபாய்ந்த
ஆடுகள்பசுமையாய்க் கோடேறி நடிப்பதும்
பேதகம்இல்லாமல் மேல்ஓடும்மேகத்தைப்
பெண்ஆனைஎனக்கையால் ஆண்ஆனை பிடிப்பதும் (பா)

2. மூலமுனிவர்க்குமலை ஏறப்படிபோலே
மூடங்கிஅடங்கிக்கொண்டு மலைநாகம் இடப்பதும்
காலில்அழுந்தாமல் புல்லல்லபகோம்பாலே
கரும்பன்றிகள் இடப்பதும்
கோலஅயோத்தியில் இட்டகொடிபோலே
கோல்மூங்கிலிற்பாம்புகளேதோல்பட படப்பதும்
வாலைப்பிடிகொடுத்துக் குறுகும்கண்முனிவர்க்கு
மந்திகள் அங்கங்கேவழிகாட்டி நடப்பதும் (பா)

3. அருநீரைமொண்டு துதிக்கையாலானைகள்
அருந்தவர்பெருங்கமண்டலம்தனில் விடுப்பதும்
குருவிகள்தினைக்கதிர் மூக்கினல்மடத்திற்
கொண்டுபோய்க் கொடுப்பதும்
பரவும்ஓமகுண்டத் தெரிவளர்த்திடமில்
பசுமைஆம்சிறகைவிரிபோல் எடுப்பதும்
திருமாமுனிவர்முப்புரிநூல் அணிவதற்குச்
சிலந்திநூல்கொண்டுபோய்க்குரங்குகள் கொடுப்பதும் (பா)

சக்கிரவர்த்தியைக் குறித்துப் பரதர் புலம்பல்.

விருத்தம்.

துய்யமலே வ்ளங்களே இவ் வாறு காட்டித்
தோகையுடன் சாமிலட்சு மணன்தான் செய்த
செய்யபர்ண சாலையினில் இருந்தான் இப்பால்
செயம்உளகே கயநாட்டில் வசிஷ்டன் ஓலை
பையஅறிந் துடன்மீண்டான் தாய்கை கேசி
பதத்தினிற்சத் துருக்கனுடன் பரதன் வீழ்ந்தான்
அய்யன்எனும் தசரதன்சீர் அறிந்தான் தேம்பி
அழுகின்ருன் அழுதழுது விழுகின் ருனே. (23)

22. திபதை. ராகம்-மத்தியமாவதி ; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அரசேஎனதையனே எனதப்பனேஎங்கே நடந்தாய்
உரைசேரும் விண்ணவரோடேநீஉறவாடவோ தொடர்ந்தாய்
மூறையும்உன்தன்னிறையும் எக்கியத்துறையும்எல்லாம் தானே
பிறகேகொண்டுபோன தென்னகுறையோஅறி யேனே
சத்தியமும்சுபகிர்த்தியமும்கீர்த்தியமும்அல்லோ சிறந்தாய்
மித்திரனேதர்மபுத்திரனேராமபத்திரனே எங்கே மறந்தாய்
அழகாஉன்னைத்தொழ ஆசைகொண்டடுத்தேன் இது பொய்யோ
எழுதாப்பொறிக்கழுதால்இதில் என்னதான்வரும் அய்யோ
சிலராகவன்மேலே மாமுடிகோலிநீவைக்கும் முன்னே
காலம்செய்திடும்கோலம்தன்னே என்னுல் என்னசெய்யல்ஆம் மன்னே
அம்பரந்தனில்சம்பராசுரன் துன்பமேசெய்கி ருனே
உன்பிராணனேராமன்மேல்வைத்த அன்பெல்லாம்இது தானே
அய்யன்முனிவசிஷ்டன் விட்டகைஓலையின் பேச்சே
மெய்என்றிருந்தேனே நான்விழித்தேன்கன வாச்சே
எண்ணினுல்என்னஅண்ணன்ராமன் இங்கிருக்கின்ருனே இந் நேரம்
புண்ணியவானேஎன்கண்ணிற் காணவேபோமேஎன்வி சாரம்

பரதர் கைகேசியைக் கோபித்தல்.

விருத்தம்.

வருதுயரம் ஒருவிதத்தால் பரதன் தேறி
மன்னன்இறந் தானும்என்ன அண்ணன் ராமன்
திருமுகம்கண் டாற்போதும் எங்கே என்றான்
தேசம்எலாம் ஒருவரத்தால் உனக்கே சொன்னேன்
ஒருவரத்தால் அவனைவனம் போகச் சொன்னேன்
உள்ளபடி இதுமகனே பிள்ளை நீங்கப்
பெரியமன்னன் இறந்தான்என் றுரைத்தாள் கண்ணீர்
பெருகினன் கைகையைநொந் தருகி னனே. (24)

13. தரு. ராகம்-கமாசு ; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

என் அடபாவிகைகேசி என் அடிசெய்தாய் நீ
என் அடபாவிகைகேசி என் அடிசெய்தாய்

சரணங்கள்.

1. மன்னனைக்கொன்றண்ணன்வனம் போக விடுத்தாய்இன்னும்
இன்னல்உண்டோபாவிஎன்னை எண்டி கெடுத்தாய்(என்)

2. என்றுபாவிஉன்வயிற்றி னில் வந்தேனே நான்
அன்றுதாயேஅன்றுபேய்என்று நொந்தேனே(என்)

3. அய்யன்ராமன்காய்கிழங்கு கிண்டல்ஆமோடி நாம்
நெய்யும்பாலும்சோறும்வாரி உண்டல்ஆமோடு(என்)

4. உன்னைக்கொன்றுஎன்பழியைப் பின்னைத் தீர்க்கிறேன்எங்கள்
மன்னவன்ராமன்வைவான்என் றெண்ணிப் பார்க்கிறேன்(என்)

5. தின்றுல்அல்லோஞ்சுகொல்லும் ஏன்பது பொய்யோ நான்
ஒன்றும்அறியேனே இதுக்கென் செய்வேன் அய்யோ(என்)

6. மன்னவன்பிண்ணேடோ போகல்லோவேணும்இனி
என்னையும்கொன்றுகிலும்நீ சாகல்லோவேணும்(என்)

7. தரமோகான்புவிஆளத் தரமோகண்டாய் ரண்டு
வரமோகழுத்தறுக்க அரமோகொண்டாய்(என்)

8. நாயகன்ராமனுக்கிணை சொல்லப் போமோடிஞர்
ஆயிரம்கட்சத்திரம்ஒரு சந்திரன் ஆமோடி(என்)

பரதர் கோசலா தேவிக்குச் சத்தியம் கூறல்.

வி ரு த் த ம்.

கோவித்தபரதனந்தக்கைகையைவிட்டப்புறம்கோசலையைக் கண்டான் சேவித்தான் கைகைசெய்த தறிந்திலேயோ என்றந்த தேவி கேட்டான் ஆவிக்கும் ஆவிஅண்ணன் ராமனேவஞ் சித்தறியேன்அறிந்தேன் அதெல் பாவிக்கும் பாவியாய் விடுவேன்என்றுசத்தியங்கள்பண்ணுவானே.(25)

14. தரு. ராகம்-சாவேரி ; தாளம்-அடசாப்பு.

ப ல் ல வி.

சேரும்கதியில்சேருவேன் அம்மா இந்தராமத்துரோகம்
தெரிந்தால் அனுபவிக்கிறேன் அம்மா

அ னு ப ல் ல வி.

தீராதநெஞ்சுக்குத்தெய்வமே சாட்சி
திரும்பித்திரும்பஎன்னகண் காட்சி
ஓரிபோற்பெரியோரை வைதவன்
உண்டவீட்டுக்கிரண்டகஞ் செய்தவன் (சேரு)

சரணங்கள்.

1. அய்யம்இட்டுஉண்ணுதவன்குடிகெடுத்தவன் அபவாதகன்
அகத்தில்ஒன்றும்புறத்தில்ஒன்றும்செய்யும்-துர்க்குணபோதகன்
செய்தகன்றிவிடுத்தவன் தீங்கெடுத்தவன்பிர்ம காதகன்
செய்யுமவரைக்குறுக்கே தடைசெய்தவன்கொலை பாதகன்
அய்யம்தீர்த்துருஞ்சை உறந்தவன்
ஆசல்உடமைக்குப்பேயாப் பறந்தவன்
கை அடித்துக்கொண்டாணை மறந்தவன்
கன்றுக்குப்பாலிவிடாமற் கறந்தவன் (சேரு)

2. தீர்த்தக்கரைப்பாவியும் கடுங்கோவியும்சென்று ரோகியும்
செபதபவிரத ஈனனும்பரஞ்தீசென அனு போகியும்
பூர்த்தியாம்மதபானியும் அக்கியானியும் அவி வேகியும்
பூமிக்குச்சுமைஆகவந்த புகழ் இல்லாததேகியும்
வார்த்தையாற்பிரட்டும் படுகோளனும்
வழக்கழிவுசொல்லும் அசட்டாளனும்
தூர்த்தவிர்த்திவிடா மிண்டாளனும்
சோற்றிலேநஞ்சிடும் சண்டாளனும் (சேரு)

3. ஆறுருளத்தில்உடைஇல்லாமல்அம்மணத்துடன் நடந்தவன்
அன்னைவார்த்தைதந்தைவார்த்தைகுருவின் வார்த்தைகடந்தவன்
தேறும்நல்லோர்பெரியோரைக்கண்டெழுந்திராமல்இடந்தவன்
திருடனுக்கிடங்கொடுத்தவனிடங்கொடுத்தவன் பின்னேதொட
வேறில்லாரைப்பகைத்து வீண்டவன் [ர்ந்தவன்
வேட்டகந்தன்னிலே இருந்துண்டவன்
சீறும்படையைப் பயந்துகண்டவன்
செடியிலேதலைதுறுத்துக் கொண்டவன் (சேரு)

குகன் பரதர் சேனையைக் கண்டு பரதவித்தல்.

விருத்தம்.

சத்தியம்செய் துடனேசத் துருக்க ணேடே
தசரதன்செய் கடன்முடித்து நானே ராம
பத்திரனே அழைப்பேன்என் றெழுந்து ராரும்
படைகளும்தா யரும்வதிஷ்ட முனியும் சூழ
சுற்றுசடா மூடிமுடித்துப் பரதன் கங்கைத்
துறைக்குவட கரைக்குவந்தான் வரக்கண் டாங்கே
இத்திசையில் ராமன்மேற் பகைகொண் டன்றே
வறிஞன் என்றுகுகன் சீறி னனே. (26)

15. நந. ராகம்-காபி ; தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னத்துக்குப்பரதன் படைவந்தது என்திராணிபாருங்கள்வேடரே

அனுபல்லவி.

மன்னவனுக்கடிமை நான்என்று தெரியாமல்
வனத்தில்வந்தும்துரத்திப்பிடிக்கவந்தாரோ (என்னத்துக்கு)

சரணங்கள்.

1. ஆழநெடுந்திரைக்கங்கை ஆறுகடந்தாலும்என்ன
தோழன் என்றாமன் என்னைச்சொல்லியருளிய தொரு
சொல்லேனே சொன்னபடிக்கு
நில்லேனே நான்பிடித்தகை
வில்லேனே இவரைக்
கொல்லேனே (என்ன)

2. அடிஓட்டின்மேல்கரணம் போடவந்ததுபோல
முடியத்துரத்தினன்ன மோசம்செய்யவந்தாலும்

முடியேனே வனைதடிகொண்
டெடியேனே தலைதலையாப்
பறியேனே கொல்ல
அடியேனே (என்ன)

3. ஆனைகட்டச்சங்கிலிதான்எடுத்து கொடுத்தாற்போல்
என்னெதிர்த்துக்கொண்டார்என்னே இவரைப் பொடிபொடியா
இடியேனே வரவொட்டாமல்
அடியேனே வந்தமன்னரைப்
பிடியேனே என்சொல்
முடியேனே (என்ன)

வட்சுமணர் பரதர் சேனையைக் கண்டு கோபித்தல்.

விருத்தம்.

திடம்பெருகு குகன்இவ்வா றெண்ணி ஐயம்
தெளிந்துதெரி சிக்கவந்தான் பரதன் அன்பால்
நடந்ததெல்லாம் குகனுக்குச் சொன்னன் கங்கா
நதிகடந்தான் சேனைகளைப் பரத்து வாசன்
மடந்தனிலே இளைப்பாற்றிச் சித்ர கூட
மருங்குவந்தான் அவனைலட்சு மணன்கண் டிங்கே
தொடர்ந்துகொல்ல வரும்இவனைக் கொல்வேன் என்று
துடிக்கின்றான் ராமன்முன்னே படிக்கின் றானே.(27)

16. தரு. ராகம்-அசாவேரி ; தாளம்-ஆதி.

பல்லவி.

ஒருமொழிமாத்திரம்தாரும்சாமி எனக்குத்தாரம்
ஒருமொழிமாத்திரம்தாரும்சாமி

அனுபல்லவி.

பரதன்சேனை இதுகான்மரம் ஏறி
பார்க்கத்தெரிந்ததையாபழி காரி
வரவிடுக்கவந்தான்நம்மைச் சீறி
வரட்டும்ஒருகைபார்க்கிறேன்எனத் தேறி(ஒரு)

சரணங்கள்.

1. வஞ்சகம்பரதன்செய்த கோரம் தீர்த்தால் அல்லாமல்
வாங்குமோஎனதுவங்கை வாரம் தேவரீர்இந்த
வஞ்சியும்நீரும்போய்ச்சற்றே தூரம் இருப்பீர்இந்த
மட்டுமேசெய்திடும் உபகாரம்
கொஞ்சநேரத்திலேஎன்சிலை பூட்டி
குரைக்கும்நரிக்குஇரைஆகவே காட்டி
பிஞ்சிடாமல்இந்தச்சேனையைக் கூட்டி
பிரளயகாலருத்திரனைப்போல் மாட்டி
நஞ்சுநஞ்சுபஞ்சுபஞ்சர எவர்களும்
நெஞ்சிரங்கவெஞ்சரங்களைத் தொடுக்கிறேன்(ஒரு)

2. வண்டியும்தேரும்கப்பல்போல் ஆட அதிலே ரத்த
வாரிவெள்ளம்கரைபுரண் டோட எதிர்த்த மன்னர்
மண்டைகள்மலை மலையாப் போட பேயும்பூதமும்
மகிழ்ந்துகொண்டுதலைகள் பந்தாட
அண்டோணிதிபெரும்படைகள்மென் மேலே
ஆடிக்காற்றில்விழும்சருகுகள் போலே
சண்டவார்க்கணைகள்தொடுக்கிற தாலே
சரிந்துவிலகுலர்தொரு காலே
விண்டுவிண்டுபிண்டுபிண்டு விழவிழ
கண்டகண்டதுண்டம்துண்டம் ஆக்கிறேன்(ஒரு)

3. ஆள் அடிமைலட்சுமணன் தொட்ட அம்புகள்பாய்ந்து
ஆணமத்தகம்பிளந்துகொட்ட அந்தில்வந்தபோர்
வாள் எல்லாம்மீன்போல்புகுந்துகிட்டஅந்தச்சேனை
வாரிக்கொண்டுரத்தம்கடல்மூட்ட
தோளும்தாளும்அறுந்துதடி துடிக்கத்
துள்ளித்துள்ளிக்கிலகவந்தங்கள் நடிக்க
மூளைச்சேற்றில்விழுந்திடுப்புகள் வெடிக்க
முகம்கண்டவர்க்கெல்லாம்குறளிகள் படிக்க
வாளி ஆடகாளி ஆட பலபல
கூளி ஆடதூளி ஆட அடிக்கிறேன்(ஒரு)

ஸ்ரீராமர் சக்கரவர்த்தியைக் குறித்துப் புலம்பல்.

விருத்தம்.

இத்தவகை சொல்லத்தப்பி உனக்கு லோகம்
சேரேழும் நேர்ஆமோ நமக்குப் பூமி
தந்திடவும் வணங்கிடவும் வந்தான் கண்டாய்
தம்பிபர தனும்எனவி ரோதிப் பாலே
அந்தமதி விடுவிடென்னப் படையை நீக்க
அண்ணன்முன்னே பரதன்வந்து பணிந்த போது
தந்தைஉள மேஇலமே என்றான் கேட்டான்
தயங்கினன் ரகுராமன் மயங்கி னானே. (28)

11. திபதை. ராகம்-கண்டா ; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. மெய்யைவிலகிறுத்திஉன் மெய்யைவிட்டுப்போனதென்ன
மெய்த்தவனே-என்னைப்-பெற்றவனே

கையிலேவளர்த்தஎன்னை இப்படிக்கண்கலக்கங்கள்
கண்டாயோ-என்னை-விண்டாயோ

2. வீட்டில்இருந்துமுகத்தைக் காட்டுவாய்என்றிருந்தேனே
வெறுத்தாயோ-என்னை-ஒறுத்தாயோ
காட்டிலேபோம்முன்னுகவின் நாட்டிலேநீபோனதென்ன
காரியமோ-இது-வீரியமோ

3. தத்தளிக்கும்பரதற்குப் புத்திமதியோசனைகள்
சாற்றுவையே-பயம்-மாற்றுவையே
எத்தனைகாரியத்துக்கும்என் கர்த்தன்இருக்கிறான்என்றே
எண்ணினேனே-அவம்-பண்ணினேனே

4. எண்ணும்என்உயிரிருக்க உன்உயிரைமாத்திரம்
இறந்தாயோ-என்னைத்-துறந்தாயோ
கண்ணுக்குற்றம்கண்ணுக்குத் தெரியாதென்றுசொன்ன
கதையாச்சே-நல்ல-வதையாச்சே

5. இந்திரன்பழையபோலே வந்தனதுமுன்னேமுறை
இட்டாயே-குறை-பட்டாயே
அந்தரத்திலேசென்றாலும் எந்தாய்இங்கேயிருக்க
ஆர்படுவார்-தேர்-ஆர்விடுவார்

6. என்இரண்டுகால்மிதித்த உன்னிடமார்பும்வயிறும்
இருதாளும்-உன்-இருதோளும்
வன்னிதின்னக்கண்டேனேஎன்னைப்போல்ஒருபிள்ளை
வாச்சுதல்லோ-பேய்-ஆச்சுதல்லோ

7. தன்அரியதாயுவந்து தாய்வாழையைக்கெடுத்த
சதிகாரனே-தலை-விதிதானே
பிள்ளையென்றுநான்பிறந்து பெற்றவனைக்கொன்றுன்என்று
பேர்எடுத்தேன்-நல்ல-சீர் எடுத்தேன்

8. கண்ணில்எண்ணெய்குத்திஎன்னைக் காத்துக்கொண்டி
கட்டுமுன்னே-பலன்-கிட்டுமுன்னே [ருந்துபட்டம்
வெண்ணெய்திரண்டுவரச்சே தாழிஉடைந்தாற்போலே
விடித்தாயே-என்னைக்-கெடுத்தாயே

9. காதுபேர்பிள்ளையிலும் என்மேல்உன்மனம்எல்லாம்
நாட்டினையே-பா-ராட்டினையே
காலிலேதைத்ததுஉன் கண்ணிலேதைத்ததுபோல
காத்தாயே-இன்று-தீர்த்தாயே

10. வெந்தவனம்கடந்துன் ஊரினில்வந்தார்முகத்தில்
விழிப்பேனே-ஆரை-அழைப்பேனே
என்தன்முகம்திருத்தி உச்சிமோந்துதழுவி
எடுப்பார்ஆர்-முத்தம்-கொடுப்பார்ஆர்

11. மாமந்திரசாலையும் சிங்காதனமும்ஒளி
வாங்காதோ-கண்டால்-வங்காதோ
பூமண்டலாதிபர்கள் தாம்வந்துபணியும்அம்
புஜபதனே-ஐயா-தசரதனே.

ஸ்ரீராமரை வசிஷ்டர் தேற்றுதல்.

விருத்தம்.

ஆசனே எண்ணி இவ்வா றழும்இரா கவனே நோக்கி
வாமுனி வதிஷ்டன் ஆங்கே மலர்க்கையால் கண்ணீர் மாற்றி
வீகினல் எவரா னும்ம விதியினை வெல்வா ருண்டோ
பூவலர கேளாய் என்று போற்றுவான் தேற்று வானே.(29)

17. தரு. ராகம்-முகாரி; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

ராமாகீயும்-இப்படிகிலேசிக்கல் ஆமாளன்சாமி

அநுபல்லவி.

பூமான்னனும்தசரதன்போ கையிலேலே
புலம்பிப்புலம்பிக்கொண்டு குழந்தைப்பிள்ளையைப்போலே(ரா)

சரணங்கள்.

1. கனிந்துகண்ணீர்இறைத்தாவதுண் டோ சாரம்
கையால்எள்ளும்நீரும்இறைக்கவே னும்இந் நேரம்
நினைத்துபார்க்கில்இதுமகன்செய்யும் உபகாரம்
நீ அறியாததுண்டோஉனக்கேன் இந்த விசாரம்(ரா)

2. புண்ணியபாவம்இரண்டும்மெய்என் று மனஸ்காரி
பூட்டும்வாணுள் அதிற்போட்டு வைத்ததிரி
என்னும்இவ்விரண்டிலும்உயிர்விளக் கேசரி
இரண்டும்போனல்விளக்கிருக்குமோ அரிகரி (ரா)

3. பெதறுவன்முன்னவர்க்கும்அடிக்கடி மேதினி
பிராணபயம்உண்டென்றுசொல்லுமேபெரும் தொனி
அறுபதாயிரம்ஆண்டு அரசிருந்தான் தனி
அதுவும்போதாதென்றுஅழல்ஆமோஅவற் கிலி (ரா)

ஸ்ரீராமர் முன்னே பரதர் புலம்பல்.

விருத்தம்.

அலகிலாக் குறைநீக்கி வதிஷ்டன் தேற்ற
அழிந்துகங்கா நதிமூழ்கித் தர்தைக் குள்ள
குலவிதிஎல் லாம்செய்தான் சீதை தானும்
குளிர்ந்தகங்கா நதிமூழ்கித் தெளிந்த போது

தலம்அதனை ஆளும்முடி தரிக்காய் தம்பி
சடைமுடிவன் தரித்தாய்என் றுரைக்கக் கண்
பலபலென உதிர்ந்திடத்தன் மனதில் உள்ள
படிராமன் மூன்பரதன் பகரு வானே.

12. தீபதை. ராகம்-எதுகுல காம்போதி ; தாளம்-ஆதி.

கண் ணி கள் .

1. மன்னவன்தன்னையும்கொன் று உன்னையும்இத்தப்படி
வைத்தால்வயிற் றுக்குள்ளே அவம்
சென்மித்தகான் அல்லோ மாதவம்செய்யவேணும்
தேவா உனக்கேன்இந்த மாதவம்

2. உறவுபோலேஇருந்து குளவிபோலேகொட்டி
உன்னையும்போகச்சொன் னாளே படு பாவி
மறுபடியும்வந்து சந்தோஷம்சொன் னாளே
வைத்திருக்கவேணுமோ என் ஆவி

3. உடன்ஆம்துணைபிரிக்க தந்தைஉயிர்மரிக்க
ஊரும்சிரிக்கவரம் கொண்டேனே
இடறினகாலிலே இடறும்என்பதெல்லாம்
என்இடத்திலேதானே கண்டேனே

4. அருந்துணையேஎன தையாவேஎன
தரசேபர தேசியோ
பிரிந்தென்னைப்போஎன்றுப் பழிகாரணனான்
பிள்ளைபிறந்தநேர் வாசியோ

5. உலகம்எல்லாத்தையும்நீ ஆளவேணும்பின்
ஒருவர்ஆண்டுகுறை வாங்குமோ
மலைதாங்கும்பாரத்தை மலையேதாங்கவேணும்
மண்ணைங்கட்டிஎன்ன தாங்குமோ

6. ஆனைமேல்இட்டபாரம் பூனைமேல்இட்டாற்போலே
அரசாளுவதென்ன கோலமோ
கானகம்நீஇருக்க நான்போய்அரசிருக்கல்
கதையோஇதுகலி காலமோ

7. தன்இனம்தன்னைக்காக்கும் வேலிபயிரைக்காக்கும்
தப்பிதம்இல்லைஇந்தப் படிதானே
உன்இனந்தன்னைநீயே வந்துகாத்தருள்என்னில்
ஒன்றும்ஆகாதுசொன்னேன் அடியேனே

8. தேவேந்திரனுக்கும் மகுடம்தரித்துவைத்த
தெசரதமகாராஜன் பூமியே
நீவேறென்றெண்ணல்ஆமோ நீயேவரவேணும்
நீஆளவேணும்என் சாமியே

ஸ்ரீராமர் பரதருக்குப் புத்திசொல்லல்.

விருத்தம்.

பரதன்இவ் வாறு கூறப் பரிந்து ஸ்ரீராமன் தாயார்
விரதம்என் விட்டாய் இந்த விரதம்என் கொண்டாய் நான்போய்த்
தரமுடன் பதினால் ஆண்டும் தவம்செய்ய வேணும் நீபோய்த்
திரமுடன் புவிஆள் என்று தெரிவிப்பான் விரிவிப் பானே.

18. ஆரு. ராகம்-சுருட்டி ; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

இன்னஞ்சிறுபிள்ளைபோலே என்னை அழைக்கிறாய்உன்னை
என்னசொல்வேன்பரதாஎன் கண்ணின்மணியே
அன்னைதந்தபணிவிடையே தன்மம்என்றுமதித்தேனே
அப்படிநீமதிக்காமல் இப்படிவந்தில்லானே (இன்)

சரணங்கள்.

1. வாய்த்தமழைவிட்டும்நீ வானம்விட்டதில்லைராமன்
வனத்தில்வந்தபின்னும்என்ன சொல்லையா
சேர்த்தியாப்பதினாலுவருஷ மட்டும்சொன்னபடி
லில்என்றுல்லில்லாமல்என்ன தொல்லையா
சத்ததகப்பன்சொன்ன வார்த்தைகொண்டுபுவிஆள
இசைந்தேனே அந்தநாள் அறிந்தாய் அல்லையா
மூத்தவனும்ஒருவித்தில் தகப்பன்ஆமேசொன்ன
மொழிகொண்டுபுவி ஆளொணுதோவல்லமைஇல்லையா (இ)

2. மத்தர்போற் பொய்யுரைத்துத் தகப்பன்வினைகட்டிக் கொள்ள
மகன்இருந்துபட்டங்கட்டிக் கொள்ளல்ஆமோ
சத்தியமாய்வேதம்எல்லாம் கண்கண்டதெய்வம்என்னும்
தாய்தகப்பன் உரைகடந்து துள்ளல்ஆமோ
பத்தியாத்தவம்எனக்கும் புவிஉனக்கும்பிரித்திருக்கப்
பங்கல்லாப்பங்கைவிழுந்து அள்ளல்ஆமோ
பித்தன்அல்லடாதம்பீ சமர்த்தன்என்றிருந்தேனே
பேய்ஆகிலும்பெற்றதாய்வார்த்தை தள்ளல்ஆமோ (இ)

மூன்றுகநான்கொண்டு பின்னுகஅரசனக்கு
முறையாலேதந்தேன்என் உரை பொய்யாமல்
உன்னுலும்என்னுலும் சொன்னபடிநடக்கும்என்று
உசரப்போனதசரதற்கு வசை வையாமல்
சின்னபின்னங்களாய்ப் பட்டணமும்பரிசனமும்
சேற்றில்நட்ட கம்பம்போ லே தொய்யாமல்
என்னுடைதம்பீநீ உன்நாட்டைஆளடா
எப்படிநான்சொன்னாலும்அப்படிநீசெய்யாமல் (இ)

பாதுகைக்குப் பரதர் பட்டாபிஷேகஞ் செய்தல்.

விருத்தம்:

பதினனும்ரா கவன்இவ்வா றுரைக்கக் கேட்டான்
பரதனும்சம் மதிகொண்டான் பதினெல் ஆண்டாம்
அதில்வரா விடில்முடிவேன் என்று கொண்டான்
அண்ணன்மிதி யடிகொண்டான் அனுப்பிக் கொண்டான்
ஏதி அயோத் தியிற்புகுந்தான் நந்தி க்ராமம்
தன்னிலுன் சுமந்த்ரன்அதி காரம் செய்ய
நீதியடிக்கு முடிதரித்தான் தெற்கே நோக்கி
விழிக்கின்றன் தன்பழியைக் கழிக்கின் றானே.

அயோத்தியாகாண்டம்.

முற்றிற்று.

திபதைதள்-12-தருக்கள்-18-ஆக- 30.
பாயிரம்-1-க்கும்-காண்டங்கள்-2-க்கும் கூடிய
கொச்சகம்-1-வெண்பா-2-வசனம்-1-விருத்தம்-62-ஆக-66.
தோடையம்1-திபதை-15-தருக்கள்-43-ஆக-59.

சக்கிரவர்த்தித் திருமகளார்
திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மூன்றாவது

ஆரணிய காண்டம்.

ஸ்ரீராமர் அத்திரியைக்கண்டு தண்டகம் சேர்தல்.

விருத்தம்.

துதிபெறுதம் பியர்தாயார் மந்திரி மார்கள்
கொல்முனிவர் புரசனங்கள் குகன்போ லுலும்
பதிவுறுகம் மிருப்பிடத்தைக் கண்டு கொண்டார்
பரிவினுல் வந்துதினம் சூழ்வார் என்று
சதினனும்சா னகிபின்னும் தம்பி முன்னும்
தான்வரச்சித் திரகூட மலைக்கப் பாலே
உதயரவி முன்பனிபோல் முனிவர் துன்பம்
ஒழிக்கின்றான் ஸ்ரீராமன் வழிக்கொண் டானே. (1)

1. திபதை. ராகம்-தோடி ; தாளம்-அடசாப்பு.

கண்ணிகள்.

1. வழிகொண்டுராகவன் விட்டான் அந்த
வழியில்அத்திரிமுனியைக் கண்டான் முனி
பொழியும்ஆசீர்வாதம் கொண்டான் தந்த
பூந்தனிகிழங்கமு துண்டான்

2. அழுக்கில்லாதசொர்ணச் ரையை ஆன
ஆடைபணிகள்வெகு வாயே அன்பு
செழிக்கும்சீதைக்கொரு தாயைப் போலே
செய்தாளேமுன் அனு சூயை

3. அதுகொண்டம்முனிவன் அவ் அன்னே இடத்
தனுமதிகொண்டவர் முன்னே நல்ல
முதுதண்டகாரணியம் தன்னைக் கண்டு
மூவரும்சென்றுரே பின்னே

விராதன் வதையும் துதியும்.

விருத்தம்.

பொய்கலந்த விராதன்அந்த வனத்தே வந்தான்
பூவைசன கியைஎடுத்துக் கொண்டான் ராமன்
மெய்கலந்த தம்பியுந்தா னும்போர் செய்தான்
விட்டிலன்என் றவர்களையும் எடுத்துக் கொண்டான்
மைகலந்த தோளிரு வோரும் வெட்டி
மாய்த்திட்டார் பதம்படலால் அரக்கன் அங்கே
கைகலந்த திவ்வியதே கத்தைப் பெற்றான்
கதிசெல்வான் ஞானமுள்ள துதிசொல் வானே. (2)

1. தரு. ராகம்-பைரவி ; தாளம்-ஆதி.

பல்லவி.

அறிவார்ஆர்-உன்னை-அறிவார்ஆர்

அனுபல்லவி.

அறிவார்ஆர்மானிடம்போலே குறியாவேஷம்கொண்டதாலே
சிறியேன்செய்தபிழைதன்னைக்-குறியாதேராகவாஉன்னை (அறி)

சரணங்கள்.

1. எடுப்பானும்எவர்க்கும் இன்பம்-கொடுப்பானும்-குட்டியினிலே
விடுப்பானும்ஆலிலேமேலே-படுப்பானும்நீ ஆகவேபா
ராட்டுவாய்-கதியைக்-காட்டுவாய்-உலகைச்
சாட்டியில்லாப்பம்பரம்போல்-ஆட்டுவாய்உன்மகிமையை (அறி)

2. தாய் அறியும்பிள்ளை தன்னைத்-தாயையும்பிள்ளை அறியும்
நீ அறியும்உயிர்உன்னை-ஆயறியாதென்ன இந்திர
சாலமோ-இதென்ன-கோலமோ-உனது
காலாலேமுடிந்ததனைக்-கையாலேஅவிழ்க்கப்போமோ (அறி)

3. அரவம்ஆகிமேல்உகந்தாய்-ஒருகொம்பிலேசுமந்தாய்
சரணம்அதிலுல்அளந்தாய்-பெருநிலமங்கைமேல்வைத்த
தாகமோ-இலையாள்-மோகமோ-உன்மார்பில்
ஏகமாய்இருக்கின்றவள்-வேகமேசெய்யாளோஉன்னை (அறி)

4. உன்னசராசரம்எல்லாம்-வள்ளலேஉன்நாபிமலர்ப்
பொள்ளலில்வந்தும்ஒருவர்-பிள்ளைஎனநீவந்தது
ஞாயமோ-இதென்ன-மாயமோ-சேற்றிலே
மேயும்பிள்ளைப்பூச்சிபோலே-தோயவும்தோயாதஉன்னை (அறி)

5. வேதத்தின்மேலேவேதாந்த-நாதத்தின்மேலேஞானிகள்
போதத்தின்மேலேவிளங்கும்-பாதத்தைஎன்மேல்வைத்தாய்
யோக்கியனே-அடியேன்-சிலாக்கியனே-சுருதிசொல்
வாக்கியனேசுவாமிஎனது-பாக்கியமேபாக்கியம்உன்தன்னை (அ)

6. பாகண்டுசொல்லாளை-இந்த-நாய்கண்டதென்றுகொள்ளாதே
தாய்கண்டுபொறுக்காத்தையூ-ரோகண்டுபொறுக்கும்மலர்த்
தாமனே-பன்னிரு-நாமனே-எவர்க்கும்
வாமனேஎனும்நீதாபி-ராமனே-உன்பெருமையை (அறி)

தண்டகவன ரிஷிகள் ஸ்ரீராமரோடு முறையிடல்.

விருத்தம்.

துதிவிரா தன்வணங்கி உயரப் போனன்
சுவாமிசர பங்கன்ஆசி ரமத்தில் போனன்
அதில்எதிர்கண் டிந்திரனும் போனன் ராமன்
அருளுமுனி தம்பதியா டளவிற் போனன்
கதிதருதண் டகவனத்து முனிவர் தம்மைக்
கண்டுகனி அமுததயன் உண்டிருந்தான்
சதிசெயும்ரா கூதரால கொஞ்சச் சிவன்
தரிக்கின்ரூர் அவர்கள்கையை விரிக்கின் ரூரே. (3)

2. திபதை. ராகம்-புன்னகவராளி ; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. ராமபத்திராராமசந்திரா ராமாஆசீர்வாதம்
பூமிச்சுமைகழிக்கும்தர்ம புத்திராஆசீர்வாதம்

2. அரக்கர்கையால்நெருக்கியிட ஆலக்கரும்பெனத் தானே
நெருக்கிடைஆய்வந்தும் எபகை ஜெயித்தாய் எங்கோனே

3. விழல்ஆனராட்சதநெருப்பால் வெதும்புகிறோம் ஒருகாலே
மழைமுகம்கண்டிடும்பயிர்போல் மகிழ்ந்தோம்நீ வரவாலே

4. புரைசேரும்ராட்சதராற் பூனைகளாய்ப் போனோமே
அரைசேஉன்வரவுகண்டோம் ஆனைகள்போல் ஆனோமே

5. வள்ளல்தசரதன்மகனே மனக்கவலை தீராயோ
வள்அளவுண்கிருபைக்கண்ணால் எங்கள்முகம் பாராயோ

6. பஞ்சுபறந்தாலும்அய்யா படியும்அல்லோ ஒருதேசம்
நெஞ்சுபறந்திடுமதற்கு ஜீலகாணும் லவலேசம்

7. உத்தமனேஅரக்கரைவே ரொடும்பிடிங்கி எறிவாயே
இத்தனைபேர்செயும்தவங்கள் எல்லாம்நீ பெறுவாயே

8. புலிக்கூட்டம்திரிகாட்டில் புகுந்திடுவான்என நாமே
கலிக்கிராட்சதர்திரியும் காட்டில்இருக்கின் றோமே

9. இயற்கைகுலந்தரக்கர்களால் இறந்துவிட்டோம்பேர் நாமம்
வயிற்றினில்வான்கட்டிக்கொண்டு மறந்துவிட்டோம்செப ஓமம்

10. உங்காரம்செயில்அரக்கர் உலகில்என்ன படுவாரோ
இங்கேநீஇருக்கில்அவர் எட்டியும்பார்த் திடுவாரோ

ஸ்ரீராமர் தண்டகவன ரிஷிகளுக்கு அபயமீதல்.

விருத்தம்.

தருக்களும் மலையும் சூழ்ந்த தண்டக வனத்தோர் சொன்ன
ஒருத்தம்ஆம் மொழியைக் கேட்டான் வணங்கியே ராமன் நீங்கள்
செருக்கியே தவங்கள் செய்வீர் தேவரீர்க் கேவல் ஆளா
இருக்கிறேன் அரக்கர் துன்பம் இனிவிடு மெனச்சொல் வானே. (4)

2. தரு. ராகம்-கலியாணி ; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

அஞ்சாதிருங்கள்சகியாசெகளே-தண்ட-காரண்ணியவாசிகளே

அனுபல்லவி.

அஞ்சாதிருங்கள்உங்கள் ஆசீர்வா தம்தனை
அப்புறம்ராட்சதர்க்குண்டென்கை யிற்கணை
சஞ்சாமாருதம்போலேநொ டிக்கிறேன்
பஞ்சாகப்பறந்தோடஅ டிக்கிறேன்(அஞ்)

சரணங்கள்.

1. கண்டோரைக்கொல்லுவேன் கொல்லாமல்-விட்டால்
காகுத்தன்என் றுசீர் சொல்லாமல்

மண்டிஎதிர்த்தமுன் நில்லாமல் ஞாலம்
வந்துவணங்கினர் அல்லாமல்
எண்டிசைமேல்அவ ராலே ஆன மட்டும்
ராட்சதசேனைகள் வந்துபோரா டட்டும்
அண்டபகிரண்டம் ஆயிரத் தெட்டும்
அப்புறம்போனலும் என்கணையே எட்டும் (அஞ்)

2. அந்தணராலே பசு வாலே தங்கள்
ஆவிகொடுத்தவர் வீண் மேலே
மூத்தியதேவர்க்கும் அப் பாலே சொல்லு
மூர்த்திகள் ஆவார் அத னாலே
இந்திரன் ஆனதேவன் வந்து தடுக்கிறேன்
என்முலம்ராட்சதர் போரில் அடுக்கிறேன்
சுந்தரகோதண்ட வாளி விடுக்கிறேன்
சூரியனைக்கண்ட பனிபோல் ஒடுக்கிறேன் (அஞ்)

3. மங்கியேதாயார் நிலம் கீற மூடி
மன்னன்உயிரும் தடி மாற
எங்கள்பரதனும் வே சாற ரண
ஏன்வந்தேன்என்செம்மம் ர டேற
உங்கள்பணிவிடை நானே பொறுக்கிறேன்
உக்கிரகோதண்டத்தில் நாணி இறுக்கிறேன்
எங்கெங்கும்என்கணை யாலே தொறுக்கிறேன்
ராட்சதபூண்டெல்லாம் வேரோ டறுக்கிறேன் (அஞ்)

ஸ்ரீராமர் பஞ்சவடி தீரத்தைக் காணுதல்.

விருத்தம்.

அருள்முனிவர்க் கிந்தவகை தேற்றித் தண்ட
காரணியக் கனிற்பத்து வருஷம் போக்கி

வரும்வழியில் வதிஷ்டமுனி தவமும் கொண்டு
வந்தகஸ்த்ய முனிவரணை வணங்கி அன்னன்
கருகிலையும் புரமெரித்த கணையும் கூடிக்
சங்கையிலா தேதரித்த துங்க ராமன்
பரிவுளதம் பியும்சனகி தானும் சொல்லும்
படிகொண்டான் பிறகுபஞ்ச வடிகண் டானே. (5)

ஸ்ரீராமர் சடாயுவைக் கண்டு பஞ்சவடி தங்கல்.

விருத்தம்.

அகஸ்த்ய முனியை அனுப்பிக்கொண் டந்த வழியிற் சடாயுவனும்
தகப்பன்உரைகொண்டவன்காட்டத் தருநீர்க் கோதா விரிதாண்டிச்
சகிக்கும் இலையோன் செய்தபர்ண சாலை தனிலே சனகியுடன்
மகிழ்ந்தோர் பஞ்ச வடியிலுள்ளோர் விருந்தாய் ராமன் இருந்தானே.(6)

3. தந. ராகம்-அடாணை ; தாளம்-ஆதி.

பல்லவி.

இருந்தானேராமச்சந்திரன்-பஞ்சவடியில்
இருந்தானேராமச்சந்திரன்.

சரணங்கள்.

இருந்தானேராமச்சந்திரன்-ரிஷிகளோக்காக்கும் தந்திரன்
வருந்தாராட்சதர்கூடி-வரும்வழிதன்னே நாடி (இரு)

திருதர்கள்பசிபார்த்து-திரைதிரையாய்க்கைகோர்த்து
வருவிகாதத்தைத்தீர்த்து-மாமுனிவோரைக்காத்து (இரு)

ஆலந்தமுனிவர்சோகம்-ஆகுலம்எல்லாம்போக
இலங்கையில்அனுபோக-ராட்சதர்க்கெமன்ஆக (இரு)

மிலத்தராட்சதர் ஆட்ட-பாட்டங்கள்எல்லாம்மாட்ட
சலித்தபேர் துன்பம்ஓட்ட-தர்மத்தைநிலைநாட்ட (இரு)

சூர்ப்பநகை ஸ்ரீராமரைக்கண்டு மோகித்தல்.

விருத்தம்.

இருந்தரா கவன்பூ மேனி எழில்எலாம் நோக்கி ஆசை
புரிந்தசூர்ப் பநகை லங்கா புரிஇராவ ணற்குத் தங்கை
அருந்தும்மோ கத்தால் ஐயன் அடிமுடி அளவும் கண்டு
திரிந்துள்ளே எண்ணி நெஞ்சம் இருகுவாள் உருகுவாளே.

3. திபதை. ராகம்-லோம்புரி ; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. தேவரேமணிதன் தாரேஞ-யாவரேயெனவனம்உள்ள
சித்தரேஞ-இவன்-கர்த்தரேஞ-பிரமன்
பாவனையாற்கண்டபெண்கள்- ஆவியைக்கொள்ளைகொள்ளண்ணு
படைத்தாரேஞ-என்னேஞ-உடைத்தாரேஞ

2. எட்டானைக்கையும்இவன்கை-மட்டாமோசொரசொரென்ன
இருக்குமேம-உள்ளே-சுருக்குமேம-முன்னே
பட்டமன்மதன்தவம்செய்-திட்டிந்த-உருவாய்ப்புறப்
பட்டாரேஞ-தவசு-தொட்டாரேஞ

3. ஈசனுக்குமூக்கண்இந்திர-ராசனுக்கோர்ஆயிரம்கண்
ஈண்ஆச்சே-இவற்கிரு-கண்ஆச்சே-இவனைப்
பேசினல்லன்சாமி இவன்-கேசவன்தாரேஞநான்ஒன்னு
பிரியேனே-ஆரோ-தேரியேனே

4. பூந்திபவனத்தையிவன்-செங்கனிவாய்க்கொப்புசொல்லப்
போகுமோ-இகர்-ஆகுமோ-ஐயோ
அந்தவார்த்தையைத்துப்பென்ற-இந்தையால்புவனம்துப்பென்
றுச்சுதே-உவமை-போச்சுதே

5. மூடிவைத்தகுழல்சடையா-முடியாவிட்டால்பெண்கள்எல்லாம்
முடியாரோ-மனம்-மடியாரோ-இவன்
அடிவைத்தபூமிப்பெண்மேனி-புளகித்தாற்போல்அல்லோபுல்லே
அரும்பிஞள்-மெத்த-விரும்பிஞள்

6. மரவுரிசேர்இடைபீதாம்-பரமதைச்சேராததென்ன
மாயமோ-இது-ஞாயமோ-சந்
திரன்இவன்முகம்என்றுலம்வரவர அதுக்கும்கலே
தேயுமே-களங்கம்-தேயுமே

7. நவம்செய்ததாமரைப்பெண்ணும்-செபம்செய்கிறுள் இவன்மார்
தாடவோ-வந்து-கூடவோ-ஐயோ [பின்
தவம்செய்யவந்தாளேநான்முன்-தவம்செய்ததற்காகக்காட்சி
தந்தாளே-தேடி-வந்தாளே

8. எலும்இவன்இலக்கணம்-எல்லாம்செய்தஅயனேமோசம்
இட்டாளே-மதி-கெட்டாளே-இவன்
சாவில்லாளுக்கொவ்வாஇந்திரன்-மேல்உலகைஆள்வதென்ன
கர்மமோ-அது-தர்மமோ

9. எடுத்திவன்சுந்தரத்துக்காம்-அடுக்கானபூஷணம்பூணு
திருப்பான்எண்-அரு-வருப்பான்எண்சும்மா
வீடுத்தவன்அல்லவேபொன்னின்-குடத்துக்கும்பொட்டிட்டுப்
வேணுமோ-அதிகம்-காணுமோ [பார்க்க

10. தப்பிலாஇவனைச்சேர-இப்படிபிர்மாஎனக்குத்
தந்தாளே-இவனும்-வந்தாளே-ஓகோ

எப்படி ஆனலும் இவன்-பொற்புயம் தன்னைச் சேராமுன்
இருப்பேனே-ஆவி-தரிப்பேனே

11. இந்தவி தம்எண்ணிமலர்ச்-செந்திருப்போல்மாயவேஷம்
இட்டாளே-தோணம்-விட்டாளே-நல்ல
பைந்தொடிஆய்ச்சூர்ப்பநகை-வந்தராமச்சந்திரன் முன்னே
படர்ந்தாளே-கிட்ட-தொடர்ந்தாளே.

ஸ்ரீராமர் பக்கல் சூர்ப்பநகை வருதல்.

விருத்தம்.

அட்டிசொல்லா தன்னைஉரை கொண்ட ராமன்
ஆனைவரு கிறவழியைப் பார்க்கும் சிங்கக்
குட்டியைப்போல் அரக்கர்வரும் வழியைப் பார்த்துக்
கொண்டிருந்தான் அவன்இருந்த சாலை முன்னே
கட்டிஇடும் பிணிஉள்ளே அடங்கி நாச
காலம்வர வெளிவந்தாற் போலே பொல்லா
மட்டிஇரா வணன்குடியை நாசம் செய்யும்
வகைவந்தாள் எனச்சூர்ப்ப நகைவந் தாளே. (8)

4. தந. ராகம்-பியாகடை; தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தாளே-சூர்ப்பநகை வந்தாளே

அனுபல்லவி.

வந்தாளேமன்மதசதகோடி-வடிவுளராமன்மேல் மயல்மிகநாடி
பந்தமூலையைமூடி பஞ்சவடியைத்தேடி
பாவம்செய்யும்நிர்மூடி ராவணன்குடிதேடி(வந்)

சரணங்கள்.

1. ராவணன்குபேரனுக்குத் தங்கைபகை இல்லாத
நன்மைத்தனர்கொண்டுவந்த நங்கை
தேவரீருக்கிவள்பெண்டல்ல நீலி
சீதைக்குத்தெரியுமோராட்சத சோலி
எவலுக்கெளியவன்நான் அனு கூலி
என்றுசொல்லிஅரக்கரைத் துடைகாலி(வந்தா)

2. மானிடப்பெண்கொண்டீர்என்ன கண்டோ என்னுடன்
மருவிவாழ்ந்தால்உமக்குப்பயம் உண்டோ
ஆனலும்என்னபாவிகருப்பு வில்லி
ஐங்கணைபிளக்குதேஎன்உடல் கல்லி
சேனலீலைசெய்வேன்நான்காம வல்லி
திரட்டுப்பால்குமட்டுதோஉமக்கென்று சொல்லி(வந்தா)

3. எதிரிலேவந்ததேஉமது யோகம் நாம
இருவோரும்இசைந்ததேகாந்தர்வ விவாகம்
சதிசெய்வேன்எனக்கும்உமக்குப்ஏக ராஜி
சம்மதிப்னதேநல்லமுகூர்த்த வாஜி
கதகதென்றெரியுதேகாமாக்கினி வீஜி
கட்டிக்கொள்ளும்என்றுதில்லுமல்லும்பேசி(வந்தா)

ஸ்ரீராமருக்கும் சூர்ப்பநகைக்கும் சம்வாதம்.

விருத்தம்.

வந்தசூர்ப் பநகை தன்னை மதித்தரா கவனும் நோக்கி
அந்தமா னிடவர் பெண்ணே அரம்பையோ அறிவோம் என்றும்
தொந்தமா தவத்தோர்க் கான சொல்அறிந் துரைப்பாள் என்றும்
தந்தவார்த் தைக்கு வார்த்தை சரிசரி எதிர்சொல் வாளே. (9)

தீபதை. ராகம்-மோகனம் ; தாளம்-ஆதி.

கண்ணி கஷ்.

1. செம்பவளவல்லிபோல எங்கேவந்தாய்வந்த
சேதியென்னசொல்வாய் பெண்பாவாய்
கும்பிடப்போனதெய்வம் எதிர்வந்ததென்முகை
கொண்டுகாணவந்தேன் என்கோவே

2. ஆசையில்லின்மேலோ மரவுரிமேலோதின்னும்
அருங்கனிமேலோசொல் பெண்பாவாய்
ஆசையில்லின்மேல் இல்லைமரவுரிமேல்இல்லைஉன்
அதரக்கனிமேல்உண்டு என்கோவே

3. அதரக்கனிகொடுக்கத் தவசிகட்கடுக்குமோ
அடுக்காதவார்த்தைசொன்னாய் பெண்பாவாய்
அதரக்கனிவதிஷ்டர் அருந்தத்திக்கீயலையோ
அவர்தவசிஅல்லவோ என்கோவே

4. தவசிஅதுசெய்தாலும் பிர்ம்மகுலம்உன்குலம்
க்ஷத்திரியகுலம்என்குலம் பெண்பாவாய்
இவைஅவைஎன்பதென்ன காமுகருக்குக்கண்ட
இடத்தில்என்பதுபொய்யோ என்கோவே

5. உன்வீட்டில்அண்ணனை ராவணன்அறியாமல்
உன்கைப்பிடிக்கல்ஆமோ பெண்பாவாய்
என்வீட்டில்அண்ணனும்தான் உன்னவள்ஆனபின்பு
இதைவதற்கையம்இல்லை என்கோவே

6. தன்வீட்டுவிளக்கென்று முத்தமிடுவார்உண்டோ
தகுதிஅல்லவேஅது பெண்பாவாய்

என்வீட்டுக்காரன் ஆனால் அரக்கர்உறவும்உண்டாம்
இந்திரபட்டமும்ஈவேன் என்கோவே

7. அரக்கர்உறவும்பெற்றேன் உன்போகமும்பெற்றேன்
அருந்தவம்பலித்ததே பெண்பாவாய்
பெருக்கம்என்னசொல்ல என்சுகம்பெற்றபின்பு
பெறும்பாக்கியம்வேறும்உண்டோ என்கோவே

8. தவசிகளுக்கிதெல்லாம் ஏதுக்குக்காட்டினில்
தவசைபெரும்பாக்கியம் பெண்பாவாய்
தவசிதவசியென்று மெள்ளமெள்ளச்சொல்லி
தள்ளிவிட்டிடல்ஆமோ என்கோவே

9. தனிஆகஉன்னை நான் கைப்பிடித்தால்உன்தன்
சாதியார்என்செய்வாரோ பெண்பாவாய்
தனியாய்முருகன்வள்ளிகைபிடித்தானே அந்த
சாதியார்என்செய்தார் என்கோவே

10. அனியாயகாரியத்தைப் பயம்இல்லாமல்செய்தால்
ஆர்க்குஞ்சம்மதியாமோ பெண்பாவாய்
இனிஇருவரும்ஒத்தால் ஒருவர்க்கும்பயமில்லை
எவர்க்கும்சம்மதிஆமே என்கோவே

11. ஆனல்மனுஷகணம் ராட்சதகணத்தோடே
ஆடுமோகூடுமோ பெண்பாவாய்
காணுனல்எப்போதும் தேவருக்கேவல்செய்வேன்
ராட்சதசங்கையில்லை என்கோவே

12. சங்கைவன்என்றாய்க் குபேரனும்உன்க்கொரு
தமையன்என்றாய்அல்லோ பெண்பாவாய்
தங்கைஆனலும்என்ன தமையன்ஆனலும்என்ன
சந்தேகம்உனக்கென்ன என்கோவே

13. அங்கவன்பகைவந்தால் சங்கரன்பகைவருமே
எங்கும்பகைஆகுமே பெண்பாவாய்
இங்கள் சூடியும்மாலும் நான்முகனும்நீயென்றென்
திருஷ்டிக்கிகாணுகின்ற தென்கோவே

14. திருஷ்டிக்குக்கண்டாலும் ஒருத்திஇருக்கவேமேற
தேவைஎன்னசொல்லாய் பெண்பாவாய்
மட்டுச்சொல்லுகிறியோ பெருமரம்சுற்றிய
வள்ளிவிடுவதுண்டோ என்கோவே

15. விட்டிடுமோஎன்றுய் விளையாட்டுப்பூசல்இது
வினைப்பூசல்ஆகுமே பெண்பாவாய்
தட்டுதலைசொல்லி என்னைப்பயம்உறுத்தித்
தடுத்துவிட்டிடல்ஆமோ என்கோவே

16. ஒட்டாரம்காட்டாதே இனையோன் அறியாமுன்னே
ஓடிப்பிழைத்துப்போவாய் பெண்பாவாய்
அட்டாதுட்டிகள்பேசி அகம்றுகிறியோநல்ல
தாகட்டும்பார்க்கிறேன் என்கோவே

சூர்ப்பநகை தன் உறவை நினைந்து புலம்பல்.

விருத்தம்.

வாதாடும் சூர்ப்பநகை தன்னை நோக்கி
மணிவண்ணன் எனக்கிந்த மனையாள் சீதை
போதாதோ ஓர்உறையில் இரண்டு வாளோ
புறங்காக்கும் தம்பிக்கு மனையாள் இல்லை
நீதானே போஎனவே சீதை மேலே
நேர்வாளா லட்சுமணன் கூர்வா ளேந்தி
காதோடு மூக்கரிந்த பின்னும் பல்லுக்
கருகுவாள் உறவைநினைந் தருகு வாளே. (10)

5. திபதை. ராகம்-கண்டா ; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. அருமைப்பிறப்பேயண்ணேன் ராவ்ணனே என்னை
அருமைத்தங்கச்சியென்ற ராவணனே உன்தன்
கருவிழிபோலேகாத்த ராவணனே என்தன்
கண்ணினைன்னசொல்வேன் ராவணனே

2. சிங்கம்இருக்கக்குட்டிவசம் ஆமோ உன்தன்
செல்வத்தங்கையையொருவர் தொடப்போமோஎன்னை
அங்கப்பழுதுமனிதன் செய்வானை செய்தும்
அஞ்சாதஞ்சுபடைத்தும் உய்வானை

3. ஊர்க்குருவி உயரப் பறந்தாலும் அது
உசந்தகருடன் ஆமோ ஒருகாலும் இந்த
பார்க்குள்ளேமனிதர் மிகுந்தாலும் உன்தன்
பாதத்தூளுக்கொப்பாவாரோ எக்காலும்

4. எட்டுதிக்குப்உன்பேரைப் பழித்தானே மனிதன்
என்னையும்கொண்டையைப் பிடித்திழுத்தானே அய்யோ
கிட்டிச்செனி அரிந்து மூணந்தானே உன்னைக்
கிள்ளுக்கீரை ஆகவே நினைந்தானே

5. தூணைத்துப்பகர்ஞயிங்கே மேவாயோ என்றும்
தூக்கப்பேய்பிடித்ததீ ஆவாயோ அடா
பிணமேகதூஷணை வாரீரோ கான்
பெண்பிறந்துபட்டதைதீர் பாரீரோ

6. அத்தைமருகன்என்ப திது தானே பிரம
அஸ்திரம்விட்டால்மனிதன் அழியானே இந்திர
சித்தனென்போலஉன்தன் மூணைபோச்சோ தேவர்
திரணச்செயித்ததெலாம் விழல் ஆச்சோ

7. குட்டிமனிதன்னைனே வதைத்தானே என்னை
குலைகலங்கிடவேபோட் டுதைத்தானே மெள்ள
எட்டிப்பார்த்திவன் அண்ணன் பிரிந்தானே இவனை
ஏவிவிட்டமியாண்போல் இருந்தானே

8. இந்திரசந்திராதியர்கள் பணிகேட்க உலகில்
எந்தெந்தவீரர்களும் முடிதாழ்க்க வந்து
பந்தியிருக்கும்உங்கள் சபை நேரே மூக்குப்
பறிபோய்நான்வருவேனை துரை மாரே

சூர்ப்பநகை ஸ்ரீராமருக்கு மீளவும் இதவுரைத்தல்.

விருத்தம்.

பேய்வடிவாம் அரக்கியத்தப் படிஅழுதாள் ராமன்இடம்
பின்னும் வந்தாள்
தேவரீ அறியாதோ இளையவன் இப்படி செய்தான்
செய்தால் என்ன
கோவம்உள இடத்தில்அல்லோ சுகதோஷம் உண்டெனக்கு
கூட்டிக் கொண்டால்
ஆவதுமெத் தவும்உண்டு கேள்ளன்பாள் மருவிஎன்னை
ஆள்என் பாளே. (11)

5. தரு. ராகம்-மோகனம்; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

என்உருவினில்கொஞ்சம்கொய்தீர்-எனக்கென்னதாழ்ச்சிசீர்செய்தீர்

அனுபல்லவி.

அன்னியள்ஆகஎன்னைப்பிரிய விடாமல்-என்
அழகுகண்டொருவர்கண்ணைறு படாமல் (என்)

சரணங்கள்.

1. நடுப்படையிற்போனலும் வடுப்படாமல்உம்மை
நானேசுமந்துகொண் டேட்டவோ-ஆரும்
நிடுக்கிடவேஉம்மை எதிர்த்தபேர்தலைகளை
நிருகிமலைமலையாய்க் கொட்டவோ-நல்ல
குடித்தனத்துக்கிவள் ஆகும்ஆகாதென்று
குறிப்பதின்னம்முட்ட முட்டவோ-கேட்டால்
இடுப்புச்சீலைக்குக்கொஞ்சம் மூக்கிவளுக்குக்கொஞ்சம்
என்றெவர்க்குச்சரிக் கட்டவோ-எண்ணி (என்)

2. குற்றம்போலேசெய்து குணம்செய்தீர் என்னைக்கோட்டி
கொள்ளும்காமப்பேயைக் கொல்லவோ-நல்ல
பத்தினிஆகின் பிராமல்காய்கனிகளைப்
பறித்துக்கொண்டுவரச் சொல்லவோ-உமது
அஸ்தம்பட்டபோதே சொந்தம்ஆனேன்இனி
அரக்கரைவேரோடும் கல்லவோ-நல்ல
புத்திபண்ணிவைத்துக் கொண்டுபொங்கியும்பால்
புறம்போகலாகாதென் றல்லவோ-சாமி (என்)

3. பதிக்குப்போகும்போது சீதைக்குமேலான
பருவப்பெண்ணென்முன்னே நிற்கலாம்-எம்
கதிக்குப்பழுதுகண்டால் அடங்காதவனாகாம்
கண்டித்தோம்என்றுஒப் பிக்கலாம்-நல்ல
துதிக்கென்னகாண்முட்ட ஞானத்தார்க்கீரம்இல்லை
எனக்கும்அப்படியே மெய்ப் பிக்கலாம்-சாமி
அதுக்கல்லஎன்றாலும் அரக்கர்மாயைகள்அதிற்
தவள்எனவேவிட்ட வைக்கலாம்-என்றே (என்)

சூர்ப்பநகை கரனைடே முறையிடல்.

விருத்தம்:

பன்னியசூர்ப் பநகைஇந்தப் படிக்கே சொன்னாள்
பாராமல் ஸ்ரீராமன் துரத்தி விட்டான்
அந்நிலையே மூக்கறைச்சி மூளி ஆகி
அரக்கிசென்றே அண்ணனுக்காப் பாடு பட்டேன்
பின்னைஒன்றுற் பட்டதில்லை உங்க ளோடே
பெண்பிறந்து பட்டபிழை இதுதான் என்று
மின்னிலேவேற் கரன்காலில் மரம்போல் சாய்ந்து
விழுந்திட்டாள் அவன்கேட்க மொழிந்திட் டாளே. (12)

6. நரு. ராகம்-கலியாணி ; தாளம்-ஆதி.

பல்லவி.

பட்டபாடு கேளாய்-கரனேநான்-பட்டபாடுகேளாய்

சரணங்கள்.

1. பட்டபாடுகேளாய்-பணத்தைதாளாய்-பிடித்தவாளாய்
குட்டிமனிதன்னைக்கண்டு கட்டியிழுக்கப்பின்னை
பெட்டிப்பாம்புபோலே ஒட்டிஅண்ணுவே (பட்ட)

2. எற்கும்பெண்ணைக்கண்டே-அண்ணனுக்குண்டே-என்றுகொண்
தூக்கப்போனேன்பெண்டு காக்குமனிதன்கண்டு [டே
மூக்குஞ்சாதும்ரண்டும் போக்கடித்துக்கொண்டு (பட்)

3. திருத்தம்ஆனசூரர்-இரண்டுவீரர்-ராவதாரர்
அரக்கர்வேர்களோந்து ஈறுக்கவேவிணைந்து
இருக்கிறாரேவந்து ஒருத்திபெண்பிறந்து (பட்ட)

4. பங்கம்இன்னம்வேணுமோ-காதுதோணுமோ-மூக்குகாணுமோ
லங்கை ஆளும்வல்லி-தங்கைஆன செல்லி
மங்கையர்க்குள்நல்லி-உங்கள்பேரைச்சொல்லி (பட்ட)

கரதூஷணத்திரிசிரர்களின் வதை.

விருத்தம்.

காதலிசூர்ப்பநகி இந்தப் படிக்கோ டாலிக்
காம்புகுலத் துக்குக்கே டென்றுற் போல
பாதகனும் கரன்முதல்ஆ னவர்க்குச் சொல்லிப்
படைக்கடலை மூட்டிவிட்டப் பாலே நின்றான்
சாதகன்ஆம் ராமச்சந்த்ரன் சாலை நீங்கிச்
சண்டகோ தண்டத்தை வளைத்தம் பாலே
ஓதமெனும் அரக்கர்உயிர் முருத்தம் தன்னில்
ஓட்டினன் தருமம்மிலை நாட்டி னானே. (13)

7. நாகம்-பந்துவராளி ; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

அடித்தானேரகுராமன்-கோதண்டம்கை-பிடித்தானே செயராமன்

அனுபல்லவி.

அடித்தானேரகு-ராமன்-மூடுக்கானகர-நாமன்
அனுப்பினபதி-னன்கு-மூனேத்தலைவரை-ஆங்கு
அரக்கிகண்-காட்டியே-பொருக்கென-மூட்டியே
அப்புறத்திலே-ஒண்டக்-கைப்பிடித்தகா-தண்ட
அய்யன்கைகளில்-வாரி-எய்கின்றசர-மாரி
அதினில்-உரைக்கரும்-பதினில்-அரக்கரும்
அலைகடல்போல்-எழுத்-தலைதலையாய்-விழு
உப்படை-முடியச்-சேனைக்கடல்-வடிய (அடி

சரணங்கள்.

கரிகள் பலவும்-சுற்ற பரிகள் அதிலும்-அத்த
கட்டியமேர்களும்-ஒத்த நட்டணவீரரு-மெத்த
கருந்துகளா-அலைந்து பெருங்கடல்போல்-வளைந்து
காருத்தன்சாலையைப்-பற்றி மேகத்தைப்போலவே-கத்தி
கங்குங்காய்முனை-தரப் பொங்கி அங்கேவர-வரக்
கதிகாணவரப் பதினலா-யிரக்
கனகத்தே ரொடுங்கூடி-கதிரவனைப்
பனிமொய்த்த-தெனமூடி-ராமனைமொய்த்துக்
காணும்தூஷணன்திரி-சிரனும்வா அரக்கி
களிப்பாகக்காட்டினளே-நமனும்பசி
இனைப்பாறமூட்டினளே-அத்தைராகவன்
கண்டானேதம்பியைக்-கொண்டானேஒருமனு
கார்த்திரு சனகிதன்னை-இந்தச்சண்டையைப்
பார்த்திரு மூனையும் என்னை-என்றுராணியைக்
காதண்டஇழித்துமூனைக்-கோதண்டம்வளைத்துமழைக்
கற்கடகச் சக்திரன்போலே-சரமாரிகள்
உக்கிரம்கொண்டுவிடலாலே-வல்அரக்கர்கள்
கரம்அறுந்தவர்களும்-சிரம்அறுந்தவர்களும்
கண்டம்கண்டம்ஆனபேரும்-கட்டைகள்போலே
துண்டம்துண்டம் ஆனபேரும்-இறுக்கிக்கட்டும்
கவசங்கள்கிழிந்தோரும்-துவசங்கள்கிழிந்தோரும்
கடைவாய் கிழிந்தோரும்-பிடித்துவந்த
குடைபோய் அழிந்தோரும்-கணைதொடுக்கும்
கைச்சிலை ஆனதும்அற்று-வச்சயுதமும்அற்றுக்
கையைக்கையைப் பிசைவாரும்-குற்றுயிர்ஆகிப்
பையப்பைய அசைவாரும்-நெற்றிப்பிளந்து

கத்தும்பரிகளும்தலை-சுற்றும்பரிகளும்ரத்தம்
கக்கும்பரிகள் அனேகம்-குடல்அறுத்து
முக்கும்பரிகள் அனேகம்-மதயானைகள்
கைத்தலம்பிளந்துபெரு-மத்தகம்பிளந்துவைத்த
காத்திரங்களும் பிளந்து-நெருப்புப்போலும்
கேத்திரங்களும் பிளந்து-மலைமலையாக்
கதறுண்டுசிதறுண்டு-மதகுஞ்சரம்உருண்டு
காடுகளா வீழ்ந்ததுகள்-கண்ணுக்கெட்டாத
மேடுகளா எழுந்ததுகள்-இவையறிந்து
கடித்தானே இருபல்லைப்-பிடித்தானேஒருவில்லைக்
காய்ந்தானே திரிசிரசன்-ராகவன்மேலே
பாய்ந்தானே குணமுரசன்-பாய்ந்தவன்தர
கதத்தையும்வதிவர்த்-ரதத்தையும்அய்யன்அவன்
கைச்சிலையும்முறித்துவிட்டான்-அவனுடைய
மூச்சிரமும்தறித்துவிட்டான்-அவன்பிறகே
காத்திருந் தெதிரிலே-வற்றவர்களேமேலைக்
காற்றிற்பஞ்சுகள்போலே-தூற்றிவிட்டொருகாலே (அடி)

2. வெற்றிராமன்தொடத்தொட அஸ்திரங்கள்படப்பட
வீட்டில்ஓடுவாரையும் காட்டில்ஓடுவாரையும்
வில்லைவிட்டெறிவாரையும் கொல்லையிற்பறிவாரையும்
விளக்கங்கொண்டவரையும் கலக்கங்கொண்டவரையும்
விருத்தஞ்செய்தீர்என்றும் நரம்சுஞ்சினீர்என்றும்
விசைகொண்டதாடிணன் வசைகொண்டபாடிணன்
விசையத்தேர்பூட்டினானே சக்கிரம்பேரிலே
திசைசுட்டெம்மோட்டினானேஓட்டினதிர்த்து
விட்டவிட்டகணைகளும் தொட்டதொட்டகணைகளும்
வெடிபட நீக்கினானே-ராமன்அம்பால்
பொடிபொடி ஆக்கினானே-பிறகேவந்த

மேற்படைகளும்புரண்டு ஈற்படைகளுந்திரண்டு
வெகுவாஞ்சக் குதித்தாரே-எல்லாரும்ஒரு
முகமாக மிதித்தாரே-மிதித்தவர்கள்
வெட்டும்வெட்டும்என்பார்சிலர் கட்டும்கட்டும்என்பார்சிலர்
மெல்லும்என்பார்சிலபேர்-நரன்இவனைக்
கொல்லும்என்பார்சிலபேர்-அரக்கர்விட்ட
வேல்ஒடிந்து கால்ஒடிந்து கோல்ஒடிந்துதிரப்பெரு
வெள்ளத்தில் மிதப்பாரும்-ஆனைவிழுந்த
பள்ளத்தில் புதைப்பாரும்-மதிகலங்கி
மெத்தஉள்ளம்கெடஎொந்து ரத்தவெள்ளந்தனில்வந்து
விழுந்தார்அநேகம் அரக்கர்-ரத்தவெகியால்
அழிந்தார்அநேகம் அரக்கர் தூஷணன்கண்டு
வினைத்தானேசெருவில்லை வளைத்தானேகணைசெல்ல
விடுத்தானே மழைபோலே-ராகவன் அதைத்
தடுத்தானே கணையாலே-அதன்பிறகு
விடுகணைபொடிபடஒருகணைசடுதியில்
மேய்த்தமுனையோடுதொட்டானே-சாமிக்குஎதிரி
மத்தியிலேபட விட்டானே-ரகுநாயகன்
மீறிஅவன்ஏறிவரு தேரதிலேசாரதியை
வெட்டினானே கணையைஎய்து-குதிரைகளைக்
கொட்டினானே தலைகள்கொய்து-கொய்ததல்லாமல்
வில்லுந்துணிந்திடஅவன்-சொல்லுந்துணிந்திடத்தேரை
வேறுவேறு நொறுக்கினானே-அவனைகாலைக்
கூறுகூறு நறுக்கினானே-நறுக்கினபின்
மின்னும்அவன்எதிர்ஆகப்-பின்னும்ஒருகணைபோக
விரல்ஒத்துத் தொடுத்தானே-தூஷணனும்
சிரம்அற்றுப் படுத்தானே-அதனைக்கண்டு

விண்ணுலகில் அனைவரும்-மண்ணுலகில்முனிவரும்
வெருள்துன்பம் பிரிந்தாரே-வாழ்த்திதாடுவ்ப
வருஷங்கள் சொரிந்தாரே-அரக்கர்பட்ட
வெற்றிநல்லோர்தொடுக்க-ரத்தவெள்ளமெடுக்க
விசையமங்களம்பாடத்-திசையெங்கும்கொண்டாட (அடி)

3. தத்திவரும்பரிகளும்-சுற்றிவரும்கரிகளும்
தாவிவரும்பெருந்தேரும்-சேவகம்பேசியபேரும்
தளகர்த்தவீரரும்-வளம்மிக்கசூரரும்
தண்டுடனேஎதிர்வரும்-மண்டியசேனைபரும்
சரிசரியாகவந்து-போரிலேமிகமுனைந்து
கம்பிரூஷணன்பட்ட-புண்பாடதுமுட்ட
தணல்போலே சிவந்தானே-சாதிலிங்கம்போல்
இணைக்கண்கள் செவந்தானே-செவந்தபின்பு
தாக்கியபுலியையொத்து-மூக்கிலேவிரலைவைத்துத்
தாழ்ச்சிஇதனை தொந்தானே-தொந்துபொல்லாத
ராட்சதகரணும் வந்தானே-வந்துசுற்றிலும்
சதுரங்கத்தளத்தேதாடே-ரணரங்கம்அதைத்தேடி
சாபிராகவனைக் கண்டான்-மனிதன்இவன்
ஆமெனமனதிற்கொண்டான்-சேனைகள்விட்ட
சக்கரம்இருப்புலக்கை-கப்பணப்முசுண்டிபிண்டி
சஸ்திரம்வே லாயுதங்கள்-குறித்துவிடும்
அஸ்திரம்சூ லாயுதங்கள்-பொடிப்பொடியாய்
தறிபட்டம்முறிபட்டும்-விலகச்சிலவுனைத்துச்
சாய்த்தானே சரதாரை-ரகுநாயகன்
தேய்த்தானே வெகுபேரை-வரும்அரக்கர்
தலையைச்சிலையைரத்தின மூடியைக்கொடியைவெட்டிச்
சரித்தானே பலகணையால்-அடிவயிற்றை
எரித்தானே சிலகணையால்-இரைக்குவர்த

சாகினியும்டாகினியும் காளிகளும்கூளிகளும்
சதுர்கூடிங் பார்த்தாடுமே-கவந்தம்அதுக்
கெதிர்ஆகக் கூத்தாடுமே-படைகள்எல்லாம்
சரியானதுகண்டு கரன்ஆனவன்மூண்டு
சாஹசங்கள் செய்தானே-ஒருகோடியில்
ஆயிரம் அம்பெய்தானே-எய்ததுகண்டு
சற்றுநேரத்தில் அய்யன் அத்தனைக்கத்தனைவிட்டு
தவிடாக ஊதினானே-பின்னையுஞ்சில
அவன்மேலே மோதினானே-அரக்கன் அங்கே
சாதித்தகணையாலே ஆதித்தகுலநாதன்
தனுவையும் ஒடித்தானே-தவமுனிவர்
மனதையும் மடித்தானே-ராமனுக்குத்
தடத்தில்பரசுராமன் இடத்தில்பறித்தவில்லைத்
ததியினில் எடுத்தானே-வருணன்அங்கே
உதவியாக கொடுத்தானே-கொடுக்கஒரு
சரத்தாலேரகுவீரன் வரத்தாரைபயமெல்லாம்
தணித்தானே உளந்தனிலே-கரன்சிரத்தைத்
துணித்தானே களந்தனிலே-இப்படிஅந்த
சனஸ்தானவருக்கத்தில்-மூனேத்தாரைமுகுர்த்தத்தில்
தான்ஒருவனும்ஆக வானவர்துய்போக (அடி-)

சூர்ப்பநகை ராவணனேடே முறையிடல்.

விருத்தம்.

மூடிவரிய கர்ன்படையை முடித்த ராமன்
மூன்போலச் சாலியிற்போய் இருந்தான் இப்பால்
இடிகுரற்சூர்ப் பநகிசென்றுள் இலங்கை தன்னில்
ஈரறும்பும் அழுதிடரா வணன்முன் வீழ்ந்தாள்

அடிவரலா றுகள்என்ன உன்னே இந்த
அவமானம் செய்ததென்ன அவர்ஊர் என்ன
கெடிஅரக்கன் குலமுழுதும் வேரை வாங்கி
கெடுக்கின்றுள் அரக்கிசொல்லத் தொடுக்கின் றனே.

6. திபலதை. ராகம்-தோடி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. கண்டேன்கண்டேன் அடாஅண்ணேன்
காட்டுகிறேன்பஞ்ச வடியிலே யார்க்கும்
அண்டாகார் இருக்கிறார் அவர்க்
கவரேசர் இந்தப் படியிலே

2. தருமசீலராம் அயோத்தி
தசரதமகாராசன் பாலராம்-அவர்
விருதுகட்டி அரக்கர்தங்களே
வேர்அறுக்கவந்த காலராம்

3. சீதைதெரிந்தவராம்அவர்கைக்கு
நேத்தியாயிருவில் அமைந்ததாம்-அதில்
கோதண்டம்அரக்கர்சிவனைக்
குடிக்கவேணுமென்று சமைந்ததாம்

4. ராமலட்சுமணர் வடிவெலாம்என்
னுலேசொல்லிமுடி போகுமோ-அந்த
காமராசன்வடிவும்அவர்
காலின்தூளுக்கிணை ஆகுமோ

5. இட்டிப்போய்ராமனே னன்சுகக்
[illegible]லேமயல் கொண்டேனே-அங்கே

இஷ்டப்பிரியமான பெண்கள்
சிகாமணிஒருத்தியைக் கண்டேனே

6. சுந்தரமும் அவள்சிகப்பும்
தொட்டிட்டுக்கொள்ளலாம் அண்ணாவே-நான்
இந்தவயதினிலே என்கண்ணால்
எங்குங்கண்டதில்லே அண்ணாவே

7. மன்னுஉன்னல்நான் அவளை
வாய்க்கடங்காப்பிடியாய்ப் பிடித்தேனே-ஒரு
சின்னமனிதன்கையால்என்தன்
செவியும்மூக்கும்போக் கடித் தேனே

8. அந்தோனன்னலேபதினு
லாயிரம்தேர்க்காரரும் மூண்டாரே-எதிர்
வந்தார்கரன்மூதலாமினர் அந்த
மனிதனுலேகால் மாண்டாரே

9. செப்புச்சிலையும் அல்லஅந்தப்பெண்
செம்பொற்சிலைவார்த்தாப்போல் இருக்குதே-நான்
ஒப்பெங்கும்காணேன் அவளை
உனக்காம்என்மனம் உருக்குதே

10. தாழிப்பிடித்தேனே எனக்குமெள்ள
தப்பிவிட்டால்வந் தெடுப்பாயே-அந்தத்
தேவி இங்கேவந்தால்உன்னிட
சீவனையாகிலும் கொடுப்பாயே

சூர்ப்பநகை ராவணன்முன் சீதையை வர்ணித்தல்.

விருத்தம்.

கன்னம் அழுத்த துனக்கென்றும் காணம் போலு னென்றும் இங்கே
பன்ன லாமோ விடுவிலீ பார்த்தே னென்ற பெண்ணலைச்
சொன்ன வுடனே உயிர்கிடந்து துடிக்கு துடியே சூர்ப்பநகி [ளே.
இன்னம் ஒருகால் சொல்என்முன் எடுத்தாள் சொல்லத் தொடுத்தா

8. தரு. ராகம்-சுருட்டி ; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

காணிவேணும்லட்சம்கண்கள் சீதாதேவிதன்
காலுக்குநிகரோபெண்கள்

அநுபல்லவி.

சேணுலகெங்கும்வாட்டித் திசைஎங்கும்கீர்த்திநாட்டித்
திரியும்ராவணஉன்றன் இருபதுகண்போதுமோ(காண)

சரணங்கள்.

1. குவளைவிழிகளோ பாணம் அவள் தன்வார்த்தை
கொண்டால் அதுவேகல்யாணம்
நவரத்தினதங்கத்தோடுகடையிலே அன்னப்பேடு
அவனிமேல்இல்லையீடு அவளுக்கவளேசோடு(காண)

2. தங்கக்கொடிபோல்இடையும் சிவகிர்த்து
சாய்ந்தபின்னலின்சடையும்
இங்கிதமிருதுவாக்கியம் இவளேதேவதா மோக்கியம்
மங்கையர்க்குள்ளேசிலாக்கியம் வாய்ச்சால்உன்னதேபாகமெ(காண)

3. தவமுனிஒருத்தன்பெண்டு அவனுக்கேற்ற
தம்பிஒருத்தன் அங்குண்டு

அவளேகல்ஐஸ்வரியம் அவளேகல்லகாம்பிரியம்
அவன்வந்தாலல்லோவீரியம்அப்போமுடியுமுன்காரியம்(காண)

மாரீசன் ராவணனை யிடித்தல்.

விருத்தம்.

கடித்ததங்கை இதுசொல்லச் சீதை மேலே
கருத்தாடக் காமப்பேய் தலைசுற் றுட
உடிப்பதுவும் உண்பதுவும் மறந்தான் சிந்தை
உலைமெழுகா னுன் அரக்கன் அம்மா னேநீ
அடித்தெனக்கு ராமன்மனை விபைத்தா என்றான்
அதுகேட்ட வுடனேநா ராசம் காய்ச்சி
கடிச்செவியில் வைத்தாற்போ லேமா ரீசன்
நடுக்கின்றான் ராவணனைத் தடுக்கின் றானே. (16)

9. தரு. ராகம்-துவிசாவந்தி. தாளம்-ஆதி.

பல்லவி.

என்னபுத்திசினேத்தாயடா—அடராவண—என்னபுத்திசினேத்தாயடா

அனுபல்லவி.

பின்னெருத்திஅல்லராம மன்னவன்தேவியைச் சொல்ல
அன்னவன்அம்பிங்கேசெல்லஉன்இனத்தையெல்லாங்கொல்ல (என்)

சரணங்கள்.

1. புள்ளிப்பொறி வரலாலே-மூங்கில்எரிந்து
வெள்ளிச்சாம்பலானாற் போலே
கொள்ளியாய்வந்தாள்உன்தங்கை அள்ளிராமன்கணையிங்கே
தள்ளிவிடும்முன்னேதலை தள்ளிவிடுமேநமக்கு(என)

2. *இந்தமதி பண்ணல் ஆமோ-பரதார தனதை
சிந்தையிலும் எண்ணல் ஆமோ.
மூன்தொருத்தி ஆசையிட்டான் சந்திரனும்பழிபட்டான்
வந்தகலிகையைத்தொட்டான்இந்திரனும்மகிமைகெட்டான் (எ)

3. உத்தமசீதையை உன்னுதே-உன்னிலுல்அவன்
சற்றிலேவிடுவான் என்னுதே
புத்திரர்தலையும்சேர்த்த மித்திரர்தலையும்ராம
பத்திரன்அம்புகொய்யும் சித்திரவதைசெய்யும்செய்யும் (எ)

4. துப்புள்ளவிராதன் இறந்தான்-ராமன் அம்பாலே
அப்படிகரனும் பறந்தான்
இப்படிவராதேநாடித் தப்புவதல்லவோமோடி
செப்பினேன்உள்ளதுதேடிக்கைப்பொருட்கும்என்கண்ணடி (எ)

5. வேலையில்லாவேலை எண்ணிஞப் சின்னம்சிறிய
பாலகர்யோசனை பண்ணிஞப்
கோலம்ஆனசீதையென்று சாலமாய் அடங்கினின்று
காலன்வந்ததைத்தேராமல் மூலகாரணம்பாராமல் (எ)

6. வேதனையும்சூதும்வாதும் சொன்னயே இக்கப்
பேதைமதிபோதும் போதும்
சீதைஎண்ணம்எண்ணத்தானே வாதை உண்டாகிறானே
மாதலன்உனக்குநானே எதுஅறிந்துசொன்னேனே (எ)

7. பைந்தொடிசீதைபேர் சொல்லாதே சொல்லாதே அது
எந்தவிதத்திலும் பொல்லாதே
வந்திடுமேராமபாணம் என்தன்உரையேபிரமாணம்
என்தலைக்கும் பாயும்பொய்யோஉன்தலைக்கும்பாயும்ஐயோ (எ)

8. முன்னம்விஸ்வாமித்திர ஞலே-யாகசாலை
தன்னுள்வந்தகமன் போலே

அன்னையுங்கொன்றுன்சுவாகு தன்னையும்கொன்றுன்அவனை
உன்னஅதிர்எடுக்குதே இன்னம்நடுநடுக்குதே(எ).

லக்ஷ்மணர் பொன்மானைப் பொய்மான் என்னல்.

விருத்தம்.

இசையமா ரீசன்இந்த வார்த்தை சொன்னுன்
இராவணனும் சிறினன் பொன்மா னுய்ப்போய்
அசையவே சீதைவிழிக் கெதிரே நின்றுன்
அவளும்ரா மனைப்பிடித்துத் தருவாய் என்றுள்
பசையிலுல் லட்சுமணன் பொய்மான் என்றுன்
பாராமல் நான்இதனைப் பிடிப்பேன் என்று
விசையரா கவன்நடந்தான் வாயை வாயை
மெல்லுவான் தம்பிபின்னும் சொல்லு வானே. (17)

7. தீபதை. ராகம்-தன்னியாசி; தாளம்-அடதர்ப்பு.

கண்ணிகள்.

1. வர்ணமானும் சொர்ணமானும்அல்ல
மாயமான்என் சாமி
பின்னைத்தெரியும்இது நம்மைமருட்டவந்த
பெரியகால நேமி

2. பார்த்தமான்நதல்ல இந்தமான்மடிப்பு
பண்ணவந்த மானே
கூத்துப்பார்க்கப்போன இடத்தில் பேய்பிடித்தாற்போல்
சூலையுதென்மனம் தானே

3. ஊழியஞ்செய்கிற நான் இந்தமான் சந்தேகமான்என்
றுள்ளது சொன்னேன் அய்யனே
ஏழைசொல்அம்பலம் ஏறுமோகட்டீர்
இட்டபடியே செய்வேனே

4. மானேமாயம்இதுதானே அம்மைகைக்கு
வந்தாற்சொன்ன மழையே
ஏனேபிடித்துத்தா என்றுசொல்லுகிறாளே
என்னகாலப் பிழையோ

5. அந்தஅண்ணைசொல்லால் அய்யன்தசரதனும்
அலங்கோலம் ஆனானே
இந்தஅண்ணைசொல்லால் என்னமோ அண்ணனுக்கு
ஈதென்று தெரியேனே

6 அப்போதுவேள்வியில் வந்தமாரீசன்என்றே
அயிர்க்கிறேன் நீ ஆராய்
தப்பிதம்சொல்லமியேன் அப்புறம்சித்தத்துக்குச்
சரிப்போனபடி பாராய்

லட்சுமணர் சீதாதேவியைத் தேற்றல்.

விருத்தம்.

உறும்தருமம் தம்பியிந்த வண்ணம் சொன்னான்
உத்தமரா மனும்அந்த மான்பின் னேகிக்
குறுங்கணையால் எய்தான்மா ரிசன்வீழ் போதில்
கூக்குரல்இட் டான்அதனைச் சீதை கேட்டாள்
இறும்கணவன் குரல்இதைப்போய் அறிதீ என்றாள்
ஏன்னஅண்ணை அண்ணனெயென் சொன்னீர் இந்த

வெறுங்கவலை என்னனலட் சுமனன் துன்பம்
விடச்சொல்வான் சீதையைத்தேற்றிடச்சொல் வானே. (18)

10. தரு. ராகம்-பைரவி. தாளம்-ஆதி.

பல்லவி.

ஆர்என் றுராகவனேஎண்ணினீ ரம்மா-இத்தை
அறிந்துசொன்னீரோ அறியீரோநீ ரம்மா

அனுபல்லவி.

எறுவார்த்தையிது வசையோடொக்குமே போரில்
எண்டிசையதிபரும் அண்டினபடையுடன்
மண்டிஞலும்என் அண்ணன் சண்டெயிரல்போதாதோ (ஆர்)

சரணங்கள்.

1. விந்தைஆகவெண்ணெய்க்குப் பல்லுழுதேத்தாற்போலே
மிஞ்சிராட்சதர் அண்ணார் தன்னை வளைத்தால்
வந்தராமன் அதுகண் டேங்கி இளைத்தால்-வேறே
மந்திரம்என்னஒரு தந்திரம்என்னவானில்
இந்திரன்கதிப்பானை சந்திரன்உதிப்பானை (ஆர்)

2. ஆதிருத்திரன்வில்ஒருவர் ஒடிக்கப் போமோ-அத்தை
அறிந்தும்பெண்புத்தியால் உன்சித்தம் நோமோ
வேதையாளன்னையும் சோதிக்கல்ஆமோ-நல்ல
வேதண்டம்எனப்பெருங்கோதண்டம்தன்னை-அண்ணன்
காதண்டவளைக்குமுன் மூதண்டம்பிளக்குமே (ஆர்)

3. பண்ணினமாயையாலே அந்தமா ரீசன்-மாளும்
பருவத்தில்அங்கேஓலம் இட்டானே ரீசன்
எண்ணுத்துன்பம் எதுக்கிருக்கிறேன் தாசன்-அவனை
எண்ணிஞல்ஒருமேகவண்ணன் உடனேநெற்றிக்
கண்ணன்உட்னேகூட்டி அண்ணனையும்எண்ணுவல் (ஆர்)

சீதைக்கும் இராவண சந்நியாசிக்கும் சம்வாதம்.

விருத்தம்.

மெள்ளவே இளையோன் இந்த விதம்சொலி நடந்தான் பின்னே
கள்ளம்ஆம் தவசி ஆகிக் கடுகிரா வணன்தான் வந்தான்
வள்ளலே வாரும் என்றுள் வஞ்சனை அறியாள் சீதை
உள்ளமா முனிவர் என்றே உரைக்குரை சொல்லுவாளே.(19)

8. நிபதை. ராகம்-ஆரபி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. வாரும்என்றவுடனே ராவணசந்நியாசி
வந்துகண்டானேஅந்த காளை
ஆரோநீஎன்று வஞ்சகன்கேட்கவே
அன்னைநிஜமேசொல்லு வாளை

2. தசரதன்பாலன் தம்பியுடனேபெற்ற
தாய்சொல்லவந்தான்இந்தப் பூமி
இசையும்சானகியென்பேர் காகுத்தன்மனைவிநான்
இங்கேயிருக்கிறன்என் சாமி

3. இந்தவனத்தில்மெத்த பழுத்தபழம்போலவே
எங்கேவந்தீர்தேவர் ஆமே
வந்ததுசொல்லுகிறேன் சந்தோஷம்ஆகச்சற்றே
மனதுவைத்துக்கேளாய் நீயே

4. பேரால்பெரியவன் ஆயிரம்வேதம்வல்லோன்
பிரமதேவனுக்குமோர் பேரன்
ஆராலும் அசையாத கயிலாசமலைதன்னை
அசைத்துப்பிடுங்கினகெம் பீரன்

5. அமைந்தசேவரையும் அஷ்டதிக்குப்பாலரையும்
ஆக்கினையால் அந்தமகா ராசன்
சுமந்ததலேபும்சும்மாடுமாத்திரிய
தூரைத்தனஞ் செய்யும்இலங் கேசன்

6. நலங்களிலைஅந்த இலங்கைக்குச்சொர்க்கம்ஒரு
நகரம்போலக்காணும் மாதே
இலங்கையைவிடல்ஆமோ என்னகாலமோநான்
இங்கேவந்தேனே இப் போதே

7. சினமிக்கமூனவாளும் மிகுந்தகாளும்அக்கச்
சிவன்கையில்வாங்கினவன் தானே
மனதுக்கினியபெண்கள் மாணிக்கம் ஒன்றுதேடி
வருந்துகிறேன்திவ்விய மானே

8. வீராதிவீரன் அஷ்டதிக்கெசதந்தங்களை
வெடுக்கென்றொடித்தவச்சிர பாகன்
ஓரான்காணியா மூன்றுலோகமுங்காக்கும்
ஒருத்தன்அரக்கன்கன யோகன்

9. மூன்றுலோகமுங்காக்கும் அரக்கன்என்றீர் அவன்
மூவேழுலகங்களும் காவல்
கீண்டெறியவந்தானே ரகுவீரன்என்றுசொல்லக்
கேளீரோஎங்கள்பெரு மானே

10. பெருமாள் பெருமாள்என்ற மனிதன்வந்தரக்கரை
பிடுங்கியெறிவான்என்றுப் பெண்ணே
ஒருமூசல் குட்டிவந்து சிங்கம்தன்னை அடித்த
உவமைபோல்ஆச்சுதீகாணும் கண்ணே

11. உவமையென் றீர்காணும் பதினாலாயிரவரும்
உருண்டாரேமனிதனல் அய்ய
இவர்ராவணன்போல் இருபதுதோளா அல்லாமையால்
இறந்தார்மனிதன்கொலே செய்ய

12. ஆயிரந்தோள்இருந்தும் கார்த்தவீரியன்தனை
அடித்தான்மனிதன் அல்லோ மன்னே
தாய்இதுசொன்னவுடன் சங்யாசிவேஷம்விட்டுச்
சண்டாளன்எழுந்தானே பின்னே

13. தீமுகன்ஆய் அரக்கன் ஆகாதவார்த்தைசொல்லச்
செவியிற்கைவைத்தேதன்ந தேவி
ஓமபிண்டத்தமுதை நாய்இச்சைப்பட்டதுபோல்
உரைத்தாய்என்னடாஅடா பாவி

14. நின்றநிலைக்கேதப்பி ஓடிஅப்புறம்போடா
ரகுவீரன்பிழைக்கவொட் டானே
என்றவுடன் சீதையைநிலத்தேதாடேதூக்கிவஞ்சகன்
யெடுத்துத்தேரினில்இட் டானே

சடாயு இராவணனுக்குப் புத்திசொல்லுதல்.

விருத்தம்.

தேரினில்இப் படிசீதை தனைக்கொண்டு போம்அளவில் கிழி வந்து
போரினில் ராவணு பத்தமுடி யுந்தொளிக்கப் புடைப்பேன் கண்டாய்
பேரியல் சீதையைவிட் டால்பிழைப்பா யில்லாவிட்டால் பிழையாய் என்ற
வீரியமாய்ச் சடாயுவந்து இளம்பிஞ்ஞன் புத்திசில விளம்பினானே.

11. நரு. ராகம்-அசாவேரி; தாளம்-ஆதி.

பல்லவி.

விடுவிடடாசீதையை விடுவிடடா-ராவணு
விடுவிடடாசும்மா விடுவிடடா

அநுபல்லவி.

சடுகெருப்பிவளாலே அடியோடேவே காதே
சொருபத்தைத்தெரியாமல் நரகத்தில்மூழ் காதே
அடடாசொன்னேன்சொன்னேன் நடுவிலேசா காதே
ஆசையினாலேகுல நாசம்ஆய்ப்போ காதே(விடு).

சரணங்கள்.

1. என்செய்தாய்இவள்நஞ்சம் என்றெண்ணுமல்
ஏழைஎளிமையாக் குறியாதே
என்தாய்இவள்மனம்நொந்தால்இருப்பாயோ
என்தன்வார்த்தைகேள் முறியாதே
கொஞ்சம் அரக்கர்மான்குட்டியென்றும்ராமன்
குட்டிச்சிங்கம்என்றும் அறியாதே
குதிக்கிறாய்உங்களைவதைக்கவந்தானே அவன்
கொல்லவரும்யானைமுன்னேகல்லுகள்விட்டெறியாதே(விடு)

2. கர்த்தர்மூவருக்கும்கர்த்தன் ஆகும்இந்தக்
காகுத்தன்என்றுகொண் டாடுவேன்
கையாலேநீயெய்தஎல்லாம்சிறைக்
காற்றிற்பஞ்சுபஞ்சாச் சாடுவேன்
பத்தினிதன்னை இங்கே வைத்துப்போடா அவன்
பக்கத்தில்தானேகொண் டோடுவேன்
பார் அடா இல்லாவிட்டால் கூர்ஆனகத்தால்உன்
பத்துத்தலைகளும்இள்ளிப்போத்துத்திக்கிலும்போடுவேன்(விடு)

3. கைக்குள்ளேமடக்கி இக்கணமேகான்ஒரு
மிக்கடலிஞ்சுவேன்உன் தலை மூளை
கருங்காக்கைகளுக்கும்-நமனுக்கும்ஊன்தீனல்ல
விருந்தாக்குவேன்பாரடா இவ் வேளை
மூக்கணன்வரம்பெற்றும் அக்ரமம்செய்தாலது
தக்குமோகேடல்ல வோ நாளை
மூனைகெட்டுப்போவாய்சீதை தனைவிட்டுப்போடா தேவர்
முன்கொடுத்தவரம்எல்லாம்என்கெடுக்கிறாய் முட்டாளே ()

சடாயுவுக்கும் இராவணனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

பொறுத்தான் இத்தப் புத்திசொல்லப்பொல்லா அரக்கன் கொள்ளாமல்
வெறுத்தான் அதற்கப் புறம்தேரை விடும்போ தினிலே கெடுந்தூரம்
குறித்தே தபோன குமாரர்வந்து கூடுமளவு மிவனை இங்கே
மறிப்பே னென்று சடாயுவும்வாய் மடித்தான் சண்டை பிடித்தானே.

12. தரு. ராகம்-மத்தியமாவதி; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

கொத்திக்கொத்திஅடித்தானே இடித்தானேசடாயுராஜன்
கொத்திக்கொத்திஅடித்தானே

அனுபல்லவி.

பத்துச்சிரத்திலும் தாளிலும்
வெற்றிக்கரத்திலும் மார்திலும்-தேரிலும்
தத்தித்தத்திப்-பாந் தெத்தினத்திக்-கையால்
குத்திக்குத்தி-எங்கும் சுற்றிச்சுற்றி-மூக்கால்(கொ)

சரணங்கள்.

1. ஆலகாலம்போலேறி-எதிர்த்தேறி-உடம்பெங்குங்கீறி
கோலாகலத்தேமாறித்து-அச்சமூழித்துப்பத்து முடியும்
காலாலும்கையாலும் மேலேகிள்ளிக்கிள்ளி
கண்டகன்நாலிந்து குண்டலமும்தள்ளி
மேல்வரும்அம்பெல்லாம் வாலால்விழுத்தட்டி
வீணைக்கொடியையும் தூணியையும்வெட்டி (கொ)

2. ஈர்ஏழுகணையவன்தொடுத்து-விடத்-தடுத்துக் வசத்தையும்செய்து
நேராப்பின்நூறம்பைப்பூட்டி-விடமாட்டிச்சிறகால்விழுக்காட்டி
போராடக்கண்டொரு சூலம்அவன்போட
புதையாமலேஅது சிதறிஅப்பால்ஓட
கூர்ஆனமூக்காலே பாகனைமடித்து
கொல்லுவேன்என்றவன் வில்லையும்முடித்து (கொ)

3. மோதும்அவன்தெண்டால்சாய்ந்து கலை-தீர்ந்துஞிமைபோப்பாய்ந்து
பாதகனைவிழுத்தாக்கினோ-ஆக்கி மணிரதத்தைப்போக்கி
சூதிவன்செய்கிறான் என்றறியப்பட்டும்
தீதாழன்மருமகன் என்கிறதைத்தாட்டும்
காதகராவணன் மோதிஅறவெட்டும்
கத்தியிறைந்திற கற்றவிழும்மட்டும் (கொ)

சடாயு விழவே சீதை புலம்பல்.

விருத்தம்.

அடித்தகம் சடாயுராஜன் அவனிமேல் வீழ்ந்தான் சீதை
கொடிக்கொரு கொழுகொம் பில்லாக் கொள்கைபோல் ஆனன் இந்த
முடித்தலை பத்துள் ளாணி முடிப்பதார் எனவே அச்சம்
பிடித்தனன் வடித்த கண்ணீர் பெருகினள் உருகினளோ.

13. நந. ராகம்-ஆனந்தபைரவி; தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்வேன் சீதை நான் இனிமேல்
என்னசெய்வேன்தெய்வமே

அநுபல்லவி.

என்செய்வேன்மான்பின்போன இருவரும்வாரீரோ
வஞ்சகராவணன்செய் வகைமோசம்பாரீரோ (என்)

சரணங்கள்.

1. எப்தும்வீட்டினில்-இருளன்றுசாமிசொல்ல
இருந்தேன் இல்லை நானே
மையலாயென்னைப்-பிரித்திடச்சனியாலே
வந்ததே பாழ் மானே
கையினற்பிடியும்-என்றதல்லாமல்நான்
கண்டேனே பலன் தானே
அய்யய்யோஉண்-ணுமல்தின்னுமல்ஊர்
அம்பலம் ஆனேனே (என்)

2. ஈனராவணன்-கெலிக்கச்சடாயுமன்னன்
இறந்தானென் தொல்லையே
ஆன்போதிவன்-குடிக்கென்னகாலமோ
அறிவேனே சாமிவில்லையே
வானமேவன-மேஅவருக்குச்சொல்ல
மாட்டீரோ என் சொல்லையே
என்னென்றுகேட்-பார்இல்லையேஎன்னை
தடுத்தாவி ழிப்பார் இல்லையே (என்)

3. பூட்டும்விலு இனை-யோணயிடும்புசொல்லிப்
போபோ என்றேனே
தாஷ்டகராவீண-சங்கியாகிசெய்த
சதிக்குள்ளாய், நின்றேனே
வீட்டிலேபுகுந்-தேன் அந்தமாமணி
தி திபோலே தின்றேனே
காட்டிலேபுகுந்-தேன இந்தமாமணிக்
கண்முன்னே கொன்றேனே(என்)

ஸ்ரீராமர் சீதைக்காகத் தம்பியோடிரங்கல்.

விருத்தம்.

இஷ்டம்உள்ள சடாயுவுக்கிவ் வாறு சீதை
இரங்கஅவ ளுடன்அரக்கன் இலங்கை சேர்ந்தான்
மொட்டவிரும் அசோகவனச் சிறையில் வைத்தான்
மூன்போன தம்பிதன்னை அண்ணன் கண்டான்
பட்டபரு வங்கள் எல்லாம் அறிந்தான் வந்து
பன்னகசா லையையும்சீ தையையும் காணுன்
வட்டமலர் முகம்வாடித் தேடித் தேடி
மலங்கினன் ஸ்ரீராமன் கலங்கி னனே. (23)

9. திபதை. ராகம்-ஆகிரி ; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. உற்றசீதையைப்பிரிந்தேன் உனதுபுத்தியைஎரிந்தேன்
தத்துகள்எல்லாம் அறிந்தேன் தம்பி-லக்ஷ்மணா

2. கட்டிவைத்தபுதையலைக் கல்லிஎடுத்தவன்போலத்
தட்டிக்கொண்டுபோனன் ஐய்யோ தம்பி-லக்ஷ்மணா

3. நே ந்தோம் இதுகண்மம்ஆய்விசோத்தபோது
தன்மம்என்னதானம்என்ன தம்பீ-லசுந்மணு

4. தேரோடேபாரோடேதாக்கித் தீண்டாமல்தற்குவழியே
ஆரோகொண்டேபோறன்இத்தை அறிவாய்-லசுந்மணு

5. நலம்உன்னோர்கவலைதீர்க்க நாம்இந்தக்கவலைஏற்கத்
தலைமூத்துவந்ததல்லோ தம்பீ-லசுந்மணு

6. உண்டானல்இப்போதேநேரே ஓட்டமாய்ஓடினல்தேரை
கண்டாயம்காணல்ஆம் வானன் கண்ணே-லசுந்மணு

ஸ்ரீராமர் சடாயுவின்மேலே விழுந்து இரங்கல்.

விருத்தம்.

இவர்இப் படியோ சபனேண்ணி இருயோ சனைதூ ரம்போனர்
எதிரே வில்ஒன் றதுகண்டார் இற்றுக் கிடந்த தூணிகண்டார்
கவசம் கிடந்த தொன்றுகண்டார் கண்டார் குலக் கொடிகண்டார்
கழுத்தே றொடுசா ரதிமூடிவைக் கண்டார் இந்தப் படிதோற்ற
அவசம் பிறக்க ராவணனே அடித்துத் துரத்தும் இடங்கண்டார்
அவன்ஆ யுதங்கள் ஒடிந்தவெல்லாம் அங்கே கண்டார் பறவைகளின்
விவரம் கண்டார் ராமன்வந்து வீழ்ந்த சடாயு கிடைகண்டான்
வெள்ளி மலைமேற் கருமலைபோல் விளைந்தான் விழுந்த சனைந்தனே. (24)

14. தரு. ராகம்-புன்னகவராளி; தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவிதிகாணவோ வந்தேன்-சடாயுஅய்யா
இதுக்கோகான் பிள்ளைபிறந்தேன்

அ னு ப ல் ல வி.

தந்தைதகப்பனைக்கொல்லச் சமமந்தேன் அதென்னசொல்ல
இந்தநான்உன்னையும்நல்ல எமன்போலேகொன்றேன் அல்லோ (இ)

ச ர ண ங் க ள்.

1. வண்ணம்ஆம் சீதையைநீக்கினேன் நானும்ஒருசே
வகன்போல வில்லும்தாக்கினேன் ஐயா இப்போதென்
கண்முன்னேஉன்னையும் போக்கினேன் மரமீதேறிக்
கைவிட்டோன்போல்என்னை ஆக்கினேன் நான்என்னசெய்வேன்
எண்ணினஎண்ணம்எல்லாம்போய் இளக்காரம் ஆய்த்தளர்ந்தேன்
பெண்ணும் அல்ல ஆணும் அல்ல பெருமரம்போல் வளர்ந்தேன் (இ)

2. வையகந்தன்னையும் விடுத்தேன் வனத்தில்வந்து
மலைபோலேஉன்னை அடுத்தேன் தம்பிசொன்னத்தை
அய்யய்யோகேளாமல் தடுத்தேன் என்புத்திதன்னை
அறியாயத்திலே மடுத்தேன் கபடம்செய்த
பொய்அரக்கனைக்கொல்லாமல்புறம்போய்அல்லோ கெடுத்தேன்
கையில் ஆகாதவன்போல் கண்டார்பழிக்கஉடம்பெடுத்தேன் (இ)

3. என்உயிரைப் போக்கடிப்பேன் முனிவர்க்குநான்
இசைந்ததெப்படி முடிப்பேன் அண்டங்கள்எல்லாம்
சின்னபின்னம் ஆக இடிப்பேன் இதுபார்த்திருந்த
தேவரையும் ஆவி குடிப்பேன் என்தனுடனே
மூன்றுசரீரசொன்னவீரம் முடித்தாய் அல்லோஇந்நேரம்
என்குலஉண்டோஉபகாரம் ஏதுக்கெடுத்தேன் சரீரம் (இ)

ஸ்ரீராமர் கோபத்தைச் சடாயு ஆற்றுதல்.

வி ரு த் த ம்.

மதிமுகரா கவன்இரங்கத் தம்பி வந்த
வரலாறெல் லாஞ்சொல்ல மண்ணும் விண்ணும்

கொதிஎடுக்கச் சீதைதன்னை எடுத்தான் உன்னைக்
கொலைசெய்தான் அரக்கன் அவன் குலத்து வாசி
அதுகிடக்க உன்கொலைபார்த் திருந்த தேவர்
ஆணவரையும் மடிப்பேன்என் றிராமன் சீற
இதுஉனக்கு முறைமைஅல்ல மகனேஎன்ன
ஏற்றுவான் சடாயு மன்னன் ஆற்றுவானே. (25)

15. தரு. ராகம்-துசாவந்தி; தாளம்-ஆதி.

பல்லவி.

ராமாநீ இந்தக்கோபம்செய்யல் ஆமா
இருந்தல்லோபடுக்கவேணும் ராமா

அனுபல்லவி.

பூமியுடன்சீதையை ராவணன்கொண்டு மின்டாய்
போகையில்சண்டைபோடப் போச்சுதென்சிறை ரண்டாய்
ஆம்அவனைக்கொல்லாமல் நாம்விடுவோமோகண்டாய்
அதுக்குமுன்கிலேசத் தாலே பதட்டம்ஆகஒருகாலே(ரா)

சரணங்கள்.

1. இன்பம்வருவதும்-துன்பம்வருவதும்
எடுத்தஉடற்குமே வந்தானை
சம்புவானசிவன் தானும்தலையோட்டைத்
தன்கையில் ஏந்திக்கொண் டிருந்தானை
அம்புவிபடைத்தபிரமதேவனும்
அழிப்புண்டானேஒரு சிறந்தானை
நம்பும்சந்திரனும்-சூரியனும்பாம்பாலே
நடுங்கிநிற்ர் இன்னம்மிகத் தரந்தானை

உன்பிணையும்இந்தவகை ஒத்ததல்லஆகை யர்லே
அம்பினல்ராவணன்தலை அறுப்பாய்பனங்குலை போலே
தம்பிள்ளைபெண்களோடே தாழ்ந்துதின்றெரு காலே
வெம்பதராம்அக்கர்க்குவேலைசெயும்தேவர் மேலே (ரா)

2. சேணைஇந்திரனுக்கும் தேவர்க்கும்உயிர்நிலை
செய்தனைதந்தை உப காரம்
ஆனைகெட்டவன் குடத்தில்தேடிஅற்பால்
அவரைவெறுத்தால்உண் டோ சாரம்
ஈனராவணன் சீதையைக்கொண்டுபோய்
எவிடத்தில்வைத்தாரை இந் நேரம்
போனதிசைதேடி அவனைவேர் அறுத்துப்
புண்ணியத்தைநாட்டுவ துன் பாரம்
மானினைத்தொடர்ந்துபின்னே போனதென்ன அலங்கோலம்
போனதலைவந்ததிந்த சானகிபிரிந்த சீலம்
சானகிபிரிவரக்கர்-ஆனவர்க்குநாச காலம்
ஆனகுலைதேவருக்குநீயினைப்பாய் அனுகூலம் (ரா)

3. வெள்ளிவெண்மதி-வளர்வதும்தேய்வதும்
விதியின்பயன் அல்லவோ ஆமோ
உள்ளமிதாருவர்க்கு-நிறைவதும்குறைவதும்
ஊழின்படியென்ப தறி யோமோ
தெள்ளித்தெளிந்தன் கண்ணைஉனக்கினி
தெரியச்சொல்லுவார் எவர் காமோ
கிள்ளிமிருவாய்-ராட்சதச்செடிகளை
தேகம்கொண்டிப்படிஉன் மனம் நோமோ
துஞ்சிச்சமுத்திரம்பொங்கிஞல்-கொள்ளுமோஇணற தேகம்
வஞ்சலேஉன்முன்னேலங்கைக்கள்ளர்கட்கெங்கேகிர் வாகம்
எள்அளவுமூனிந்தால்-அண்ணுப்பொடிஆமே லோகம்
மெள்ளஇருந்துபகையைதீதள்ளுவதல்லோவி வேகம் (ரா)

சீதையின் பிரிவாற்றுமல் ஸ்ரீராமர் இரங்கல்.

விருத்தம்.

பொறைஅடையத் தந்தையிந்தப் புத்திசொல்லீப்பரமபதம் பேரச் சென்டான்
விறலுதம்பி இடக்கண்டான் சாமிசடா யுவுக்குள்ள விதியும் கண்டான்
கறைஇருளும்வரக்கண்டான் சீதைமுகக் கமலம்ஒன்றும்காணுண் ஆகி
மறைவுசெய்தார் ஆனைவே தியங்கினனன் ஸ்ரீராமன் மயங்கி னனே. (26)

10. திபதை. ராகம்-சங்கராபரணம்; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. கல்லோர்பெரியோர்என்னே வசையும்சொல்லல் ஆச்சே
நடுக்காட்டில்எனைத்தெய்வம் அகலக்கொண்டுபோச்சே
பொல்லாராவணனைக்கண்டு கலங்கினளோபேதை
பூணைகண்டகிளிபோலே புலம்பினளோ சீதை

2. ஆரும்இல்லாதகாட்டில் அதட்டினனோ பாவி
அய்யய்யோஇனைக்கனைக்கப் பதைக்குதேஎன் ஆவி
வாரும்வாரும்என்றென்னைக் கூவி இரைந்தாளோ
வழிமேலேகண்ணைவைத்துப் பார்த்துக் கரைந்தாளோ

3. வீடேபான்சாலைஎன் றெண்ணி இருந்தேனே
விதிமோசத்தாலேதம்பி விட்டுப் பிரிந்தானே
காடேமஹியேஎன்றன் கவலை தடுக்கிலே
கண்ணுட்டிபோனவழி காட்டிக் கொடுக்கிலே

4. தளித்தமான்குட்டிவந்தென் முன்னேநின்ற போதே
சொன்னனேதம்பிஅதை உண்மையென்றெண் ணுதே
வெளுத்ததெல்லாம்பால்என்னே எண்ணிஅதுத் தேனே
வீட்டுவிளக்கைவெட்ட வெளியில்விடுத் தேனே

5. அங்கலாய்ப்பாளேசீதை கண்ணே நினைப்பாளே
அரக்கர்க்குப்பயந்தான் என்றென்னே நினைப்பாளே
சிங்காரவேட்டையாட வீணே போகினேனே
சிறகுபறிகொடுத்த பறவை ஆகினேனே

6. தனிக்காகெருப்பைப்போலே மூளுதேவி சாரம்
தாரத்தைரட்சியாதான் வீரம்என்ன வீரம்
அணைப்பானேசிறகால்என் றெண்ணம் எண்ணினேனே
அய்யோசடாயுவுக்கும் பாவம் பண்ணினேனே

கவந்தன் வதையும் துதியும்.

விருத்தம்.

சானகியை இந்தவண்ணம் நினைந்துராமன்
தனும்பையிலே தம்பியும்தண் னீர்க்குப் போனான்
போனவிடத் தேதாமுகிமூக் கறிந்து மீண்டான்
புனிதர்இரு வரும்கவந்தன் கைக்குள் ஆனார்
ஆனபிற கவன்உயிரை மூடித்தார் அந்த
அரக்கனும்அந் தரந்தனிலே தேவன் ஆகி
தீனம்இல்லாப் பரமபதம் தனிலே ஏறச்
செல்லுவான் சாமிதுதி சொல்லு வானே. (27)

11. தீபதை. ராகம்-மூகாரி; தாளம்-அடசாப்பு.

கண்ணிகள்.

1. ஆதியும்ஆகி அநாதியும்ஆய் இந்த
அகிலம்எங்கும்நிறைந் தாயே
பேதகம்இல்லாமல் ஆலந்தளிர்உள்ள
பிள்ளையாகியுறைந் தாயே

2. உன்தன்பதத்தைவேண்டித் தவம்செய்வார்கள் இந்த
உலகத்திலேஉள்ள நாயம்
எந்தப்பதத்தைவேண்டி நீதவஞ்செய்யவந்தாய்
எனதன்னைகண்கட்டு மாயம்

3. மூன்றானதும்இல்லைகர்ப்பக்குறியும்இல்லை
மூன்றுத்தாயேஒரு தூணில்
மலிவாய்உலகத்தோர் பிறந்தான்பிறந்தான் என்பார்
வாய்க்குண்டோஎன்வார்த்தை வீணில்

4. என்னையேஅறியாத அரக்கன்என்றேயோநீ
இரண்டுசெய்தபிறி வேறே
உன்னைநீதானும் அறியாயேசாமிநான்
உன்னைஎப்படிஅறி வேறே

5. காட்டுவானும்நீயே காணுவானும் நீயே
கற்றுயேஇந்த சாலம்
போட்டுவிட்டுத்தேடி தவிப்பார்போல் தவிக்கிறாய்
போதும்போதும்இந்தக் கோலம்

6. சூரியகாந்தம்தரு தீபத்தைக்கொண்டந்த
சூரியனைப்பணிவது போலே
ஆரியனேஉன்தன் அனுக்கிரகம்கொண்டுநான்
அறிந்ததைச்சொல்வேன்என் னிலே

7. எனதுசாபம்தீர்த்தாய் அதுபோல் சுவரி இங்
கிருக்கிறவினைக்காண வேணும்
தனதவள் சொல்லுவாள் சும்மா இருந்தால்ஒன்றும்
சாதிக்கல்லூமோசொல்லாய் காணும்

8. திடமா அவள்சொன்ன படியேசுக்ரீவனைச்
சேரும் அவன்உடனே செல்லு
கடல்போல்வானரங்கள் வருமேசனகியைக்
கணத்தில்கொண்டுவரச் சொல்லு

9. தடுக்காமல்கேளாய்ஓர் சிற்றுள் எட்டாளுக்குச்
சரி அல்லோ அம்மியாமோ நீயே
திடுக்கென்றுசெய்யல்ஆமோ பதறுகாரியம்
சிதறுதென்வார்த்தைஆ ராயே

ஸ்ரீராமர் சவரிக்கு முத்தி அருளி அப்பால் ஏகல்.

விருத்தம்.

பத்தியாய்க் கவுந்தன் இந்தப் படிசொல்லிக் கதியில் போனன்
சுத்திய ராமன் பின்னே சவரிஆ சிரமத்தில் போனன்
அத்திசை அழுது கொண்டான் அவள்உப சாரம் கொண்டான்
முத்தியும் கொடுத்தான்சொன்ன மொழிகொண்டான்வழிகொண்டானே. (28)

ஆரணியகாண்டம்.

முற்றிற்று.

விருத்தம் 28.

திபதைகள்-11-தருக்கள்-15-ஆக-26.

பாயிரம்-1-க்கும்-காண்டங்கள்-3-க்கும்-கூடிய
கொச்சகம்-1-வெண்பா-2-வசனம்-1-விருத்தம்-91-ஆக-95.

தோடையம்-1-திபதை-26-தருக்கள்-58-ஆக-85.

சக்கரவர்த்தித் திருமகனார்
திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நான்காவது

கிஷ்கிந்தா காண்டம்.

அநுமார் மறைந்துநின்று யோசித்தல்.

விருத்தம்.

சவரிசொன்ன வழிபிடித்து ராமனும்தம் பியும்நடக்கத்
தான்கண் டேங்கிக்
கவலைகொண்டு சுக்ரீவன் விடஅனுமான் மறைந்துநின்று
கருதிப் பார்த்தான்
தவவடிவர் வரிசிலையர் புரிசடையர் இளங்குமரர்
தரும சீலர்
இவர்எவரோ என்றுசொல்லி நண்ணுவான் யோசனையால்
எண்ணு வானே. (1)

1. பீபகரு. ராகம்-சங்கராபரணம்; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. இன்னர் இனியார்என்று தெரி யேனே புண்ணியம்
என்னசெய்தேன் இவர்கள் வரத் தானே

2. இங்கேஎன்கண்ணின்முன்னே உதித்தாரே வந்து
கங்கைஉதித்தாற்போலே குதித்தாரே

3. காலைப்புரிவத்திற்தக் காட்சி தந்தாரே 'இவர்
வேலைக்குத்தக்கவேஷங் கொண்டு வந்தாரே

4. தேவர்க்கும்தேவர்இவர் என்று சொல்லவோ அவர்
மூவர்இவர்இரண்டுபேர்கள் அல்லவோ

5. அசங்காதபலம்உள்ளசி லாக்கியவான்கள் இவர்
பசும்புற்றேயநடவா பாக்கியவான்கள்

6. எல்லாவல்லமையும் செய்ய உரியோர் இவர்
கல்லாக்கலைகள் எல்லாம் கற்ற பெரியோர்

7. பிராணசஞ்சீவிபோலே ஒன்றை விடித்தார் தங்கள்
திராணியால்அதைத்தேடி இங்கே அடித்தார்

8. அடைவானமூப்பிளமை பூணுகிறதே இவர்
உடலும்மிழலும்போலக் காணுகிறதே

9. வலைத்தலில்லும்அம்புங்கைக்கொண்டபடையோர்இவர்
இலைத்தபேரைக்கைதூக்கும் எண்ணம் உடையோர்

10. கல்லும்முள்ளும்மல்லிகைமலர் போலே இவர்
செல்லக்குளிருதையோ வழி மேலே

11. குவடும்காடுசெடிகளும் புரியுதே அய்யோ
இவரைக்கண்டுபேயுங்கண்ணீர் சொரியுதே

12. பறவைகளும்கரைந்துமுகம் வாடுதே இவர்க்கு
சிறகைவிரித்துமேலேபரத்தல் போடுதே

அநுமார் ஸ்ரீராமருக்கு வரலாறு கூறுதல்.

விருத்தம்.

மாசகல இந்தவண்ணம் எண்ணிச் சின்ன
வன்னிவடி வடனின்றன் நீஎர் பிள்ளாய்
பேசெனவே வாயுமகன் அநுமான் என்பேர்
பெருமலையில் வாலியினல் சுக்கி ரீவன்
ஆசகல ஒளித்திருப்பான் தேவ ரீரை
அறிந்துவர என்னைவிட்டான் வந்தேன் என்னத்
தாசரதி சுக்ரீவன் எங்கே என்று
தான்சொல்ல வணங்கிஅநு மான்சொல் வானே. (2)

1. தரு. ராகம்-சுருட்டி; தானம்-ஆதி.

பல்லவி.

சுக்ரீவன்பேர்நீ-சொன்னபோதே அவன்
சுகுர்தம்அல்லவோ சுகுர்தம்

அனுபல்லவி.

தற்காலத்திலே பாலால்முலைவிம்மத்
தாய்ஆனவன் பிள்ளைபோல்சொல்லி அழைத்தாற்போல் (சுக்ரீ)

சரணங்கள்.

1. பட்டமரம்துளுக்கும்உங்கள் வசனத் தாலே
பரிந்தீரோஅவனுக்குப்பயம் உண்டோஇனி மேலே
வெட்டுணிவாலிஎனும்கோடைகொண் டோரு காலே
வெதும்பியபயிர்க்கொருமேகம் இறைத்தாற்போலே(சுக்ரீ)

2. படைத்தபுவியும்சொந்த மானவிதன்னையும் விண்டு
பதைக்கிறன்செடியில்லாக்கொடிபோலவேது வண்டு
அடைக்கலம்தந்தால்உமக் கனந்தம்பலன்கள் உண்டு
ஆர்க்குக்கிடைக்கும்உங்கள் அருமைக்கனிவாய் கொண்டு()

3. பலமிக்கவாலிஎனும் தீமிதும்புக் காளையிலே
பருத்திப்படாப்பாடெல்லாம் பட்டோமே நீளையிலே
மலைஇற்றுமயிரிலே தொங்கிற வேளையிலே
வந்தீரேஎன்னதவம் செய்தோம்முன் னாளையிலே (சுக்ரீ)

4. கோரவாலிவிடுக்க வந்தீர்இன்றென்ன சங்கை
கொண்டஎங்களாண்டு கொன்வதமது பங்கே
ஆர்என்றுகேட்கில்உம்மை என்னசொல்வேனே அங்கே
அடியேனும்அவனுலே அணுப்பவந்தேனே இங்கே (சுக்ரீ)

அநுமான்தேற்றச் சுக்கிரீவன் சரண் அடைதல்.

விருத்தம்.

அநுமான்இப் படிச்சொல்ல அயோத்தி தன்னில்
அய்யன்உதித் ததுமுதலாச் சீதை போன
மனவேதை கடையிய நடந்த வாறே
வருந்தியிளை யோன்சொல்ல அறிந்து கொண்டான்
கனமான விசுவரூ பம்காண் பித்தான்
கவிக்குலவேந் தனையும்காண் பிப்பேன் என்று
தனதாம்தன் அரசன்உட னேபோய் எல்லாம்
சாற்றினன் அவன்கவலை மாற்றி னனே. (3)

2. தீபதை. ராகம்-புன்னகவராளி; தானம்-ஆதி.

கண்ணிகள்.

1. குணசம்பிரம் தீரர் ராமலட்சு
மணர்என்றிரு வீரர் அவர்தம்மை
மணமா அடித்தவர்க்கு மறுசுகம் தேடுமோ
சுகுணம்ஆதி லும்விட்டுப் பிரியவும் கூடுமோ

2. கண்டேன்கண்டேன் ஆனந்தம்
கொண்டேன்கொண்டேன் நல்ல
புண்டரீகக்கண்ண னே அந்த மூத்தவன்
மண்டலீகனவ னே தம்பி வாய்த்தவன்

3. சத்துருவென்பது துடைத்தோர் விசுவா
மித்திரன்கைஅம்பு படைத்தோர் வெகு
வெற்றிமருவுகீர்த்தி மேவியகுணசீலர்
சித்திபெறும்அயோத்தி தெசரதராசன்பாலர்

4. குடிலத்தாடைகை மேலே அம்புபோட
ஒடிபட்டமரம் போலே விழுந்தாளே
அடிவைத்தவுடன் அந்த அகலிகை யெழுந்தாளே
சடிதிக்குள்கௌதமர் சாபமும் ஒழிந்தாளே

5. ஒடுக்கிஒடுக்கிச் சொன்னலும் ராமன்கீர்த்தியை
அடக்கப்போகுமோ என்னலும் மிதிலையில்
மிடுக்குடன்உருத்திரன் தடக்கையில் அமிர்தானே
எடுத்தாப்போல்எடுத்தானே ஒடித்துவிட் டெறிந்தானே

6. மாமணம்நிறை வேற்றி பரசு
ராமன்கெருவம் மாற்றி அயோத்தி
கோமுடிதன்னைராமன் கொடுத்தானேதம்பிக் கங்கே
காம்எல்லாம்சேடை நடந்துவந்தானே இங்கே

7. மூன்னேவிராதன் மடிந்தான் ராமன்அம்பாலே
பின்னேகரனு முடிந்தான் இதுஅல்லாமல்
வன்மாரீசனுக்கும் வாளிதொடுக்கல் ஆச்சே
பொன்மான்செத்தஇடம் புல்லுமுளைத்துப் போச்சே

8. எடுப்புள்ளபெரி யோரே கவந்தனே
அடித்தீரேஎதிர் தேரே இவரே
அடுக்கீரைக்கிணற்றிலே அழுதம்எழுந்தாற் போலே
கிடைத்தாரே ஒருவர்க்குக் கிடைக்குமோ இப் பாலே

9. அல்வாய்த்தரும் பெனவே மித்தம்மித்தம்
மலேபால்விசாரம் தின்னவே மெத்தமெத்த
பலகாளிலும்பட்ட பாடெல்லாம் விண்டோமே
நலம்ஆகவாலிக்கொரு நமனையும் கண்டோமே

10. ராசன்மகனே ஏண்டா பலபல
யோசனே பண்ண வேண்டா வரம்தரும்
ஈசுரன்உன்பங்கில் இருந்தானே இருந்தானே
பூசைசெய்தான்என்றிப் போதல்லோ தெரிந்தேனே

11. சுகம்கண்டுமேவல் ஆமே அவர்மலர்
முகம்கண்டாற்பாவம் போமே சுக்கிரீவா
புகுந்தவர்சேவைகாணப் புத்திமுத்தியும் தரும்
இகபரம்இரண்டிலும் எதுநினைந்தாலும் வரும்

12. இக்கதை அன்று வீரி அதுமான்சொல்ல
சுக்கிரீவன்மனங் தேறி புறப்பட
அக்கணம்ஒருமன தாகவே துணிந்தானே
மைக்கடல்வண்ணன்றா மனவந்து பணிந்தானே

13. பணிந்தவன்தன்னைப் பார்த்து ரகுராயகன்
அணிந்தகண்கிருபை பூத்து சுக்கிரீவா
பிணங்கும்வாலிக்குவில்லுபிடித்தேன் என் றெதித்தேனே
இணங்கும்உன்னேரட்சிப்பேன் என்றுகை கொடுத்தேனே

ஸ்ரீராமர் சுக்கிரீவனுக்கு ஆதரணை சொல்லல்.

விருத்தம்.

சரணம்என இப்படிச்சுக் ரீவர் சொல்லச்
சாமிஅப யங்கொடுத்தான் அனுமான் தானும்
மூரண்உளவா லிக்கும்ஓர் அரக்க னுக்கும்
முன்புசண்டை வரலாலே தம்பி தன்னை
உரன்அழித்து மண்ணையும்பெண் ணையும்கைக் கொண்டே
ஓட்டிவிட்டான் இவன்இங்கே ஒதுங்கி னன்உன்
பரம்எனவே தாரம்எடுத் ததையே எண்ணிப்
பாவிப்பான் ரகுராமன் கோவிப் பானே. (4)

3. திபதை. ராகம்-தோடி ; தாளம்-அடசாப்பு.

கண்ணிகள்.

1. சுக்ரீவாஉன்மனக் கிலேசங்கள்
எனக்கேஆம்அது தீரடா
இக்காலத்தில்மூடுக்காம்வாலியை
வைக்கஓர்அது பாரடா

2. பெருவாலிக்குளதலைசாயக்கணை
பிசகாதப்படி தொடுக்கிறேன்
அரைநாழிக்குள்ளேமுடிசூடிப்புவி
அரைசாளக்குடை கொடுக்கிறேன்

3. தூடுக்காமனைவியை எடுத்தான் எனஉரை
கொடுத்தாய்அவனை இங் கேரமே
கெடுத்தேஅவன்முடிபொடிக்காவிடில்வில்லை
எடுத்தாவதில்என்னி சாரமே

4. உடைந்தேசரண்என அடைந்தோர்களைமுற்றும்
தொடர்ந்தாதரித்திட வேணுமே
கடும்போரிலீலேகை விடும்போதினில்இந்த
உடம்பால்என்னபலன் காணுமே

சீதை ஆபரணங்களைக்கண்டு ஸ்ரீராமர் இரங்கல்.

விருத்தம்.

அண்ணல்இரா கவன்சுக்ரீ வனுக்கிவ் வாறே
அனுக்ரகித்து வாலிசோ தனைக்கு வேண்டி
வண்ணமரா மரம்ஏழும் அம்பால் எய்து
வழியிலே துந்துபியின் எலும்பைக் கண்டு
திண்ணன்என னும் தம்பியினைக் கிளப்பி விட்டுத்
தேரிலேபோம் சீதை முடிந்து போட்ட
துண்ணெனு மாபரணங்கள் காட்டக்கண்டு
துடிக்கின்றான் சாமிகுறை படிக்கின் றானே. (5)

4. திபதை. ராகம்-கண்டா; தானம்-அடசாப்பு.

கண்ணிகள்.

1. நின்றுதெரிந்தகுலமடந்தையர்
தங்களைக் கொண்டீரோ இல்லையோ
கணவன்இருந்தும்உடமைகளித்த
பெண்களைக் கண்டீரோ

2. அரசிலேமணிமுடிசுமந்துல
கம்கொள நாடினேனே ஐயையோ
சிரசிலேசடைமுடிசுமந்தொரு
பெண்பழி ஜூடினேனே

3. தசரதன் தபசுகள் புரிந்துவ
ரும்பாலன் ஆனனே. ஐயையோ
மிசைபடும்சுவைஉளகரும்பில்
வெறும்பூ ஆனனே

4. வாரிதிதந்தவர்கங்கை அழைத்தவர்
மரபில் வர்தனே ஐயையோ
பாரியைஆனும்ரட்சணைசெய்யப்
படாமல் மெலிந்தேனே

5. மங்கைஎனப்பார்க்க ஈன்முகச்சோடைக்கு
மாற்றிட்டுத் தீர்ப்பேனே ஐயையோ
அங்கிங்கும்பார்த்தேன்வனம்பார்த்தேன்இனி
ஆர்முகம் பார்ப்பேனே

6. வீண்பணிவதுக்கார் என்னைமீட்பவர்
மேல்என் றிறந்தாளோ ஐயையோ
ஆண்பிள்ளை அல்லநான் பெண்பிள்ளைஎன்றெண்ணி
அணியை எறிந்தாளோ

7. அவளுக்குநானும் எனக்கவளும் பூட்டும்
ஆரங்கள் பூண்பேனே ஐயையோஅவள்
பவளக்கனிவாயும் முத்துநகையும்நான்
பரிந்தென்று காண்பேனே

8. பணிதிஇங்கிது சனகிஅங்கம்மி
றைந்திடச் சேர்வேனே ஐயோஅவள்
குணசெளந்தரியமலர்முகம்கண்டு
கண்களி கூர்வேனே

9. குலம்தரும்கொடி உடன்தவம்செய்து
போந்தேதன் என்பேலே ஐயையோ
இலங்கையில்விட்டு வெறுங்கையாய்வந்து
சேர்ந்தேதன் என்பேலே

10. இல்லாளைவிட்டு வல்லாண்மைபேசி
இன்னம் இருந்தேனே ஐயையோ
புல்லாளைச்செய்து கொல்லையிலே வைத்தாற்
போலே இருந்தேனே

ஸ்ரீராமருக்குச் சுக்கிரீவன் துணிவு கூறுதல்.

விருத்தம்.

இந்தவிதம் ஆக ராமச்
சந்த்ரன்மனம் நோகும் வேளை
தொந்தம்உள சுக்கி ரீவ
னுந்துணிவு செப்பு வானே. (6)

5. தரு. ராகம்-நாடகுரஞ்சி ; தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதுக்கு-இந்தவிசாரம்-ஏதுக்கித்தனை தூரம்

அநுபல்லவி.

போதும்பிரம்மாண்டம்அப் புறம்போய் வருகிறேன்
சீதையைக்கொண்டுவந்து கூணத்திலே தருகிறேன் (ஏது)

---

* இவ்விடத்தில் சாமி உனக்கு என்று வருவித்து ஏதுக்கித்தனை தூரம் என்று ஒட்டி இரட்டித்துப் பாடிக்கொள்க.

சரணங்கள்.

1. தருமராமரம்னய்தாய் தந்துபிளலும்டைத்
தம்பியாலே னஜீத்தாய் சாமி
கருதினதுதருவேன் என்பலன்உன்பலன்
களும்மீயே அழிந்தாய் ராவணன்
ஒருபதுதலைகளும் உன்பெருங்கணைபோலே
திருகிறேன் தருகிறேன் தேவியைக்கை மேலே (ஏது)

2. மின்பணிகாட்டிஉனக்குதான் இந்த
வேதனை காட்டினேன் சாமி
தின்பெருங்கவலையை நீக்கவேணும்சும்மா
நேரம்பா ராட்டினேன் சாமி
என்குறைமுடிக்கிற தென்னஇதுக்கு முன்னே
உன்குறைமுடிக்கிறேன் ஒருநிமிஷத்திற்சொன்னேன் (ஏது)

3. சுத்தர்ஆகியமூவர்க்கும்தேவர்க்கும்
சூழுமோ படைக் கூட்டம் என்படை
மெத்தஉண்டுவெரும் வெற்றியும்தருமினி
மேல்என்னமுக வாட்டம்
உற்றசீதையைஉதவுகிறேன் இது நிதானம்
கற்றுக்கற்றுச் சொல்லிஎன்னகாரியம்அல்லோபி தானம் ()

ஸ்ரீராமரை வாலி நிந்தித்தல்.

விருத்தம்.

ராமனேஇந் தப்படிசுக் ரீவன் தேற்ற
நல்அனுமான் வாலியைக்கொன் றிப்போ திந்தக்
கோமகன்சுக் ரீவன்மூடி சூட்டில் எல்லாம்
கூடும்என்றான் சாமியும்அங் கிசைந்தான் அப்பால்

சூமகன்வா லியும்தம்பி தானும் சண்டை
போடையிலே அய்யன் அம்பு போடச் சாய்ந்து
பேய்முகஞப் வாயில்வந்த தெல்லாம் வாலி
பேசுவான் ராகவனே ஏசு வானே. (7)

3. தரு. ராகம்-சாரங்க; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

ஏனிந்தமதிகுறித்தாய் மறைந்துவாலி
எடுத்தென்மேல் வன்தெறித்தாய்

அனுபல்லவி.

மானபூஷணன்ஆன தசரதன்உன்னைப்பெற்று
வரங்கள்தந்தது நல்லாய்
குரங்கைவெல்லவோ சொல்லாய்(ஏன்)

சரணங்கள்.

1. சுரர்க்கும்வானரர்க்கும்உண்டோ தொந்தம் முன்பின்
ஜோதிவழக்குண்டோசொல்அனு பந்தம்
அரக்கன் அழிவுசெய்தால் பல வந்தம் ஆகி
ஆயுதம்இல்லாரை அடிப்பதோஉன் சந்தம்
அதுவும் அல்லாமல் ஆண்மை சொல்லாமல்
எதிர் நில்லாமல் என்னை வெல்லாமல் (ஏன்)

2. வலியமரங்கள்ஏழும் தொளைத்தாயே அந்த
வலிமையிருந்தும்எனக் கிளைத்தாயே
கலிராசன்போல்வந்து மூளைத்தாயே கடுக்
காட்டில்மறைந்துவில்லைக் காணுமல்வளைத்தாயே
காரியம்இது சுத்த கபடம்உனைப் பெற்ற
சூரியகுலம் மெத்த தலைகும்அடி பித்த (ஏன்)

3. தன்மம்வளர்க்கவந்த ரகு ராமா பரதன்
தனக்குமூத்தபிள்ளை நீ ஆமா
உன்மன துதான்என்ன மிக நேமா வாலி
உயிரைக்கொண்டாற் சிதைஒழிந்ததுயரம் போமா
உனக்கு ஞாயமோ உன் உபாயமே
எனக்க பாயமோ என்ன மாயமோ (ஏன்)

வாலி குற்றங்களை அவனுக்கு ஸ்ரீராமர் விரித்தல்.

விருத்தம்.

இன்ன வாலி சொல்ல இராகவன் அவனை நோக்கி
மின்னையும் கொண்டாய் தம்பி மேதினி தனையும் கொண்டாய்
பின்னையும் கொல்ல வர்மம் பிடித்திட்டாய் அதனைக் கொண்டே
உன்னைநான் கொல்ஒ ணுதோ உரைஎன்றான் உரைஎன் றானே. (8)

4. நந. ராகம்-அடாணை; தாளம்-ஆதி.

பல்லவி.

வடிப்பம்வடிப்பமாய்ப்பேசிக்-கொள்ளாதே-அடவாலிஉன்
வாயைமூடடா வண்டா தள்ளாதே

அனுபல்லவி.

கடத்தடாஈதெல்லாம் ஆயிரம்கால்அரைக்காற்
பணம்அடாகடை கட்டடா(வடி)

சரணங்கள்.

1. பிலம்தனிலேநீ புகுந்தபோதில்உன்
பின்பலனுமிவன் தொடர்ந்ததும்
பேய்அறைகிறப்போல் நீ அறையஇவன்
பின்வாங்கிக்கொண் டிடைடந்ததும்

தலம்தனிலே அபவாதம்ஆகத்தம்பி
தாரத்துக்கும்உனக்கும் நடந்ததும்
சாபத்தாலேநீ ஏறுமலைமேலே
தப்பித்தவறிஇவன் அடைந்ததும் சொல்லாமல் (வடி.)

2. வார்த்தைக்குமாத்திரம் குரங்குரூபம்நீ கி
வகையும்தொகையும்சொல்லி நிறைக்கிறாய்
மனதாரச்செய்த வினைபோமோவீண்
வார்த்தைகள்ஏன்சொல்லி இறைக்கிறாய்
மூத்தவன்தம்பி தாரம்என்றறிந்தும்
மூறைபிசகிநிறை குறைக்கிறாய்
மூடன்போலேவாயாடுகிறாயடா
மூழுப்பூனிக்காயும்சோற்றுடே மறைக்கிறாய் (வடி.)

3. அம்பும்கையுமா எதிர்நின்றுஉன்தன்
அபயம்என்றுவருவாய் என் அடிக்கு
ஆராகிலும்நொந்த பேராகிலும்அடித்
தாரைக்கெடுக்கல்ஆமோஎன் குடிக்கு
தம்பித்துரோகிஉன்னைச் சித்திரவதைசெய்யத்
தகுமோநான்பிடித்த பிடிக்கு
தர்மத்துக்குள்ளும் பாவத்துக்குப்புறமும்ஆய்
சரத்தாலேகொல்லத்தொடுத்தேன்இந்தப் படிக்கு (வடி.)

ஸ்ரீராமரை வாலி வரம்கேட்டுக்கொள்ளல்.

விருத்தம்.

மழைநிறத்தி ராமனிந்த வாறுசொல்ல வாலியும்சம்
மதித்தான் இப்பால்
பழையதொரு ஜீனவுகொண்டான் அறிந்துமறி யாமலும்தான்
பதறிச் சொன்னேன்

தழையுமகன் சுக்ரீவன் அனுமனுன தடைக்கலம்என் சாமி என்தன்
பிழைபொறுப்பாய் எனச்சொல்லிக் கூசுவான் மனுஏன்று பேசு வானே. (9)

5. நந. ராகம்-சாவேரி; தாளம்-ஆதி.

பல்லவி.

சாமிரகுராமா-இவர்கள்உன்-தஞ்சம்ரகுராமா

அனுபல்லவி.

ஆம்இவரால்என்ன காணும் ஆகிலும்ராசாங்கம்வேணும்
மோக்ஷம்வெல்ல-மீனைத்தாற்காரியம் அல்ல (சாமி)

சரணங்கள்.

1. எனதுமகன்அங்க தன்தான் உனதுபகையவாட்டுவான்
ராட்சதகுலங்களே உபேட்சைஇல்லாமல்மாட்டுவான்
அனுமன்தன்உந்தன்கோதண்டம் எனவிசையங்கள் காட்டுவான்
அந்தராவணனேஎன்போல் தொந்தொம்தொந்தொம் என்ரு [ட்டுவான்(சாமி)

2. அந்தத்தில்உன்தனைக்காணத் தந்தானேஇது அல்லாதே
அசித்தியம்தனக்கும்சித்தியம் எனக்குந்தந்தானேஇப்போதே
என்தம்பிசுக்கிரீவன் பிழைதந்தாலும்கிருபைவிடாதே
என்மேலேதொடுத்தஅம்பை எடுத்தவண்மேலேதொடாதே

3. நெடுந்தவம்எதோஎன்சீவன் விடும்போதுகண்டேன்உன்காட்சி
மீனைக்கொணுபரமபதம் எனக்கல்லவேகாணியாட்சி
அடங்கலும்ரட்சிக்கவந்து தொடங்கினீசர்வசாட்சி
ஆள்இல்லாப்படைவெட்டுமோஐயா உனக்குண்டோ தாழ்ச்சி

வாலி. சுக்கிரீவனுக்கு மதிசொல்லுதல்.

விருத்தம்.

இன்ன வாறு சாமிதன்னை இரங்கி வரம்கொண் டிடுவாலி
பின்னை இகாய சுக்ரீவன் பெருமான் முகத்தை மிகநோக்கிச்
சொன்னேன் இதுநீ கேள்என்றன் சுவாமி ராமன் இவன்பணியை
எந்நே ரமும்செய் எனஅவனை இரந்தான் தனக்கோர் வரம்தானே. (9)

6. தந. ராகம்-மத்தியமாவதி; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

ஆதிதேவனே ஸ்ரீராமன்என்-றறிசுக்கிரீவனே

அனுபல்லவி.

வேதசாஸ்திர புராணம்எல்லாம்கூடி
விரிப்பதும்இவனே சொல்லத்தரிப்பதும்இவனேநல்ல(ஆதி)

சரணங்கள்.

1. அடைவுடன் இவன் கையில்விழுமுத்தி
ஆகுமோ நித்தியம்-பணி
விடைசெய்தால்குறை வுண்டோஉனக்கிது
வேறெல்லோ பத்தியம்-வேறே
தொடரும்தெய்வங்கள் என்பதெல்லாம்சும்மா
சொல்வதேகி மித்தியம்-ஒன்றும்
தடையில்லாபிரம் மாதிகிர்த்தியம்எல்லாம
தப்பாதிவன்கிர்த்தியம் அப்பாசொன்னேன்சத்தியம் (ஆதி)

2. மதிஅரசுகொண்டதில்மதங்கொண்டு
மயக்கம் பண்ணுதே-னங்கும்
எதிர்இல்லாஎன்னைக் கொன்றன்இவன்போலே
ஈடு

உதவியை அடுக்கடி எண்ணவேணும்
ஒழிக்க ஒண்ணுதே கன்னி
தெளிவு இவன் ஓர் மனிதன் ஆம் என்று
திருக்கான புத்தியை ஒருக்காலும் எண்ணுதே (ஆதி)

3. அகலாமல் அணுகாமற்சாமியை
அணுதினமும் சுற்றி இவன்
மகிழ்வாக இட்ட வேலைகள் செய்து
வருவதே பத்தி-இத்தை
இகழாதுகொண்டால் இதுவேஷித்தி
இது அல்லோ வெற்றி-சொல்லி
உருகுவதேன் இனி சகலபாக்கியமும்
உறுவாய் பரமபதமும் பெறுவாய் இதுவேபுத்தி (ஆதி)

வாலி இறந்தபின் தாரை புலம்பல்.

விருத்தம்.

வாலி இந்த வரங்கொண்டு வளர்வை குந்தபதம்சேர்ந்தான்
வேலின் நெடுங்கண் உளதாரை மின்னற் கொடிபோ லேகனவன்
பாலில் விழுந்தாள் வானரபூ பதியே கெதியார் எனக்கென்று
மேலில் விழுந்தாள் நெடுமூச்சு விடுத்தான் புலம்பத் தொடுத்தாளே

5. திபதை. ராகம்-கண்டா; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. மன்னவனேஎங்கள் வாலியேநல்லவானர பூ பதியே
இன்னவேளே இந்தமரணம்உனக்கென்று இருந்ததோதலைவிதியே

2. இறவாவரந்தையும்தருவாயேஎப்படி இறந்தாயோ
வேபுசைசெய்தின்று வழிபாடி மறந்தாயோ

3. ஆனைக்கும் அடிசறுக்கும் துள்ளிவிழல்ஆகா தென்றேனே
கோனைத்துரையோகான் உன்னைக்கொடுத்திங்கேதெருவிலே நின்றேனே

4. என்உயிர்நீஆனல்உன்மேலேபாய்ந்தகணை என்மேலேபாயாதோ
உன்உயிர்நான்ஆனல் உன்உயிரோடே என்உயிர் கூடமாயாதோ

5. விந்தைமனிதன்கைக்குநீயும்விழுவாயோவேறொருவாலிஉண்டோ
என்தன்உயிர்இன்னம்இருக்குதே ஐயோ என்னைப்போல்லீலிஉண்டோ

6. மறைந்துராமன்கணைதொடுக்காமல்உன்மேல்வழக்கு தொடுத்தாலே
குறைந்திடாக்கடல்கடைந்தமுதமும்நீ கொடுப்பாயேகைமேலே

7. செய்ந்நன்றிஅறியாரோகாலதூதர் என்னதேவரோமறுபேரோ
ஐயையோஅவர்க்குமுதமும்உன்னைப்போல்ஆர்இனித் தருவாரே

8. நான்அடிஉந்தன்பிராணநாதன் என்றநம்பிக்கைபொய்போமோ
வானரம்மையர்மேல்ஆசைகொண்டெனைமறந்துவிட்டோடல் ஆமோ

9. வன்னமேருமுதல்மலையில் உன்கால்வைத்தவடுகள் இனிப்போச்சே
பின்னேமறைந்தம்புபோட்டராகவன்நீதிக்கு வடுவாச்சே

10. மருந்தமுதுதந்தசாமிவந்தான்என்றுமகிழ்ந்து தேவர்கண்டாரோ
விருந்தமுதுசெய்யவாஎன்றேஉன்னைவேண்டிஎதிர்கொண்டாரோ

ஸ்ரீராமர் சுக்கிரீவனுக்கு ராஜநீதி கூறுதல்.

விருத்தம்.

கொம்பனையாள் தாரைஇவ்வா றகன்றுள்அங்
கதன்அய்யன் கூர்வாட் கொண்டான்
தம்பிஇளையவன்கையால் மூடிசூட்டச்
சுக்ரீவன் தரித்துக் கொண்டான்
பின்புரகு ராமன்இரு பதத்தினில்வந்
தவன்பணிந்தான் பிழகு சாமி

அம்புவியை ஆளும்வகை தெருளுவான் -
புத்திசொல்லி அருளு வானே.

7. தரு. ராகம்-சௌராஷ்ட்ரம் ; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

அரசுசெய்வதென்ன-ரகுநாதபோட்ட-தல்லடாசுக்ரீவா

அனுபல்லவி.

நிருபன்என்றபோதேதகைவும் மெத்த காணும்
நெருப்பாறும்மயிர்ப்பாலமுமா நடக்கவேணும்(அரசு)

சரணங்கள்.

1. கோலமன்னவருக்குச்சது ரங்கம் செங்
கோலைப்போலேத்தருமோ உத் துங்கம்
காலுதிசைக்கும்உள்ள ஆ தங்கம் தீர்த்து
நடத்தவல்லவன் அல்லவோ துரைச் சிங்கம்
ஆலகாலதுஷ்டர் உறவென்று தள்ளாதே
அனுமானைப்போல்ஒத்த அமைச்சனை விள்ளாதே
காலம்தெரிந்தபெரியோர்களைத் தள்ளாதே
கால்போகாஇடத்திலே தலையிட்டுக்கொள்ளாதே (அரசு)

2. மங்கையர்களுடனே சூழ்ச்சி-கொண்ட
மன்னவர்க்கவமானம் காணி யாட்சி
எங்கள்இடத்தில்அந்த அத் தாக்ஷி-போதும்
இதைவிடஇனிவே றென்சாக்ஷி
உங்கள்வாலியும்மங் கையரால்மூர்ச்சித்த
உருண்டானேஅறிந் தாயேழுந்தழுந்த
செங்கோல்கோணினால் எங்கும்கோணும்அந்த
தேசத்துநன்மைதன்மை ராசருக்கல்லோஇந்த (அரசு

3. பண்ணின தீமையினுல் ஒருகூனி-என்னைப்
பரதேசிஆக்கினுளே அவதானி
எண்ணினஎனியவரை அதுபோனி சரியர
எதிரிட்டுக்கொண்டால் அதுவே ஆனி
உண்மையாகஇன்னம் உறுதிசொல்வேன் இப்போது
ஒருத்தர்செய்த உதவியை மறக்கில் அதுவே தீது
மண்ணில்இருந்து வழக்கோரம்சொல்லொ ணுது
மயிரைப்பிளந்துவிவ காரங்களை ஒது (அரசு)

ஸ்ரீராமர் கார்காலத்தில் சீதையை நினைந்து இரங்கல்.

விருத்தம்.

மாமகுடம் புனைந்தசுக்ரீ வனுக்கிவ் வாறே
மதிசொல்லி மதங்கமுனி மலையின் மேலே
ஏமமழை காலம்எல்லாம் இருந்து சீதை
எண்ணத்தால் ரகுராமன் வண்ணம் மாறிக்
காமலர்ச்சோ லையைமயிலைக் குயிலை மானைக்
கானகத்தைப் பார்த்துவிர காக்னி யாலே
வேமுருகு வெண்ணெய்போற் கரைந்து சிந்தை
விலங்குவான் தனியேதான் கலங்கு வானே. (13)

6. தீபதை. ராகம்-நாதநாமக்கிரியை. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. மான்கால் பழிகொண்டீர் பொன்
மான்உருவாய் என்னைவந்து கெடுத்தீர்
நான் அறியாவித னங்கள் கொடுத்தீர்,

கான்கால்வழி சொல்லீர் இரு
கண்ணிணவிட்டுத்திரி வாருண்டுயிர்போலப்
பெண்ணிணவிட்டுப்பிரி வார்களும்உண்டோ

2. மயில்காள் ஒன்றுசொல்லீர் சொல்ல
வாய்இலையோஉங்கள் சாயலைநேர்தரு
சேயிழையானவள் போயதெவ்வாறே
குயில்காள் ஒன்று கூறீர் சொன்னல்
குற்றம்உண்டோ என துத்தமியாகிய
பத்தினிசானகி எத்திசைபோனள்

3. கிளிகாள் உரையீரே ஒரு
கேள்விகேளீர்படு பாவிகளேஎன
தாவியைநேர்தரு தேவிவராளோ
அளிகாள்இருபை இலையோ உவ
தாடுகிறீர்உயி ரோடுயிர் ஆனவள்
ஓடுகையால்உயிர் வாடுகிறேனே

4. காலமேஅவகாலமே எந்தன்
காதலிஆகிய சீதைபிரிந்திட
நீதுணையாகிய தோதகம்எதோ
கோலமேஎன்ன கோலமே வெகு
கொச்சையும்ஆய்மிகு லச்சையும்ஆய்உயிர்
வைச்சிடவோஇனி லட்சுமணாசொல்.

ஸ்ரீராமரை லக்ஷ்மணர் தேற்றுதல்.

விருத்தம்.

வெம்பியே ராமன் இந்த விதம்சொல்லி இரங்கும் போதில்
எம்பிரா னேஈ தென்ன ஈதென்ன கோலம் சாமி
உன்பெரு மையை நீ காணுய் உருகுகிறுய் என்று சொல்லித்
தம்பிதான் துன்பம் எல்லாம் தணிவிப்பான் துணிவிப் பானே.

8. தந. ராகம்-யமுனாகலியாணி. தாளம்-அடசாப்பு.

பல்லவி.

சாமிவாதையா-இந்தவேதை-சாமிவாதையா.

சரணங்கள்.

1. பூமிஉள்ளோர்க்கெல்லாம் ஆதார ராமா
நீமனதில்இப்படி நிஜைந்திடல் ஆமா (சாமி)

2. சங்கைவுன் உனக்குச் சமானம்வே றேதோ
உன்கையில் கோதண்டம் ஒன்றுபோ தாதோ (சாமி)

3. அடிப்பாரோராட்சதர் அதிகமோ ஆடு
கடிக்கும்என் றுதிவறிக் கலங்குமோ நாடு (சாமி)

4. உன்மகிமை அறியாய் உருகிறுய் இங்கே
பிர்ம்மாதிதேவர்க்கும் பிழைப்பினி எங்கே (சாமி)

5. உதவிசெய்வோர்க்கிடை யூறுண்டோ காணும்
பதறு திருந்தல்லோ படுத்திட வேணும் (சாமி)

6. அனுமாதிகள்பலம் அறியாயோ சாமி
நினைவுகலங்கினுல் நிற்குமோ பூமி (சாமி)

7. சொன்னேன்குறையில்லை சுகம்இனி மீதே
அன்னைசீதையும்வரல் ஆச்சுதிப் போதே (சாமி)

சுக்ரீவன் தாமசம்கண்டு ஸ்ரீராமர் கோபித்தல்.

விருத்தம்.

மதிமான் ஆன தம்பியிந்த வகையே சொல்ல ராமச்சந்திரன்
இதிலே தெளிந்த சானகிபோய் இருக்கும்இடம் எவ்விடம்காணேன்

சனியால் நமது சுக்ரீவன் சரற்கா லமும்போய் வரக்காணேன்
விதியால் அவனே அழைஎன்றேவிடுத்தான் கேரிபம் எடுத்தானே.(15)

9. தரு. ராகம்-அசாவேரி. - தாளம்-ஆதி.

ப ல் ல வி.

வருகிருனேவாராஞே-சுக்ரீவன்-மனைதை அறிந்துவாராய்தம்பீ

அ னு ப ல் ல வி.

திருருசொன்னல்அவன் குலம்ஒன்றும்வெட்டுவேனே
சித்திரத்தினும்சுரங்கை வைத்தெழுதஒட்டுவேனே (வரு)

ச ர ண ங் க ள்.

1. தருணத்தில்உதவியை மறந்தானே மதங்கொண்டு
தண்ணீரும்மூக்கால்பிழைபொறுக்கும் அல்லவோசண்டி
மரபுக்குச்சற்றேஇன்னம்பார்க்கவே ணுமேபண்டு
வாலியைக்கொன்றஅம்புபோல்ஆயிரம் அம்புகள்உண்டு (வரு)

2. கரத்தாலேஅபயம்கொடுத்தவன் தன்னைவன்னக்
கனகசிங்காதனத்தில் வைத்தோ மேமின்ன
சரற்காலம்போனவுடன் வருகிறேன் என்றுசொன்ன
சத்தியம்மறந்தவனைச்சித்திரவதை செய்தால்என்ன (வரு)

3. அரியமராமரங்கள்தொளைத்தரா மன்வில்லை
அறிவாயோஅறியாயோஎன்றுகேள் ஒருசொல்லை
ஒருமசகம்இவனை அடிப்பதற் கென்னசல்லை
உண்மையாளனக்கவன் சம்மதிதை ரியஇல்லை (வரு)

சுக்ரீவன் மதுபானத்தை நிந்தித்தல்.

தரவு கொச்சகக் கலிப்பா.

சாமிஇந்தப் படிஉரைக்கத் தம்பியும்கிஷ் கிந்தையிற்போய்
ஆம்அறுமான் காரையைக்கண் டதுசொன்னுன் அவராலே
கோமகன்சுக் ரீவன்இளங் குமரன்வர வறிந்துகெட்டேன்
மாமதுஉண் டென்றுவரை வான்சொல்லிக் கரைவானே. (16

10. நந. ராகம்-புன்னாகவராளி. தாளம்-அடசாப்பு.

பல்லவி.

மதுவே-உன்னற்கெட்டதுவே

அநுபல்லவி.

புதுமைநான்பாவி சுக்ரீவன்னெய்த
பூமிதந்தானுக்குச் சாமித்துரோகம்செய்த(மது)

சரணங்கள்.

1. சுவாமிஎன்றங்கதன் கூவினேனத் தட்டக்
தொட்டதும்விட்டதும் நான்அறியேன் மூட்டப்
பாமரன் ஆய்உன்னைக் குடித்தேனே பொட்ட
பஞ்சமாபாதகன் ஆனேன்கடை கெட்ட(மது)

2. பித்தாம்உடம்புக்கு மத்தும்புறப் படும்
பெண்என்றும்தாய்என்றும் தெரியாமலே விடும்
குத்திரம்ஆம்நர கத்தினிலே இடும்
குடித்தவன்அடித்தவன் எடுத்தவனும் கெடும் (மது)

3. குன்றுகவாலியை வென்றுபிறந் தேனே
கோதண்டதீக்ஷா குருவாற்சிறந் தேனே
ஒன்றுஅவன்செய்த நன்றிதுறந் தேனே
உன்னைக்குடித்தேனே என்னைமறந் தேனே(மது)

4. வையகம்தந்து மதிதந்தெனை யாள
வைத்தாளைஎண்ணுமல் வைத்தாய்பழி சூள
ஐயையோநான்சொன்ன காலம்சற்றே நீள
ஆகாமற்போனேனே ஓகோசண் டாள(மது)

இலக்ஷ்மணர் சுக்ரீவனை யிடித்தல்.

விருத்தம்.

மன்னனும் சுக்ரீவன் மதுவினில் மயங்கி விட்டேன்
என்னவே சுறுக்காய் வந்தான் எதிர்கண்ட தம்பி சொல்வான்
இன்னாளாள் தவறி யிருந்தக் குடுக்குநீர் செய்தீர் இந்தை
இன்னம்ம தென்று கோபம் எழுகின்றான் மொழிகின்றானே. (17)

11. தந. ராகம்-சௌராஷ்டிரம். தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தகாரியம்இதுகாண்-சுக்ரீவரே-நான் வந்தகாரியம் இதுகாண்.

அனுபல்லவி.

வந்தகாரியம்இது வாலியைக்கொன்றஅப்போது
வணங்கிராகவனுக்கன்று மழைகாட்டோய் வருவேன் என்று
தந்தரைஆடி-அகந்தைகள்மூடி இருந்ததைநாடி-அறிந்திடஓடி (வந்த)

சரணங்கள்.

1. அங்கென்சாமி நொந்திருக்க அதுகண்டென்நெஞ்சை உருக்க
அலைந்துலைந்தென்கால்பெருக்க அசந்துங்கள்ஊரை நெருக்க
வங்குவாசலைப் பிடித்தேன் அடைத்தகல்லைத்
தூங்கிசம்ஆக இடித்தேன் வானரங்களே
ஆங்காங்கேஓட அடித்தேன் தாயைக்கண்டே
உங்காரவார்த்தை படித்தேன் அவள்சொன்னது
சங்கையில்லாயிரம்கோடிபேர்வெகு தூரம் போனார்சேனையோ
டிங்கிதோவருவார்என்இனி இத்தவி சாரம் என்றுள்பிறகே
தங்கியவள் அனுமானும்வந்தான் அந்தநேரம்யாம்உம்அடிமை
உங்கள்உதவிமறவோம்என்றான் உபசாரம் மீறும்மெய்போலே
வங்கோமான்மலர்க்கை தொட்டார் இருமாசம்தவணை இட்டார்
வன்காணும் வராமல்விட்டார் எப்படினீவு கெட்டீர்
இங்கிதம்ஆகிய *வங்கணம்மூறிய † விங்களம்மீர்செய்தசங்கையை
[அறிய (வந்த)

*வங்கணம்-நட்பு. † விங்களம்-மோசம்.

2. அஷ்டலட்சுமிக்கும் அன்னை ஆகியசனகிமின்னை
அகலவிட்டசீமி தன்னை அறிந்தும்அவளுலேபின்னை
நிட்டூரம் சூழவைத்தீரே சொன்னநாளில்-வந்
தொட்டாமல் தாழவைத்தீரே ராட்சதர்இன்னும்
நெட்டாக வாழவைத்தீரே தேவரையெல்லாம்
பொட்டாக வீழவைத்தீரே இந்தச்சாமிக்கும்
எட்டியபலசாலிகள்இருந்தால்அங்கே சேரும்பிரம்மாதிதேவர்
மட்டிலும்ஓர்திசை எட்டினில் வீரர்எல்லாரும் வரட்டுசிங்கக்
குட்டிமுன்னேநரிக்குட்டிகள் ஆக்குவேன் பாரும் பிறகாகிலும்
சட்டமானதளத்துடனே நீர்வாரும் அணுகொட்டாமல்
அட்டிசெய்வாலியைமூட்ட அடித்துவெகு ராச்சியம்கட்ட
அரசுமணிமுடியிட்ட ஆண்டவன் உரைக்கப்பட்ட
கட்டளைஎன்கிறமட்டுகள் தாண்டி தட்டிய உங்களை வெட்டிட
[வேண்டி (வந்த)

3. கர்த்தன்உண்டபின்உச்சிஷ்டம் கண்டுண்பதேஎன் அதிஷ்டம்
காய்கனிநீர்தந்தால் இஷ்டம் காணுமோஇதென்னகஷ்டம்
புத்திதான்எங்கே போச்சோ ஐயனேப்பசியில்
வைத்தும்நான் உண்பதாச்சோ ஐயையோஉங்கள்
பத்திஎல்லாம்மேற் பூச்சோ சகாயத்துரோகம்
கற்றவர்க்கித்தனை பேச்சோ என்அண்ணன்ஆண
உத்தமனுக்குத்துணை மற்றுண்டோ ஒருவரைக்கொண்டுகோ
[தண்டம் தன்னை

சற்றேவளைக்குமுன் செத்தானேவாலியும்பண்டு அவனைக்கொன்ற
அஸ்திரம்போல்இன்னம்அஸ்திரம்அனேகங்கள்உண்டு-தெரிந்திருந்தும்
இத்தனைநீர்செய்ததென்ன இளக்காரம் கண்டு காரியம்கொள்ளச்
சுற்றினீரே பிறியாமல் துரோகபுத்திதெரியாமல்
சொன்னநாளைக் குறியாமல் தோஷம்என்றும் அறியாமல்
சத்தியமோசொல் அசத்தியமோதான்முற்றிலும் நாடி-இட
[த்தனியேநான் (வந்த)

வானரப்படைத்தலைவர்களும் படைத்திரளையும்.

விருத்தம்.

அடல்சேர் தம்பி இதுசொல்ல அறிந்தேன் அடியேன் புத்திஎன்று
உடனே சுக்ரீ வன்சாமி உபய பாதம் வந்துகண்டான்
விடவே போன தூதர்களில் வீரர் சேரர் அணியணியாய்க்
கடல்போல் வந்து ராகவனைக் கண்டார் சேவை கொண்டாரே. (18)

7. திபதை. ராகம்-மங்களகௌசிக. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. சதவலிபடைகள்ஒரு பத்து கோடி- சூசே
ஷணன்படைகள்பத்துநூறு யிரம் கோடி-
பதுமமுகன்பதினல்நூறு ருயிரம் கோடி- தீர்க்க
பாதன்இடபன்ஓரா யிரம் கோடி-

2. பனசன்படைகள்பன்னீ ராயிரம் கோடி- நீலன்
படைகளும்பதினேயா யிரம் கோடி-
அணுமன்இருபத்தையா யிரம் கோடி- போரில்
அட்சயன்படைமுப்பத்தையா யிரம் கோடி-

3. திதிமுகன்படைமுப்பதா யிரம் கோடி- கல்ல
சாம்புவான் ஆயிரத்தறு நூறு கோடி-
மதிதுமித்தன்நூறுநூறு யிரம் கோடி- அந்த
மயிந்தன்இருபதா யிரம் கோடி-

4. கேசரிபடைஐம்பதா யிரம் கோடி- மிகக்
கவையாட்சன்படைஆ யிரம் கோடி-
வீசுதன்முகன்இருநூறு யிரம் கோடி- வந்த
விருப்பாக்ஷன்ஒன்பதா யிரம் கோடி-

5. குமுதன்படை நாற்பத்தெண்ணாயிரம் கோடி- களன்
கூட்டம்படைகள் நூறு யிரம் கோடி-
சமுகப்படையிற்தப்படி கூடிக் கூடி- வரச்
சாமிகண்டமகிழ்ந்தானே கொண் டாடி.

சாம்புவந்தன் அனுமாரைத் துதித்தல்.

விருத்தம்.

மிக்கான கவிவழு பத்து வெள்ளம்
வீரரொடு சாமிகண்டான் சுக்ரீ வன்தான்
தெற்கான வழிசெல்ல ராமன் தானும்
சீதைஉருச் சொலித்தருமோ திரமும் பெற்றான்
பிக்கான மலைகளும்நா டுகளுந் தேடிப்
பிலம்புகுந்து கடந்துசம்பா தியின்சொல் லாலே
கைக்கான மயேந்திரம்சேர் அனுமான் தன்னைக்
கதிசெய்வான் சாம்புவனும் துதிசெய் வானே. (19)

8. திபதை. ராகம்-கேதாரகௌளம். தாளம்-திரிபுடை.

கண்ணிகள்.

1. எதுகாணும்சும்மா அறிந்தும் அறியார்போல்
இருக்கிறீர் ஆஞ்ச நேயரே
ஓதுமேன்வெண்ணெய் இருக்கநெய்தேடி
வோமோ*வாதராசன் சேயரே

2. காதலால்நல்ல காலம்பிறந்துகா
ணுதகண்டவர் போலவே

---

* வாதராசன்-வாயுபகவான்.

சீதைசேதிசம் பாதிவாயினல்
தெரிந்துகொண்டோமே சாலவே

3. தூணியுமேன்உமக் கிலங்கைதான்என்ன
தூரமோகடல் தூரமோ
அணுவும்மசும்மேரு ஆகும்மேருவும்
அணுவாம்உமக்கென்ன பாரமோ

4. வருத்தம் ஏன்இலங்கையும் உம்மிடவாலால்
மாட்டியிழுத்தாலும் செல்லுமே
திருத்தனன்னபேச்சு விளக்கிருக்கத்தீ
தேடுவோமோநாங்கள் சொல்லுமே

5. ஒருத்தர் ஆய்ப்பிர்ம்ம தேவன்பட்டமும்
உமக்கென்றேபுகழ் மேவினீர்
குருத்துக்குழந்தையில் சூரியன்தேர்கிலை
சூலையதிர்கொண்டு தாவினீர்

6. வாசவன்கைவச் சிராயுதத்தால்ஓர்பால்
மயிரும்உதிராத வீரரே
தேசம்மேல்எந்த ஆயுதங்களாலும்
சிந்தைகலங்காத சூரரே

7. இயற்கையால்எந்த வேஷம்எடுக்கினும்
எடுக்கவேவல்ல தேவரே
செயித்திடாதபஞ் சேந்திரியங்களையும்
செயித்திடும்மானு பாவரே

8. ஓதும்சுக்கிரீவன் ஆக்கினைதெரியுமே
உயிரைவைப்பாரே நாளையே
காதுக்கிடுவது முகத்துக்கீழகெங்
கேரட்சிப்பீர்இந்த வேளையே

9. எட்டுத்திக்கின் அப் புறத்தினிலேலங்கை
இருக்கினும்பாய்ந்து கூடுவீர்
கோட்டைப்பாக்குப்போல் எட்டுமலையையும்
தொட்டெடுத்துவீசு யாடுவீர்

10. அமைத்தசாமிமோ கிரத்தைப்பிடித்தீரே
ஆர்க்குண்டிந்தஅதி காரமே
உமக்கில்லாப்பொறி எமக்குவந்ததோ
உரைப்பதேதன்உப சாரமே

அனுமார் கடல்தாண்ட இசைதல்.

விருத்தம்.

பாட்டில் உரைக்கும் அங்கதன்முன் படித்துச் சாம்பன் துதிசெய்யக்
கேட்ட அனுமான் மிகஞாணிக் கேளீர் அடியேன் தனைப்பொருட்டாக்
கூட்டி ரீர்வ வுதலால்நம் கோமான் அருளும் உமதருளும்
கூட்டும் சிறையாக் கடல்கடப்பேன் என்ரூன் புலனே வென்ரூனே.()

கிஷ்கிந்தாகாண்டம்
முற்றிற்று.

விருத்தம்-19-கொச்சகம்-1-ஆக-20.
திபதைகள்-8-தருக்கள்-11-ஆக-19.
பாயிரம்-1-க்கும்-காண்டங்கள்-4-க்கும்கூடிய
கொச்சகம்-2-வெண்பா-2-வசனம்-1-விருத்தம்-110-ஆக-115.
தேரிடையம்-1-திபதைகள்-34-தருக்கள்-69-ஆக-104.
சக்கரவர்த்திக்திருமகனார்
திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஐந்தாவது

சுந்தரகாண்டம்.

அனுமார் கடல் தாண்டப் பாய்தல்.

விருத்தம்.

வாய்ந்திடு சிறபினே ஆம்பொழு தொருதினம் மாங்கனி ஆம்எனவே
காய்ந்திடு கதிர்எதிர் பாய்ந்தவன் நெடுகிய கடல்களும் நிலபிசகித்
தோய்ந்திட வடவரை சாய்ந்திட விசுவசொ ரூபம்ள தத்தனுமான்
சோந்துநி பேசும யேந்திரம் எறிஅண் ணுந்தெதிர் பாய்ந்தனனே. (1)

1. தரு. ராகம்-நாதநாமக்கிரியை. தாளம்-ஆதி.

பல்லவி.

பாய்ந்தானேஅனுமான்-மயேந்திரம் எறிப்-பாய்ந்தானே அனுமான்

அனுபல்லவி.

பாய்ந்தொருமூவுல கேந்தியராவணன்
மாய்ந்திடமேவுகு லாந்தகன்எனவே(பாய்ந்)

சரணங்கள்.

1. கேசவராகவ வாசகம்ஆனது
மோசஙிசாசரர் ஜீசியவால்எம
பூசிதனேஎனும் கேசம்விடாமல்
நாசமதாய்விட பாசமதாகப்(பாய்ந்)

2. வட்டமெடுங்கடல் முட்டவரம்கிழி
பட்டுமறைந்திடு திட்டுகள்தெரிய
நெட்டைநெடுங்கிரி எட்டுமதும்பொடி
பட்டுதிரும்படி நட்டணைஆகப்(பாய்ந்)

3. எடுத்தாருராகவன் கொடுத்தகைமோதிரம்
இடுக்கியகாதிலே மடற்குள்ளேஅடக்கி
மிடுக்குளராட்சதர் நடுத்தலைமேல்விழும்
இடுக்கிணைஆகவே திடுக்கெனவோடி(பாய்ந்)

4. அண்டர்கள்முனிவர்கள் கண்டதிசயமொடு
மண்டியமருமலர் கொண்டனர்பொழிய
விண்டலரவிசசி மண்டலம்இருகிறு
குண்டலம்எனமுக மண்டலம்அசைய(பாய்ந்)

5. சுமந்திடுதாய்உரை சுமந்தவன்ஈர்அடி
சுமந்துவிசுவரூபம் சுமைந்ததிணைலே
அமிழ்ந்தியகடல்படு திமிங்கிலமொடுதிமி
திமிங்கிலம்விசையினில் மிதந்திடமேலே(பாய்ந்)

6. அந்தமலையில்உள தந்திகரடிபுலி
கொந்துதிசைதிசைபி றிந்தவவைவெருள
முந்துகொடிமுடிபி ளந்துபடபலென
உந்திணைஅடிகள் உதைத்துகிளம்பி(பாய்ந்)

இலங்கணி வதை.

விருத்தம்.

வாரவிஸ்வ ரூபம்உடன் பாய்ந்தான் வார்த்தை
மைநாகற் குரைத்தான்மத் தியில்அங் கார

தாரைஎறும் அரக்கிகுடல் பீடுங்கிக் கொண்டான்
தலங்குலுங்க இலங்கைமுன்னே குதித்தான் அங்கே
காரம்உள்ள அரக்கிஇலங் கணிதான் ஆல
காலம்என வடவாசற் காவற் காரி
ஆரடாஎன் றதட்டிவந்தாள் அனுமான்கையால்
அறைகொண்டான் கொண்டஎவே தரைகண்டாளே. (2)

2. தரு. ராகம்-சங்கராபரணம். தாளம்-ஆதி.

பல்லவி.

இலங்கணிமடிந்தாளே-அனுமான்கையால்
பலம்கெடமுடிந்தாளே.

அனுபல்லவி.

சலம்கொள்ளர்இரண்டு தலையும்விரித்துக்கொண்டு
அலங்கோலம்ஆய்ப்புரண்டு அலறிஉளறிப்பண்டு(இலங்)

சரணங்கள்.

1. பதைப்பிரலேஎட்டுக் கையும்பறக்கவிட்டு
பாரமலேபோல்எழுந் தாரவாரம்இட்டு
அதட்டிஅதட்டிஆயுத மெல்லாம்தொட்டுத்தொட்டு
அத்தனையும்பொடியா அனுமான்கைஅடிபட்டு(இலங்)

2. பிடிபடாமல்இந்த ஊர்காத்திருந்தேன்ஆதி
பிரம்மாஉரைத்தபடி ஆச்சுதேஎன்சேதி
அடிபட்டுக்கொண்டேன்போ இறேன்உனக்கினிமீதி
லாட்டுக்குட்டிகள்இந்த அரக்கர்படைஎன்றுதி(இலங்)

3. ஆரும்எதிர்த்திடாத எண்ணைநொடிக்குட்சீறி
அடித்தாயேஉன்னைஎதிர்ப் பாரில்லைமனம்தேறி
மாருதியேநமஸ் காரம்என்றுகூறி
வணங்கிவடக்குக்கோட்டை வாசல்காவற்காரி(இலங்)

அனுமார் இலங்கையில் சீதையைத் தேடுதல்.

விருத்தம்.

மோதும் இலங்கணியை ராவணன் படைக்கு
முதற்பலியாகக்கொடுத்து முகூர்த்தம் கொண்டு
மாதவன் ஆகியராமன் பாதம் தன்னை
மனங்கொண்டு ராட்சதர்மேல் சினங்கொண்டப்பால்
தூதன் அனு மான்மாட கூடம் சோலை
சூளிகைமா ளிகைகளெல்லாம் சுற்றிச் சுற்றி
நாதன்உளம் மகிழ்ந்தருளும் சீதை தன்னை
நாடினன் இலங்கைஎங்கும் தேடி னனே. (3)

3. தரு. ராகம்-தோடி; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

தேடித்திரிந்தானே-சீதாதேவிதன்னை அனுமானே.

அனுபல்லவி.

ஆடிப்பறக்கின்ற காற்றும்நுழையாத
அலங்கைக்கொத்தளம்தங்கும் இலங்கைப்பட்டணம்எங்கும்

சரணங்கள்.

1. வாரணச்சாலையும் மந்திரச்சாலையும்
மலர்ச்சோலையும்சார வடிகளும்
தோரணமேடையும் பூமலர்ஓடையும்
தூலிகளும்தலைவாசற் படிகளும்
தேர்அடிகளும்சொர்ணப்போர் அடிகளும்செங்நெற்
சேர்அடிகளும்மதில் அடிகளும்
கீரைவிரைபுகா வனைகளும்தொனைகளும்
கெடிகளும்செடிகளும் கொடிகளும்

நாரியர்காவல் இருக்கும்சிறைகளும்
நாடகசாலையும் நவரத்தின அறைகளும்
வராளமாக்கோலம் எழுதியதரைகளும்
ஏகாந்தஸ்தலமும் தண்ணீர்ப்படித்துறைகளும்
இடுக்குகளும்இருட் டொடுக்குகளும்-உறி
அடுக்குகளும்மூலை முடுக்குகளும்பாய்ந்து(தேடி)

2. மலேரிகர் ஆகியஉப்பரீகைகளும்
மாடமுங்கூடமும் திரைகளும்
பலபல்புரவியின் வெள்ளமும்பள்ளமும்
பாதாளம்செல்லும் புரைகளும்
கொலைசெய்யும்அரக்கர்கள் இடைகளும்நடைகளும்
குங்குமநீர்ஆற்றங் கரைகளும்
நலம்உள்ளசந்தியும் பந்தியும்நாற்பத்து
நாலுலட்சம்வீதி நிரைகளும்
அலைகடல்ஆகிய அகழியும்கேணியும்
ஆயிரவெள்ள அரக்கர்தம்காணியும்
தலையெடுப்பாக உயர்ந்தஅட்டாணியும்
சக்கிரச்சாலையும் ஒத்தஇட்டாணியும்
தடத்திலும்முனிவர்கள் மடத்திலும்பெண்கள்செய்
நடத்திலும்புகைபோகா இடத்திலும்போய்ப்பாய்ந்து(தேடி)

3. மைந்நாகமலைபோலே தூங்கும்கும்பகர்ணன்
மனையிலும்சூழ்ந்தகொட் டகையிலும்
பொன்னாரமணிமார்பன் இந்திரசித்திருக்கின்ற
புதுமனையிலும்சூ ளிகையிலும்
மெய்ந்நாளும்பேசும் விபீஷணன்வீட்டிலும்
வீட்டில்லைகண்ட வகையிலும்

பின் அதிகாயன் அட் சன் தேவாந்தகன்
பேர்னமாடமா விகையிலும்
வன்னக்கிளிகள் வளர்பஞ்சரத்திலும்
வானவர்தானவர் பணிந கரத்திலும்
அன்னமண்டோதரி வாழும்கரத்திலும்
அவளும் அரக்கனும்சேர் அந்தப் புரத்திலும்
அணில்எனவேதொத்தி அணி அணியாய்ஒற்றி
அனைகள்எல்லாம்தத்தி அணுஅணுவாய்ச்சுற்றி(தேடி)

அனுமார் இராவணனைக்கண்டு கோபித்தல்

விருத்தம்.

இலகும்அரக் கனையும்மண்டோ தரியும் கண்டே
இவளேசா னகிஆவாள் எனஉள் ஏங்கி
நிலைகலங்கி முகத்தொழுகு கோட்டி வாயும்
நெடுமூச்சும் கண்டிவள்ஓர் அரக்கி என்றே
மலர்விழியில் அறைந்துகா தினிலே கையை
வைத்துடனே அரிகரீ என்று சொல்லிப்
பலபலவோ சனஅனுமான் எண்ணி எண்ணிப்
பாவிப்பான் ராவணன்மேற் கோவிப் பானே. (4)

4. தரு. ராகம்-அடாணை. தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தராவணனைக்-கண்சேம்மாபோலல்
என்ன அனுமான்நானே.

அனுபல்லவி.

அந்தராமத்துரோகி இவன்பலம்குலியேனே
ஆத்திகார்கிழித்தாற்போல்கிழிக்கநான் அறியேனே(இ)

சரணங்கள்.

1 புவி அடங்கலும் கிட்டவே மண்டோதரி
புலம்பும்ஓசை முட்டவே கண்டவர்கள்
எவரும்கெக்கலி கொட்டவே வாலினலே
இழுத்துப்பிடித்துப் பொட்டவே கட்டி
இறக்கிறேன்தோள்ஒடிய முறுக்கிறேன்தலைபத்தும்
அறுக்கிறேன்தேங்காய்போல் கொறுக்கிறேன்அல்லாமல்(இந்த)

2. பன்னகசாலே விட்டுத் திருட்டுவேஷம்
பண்ணிஇலங்கை மட்டும்கொண்டுவந்தென்
அன்னையைச்சிறையில் இட்டு வைத்தஇப்பாவி
அரக்கன்என்னெதிர் பட்டும் கன்னத்தில்
அடிக்காமலும்கைகளே ஒடிக்காமலும்நெஞ்சிலே
இடிக்காமலும்என்கோபம் முடிக்காமலும்-போவேனே(இந்த)

3. காலனுக்குப காரம் ஆருமேதேவர்
களுக்கும்உண்டதி சாரம் விருதாவாய்
மேலினிஎன்னி சாரம் சாமிசொந்த
வேலைக்கிதுவே நேரம் இப்போது
வெல்லவேணும் இவனைக்கொல்லவேணும்என்பேரைச்
சொல்லவேணும்பிறகு செல்லவேணும்அல்லாமல் (இந்த)

அனுமார் சீதையைக் காணுதல் இரங்குதல்.

விருத்தம்.

மாதரசைத் தேடஎன்று தூதனுக
வந்தஇடத் திற்தரா வணனைக் கொன்றுல்
பேதகமாம் இவனுயிரை வாங்க வீரன்
ப்ரசண்டமோ தண்டமே தக்க தென்று

போதுளத்தா மரையிலேமேல் தண்ணீர் போலும்
புதையல்இழந் தவர்போலும் அனுமான் எங்கிச்
சீதைதனைக் காணுமல் ராம மந்திரம்
செவிக்கின்றுன் வெளியில்வந்து தவிக்கின் றனே. (5)

1. திபதை. ராகம்-காம்போதி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. இந்தஇலங்கைநகர் எழுநூறு யோசனை
எங்கெங்கும்போய்த்தேடி- னேனே
கந்தமலர்க்குழலாள் என்தாய்சீதையைக்
கண்ணிற்காணுமல்வாடி- னேனே

2. பாராதஇடமில்லை தாயாம்சீதையை
பாதகன்செய்ததென்ன சூதே
தீராதெஞ்சுக்குத் தெய்வமேதுணைகான்
செய்யும்வகைதானினி வீதா

3. அற்பராகும்இந்த வஞ்சனை அரக்கர்செப்
அதர்மந்தானேமெய் தானே
எப்படிஆகிலும் தர்மமேதலைகாக்கும்
என்பதெல்லாம்பொய் தானே

4. நாடிச்சேதிகொண்டு வருவானென்று சாமி
ராமன்சொல்லுவான்என்றன் பேச்சே
தேடிவருவேனென்றுவிருதுகூறி வந்து
செடியிலேதுழைந்தாற்போல் ஆச்சே

5. மேட்டுக்குப்பையைப்போல இலங்கைபட்டணமெங்கும்
வேருடனேகல்லு வேணு
காட்டும்என்தாயைஎன்று-ராட்சதப்பயல்களைக்
கையாற்பிசைந்துகொல்லு வேணு

6. விலங்காமல் தவணை-சொல்லிவந் தாளெல்லாம்
விணைதிரிந் தழுறைத் தேனே
சலந்தனிலோ இந்த-லேந்தனிலோ காக
தலந்தனிலோ மறைத் தானே

7. உலகிலெந் தக்காரியமும்-ஒருதரம்ராமாவென்றால்
உடன்கூடுமென் றுமல்லோ வேதமே
பலதரம்ராமானன் றும்-எனக்கிந் தக்காரியம்
பலியாதென் னவி னேதமே

8. ஆனை தன்பலந் தன்னை-அறியாதுபோலேதேவி
ஆராரைக்கைகுவிக்கி றாளோ
பூனை முன்கிளிபோலே எவர்கள்முன்னேனென்தாய்
புலம்பிப்பரதவிக்கி றாளோ

9. வாதைப்பட்டரக்கர்-மூட்டைபோலேசுங்க
மலைமலையாப்பிடுங்கிச் சாடவோ
சீதையைக்காட்டுமட்டும்கிடவென் றுராவணனை
கிறையிலேவாலிபோலே போடவோ

10. ஏதோவென்றிருக்கும்-ராகவன்முகத்திலே
எப்படிப்போய்விழிப் பேனே
மாதாவைக்காட்டென்றிங்கே இந்தராவணனை
வாலாலேமாட்டிஇழுப் பேனே

அனுமார் சீதையைக் காணுதல்.

விருத்தம்.

கொண்டலெனும் அனுமன்இப் படிக்கலங்கிக்
கோலிழந்த குருடனென நின்றான் முன்னே

மண்டியமேதார் அசோகவனம் கண்டான் தாவி
வந்திலோர் மரத்திருந்தான் அந்த வேளை
அண்டரிய ஒருமூவெயர் பத்துக் கையர்
அரிமுகத்தர் பரிமுகத்தர் அசுவகம் பேர்கள்
கண்டகவல் அரக்கியர்கள் நடுவி லேஓர்
கருக்கண்டான் சீதைதிரு உருக்கண் டானே. (6)

5. நந. ராகம்-கல்யாணி. தாளம்-ஆதி.

பல்லவி.

சீதையைக் கண்டானே-அனுமான்-செடிமேல்நின் று
சேவையைக் கொண்டானே-அனுமான்

அனுபல்லவி.

ஆதவன்காணுத இலங்கைமடிவிலே
அரக்கியரென்கிற புலிக்கூட்டம்நடுவிலே (சீதை)

சரணங்கள்.

1. தாயிவள் தாயிவள் நிலைவரமே-சாமி
தனக்கும்இவள்மெத்தம மேலைகரமே
தியையுஞ்சுடுமிவள் சரித்திரமே-தெய்வ
தெய்வங்களுக்குமிவள் மீசரமே
சாயும்சக்திரசூரிய வம்மிசமும்பெருக்கும்
தனியாந்தருமமும் இனிமேல்லோசெருக்கும்
ஏய்அடையாளம்கண்டேன் அஞ்சேலெனுவருக்கும்
என்றுசெல்லரித்தாலும் இருந்திடத்தேஇருக்கும் (சீதை)

2. தேவிக்குத்தாயென்பார் அல்லோபூமி அவள்
நிடத்தையும்வென்றாள் இந்தஅபிராமி
பாவி அரக்கர்க்கிவள் காலநேமி-இதைப்
பார்க்கப்பெற்றாளிலேயே என்சாமி என்று

பூவிளர்த்துகில்மேல் அழுதழுதுமொய்த்த
புனல்தானேமுலைத் தடஅனலாலேவற்ற
சேவலைத்தேடுமிள்ம் பேடைபோலேமெத்த
திகைத்துத்திகைத்துவட முகத்திலேமுகம்வைத்த (சீதை)

3. இருவிக்கட்குமகிமை என்னைகண்டு-இவள்
ராமர்மிதசி வனத்தைக்கொண்டு
சருகுபோலேவைப்பிப் பொசிப்பைவிண்டு-அம்மை
தான்செய்புந்தவமே மகிமைஉண்டு
ஒருசூரியன்முன்னே மதிபோலிந்தவல்லி
உவமைகொண்டாள்அரக்கர் ஒழியஎவர்க்கும்நல்லி
திருவேஇவள் அந்த அரியகாதண்டவில்லி
செயமினிசாமிகாரியம் பயமில்லைஎன்றுசொல்லி (சீதை)

சீதாதேவி திரிசடையோடு முறையிடல்.

விருத்தம்.

அணுமனிந்தப் படிசீதை தனைமரத்தி லிருந்துகண்டான்
அப்பால் அந்த
வனிதையும்தா மரைஇலைமேல் தண்ணீராய்த் திரிசடைதன்
வதனம் பார்த்தாள்
கனமூளைஎன் சிறைநீங்கிச் சாமிமுகந் தனைக்காணக்
கடவே னேநான்
உனதுமதி எதென்றே அருகுவாள் அம்மைசொல்லி
உருகு வாளே. (7)

2. தீபதை. ராகம்-நீலாம்புரி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோராஜைரு பெண்பிறந்தகதையை
ஆருடனேசொல்லுவேன் திரிசடையே

தெய்வமும்நீபெற்ற தாயும்நீ அல்லால்வேறு
திக்குண்டோகேளாயம்மா . திரிசடையே

2. மங்கைமார்கொண்ட கணவனைப்பிரிந்தசல்
மனையிலுமிருப்பாரோ திரிசடையே
எங்கெங்கும்வசை ஆச்சேசெட்பவர்
என்னென்றுபழிப்பாரோ திரிசடையே

3. கடலிலேயிந்த இலங்கையிருக்குதென்று
காகுத்தர் அறியாரோ திரிசடையே
தொடரும்என்சேதி அவர்க்குச்சடாயுராசர்
சொல்லாமல்இறந்தாரோ திரிசடையே

4. துணைஆகவைத்த கொழுந்தனை அவர்பின்னே
தூரப்போகச்சொன்னேனே திரிசடையே
கணவனுர்மெத்த நீலிஇவளென்றெண்ணிக்
கைநழுவவிட்டாரோ திரிசடையே

5. குத்திரஞ்செய்து ராட்சதனிவன்என்னைக்
கொண்டுவந்தானல்லோ திரிசடையே
இத்தனைநாள் அவன் தின்றுவிடுவான்என்றே
எண்ணித்திரும்பினரோ திரிசடையே

6. அரசில்லா அந்த நாடுகாடாச்சுதென்று
ஆலோசனைசெய்து திரிசடையே
பரதனும்தாய்மாரும் வந்துஅழைக்கஅவர்
பதியிலேபோய்விட்டாரோ திரிசடையே

7. சனகராசன்வில் ஒடித்தவன்முன்னெறிந்த
தடந்தோளைஎன்றுகாண்பேன் திரிசடையே
கனமுடனேபரசு-ராமன்வில்லைப்பறித்த
கைகளைஎன்றுகாண்பேன் திரிசடையே

8. வைத்தபோதிலும்கைகை பின்னே அந்தஅரசை
வாங்கியபோதிலும் திரிசடையே
சித்திரச்செந்தாமரை மலைரப்போலேமலர்ந்த
திருமுகமென்றுகாண்பேன் திரிசடையே

9. கொழுந்தினானென்றும்முக னுக்குத்தான்தோழனென்றும்
கூறினதும்பொய்போமோ திரிசடையே
எழுந்துசெல்லும்விராதன் துதியைமனமகிழ்ந்த
இரக்கமும்போய்விட்டதோ திரிசடையே

10. கரதூஷணர்பதி னாலாயிரந்தேரும்
கணத்திற்பொடிசெய்தாரோ திரிசடையே
சரவேகமும்கையும் மெய்யுமென்னிருவிழி
தம்மில்நிற்கின்றதையோ திரிசடையே

11. வல்லபேருக்குப் புல்லும்ஆயுதமென்ற
வழக்கச்சொல்லைப்போலத் திரிசடையே
புல்லினுற்காக்கை கண்கொண்டோர்கண்கொடுத்த
புண்ணியரைக்காண்பதென்றோ திரிசடையே

12. சற்றும்வைத்துப்பாராமல் பாவிராவணன்வார்த்தை
தனல்போலிறைக்கிறானே திரிசடையே
பத்துத்தலையும்பனங் காய்போல்விழுந்துருளப்
பார்ப்பதெந்நாளோநான் திரிசடையே

13. பாயுங்கைகளுமென்னைப் பார்க்கும்கண்களுமிந்தப்
பழிவார்த்தைசொல்லும்வாயும் திரிசடையே
பேயும்பெருங்கழுகும் நாயும்நரியும்பிச்சுப்
பிடுங்கித்தின்னக்காண்பேனோ திரிசடையே

14. குடிமகனிந்திரசித்தன் கொழுந்தனுற்பட்டானென்ற
கூக்குரலென் றுகேட்பேன் திரிசடையே
அடியற்றமரம்போல்மண் டோதரிராவணன்முன்
அலறிவிழக்காண்பேனே திரிசடையே

15. பேயாம்அரக்கனையும் சேனைகளையுமென்றன்
பிராணநாதர்கொல்லாரோ திரிசடையே
தாயேஉன் அப்பன்விடுபோற்கடல்போலேபொங்கித்
தழைக்கநான்காண்பேனே திரிசடையே

16. இடதுகண்துடிப்பதும் இடதுதோள்துடிப்பதும்
வீதாஅறிகிலேனே திரிசடையே
இடதுசெவியில்ஒரு வண்டுவந்தூதக்கண்டேன்
என்னசொல்லடி அம்மா திரிசடையே

17. வந்தசாமிமுன்மிதிலையில்என்கைதொட
வரக்கண்டகுறியிலை திரிசடையே
அந்தநாளின்குறி இந்தநாளிலுங்கண்டேன்
அதிசயம்வீதாஅம்மா திரிசடையே

சீதாதேவிக்குத் திரிசடை கனாநிலை உரைத்தல்

தரவுகொச்சகக் கலிப்பா.

கோதைமனம் தளர்ந்திந்தக் குறிகுணங்கள் சொன்னளவிற்
றூதுவன்இப் போதுனக்கோர் சுபவார்த்தைசொல்லுவன்காண்
காதலியே நானும்நல்ல கனவுகண்டேன் கேள்எனவே
சீதைமனம் தேறியிடத் திரிசடையும் சொல்வானே. (8)

6. நந. ராகம்-சங்கராபரணம். தாளம்-ஆதி.

பல்லவி.

என்கனவைக்கேளாயம்மா-சானகி
அம்மாஎனுனக்குக்கவலேசும்மா

அனுபல்லவி.

மங்களமுனக்குண்டாமே வல்அரக்கன்வாழ்வுபோமே (என்)

சரணங்கள்.

1. சுந்தரிமண்டோதரி வெறுந்தலையைச்சீவினள்
அந்திடத்திலேஅவள் விழுந்தழுதுகூவினள்
இந்தமன்னன்வீடுவிட் டெழுந்தொருபெண்தாவினள்
என்தகப்பன்வீட்டில்அவள் வந்துகந்துமேவினள் (என்)

2. பூவுகளெல்லாங்கரிகளாக் கருகவுங்கண்டேன்
கோவில்களெல்லாமெழுகுபோ லுருகவுங்கண்டேன்
பேய்வகையும்ஓரிகளுமே பெருகவுங்கண்டேன்
ராவணன்எண்ணெய்த்தலையோடே வருகவுங்கண்டேன்(என்)

3. பத்துமுடிராவணனைக் கொத்துடனே கொல்லவோ
வைத்தசிறைவிட்டமரர்சொஸ்தமொடு செல்லவோ
உத்தமியுன்பத்தினி மகத்துவமென்ன சொல்லவோ
இத்தனையும்இலங்கைக் கனர்த்தமென்ப தல்லவோ (என்)

சீதாதேவிபக்கல் இராவணன் குறையிரத்தல்.

விருத்தம்.

திரிசடைஇப் படிசொல்லச் சனகி கொஞ்சந்
தெளிந்தளவி லிதுகல்ல வேளே என்றே
மரம்உறையும் அணுமானும் குறுகும் போதில்
மகுடம்ஒரு பத்துமின்ன மாத ராட

அருகினிற்கட் டியம்போட அந்த ராவில்
அரக்கன்வந்தான் அருந்ததிக்குந் தெய்வ மாகும்
கருணைவல்லி சீதைமுன்னே தான்வ தேதோ
கரைக்கின்றான் பலகெஞ்சி உரைக்கின்றானே. (9)

3. தீபதை. ராகம்-பந்துவராளி; தாளம்-அடசாப்பு.

கண்ணிகள்.

1. என்னசெய்வேன்நான் என்னசெய்வேன்நான்
என்னசெய்வேன்மிதிலே அன்னமே
மன்மதன்கணையாலே பட்டுவிழுவேனென்று
மலரயன்வகுத்தானே முன்னமே

2. அங்கம்நையவும்விட்டுப் பெண்கள்வையவுங்காமன்
அம்பாலெய்யவுஞ்சிந்தை நோகவோ
திங்கள்சுடவும்பனி அன்றில்சுடவும்வீசும்
தென்றல்சுடவும்வெந்து போகவோ

3. ஆலைக்கரும்புபோலும் வேலைத்துரும்புபோலும்
ஆசைவலையிற்சிக்கி மாயவோ
மாலைக்குங்காலைக்கும் ஊண்உறக்கமில்லாமல்
வரவரநாளுக்குநாள் தேயவோ

4. அந்தோதும்பெல்லாமேனேனொந்துநொந்துபோனேனே
அனுக்கிரகம்நீசெய்ய வேணுமே
சந்தோஷமாகப்பாராய் என்தன்கவலைதீராய்
சாஷ்டாங்கதெண்டனிட்டேன் காணுமே

5. மறக்குமோஉனதாசை வார்த்தைஒன்றருளாயோ
வானோர்பழிக்கின்று கூசவோ

பிறக்கும்பிறக்குந்தலை முறைக்கெல்லாம்ராவணனென்
பெண்ணுல்இறந்தானென்று பேசுவோ

6. பதியுமுனதெனது நிதியுமுனதுசொன்ன
படிகேட்பேன் அடிமை ஆகுவேன்
இதிலேவதைபடாமல் தயைபாராய்கதிதாராய்
எங்கேகான் இனிப் போகுவேன்

7. வான்ஆளுந்தேவரும் மூவருந்தினம்வந்து
வணங்குமென்கவலையைத் தீர்த்திடாய்
நானேஉனைப்பணிந்தால் பதினுலகுக்கும்நீ
நாயகியாம் அல்லவோ பார்த்திடாய்

8. கண்ணுங்கருத்தும்நீயே மன்மதன்செய்யும்போரைக்
காட்டிலும்நல்லதெம வாதையே
எண்ணந்தப்பிப்போனேனே நாயினும்பேயானேனே
எனக்கொருபுத்திசொல்வாய் சீதையே

சீதாதேவி இராவணனை இடித்தல்.

விருத்தம்.

மிண்டாளன் அரக்க னிந்த வீண்வார்த்தை சொல்லச் சொல்லக்
கண்டாள்சா னகியு மென்றன் காகுத்தர் சரத்தி னுலே
உண்டான தெல்லாந் தோற்க ஊழிவந் தடுத்த தையோ
சண்டாளா எனக்கோ பித்துத் தள்ளுவாள் விள்ளு வாளே (10)

7. ந்ரு. ராகம்-மோகனம். தாளம்-ஆதி.

பல்லவி.

ராட்சதப்பதரே துன்மார்க்கவார்த்தைகள்
ஏற்குமோபோடா அடராவண-ராட்சதப்பதரே

அனுபல்லவி.

காட்சியாள்ன்னைப் பார்க்காதே இந்த
தாழ்ச்சிஆம்பழி ஏற்காதே உன்
வாழ்ச்சிவீணிலே போக்காதே அர
சாட்சிஆனதைத் தோற்காதே அடா ராட்சதப்

சரணங்கள்.

1. இலைக்குமூன்றுலோகமும்செலுத்தும்உன்கோலும்என்தன்
கீர்த்தியும்ஏன் தொலைக்கிறாய்-கெருவத்தாலே
வெளிக்கபகீர்த்திஆகப் பாவபுண்ணியமும்பாராமல்
விருதாவிலேஏன் குலைக்கிறாய்-ஆகாசமட்டும்
அளக்கும்இருப்புத்தூணைச் செல்லரிக்குமோஇத்தை
அறியாமல்ஏன் மலைக்கிறாய்-அக்கினிதன்னில்
குளித்துத்தவங்கள்செய்து பெற்றவரத்தையெல்லாம்
கொஞ்சத்தில்ஏன் கலைக்கிறாய்-அடசண்டாளா
வளர்த்தியவார்த்தைகள் படியாதே தணல்
ஒளிக்கமுன்தாணையில் முடியாதே என்னை
இளக்காரமாக்கிட்டத் துடியாதே எரி
னைக்கினிற்பூச்சிபோல் மடியாதே அட(ரா)

2. காயத்துடன்பிறந்த தங்கைமூக்கும் முலையும்
காதும்அறுக்க விடுத்தாய்-வெளிகில்லாதென்
நாயகர்க்கஞ்சிஅந்த மாயமான்பின்னேதிருட்டு
நாய்போற்பதுங்கி அடித்தாய்-நமன்போலும்உன்
தீயரூபத்தைக்கண்டு மூர்ச்சையாய்ப்போனஎன்னைத்
தீண்டாமல்மண்ணே டெடுத்தாய்-கொல்லவேனென்றுமேல்
பாயும்சடாயுவாலே பூணவாய்எலிபோலுன்
பலிஷெல்லாம்பறி கொடுத்தாய் அடாசண்டாளா

தாயிவள்எனமனம் அறியாதோ போடா
பேயேஇம்மாத்திரம் தெரியாதோ என்னைத்
தியுரைசொன்னகாக் கெரியாதோ பத்து
வாயிலும்புழுவாச் சொரியுதோ அட(ராட்)

3. குதிக்கிறுய்சும்மாப்போமோ இப்பாவம்பின்னுக்கொன்று
கோடியாய்வந்து வாய்க்குமே-உன்செல்வம்எல்லாம்
செதுக்கிறஅரம்போலென் பொறுமைஆகிறதர்ம
தேவதைதானே தேய்க்குமே-உன்குலந்தன்னை
மதிக்காவட்டியைக்கூடி இலவுந்தீப்பட்டாற்போலென்
வயிற்றெரிச்சலே தீய்க்குமே-என்பிராணநாதர்
விதிக்கும்பாணம்உன்தன் தலையைப்பனங்குலைபோல்
வெட்டிவெளியிற் சாய்க்குமே-அடசண்டாளர
அதற்குள்ளேஉள்ளிச் சாகாதே இந்த
பதைப்பினுலொன்றும் ஆகாதே வாய்
மதத்திறக்கிட்டுப் போகாதே காளைக்
கோதிக்குங்காகத்தில் வேகாதே அட(ராட்)

சீதாதேவி தனியே புலம்பல்.

விருத்தம்.

சானகிஇப் படிவைய அரக்கன் சீறித்
தான்நடந்தான் அரக்கியரைக் கலைக்கச் சொன்னுன்
ஆணதுகண் டனுமானும் இவனே இங்கே
அடிப்பெனென்று கையொடுகை பிசைந்தான் அப்பால்
தானுருமக் கிரஞ்செபித்தான் மாத செல்லாம்
சவம்போல உறங்கிவிட்டார் அந்த வேளைக்

கானகத்தில் இளங்குழந்தை போலே சீதை
கலங்குவாள் தனியேதான் மலங்கு வாளே. (11)

4. திபதை. ராகம்-ஆனந்தபைரவி; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. தேற்றுவார்இல்லே ஆற்றுவார்இல்லேதெய்வமேயென்னசெய்குவேன்
ஏற்றும்அரக்கியர்வார்த்தை இடும்பைவிட்டெந்தநாள் இனியுய்குவேன்

2. சொந்தவீட்டில்இருஎன்றசாமியைத் துடுக்குச்சொல்லிஎழுந்தேனே
அந்தவினைக்கிந்தஇலங்கையிலே பொல்லாஅருஞ்சிறைவில்விழுந்தேனே

3. தம்பிமார்அண்ணேமார்எல்லாரையும் தவிக்கவிட்டுவந்தபோதே
என்பொருட்டில்அவர்க்கிங்கேவரமனம் ஏன்வருமோவராதே

4. சீறைதவசுக்குக்குறைஇவளென்று கினேந்துகைவிடுவாரோ
பறையர்ஊரிலேசிறையிருந்தஎன்னேப் பரிந்துகைதொடுவாரோ

5. தாழ்வுசெய்தேனேதெய்வமேஎன்தன் சாமிநெஞ்சைஉருக்காயே
பாவிஉயிரேஎன்சாமிதிருமுகம் பார்க்குமட்டும்இருக்காயோ

6. ஏதுகாண்இவர்அரக்கிமார்களோ இந்தப்பேரிடுவான்ஏனே
நாதன்பிரியவும்இன்னம்இருந்தேனே நானல்லோஅரக்கிதானே

7. தந்தைசனகனும்இந்தவினைகண்டு தன்னுயிரும்பிழைப்பானே
அந்தஇரேயகொழுந்தனும்என்னே அருமைசொல்லிஅழைப்பானே

8. புல்லும்பூமியும்உள்ளமட்டும்இந்தப் பொல்லாப்பழிசிறந்தேனே
சொல்லுவார்சொல்லும்வசைக்கெல்லாம் ஒரு-நோதபெண்பிறந்தேனே

அனுமார் ஸ்ரீராமரை வர்ணித்தல்.

விருத்தம்.

அண்ணேயெனுஞ் சனகி இவ்வா றழுது வாடி
ஆவிஇனி வைத்திரே னென்று பிராணன்

தன்னைவிட நினைந்தொருபூஞ் செடிக்கிழ்வந்தாள்
சாமிஅணு மாஞ்முன்னே வணங்கிக் கண்டு
என்னதச ரதராமன் தூதன் நானே
எங்கெங்குந் தேடினேன் அணுமான் என்பேர்
சொன்னபடி சொல்லவந்தேன் சாமி ரூபம்
சொல்லுவேன் என்றெதித்துச் சொல்லு வானே

8. நடை. ராகம்-கேதாரகௌளம். தாளம்-ஆதி.

பல்லவி.

அந்தராமசஞ்சரியம்என்னால் அறிந்துசொல்லப்போமோ அம்மா

அனுபல்லவி.

கந்தமேவும்அர விந்தமலரும்அவர்
காலுக்குநிகராமோ கைக்குத்தான்சொல்லப்போமோ(அந்)

சரணங்கள்.

1. உருண்டமணிமுழங் காலுக்குவமைஅவர்
உடைய அட்சயத்தூணி ஏற்குமே
திரண்டபெருந்தொடை இரண்டுக்கும்எட்டுத்
திசையாணைத்துதிக்கையுந் தோற்குமே
விரிந்தமரவுரி இடையும்நடையும்கண்டோர்
மனைதனல்லாம்உருக்கி வார்க்குமே
தரந்தரமாயுல கிருந்தவயிற்றுக்குச்
சரிசொல்லக்கூடுமோ ஆர்க்குமே
விரிந்தமார்புக்கிணை பூமிஅகலங்காணும்
விளங்கும்கழுத்துக்குநேர் இளங்கமுகேபூணும்
பரந்தபுசங்களுக்கு மேருமலையுங்காணும்
பார்க்கப்பார்க்கப்பதி னாயிரம்கண்கள்வேணும் (அந்)

2. அதிசையமுடன் பளபளென்றிலகுகண்
ணாடிநீகர்த்தக போலமும்
மதிகள்ஒருசத கோடிக்குமேலான
மங்களமலர்முகக் கோலமும்
கதியென்றடுத்தவர்க்குப் பதியும்நிதியும்தரும்
கருணைநயனஞ் சாலமும்
குதிகொள்ளும்பவள வாயும்சிறுநகையும்
குறுமந்தகாசவி லோலமும்
புதுமலையினில்விழும் பொன்அருவியைப்போலும்
பூமணிமார்பினிற் புரளுமுப்புரிநூலும்
எதிரில்லாதகோ தண்டமும்ஒருகாலும்
எழுதவேணுமென்றால் ஆமோமன்மதனுலும்

3. பெருத்ததாமரை இலைபோலேஒளி
பெருகியமேனிச்சிங் காரமும்
வரித்தசிந்தூர ரேகையும்புருவமும்
வளர்ந்தநெற்றிவிஸ் தாரமும்
பருத்தகிருமுடி வேணியும்வேணியில்
பசுந்துளவமலர் ஆரமும்
தரித்தகிருவாழி கொடுத்துன்சேதியைத்
தனியேயென்னுடன்சொன்ன சாரமும்
திருத்திச்சொல்லவெகு வாய்இல்லைஒருவாயே
தெரிந்தும்தெரியாமலும்சொன்னேன்நீபொறுப்பாயே
ஒருக்காலேஉண்டவர் மகிமைநீஅறிவாயே
உனக்குத்தெரியும்வேதம் தனக்குத்தெரியுந்தாயே (அந்த)

சீதாதேவி லட்சணியைத் தெரிசித்தல்.

விருத்தம்.

காட்டியே இந்தவண்ணம் ராமர்க் குள்ள
நற்குறியெல் லாஞ்சொன்னன் நாடு விட்டுக்
காட்டிலே நடந்ததுவுஞ் சுருங்கச் சொன்னன்
கரதலா கமலம்போல் அனுமான் பின்னே
ஆட்டியிடும் பசியாலே விழுந்தோர் கையில்
அண்டருல கத்தமுத மீந்தாற் போல
நீட்டினன் திருவாழி அதனைக் கண்டாள்
நிசங்கண்டாள் சீதைபர வசங்கொண் டாளே. (13)

9. நந. ராகம்-சங்கராபரணம்; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

கொண்டாளே-சாமிமோதிரம்-கண்டாளேசீதை.

அனுபல்லவி.

எண்டிசைபோற்றிய இலங்காபுரத்திலே
என்அனுமானிட பொன்இருகரத்திலே (கொண்)

சரணங்கள்.

1 கந்தமலர்க்குழல் மேலேசூடிக்
கண்ணுக்குக்கலத்தண் ணீர்விட்டு
காணக்கிடைத்ததே கார்த்திகைப்பிறைபோலே
கண்டேனேஎன்று முறைப்பட்டு
அந்தராம மந்திரமெழுதிய
அடையாள மோதிரந்தொட்டு
அணைத்துமூலேமேல் இணைத்துடம்பிலே
அடங்காமகிழ்ச்சிகொண்டடிக்கடிமுத்தமிட்டு (கொண்)

2. எரிந்தபஞ்சியால் வருந்துமங்காகம்மூன்
இழந்தமணிதன்னை அடுத்தாற்போல்
ஏதினிமேல்வா ராதென்றெழுந்தவர்
எறிந்தஉடமையைக்கண் டெடுத்தாற்போல்
பெருந்தரையிலொரு கால்மேலேகின் று
பிள்ளைபெற்றுமலடி படைத்தாற்போல்
பின்னுமுன்னுந்தான் முமல்தவிக்கிற
பிறவிக்குருடனுக்குத் தெய்வம்கண்கொடுத்தாற்போல்(கொண்)

3. சிந்தாகுலம் விண்டேனேஉன்
திருவாக்காலென் குறைஆற்றி
தீயராவணப் பாவிஊர்இதைத்
தேடிவந்தாயேஎன் மனம்தேற்றி
தந்தாயேஎன்சிவனேஉனக்கினித்
தருவதென்னஇதற் கெதிர்மாற்றி
தாயுந்தந்தையுங் குருவுந்தெய்வமும்
சகலமும்நீயேஎன் றனுமாரே வாழ்த்தி(கொண்)

சீதை இராமரைப் பிரிந்தபின்பு நடந்தசெய்திகள்
இவையென அனுமார் அவளுக்கு விவரித்தல்.

விருத்தம்.

கண்டதிரு வாழியினல் மகிழ்ந்த சீதை
கடல்பாய்ந்த விஸ்வரூ பத்தைக் காட்டக்
கொண்டுமகிழ்ந் தாள்பின்னும் அனுமா னேகான்
கோணுமல் மானுக்காய் நெடுந்தூ ரத்தில்

மண்டுரகு வீரன்போய் மீண்ட வாறும்
வந்தினையோ னுட்கலந்த வாறும் நீதான்
பண்டுபழ கியவாறுஞ் சொல்வா யென்ன
படிக்கின்றான் அவள்குறையை மூடிக்கின்றானே.(14)

10. நந. ராகம்-தோடி; தாளம்-ஆதி.

ப ல் ல வி.

கேளம்மா சொல்வேன் முன்உள்ளதெல்லாம்
கேளம்மா சொல்வேன்.

அ னு ப ல் ல வி.

மீனமான்னனமாரீசன்மறைந்து நின்றுடனே உயிர்கொன்றுடனேவழி
மீனவேரகு வீரன்வந்துசேர்ந்தபின் (கேள்)

ச ர ண ங் க ள்.

1. இனம்பிரிந்தமான்போலே என்தாயேஉன்னைநாடி
உணுங்கனிகாய்களும்போய் உலவாய்மெழுகாய்வாடி,
அனந்தங்காடுமலையும் ஆறிறங்குகேதடித்தேடி
தனந்தனியேபுலம்பித் தம்பியாயுயிர்கூடி.
வனந்தனில்வந்துச டாயுவுல்லமதிதேறவராவணன்
மூனைந்தெல்லாம்சொல்லி அவன்உயிர்வானகம்எறவே-அந்நேரம்

சினந்துகவந்தனை வென்றுசவரிமொழிகூறவே-உன்தன்னை
நினைந்துனைந்தறி வானதுபோய்த்தமாறவே-நாயேனும்
பணிந்திடவேதன தடியருள்ஆக்கிப்
பணிகளும்மணிகளும் வகைவகைகோக்கித்
தணிந்திடும்வாலியைமாட்டினன் முன்னே
-ங்கிரீவனைமுடிசூட்டினன் பின்னே (கேள்

2. அறிகிறதூதர்தம்மை அந்தத்தத்திசையில் ஏவி
நெறியேதெற்குத்திசைக்கு நீர்ளாஎன்றெனக்கூவி
பொறியேஞ்ரும்மோதிரம்கைப் போட்டதுதந்துதேவி
குறிகுணமெல்லாஞ்சொல்லக்கொண்டுதென்திசைதாவி
மூறைமுறையேவெகுதேசமெல்லாமலைந்தெட்டினேன்-என்னேடே
பிறகுசெல்வாரைவா ராதிருமென்று தட்டினேன்-அந்நேரம்
தறையிலிருந்தாகாசமளவும்போய் முட்டினேன்மயேந்திர
பருவதமேல்னின்றுபாய்ந்திலங்காபுரி கிட்டினேன்-கோட்டைக்குள்
குறுகுறெனநடக் கிறவேளையிலெதிர்
கொண்டுடிம்பங்கணி தொண்டையும்மண்டையும்
நெறநெறனநெரித் திடவேஷர்ஷிட்டு
நீங்கினள்ஆஷியை வாங்கினேன்நானே(கேள்)

3 அகலும்இலங்கைகளல்லாம் அணுஅணுஆகச்சுற்றி
தகைசேரும்மத்திட்ட தயிர்போலவேஎன்புத்தி
மிகழும்வேளையில்ராம நேசம்வந்ததுபற்றி
மகிழவேநான் அசோக வனத்தில்வந்தேனைஒற்றி
வகைஉடனேரா வணன்வந்துன்எதிர் படித்ததும்-சண்டாளா
அகலில்லடாஎன்றுநீவாய்மேல் அடித்ததும்-அம்மாவுன்
முகமலர்மேல்இரு கண்ணல்முத்துக்கள் வடித்ததும்-அடியேன்
சகலமும்அறிவேன்உனதிடதுபுறம் துடித்ததும்-இதெல்லாம்
பகலவன்முன்பனி ஆய்விடும்மெய்யே
பாவிஅரக்கர்கள் வாழ்வதும் பொய்யே
செகமுழுதிலும்ஒரு திருவுளமேபொது
தேன்மொழியேஅடி யேன்வரலாறிது (கேள்)

அனுமார் சீதாதேவியை வரங்கேட்குதல்

விருத்தம்.

சொல்லிஇந்த வகைஅனுமான் பின்னும என்றன்
தோள்மேலே எழுந்தருள்வாய் அங்கே பாய்வேன்
அல்லதிலங் கையோடெடுப்பா யெனினுஞ் செய்வேன்
அரக்கரைவேர் பிடுங்கெனினும் கணத்திற் செய்வேன்
பல்அரக்கர் சிறையிலே கண்டான் மீட்கப்
பயப்பட்டான் உயிரைக்காப் பாற்றி னனென்
றெல்லவருஞ் சொல்லப்போகேன் தாயே சீதை
எதென்றன் இதற்குவகை ஒதென் றனே. (15)

அனுமாரை சீதாதேவி வரங்கேட்குதல்.

விருத்தம்.

எண்ணிஅனு மான்இந்த வார்த்தை சொல்ல
எனைஒருவ ருந்தொடப்போ காது கண்டாய்
மண்ணைத்தொட் டரக்கன்எனை எடுத்தான் கண்டாய்
வலியகோ தண்டபதி அவர்போர் கண்டாய்
கண்ணிலன்றன் சிறைஅவரே மீட்டி டாமல்
நடைத்தூதன் மீட்டால்எப் படிஆம் கண்டாய்
கண்மணியே மகனேஎன் றவனை நெஞ்சம்
கரைக்கின்றாள் சீதைகனிக் கரைக்கின் றனே (16)

11. தரு. ராகம்-சௌராஷ்டிரம்; தாளம்-ஆதி.

பல்லவி.

இம்மாத்திரம்செய்வாய் அனுமானே-என்னைவேண்டி
இம்மாத்திரம்செய்வாய் அனுமானே

அனுபல்லவி.

சும்மாவிட்டுவிட்டாலே தோஷம்உண்டுத்தன்மேலே (இம்)

சரணங்கள்.

1. வேடிக்கைக்கோபிடித்தார் வில்லு அவர்க்கிந்தவூர்
ஈடோஇதெல்லாம்ஒரு சில்லு நான்சபித்தாலும்
காடாகாதோஇலங்கைக் கல்லு துணிந்தவர்க்குப்
பாடோபிராணன்என்னஓர் புல்லு அந்தாதிப்போட்டு
கூடுமோத்திரம்இருந்த கெல்லு போலேஆனேனே
ஓடிப்போய்சாமிமூன்னே நில்லு அவருட்னே
கூடவேஅயோத்திக்குச் செல்லு என்னேஎங்கென்று
தேடும்மாமிமார்க்குநான்
தெண்டனிட்டேனென்று சொல்லு (இம்)

2. குருவார்த்தைஆகஉன்மேற் பாரம் போட்டுச்சொல்கிறேன்
ஒருமாதம்நிற்கும்என்ச ரீரம் கல்யாணம்செய்த
பெருநாளில்என்மனவி சாரம் அறிந்துகைமேல்
பரவசஞ்சொண்ணரேவிஸ் தாரம் அத்தைகம்பிநான்
வருவார் அல்லோஇத்தனே தூரம் என்றிருந்ததை
தெரியாமல்ஊர்க்குப்போம்அந் நேரம் யேய்கூடப்போய்
அருகேநான்சொன்ன உப சாரம் சொன்னபின்கங்கைக்
கரைகண்டால் சீதைகடனும்
கழிக்கச்சொல்வாய்உப காரம் (இம்)

3. ஆதியில்பொன்மானுக்கா வாது சொன்னதுண்டந்த
வேதைபொறுக்கச்சொல்என் மீது பெண்களுக்கெல்லாம்
பேதமையென்பதுவி டாது அதுகொண்டென்ன
வேதன்சொன்னசாபம்போல்லாது என்னேராவணப்

பாதகன் அணுகக்கூ டாது என்றுதிரிசடை
மாதாவுரைத்தாள்பயம் வது எல்லிருந்தாலும்
மேதினிவாய்மூடப்போ காது ஆகையினாலே
சீதாராமன்தன்பேரைச்
செபித்தச்சொல்வாய்இப் போது (இம்)

அனுமார் சீதாதேவிக்குத் திடம் கூறல்.

விருத்தம்.

வடித்துவடித் தன்னை இந்த வார்த்தை சொல்ல
மாருதியும் கைகொடுத்தான் விழல்கூ ளத்தை
இடிப்பதுபோல் அரக்கர்தம்மை இடிக்கச் சேனை
எழுபதுவெள் ளமுஞ்சேரும் எனது தோள்மேல்
அடித்தலங்கொண் டென்சாமி சேர்வார் தம்பி
அங்கதன்தான் மேற்சேர்வார் அவர்அம் பாலே
பொடிப்பொடியாய் ராவணனும் தறையில் சேரும்
போரும்வரும் பாரும்எனப் புகலு வானே. (17)

12. தரு. ராகம்-சாரங்கம்; தாளம்-ஆதி.

பல்லவி.

எட்டுநாளையிலேபோரும்-அம்மா-ராவணன்பேரும் இவன்ஊரும்

அனுபல்லவி.

இஷ்டகாலம்வந்த திரங்கவேண்டாம்பாரே
எப்போதும்போலேராமர் இடத்தினிற்சேருவீரே
மூட்டாதவானரர்கை தொட்டேகல்லாலெறிந்து
மூட்டர்கள் துஷ்டர்கள் கெட்டபலிஷ்டர்கள்

இட்டிடுகட்டுகள் ஒட்டுகள்கெட்டபின்
நெட்டுளபட்டண மட்டிஅரக்கியர்
கட்டியபோட்டுகள் தொட்டறுபட்டிடும் (எட்)

சரணங்கள்.

1. மலர்தலைஉலகெல்லாம் வாழ மண்மேல்
வண்டோதரி அலறி வீழ எங்கும்
அலகையும்நாயும்வந்து சூழ காவல்
அரக்கியர்உனதுவெள்
ளாட்டிகள்போலே தாழ
அந்தரதுந்துமி இந்திரன் அறைந்திட
எந்தன்முகுந்தன்தெ டுந்தளம்வந்தபின்
உன்றன்வருந்திய சிந்தைமகிழ்ந்திட
இந்தஇலங்கை அழிந்திடும்வினதையை (எட்)

2. ஆகாராட்சதப்பிரேதம் மேலே மிதக்க
ஆகுமோரத்தக்கடல் போலே அதில்
காகங்கள்மூழ்கிஒரு காலே மாதர்
கண்ணீரால்அந்தரத்தம்
கழுவிப்போமேஅப் பாலே
கங்கிலும்வங்கிலும் நுங்குதலங்களும்
மங்கையர்தங்கிய டங்கொள்அரங்கிலும்
அங்கிலும்இங்கிலும் எங்கிலும்எங்கள்கு
ரங்குருருங்கி இடுங்கலகங்களை (எட்)

3. ஆனேசனேகளோகான் சாட குரங்கால்
அரக்கர்தலையெல்லாம்பந் தாட ஒருவர்
போனவழிபோகாமல் ஓட இந்தப்
பொல்லாராவணன்வாழ்க்கை

எல்லாம்தம்பியைக் கூட
புத்திரமித்திரர்களத்திர னைத்தவர்
சுற்றிவயிற்றில்அ டிக்கிவிழத்தலை
பத்தும்சரித்திரள் தத்திஇழுத்திட
வித்தகன் அஸ்திரம்அ றுத்திடும்வெற்றியை(எட்)

சீதாதேவி அனுமாருக்கு அடையாளம் ஈதல்.

தரவுகொச்சகக் கலிப்பா.

உன்னித்தான் அனுமன்இந்த உறுதிசொல்ல மனந்துணிந்தாள்
வன்னம்உன்ன அணிசூடா மணிகொடுத்தாள் சாமிஅவள்
என்னசொன்னாள் எனக்கேட்கில் ஏதுரைப்பாய் எனச்சீதை
சொன்னபடி அடையாளம் சொல்என்று சொல்வாளே (18)

13. தரு.-ராகம்-ஆனந்தபைரவி; தாளம்-ஜம்பை.

பல்லவி.

அனுமானேசாமிக்கிந்த அடையாளம்சொல்லையா

அனுபல்லவி.

சனகிஇலங்கைச்சிறையில் தன்உயிரைத்தானேதின்று
மனமதில்ராமாமிர்தசி வனம்செய்திருக்கிறாள்என்று(அ)

சரணங்கள்.

1. உலகறியநகரைவிட்டுக் கோட்டைவாசல் கடக்குமுன்னே
ஓங்கும்வனம்எங்கேஎன்று நான்கேட்கநேரே
தொலைதூரம்வழிநடந்தாய் சமர்த்திநீஎன்றுசொல்லித்
தளிர்ஆனவாய்மலர்ந்து குளிரநகைசெய்தாரே (அ)

2. தாழ்வில்லாநகர்நீங்கி வருகிறபேர்எல்லார்க்கும்
தனித்தனியேதுணிவுசொல்லி அனைப்பினர்பொய்யோ

சூழும்அந்தவழிநடுவே வேள்விசெய்யவேணும்என்று
தொடங்கும்வேதியனுசை அடங்கப்பசுகொடுத்தார்ஐயோ(அ)

3. கனம்ஆனகங்கைக்கரை வனவேடன்முன்எங்களைக்
காட்டிஇவர்ஆர்என்றுநீ கேட்டாயேகுகனே
உனதுதம்பிஎனதுதம்பி உன்கொழுந்திஇவள்நாணும்
உன்ஆசைத்தோழன்என்று சொன்னேரமகனே(அ)

4. உனத்தில்மறுமாதர்பேர் குறிக்கேன்என்றந்தரங்கம்
உரைத்தார்என்சாமிக்கது கருத்தில்உண்டுதானே
வளர்த்தகிளியும்மானும் தளர்ச்சியில்லாதபடி
வைத்திருக்கச்சுமந்திரர் உடன்பத்திரமாச்சொன்னேனே (அ)

5. ஒருநாள்என்மேற்பாய்ந்த காக்கைதனைநோக்கிப்புல்லால்
ஒருகணைவிட்டார்இதென்ன தெரியாதபேச்சோ
சரணம்என்றதுவீழ இருவிழிக்கும்ஒருமணியாய்த்
தாமேகொடுத்தாரேஅந்த மானமும்தான்எங்கேபோச்சே (அ)

அனுமார் அசோகவனம் அழிக்குதல்.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

மூந்தித்தாய் சீதைசொன்ன அடையாளங்கள்
முறைகொண்டான் அனுமந்தன் நிறைகொண்டங்கே
சிந்தித்தான் ராமலட்சு மணரை எங்கள்
சேனையுட னேகொண்டு வருவேன் வந்தால்
பந்தித்த ராவணனும் படையும் காலன்
படைக்காவார் தாயேநீ பார்என்றேதி
வந்தித்தான் அச்சூடா மணியைக் கொண்டான்
வழிக்கொண்டா னசோகவனம் அழிக்கின்றானே. (19)

14. நந. ராகம்-பியாகடை; தாளம்-ஆதி.

பல்லவி.

அடித்தானே அசோகவனம்தன்னே மூடித்தானே அனுமான்

அனுபல்லவி.

அடித்தானே அருங்காய்கனிகளேலே
ஒடித்தானே அரைநொடிக்குள் விசுவரூபம்
பிடித்தானே அந்தராவணன்கீர்த்தியைக்
குடித்தானே கையைக்கொட்டித் தொடைதட்டிகொண்டு (அ)

சரணங்கள்.

1. ஆடச்சேயும் அசையச்சேயும்
அறுந்தன சிலமரங்கள் கைகளே
மூடச்சேயும் முறுக்கச்சேயும்
முறிந்தன சிலமரங்கள் வேர்பிடுங்கிச்
சாடச்சேயும் தாவச்சேயும்
தகர்ந்தன சிலமரங்கள் கொண்டாட்டம்
பாடச்சேயும் பாயச்சேயும்
பறிந்தன சிலமரங்கள் வெகுவெகு
கோடாணுகோடிகளாக் கொம்புங்கொடியும் ஆகக்
குறைத்தான் சிலமரத்தை பெருகிய
நீடாழிமூகட்டிலே அணேபோலேகிடக்க
நிறைத்தான் சிலமரத்தை தேவர்கள்
வாடாமல்ராட்சதர்கள்பாராமல்வெளியெங்கும்
மறைத்தான் சிலமரத்தை வாரிவாரி
வடாகூடமாய்லங்கைத் தெருக்கள்தெருக்கள் எல்லாம்
இறைத்தான் சிலமரத்தை இப்படி

மேடென்றும்காடென்றும் தெரியாமல்முடிய
விசைதோண்டெறிந்தமரம் திசைதிசைபோய்ப்படிய
மாடங்களும் அரக்கர் கூடங்களும்இடிய
மதில் இலங்கைவீடெல்லாம்சிதறிப்பொடிபொடிய ()

2. அடிக்கடிமரம் ஓடிக்கும்ஓசையில்
அண்டமும் வயிறுளைக்க அதுகண்டு
எடுத்தராட்சதப் பெரும்படைக்கடல்
எங்கெங்கும் ஓடிவளைக்க சினம்உடன்
கடுத்தரதகச துரகபதாதிகளைக்
காலனும் கண்டுகளைக்க திசைதிசை
திடுக்கெனக்கருங் தூளிசெந்தூளி ஆகச்
சேடனும் முடியிளைக்க வந்தளவில்
தடுக்காமல்மரத்தின்மேல்மரங்களாவெட் டெறிந்து
சதைத்தான் சிலபடையை மரம்பிடுங்கிப்
பொடுக்கெனப்பள்ளத்திலே பிணம்பிணமா அடித்துப்
புதைத்தான் சிலபடையைத் தேர்களை
ஒடுக்கிமளமளென நொறுக்கிநொறுக்கிவிழ
உதைத்தான் சிலபடையை மீன்குலம்
வெடுக்கெனவேபிடுங்க கடுக்கடலிலேதூற்றி
விதைத்தான் சிலபடையை கையிலுலே
அடுத்தவர்ஆயுதத்தைப்பறித்துப் பற்றிப்பற்றி
அழுகல்வெற்றிலைபோலேகுழைய எற்றிஎற்றி
வடுப்படாவரலாலேசுருக்கிச் சுற்றிச்சுற்றி
வயிற்றுக்குடல்களெல்லாம் வாயில் வரக்குத்திக்குத்தி (அ)

3. அதுசமயத்துக்கு மரங்கள்வாய்த்ததே
அய்யனுக்குக் கொண்டாட்டம் என்சொல்லப்

பதியில்இருந்தசே பருந்துகாகம்முதல்
பறவைகள் ஆட்டபாட்டம் மண்டைகளேச்
சிதறத்தேங்காய்போலஉடைத்தும்சாமிக் குண்டோ
சிறிதாகிலும் வாட்டம் ராவணன்
தநியில் அனுமானுக்கு தனியாவளர்த்தானே
தன் னுடையபெருந் தோட்டம் அங்கங்கே
குதிரைமேல்ஆனைவிழத் தேர்மலைபோல்விழக்
குழிந்ததே பெரும்பள்ளம் பள்ளத்திலே
எதிரிடும்ஆறுபோலே பெருகிக்கரைபுரள
எடுத்ததே ரத்தவெள்ளம் பசிபோகக்
கதிஇல்லாகாரிகளும் நாயும்பேயுட்டுண்டு
களித்ததே தங்கள்உள்ளம் குரங்கென்று
விதிமோசம் ஆகவந்தோம் நமக்கிவன் எமன் என்ன
விட்ட தரக்கர்கள்ளம் கிடைக்காத
புதுவிருந்துதனன்று மெத்தமெத்தவேதாள
பூதங்கள்கூடம்இடப் பிணகாற்றுமூள
எதிர்எதிர்அரக்கியர் அழுகைக்குரல்கள்ளீள
எண்பதினாயிரம் கிங்கரர்களுமாள (அடி)

சம்புமாலி வதை.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

கெடிகொண்ட வனமும் அந்தக் கிங்கரர்க ளும்போய் மாள
மூடிகொண்ட அரக்கன் கோபம் மூண்டிட எழுந்த சேனை
வடிகொண்ட கடல்போல் பட்ட மண்கிடந் திடும்இ ருப்புத்
தடிகொண்ட அனுமான் கையில் சம்புமா லியும்பட் டானே.

15. தரு. ராகம்-அடாணை ; தாளம்-ஆதி.

பல்லவி.

மடிந்தானேசம்புமாலி அனுமான் கையால் மூடிந்தானே சம்புமாலி

அனுபல்லவி.

அடங்காகரகுநாதன் வீடும்குணம்உள்ளதூதன்
நெடுங்கிரிஎனமண்டு தடங்கையால் அறைகொண்டு
மடங்கியவாயிலே மூடங்கியகுடல்எழு
தொடங்கியஉதிரமும் குடங்குடமாவிழு(மடிந்)

சரணங்கள்.

1. நறுக்குவேன்இதுஒரு குரங்கெனஎதிர்ப்பட்டு
செருக்கனத்தினில்எரி பெருக்கவேகணைதொட்டு
அரக்கர்படைக்கடலே நெருக்கிநெருக்கிஇட்டு
இருப்புலக்கையினாலே அரைக்கக்கொடுத்துவிட்டு(

2. நீலப்பெரியகடல் போலத்திரண்டுமொய்த்து
மேல்இட்டஇருதரைக் கோலிப்பொருதவைத்து
சோலைக்கரும்புகளே ஆலைக்குஇடுவதொத்து
வாலுக்கும்அனுமன்தன் காலுக்கும்ஒப்புவித்து(மடிந்)

3. மோதிவரும்படையை ஏதும்விடாமல்கொல்ல
மாதர்அழுதழுது வீதிஎங்கெங்கும்செல்ல
பாதகராவண்ண் காதினில்இடவல்ல
தூதர்குரங்கிதுபோல் லாதென்றலறிச்சொல்ல(மடிந்)

பஞ்சசேனாதிபதிகள் அட்சதன் இவர்கள் வதை.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பாய்ந்தசம்பு மாலிஇந்த விதத்திற் பட்டான்
பஞ்சசே னாதிபரும் படையும் மூண்டார்
தோய்ந்தஅவர் தங்களையும் கணத்தி னுள்ளே
தோரணகம் பக்கில்இருந் தனுமான் கொன்றான்
காய்ந்தசினத் துடன்பன்னீ ராயி ரம்பேர்
காதலரும் காலுலட்சம் காளை மாரும்
ஏய்ந்தபடை களுங்கொண்ட கூதனும் தேர்மேல்
எதிரான் மாருதிமேற் சீறி னானே. (21)

16. வண்ணத்தரு. ராகம்-தோடி; தாளம்-ஆதி.

கண் ணிகள்.

வந்தானேராவணகாதகன் அனுப்பஅக்ஷதன்மிகுத்திடப்படை
தந்தானேதோரணகாலின்மூன்-மிகச்சமுத்திரம்வளைத்ததொப்பென
மதகரிகள்பரிகள் ரதவிறைகள்வரவும்
வருகவருகஎன ராகவதூதன்
கண்டானே அண்டகடாகமும் வெடித்திடக்கடுகடுத்தகர்ச்சனை
கொண்டானேகொண்டிடிபோலவே குதித்தரக்கரைஇருப்புலக்கை
அடிகள்முடிகள்பல கொடிகள்தடிகள்பொடி [யில்
பொடிகள்படவிசிறி வாலைதவிசி
வளைத்தோடியும்வாரிஅடித்தும் தெரித்தும்விக்கிடமுறித்தும்வீரர் [கள்
தலைக்கேதலைமோதிநெரித்தும்சரித்தமப்படைதொடுக்கும்வாளிகள்
தவிடுபொடிகள்பட உதிர்உதிரஎறி
சருகும்உமியும்என ஊதியபோது
காலாலுதைபட்டபேர்சிலர் கடிக்குள்ளேசிலர்பிடிக்குள்ளேசிலர்
தோளாலறைபட்டபேர்சிலர் தொடைக்குளேசிலரிடைக்குளேசிலர்

சிரம் அற்றபேர்களும்
ஆகியேவிழ
கோடிவீரர்கள்வீரர்மேல்வீழ
கோடிதேருகள்தோன்மேல்விழ
சமரகர்சிதறிட
சேனைகள்மாளத்
செம்புபோலவிரண்டுகண்களும்
அம்புமாரிபிரசண்டம்ஆகவே
இருக்குமயிர்மூன
அந்தமாருதி
முகத்திலும்கொலுவிருந்தோரண
தொடுக்கவும்குலைகுலைந்தராகவ
ஒருமையாடுகருதி
ஓடிவந்தெதிர்
ஆயிரம்பரிதத்தைஓர்கையில்
இறங்கிமுன்எதிர்க்கவேபிற
இவனை அவனை அறைய
வில்லும்வாளியும்
உதிர்ந்திடச்செவிகலங்கரடி
நெடுங்கழுத்தினைமடங்கமாருதி
கதறிருதன்முது
ராசவீதியில்
கரைக்க அட்சதன்மாயவேசிலர்
பசுக்கள் ஆம்எனமேய்குவார்சிலர்
பிணத்திலேசிலர்
ஒளித்தபோர்சிலர்
மான்கள்எனவெளிப்பாய்ந்தபோர்சில
சாய்ந்தமரம்எனவீழ்ந்தபோர்சிலர்
ஒழிந்ததூதுவர்
விழுந்தபோர்சிலர் (மடிந்)

கரம்அற்றபேர்களும்
கதிஅற்றபேர்களும்
அறைவான்ஓர்அறைக்குளேபல
எறிவான்ஓர்எறிக்குளேபல
அதிரதர்மகரதர்
அதலசுதலமொடு
தெரிந்தானே அட்சதன்ஊதிய
எரிந்தானே அக்கணமேசெல
தெரித்தனுமன்உடல்
மூறுக்கில்மறையவும்
தலைமேலுந்தோளிலுமார்பிலு
நிலைமேலுந்தானிலும்வாளிகள்
சரணம்அதைமனதில்
விருவிரெனவிசையில்
அடித்தானேஅட்சதன்எறிய
எடுத்தானேவிட்டெறிபோதினிலே
கவனை இவன் அறைய
அவன் இடைவசமும்
ஒடித்தானே பல்லொடுகுண்டலம்
அடித்தானேகையினில்அங்கவன்
உதறவருபடைகள்
குரைபடஉரைபட
நிலத்தோடேதேயஅரைத்துக்
தலத்தோடேரூபமறைத்துப்
பிணத்திலேசிலர்
தெளித்தபோர்சிலர்
வண்டாகிமறைந்தபோர்சிலர்
மண்டோதரிமுன்பினிலேஅடி
மலைந்தபோரினில்
இலங்கைகாதன்முன்

அனுமாரை இந்திரசித்து எதிர்த்தல்.

எண்சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

வீரர் ஆம் அரக்கரும் அட் சகனும் இக்க
விதம் அனுமான் கையாலே அதமாய்ப் போனார்
ஓரமாத் தூதரும் ராவணன் மூன் ஓடி
உன்மகனும் நமன்உலகம் உற்றான் என்றார்
கார் அடா எனக்குரங்கைக் கிழிப்பேன் என்று
நாற்பதுவெள் ளம்சேனை உடனே வந்தான்
ஆர் அடா குரங்கே நீ ஆர டாஎன்
றதிர்கண்டான் இந்திரசித் தெதிர்கொண் டானே. (22)

அனுமார் இந்திரசித்தோடு பொருதல்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

எதிர்கொண்ட இந்திரசித்தோ டெழும்பின அரக்கர் சேனை
கதிகொண்ட உகாந்தகாளில் கடல்என வீளப்பக் கண்டான்
மதிகொண்ட அனுமான்கையில் வல்இருப் புலக்கை கொண்டு
குதிகொண்டான் எமனேப்போலே கூடினான் சாடினானே. (23)

17. நடை. ராகம் - மத்தியமாவதி; தாளம் - அடசாப்பு.

பல்லவி.

அனுமந்தன் அடித்தானே இத்திரசித்தன்
மனம்நொந்து ஓடித்தானே

அனுபல்லவி.

அனுமந்தன் அடித்தானே மூணேகொண்டுபிடித்தானே
அரக்கர்படையைக்கண்டு இருப்புலக்கையைக்கொண்டு (அனு)

சரணங்கள்.

1. கட்டும்என்றபேரையும்-கிட்டும்என்ற பேரையும்
கறுவிவந் தோரையு - மொறுவிவந் தோரையும்
கைப்படைபோய்ப்மாள உதைத்தான் சிலபேர்களைக்
குப்பல்குப்பல்ஆக வதைத்தான் நிரைநிரையாக்
கரிகள்மேல் பரிகளும் பரிகள்மேல் கரிகளும்
காலான்மேல் தேராளும் தேராள்மேல் காலாளும்
கண்பொறிகலங்க இறைத்தான் சிலபேர்களை
மண்களில் அழுந்த மறைத்தான் கடல்கடந்த
காலால் அனேகம்பேரை வாலால் அனேகம்பேரைக்
கையால் சிலபேர்களை மெய்யால் சிலபேர்களைக்
கசக்கிமூளைகள் பொழிந்தான் கரும்புபோலே
நசுச்கிச்சாறுகள் பிழிந்தான் அரக்கியர்க்குக்
கணவனைக் குமரனைத் தூணவனைத் தெரியாமல்
கதையில் அடித்துடலைச் சிதையப் பொடித்துப்பெருங்
காற்றில்பஞ்சசென ஊதினன் சிலரைத்தேங்காய்க்
கீற்றுக்கிற்றுக ளாகினன் எண்ணிறந்தோர்கள்
கரம்அற்றும் சிரம் அற்றும் உரம்அற்றும் வருரத்தம்
கண்டிடம்எல்லாம்புர மண்டைமண்டையாய்உருள் (அனு)

2. மூட்டிவரும் தேரையும் கிட்டிவரும்தேரையும்
மூடுகிவரும் தேரையும் கடுகிவரும்தேரையும்
மூன்கையால்வாரித் தூக்கினன் தரையில்மோதிச்
செங்கற்பொடிபோல் ஆக்கினன் ஆனைப்படையை
மொத்தியும் குத்தியும்வாலால் சுற்றியும்எற்றியும்வாரி
மூட்டுப்பூச்சிபோல்மடித்துக் கூட்டம்கூட்டமாயடித்து
மூட்டுமூட்டா அடுக்கினன்-கோட்டையும்மல்லங்கைப்
பட்டணமும் நடுக்கினன்அந்நகர்வீதி
முகப்பும் கோபுரங்களும்-வகுப்பும் தாவரங்களும்
மூத்துமாடங்களுந் தேய்ந்து-சித்திரகூடங்களும்சாய்ந்து

மூடியவீசி கொறுக்கினுன்-கோடைகாலத்தில்
இடிபோலவே உறுக்கினுன்-அடித்தடித்து
மூலேயும் குதிரைமலர்ச்-சோலேயும்குதிரைகடைச்
சாலேயும்குதிரை அலே-வேலேயும்குதிரைஆக
முறைமுறையாய்ச்சாய்த்துவிட்டான்-காலால்எற்றித்
தரையிலேதேய்த்து விட்டான்-அரக்கர்தலே
மூலேயும்சதையும்வண்ணக்-காளியும்கூளியும்உண்ண
முழுதும்பேய்க்குலம்ஆடக்-கழுகுங்காக்கையும்பாட (அனு)

3. அங்குசமும் தோட்டியும்-சங்கிலியும்ஈட்டியும்
அஸ்திரமும்சூலாயுதமும்-சஸ்திரமும்வேலாயுதமும்
அரக்கர்விடுத்துமொய்க்கவே-அதெல்லாம்அய்யன்
பெருத்தபுயத்தில்தைக்கவே தைத்தவைஎல்லாம்
அழுந்தத்தோரணமேலே குழந்தைச்சூரியன்போலே
அட்டகாசமது பண்ணி-இவ்டராகவனேஎண்ணி
அமரவே மதித்தானே-பட்டவைஎல்லாம்
உமிபோலே உதிர்த்தானே-ராவணன்மகன்
அடித்தபடைகளிலும்-விடுத்தபடைகளிலும்
தொடுத்தபடைகளிலும்-பிடித்தவண்மேற்பட
அள்ளியேதெரித்தானே-சிலபடையச்
கள்ளிபோல்முறித்தானே-அரக்கியர்கள்
அழுவாரும்தெய்வத்தைத்-தொழுவாரும்வீடுவிட்
டெழுவாரும்அரக்கன்முன்-விழுவாரும்தலைவிரித்
தலங்கோலம் ஆனரே-எல்லாரும்பேய்க்
குலம்போலே போனரே-இத்தப்படியா
யேடிப்பாம்குரங்கைக்கட்டிப்-பிடிப்போம்என்னவேகிட்டி
ஆர்ப்பரவத்துடன் வந்த-நாற்பதுவெள்ளமுஞ்சிந்த (அனு)

அனுமார் பிரமாஸ்திரத்தால் கட்டுண்டல்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அனுமான்பின் னீயும்இந்த் சித்தம் பெல்லாம்
அடித்துவில்லை ஒடித்துச்சா ரதியை மாட்டி
வனம்ஆம்தே ரையும்வீசி மரத்தால் மோதி
மண்டைகலங் கிடஅடித்தான் அரக்கன் அப்பால்
கனம்ஆன பிரமபா சத்தை வீசிக்
கட்டினான் ஐம்பதினா யிரம்பி சாசர்
இனம்ஆக இழுக்கஇலங் கையில்உள் ளோர்கண்
டேசுவார் மாருதியைப் பேசுவாரே. (24)

5. திபதை. ராகம்-பைரவி; தாளம்ஆதி.

கண்ணிகள்.

1. வந்தஅரக்கர் வந்தஇந்திரசித்தன்
வலையில்மாட்டினன்பார் சிலபேர்
இந்தஊருக்கெமன் ஆகக்கோலங்கொண்
டிருந்தகுரங்கிது என்பார் சிலபேர்

2. வினைக்குரங்குவந்த தெனச்சொல்லிராவணன்சை
வெருமானம்கொள்வார் சிலபேர்
தனக்கென்றிருக்கையாலே சமயத்துக்காச்சுதிந்த
சதிமுகாஸ்திரம்என்பார் சிலபேர்

3. அந்தச்சிவனேசிதைக்காக இலங்கைதன்னை
அழிக்கவந்தான் என்பார் சிலபேர்
தந்தையை அண்ணனை மகனைக்கொன்றபழி
தந்துபோடாஎன்பார் சிலபேர்

4. மணவாளனைக்கொன்ற இவனைக்கொன்றால் ஒழிய
வாங்கோம்மங்கிலியமென்பார் சிலபேர்
கனை ஆம்பாசத்தால் முகத்தில்வாட்டம் இல்லை
கபட்டுக்குரங்கிதானென்பார் சிலபேர்

5. அகப்பட்டகுரங்கிதவிட்டால் இலங்கைநகர்க்
கனர்த்தகாலமென்பார் சிலபேர்
நகத்தாற்கிள்ளுவதைக் கோடாலியால்வெட்ட
நமக்குமூடியுமோவென்பார் சிலபேர்

6. இங்கேஇந்திரசித்தைப் பிடியாவிட்டால்இன்னம்
என்னென்னசெய்யுமோவென்பார் சிலபேர்
தங்கைமூக்குப்போன தகப்பனுக்குமூக்குத்
தந்தானேமகன்என்பார் சிலபேர்

இராவணன் கொலுவில் வீற்றிருத்தல்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

மூனைசேர் அரக்கர் இவ்வாறு மூறையிட் டலறச் சேனை சுற்றி
இனம்ஆய் வளைக்க மலைபோலே இலங்கை யழித்த குரங்கி தென்றே
அனுமான் தனைக்கொண் டிந்த்ரசித்தன் அங்கே விடஎங் கேளென்று
புனைமா முடிரா வணன்கண்டு பொறிந்தான் கொலுவிலிருந்தானே.

1% தரு. ராகம்-அசாவேரி ; தாளம்-அட்சரப்பு.

பல்லவி.

வீரசூராவணன் கொலுவீற்றிருந்தானே

அனுபல்லவி.

பேராதரத்தினசிங்கர சன்னம்மேலே சொன்ன
பீடத்தில்மைனாக மலைபோலே துன்ன
சாருதயம்சேர்பத்து சூரியர்கள்என்ன
தலைப்பத்திலும்பத்து மகுடங்கள்மின்ன (வீர)

சரணங்கள்.

1. நடம்ஆடும்ரம்பையும் ஊர்வசியும்அபி
நயம்காட்டி மயில்போ லுலாவ
கடல்போலேமேள தாளங்கள் அண்ட
கடாகம்மட்டும்சென்று தாவ
அடடா இந்திராவாடா சந்திராவாடானன்
றவசரக்காரர்கள் கூவ
வடவாக்கினிஆன வீரகாக்கினிதீர
வந்து மேகம்பனிநீர் தூவ
சுடர்மணிமண்டபம் அண்ட கூடம்அதைத்தொட்டே
தொடைநடுங்கி அசுரர்எல்லாம் நெடுமூச்சுவிடவே
மூடிகளொடுமுடிமோதி அடியிணைபுண்படவே
மூவுலகத்துள்ளோரும் சேவடிகும்பிடவே (வீர)

2. எப்போதென்முகம் திரும்பியவர்க்கெல்லாம்
இருவிகள்வந்துதலை நீட்ட
தப்பாஎட்டானைக்கொம் பொடிந்துபதிறு
சந்திரன்போல்மார்பிலே காட்ட
வைப்பாகியநாக ராசாக்கள் மாணிக்க
மாலைகொண்டடிமேலே சூட்ட
வெப்பானதூர்முகன் முதல் ஆனமந்திரிகள்
வினயோசனைகள்டர ராட்ட

முப்பத்துமுக்கோடி தேவருங்கொண்டாட
மூதல்ஆனதும்புரு நாரதர்தித்தும்பாட
கற்பகம்மென்மலர்மாரி குப்பைகள்போலேபோட
கட்டியம்சொல்லசைதிசை எட்டிலும்மேலேஓட (வீர)

3. இனம்ஆம்மேகங்கள் புகைபோல்ஒதுங்கிக்கொண்
டிரைச்சல்இடாமலே கூச
புனைமாமுகலட்சுமி கரம்துடைப்பார்போலப்
பூவையர்கவரிகள் வீச
எனைநாடிஞன் எனைப்பார்த்தான்வார்த்தைசொன்னான்
என்றரக்கர்சந்தோஷம் பேச
தினமும்ஊழியத்துக்குவரும் தெய்வப்பெண்களைச்
சிறுக்கியர்போல்அரக்கியர் ஏச
முனைபெரும்அட்சதன்வீழ்ந்த மனைவைதைகூடி
மூத்தமகன்செயித்துவந்த கீர்த்தியைக்கொண்டாடி
அனுமான்வருகிற வார்த்தைதனேயகாடி.
அடிக்கடிசீதையைஎண்ணித் துடித்துடன்மனம்வாடி (வீர)

அனுமாரை ராவணன் விளவுதல்.

விருத்தம்.

இருந்தரா வணன்முன் பாக இருந்தமா ருதியை நோக்கிப்
பெருங்குரங் குருவாய் வந்தாய் பிரமன்மால் சிவன்விட்டாரோ
வருந்திவா னவர்விட் டாரோ மனத்துளகப் பட்ட வெல்லாம்
தெரிந்திட விட்டா யென்று சீறுவான் கூறு வானே. (26)

கீ. தரு. ராகம்-செஞ்சுருட்டி; தாளம்-ஆதி.

பல்லவி.

ஆடாகுரங்கே-இங்கேவந்தீ-ஆடாகுரங்கே.

அனுபல்லவி.

ஆரடாகுரங்கே அறிவாயோலங்கை
வாரசிங்காசனம்போல்-வால்இட்டென்னிலும்-
மேல்இட் டிருக்கிறாய் (ஆர)

சரணங்கள்.

1. அச்சம்இல்லாமல் அடங்கிச்சொல்லாமல்
நிச்சயவனகிங்கரர் நிறுத்தஇல்லாமல்
நிசாசரர்களும் அசோகவனமும்
திசாதிசையில்விழ வீசிஎறிந்தநீ (ஆர),

2. கம்பத்தின்மேலே காலனைப்போலே
செம்புமாலையும்சேனைதிபரையும் கொன்றொருக்காலே
சிட்சைசெய்வேனென்று கட்சிஉடனேவந்த
அட்சதனைக்கூட பட்சணம்செய்தநீ (ஆர)

3. நித்தனைசீச்சி நீஒருபூச்சி
இந்திரசித்தனுன்னைதே எதிர்த்தென்னகண்காட்சி
இடிக்கவோகட்டி அடிக்கவோபல்லாற்
கடிக்கவோரத்தம் குடிக்கவோநீ (ஆர)

4. மறைந்தொருகர்மம் வகுத்தஉன்மர்மம்
அறிந்தல்லோகொல்லவேணும் அதற்குமுன்கொல்லதர்மம்
அல்லடாநெஞ்சு கல்லடாநிசம்
சொல்லடாபொட்டச் சொல்லடாநீ (ஆர)

அனுமார் இராவணனுக்கு விடையும் மதியும் கூறுதல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அடல்இரா வணன்இந்த வார்த்தை சொல்ல
அரன் அயன்மால் விடுக்கவந்தேன் அல்ல கண்டாய்
மடமயில்சீ தையைத்தேடி வந்தேன் கண்டாய்
வந்திடத்தில் உனைக்காண வேண்டி உன்ஊர்
இடம்உடைய அசோகவனம் அழித்தேன் கண்டாய்
இராகவன்தூ தாவன்நானே நீபிழைக்கக்
கெடல்அரிய புத்திகேள் கண்டாய் என்றே
இளம்பூவான் அனுமன்எதிர் விளம்பு வானே (27)

21. தரு. ராகம்-மோகனம் தாளம்-அடசாப்பு.

பல்லவி.

ராமசாமிதூதன்நான் அடா-அடடாராவணா
நான்அடாஎன்பேர் அனுமான் அடா

அனுபல்லவி.

மாமலர்த்தலைவாசனும்கயி-லாசனும்ரிஷிகேசனும்
மறந்துனின்றுதந்தநான் அல்லடா
புறம்பேநின்றுவந்தநான் அல்லடா (ரா)

சரணங்கள்.

1. கொடுத்தவரமுந்தனமும்கனமும் வீணிலேஎன்போக்கிறும்
குடிக்கும்பாலையையோகமர் வெடிக்குளேஎன்வார்க்கிறும்
துடிக்குடன்பரஸ்திரீசனங்களைத் தொடர்ந்தேன்பழி ஏற்கிறும்
தூக்கி ஏறவிட்டேணியைவாங்கும் தூர்த்தர்வார்த்தையைக்
[கேட்கிறும்.

தடைபடாமல்என் ஐயன்கால்மீதே
சரண்என்றுல்பிழைப் பாயேஇப்போதே
அடக்கஉன்தரம் அல்லடாசீதை
அவன்இவன்ஷிட வந்தான்என்னுதே(ராம)

2. காலமும்பலமும்தெரியாமல் குதிக்கிறாய்என்னமாயமோ
காமத்தாலேதர்மபுத்தியைக் கடக்கிறாயீதுபாயமோ
சாலமோகெடுகாலமோ அடா உனக்குந்தெய்வசகாயமோ
தங்கைமூக்கறுப்புண்டதல்லவோ சண்டாளாஇதுஞாயமோ
வாலியும்போனான் உன்னைச்சிறைவைத்த
வாலும்போய்விட்ட தஞ்சாதேமெத்த
சிலராகவன் அம்பால்அவன்செத்த
சேதியைநீஅறி யாயோ அடாபித்த(ராம)

3. நீதம்திருந்தும்வேதம்தெரிந்தும் பாதகங்களேச்சூழ்கிறாய்
கெடுமதிகண்ணுக்குத்தோன்றுமல் படுநரகத்தில்மூழ்கிறாய்
மாதர்மோகத்தாலேதுவண்டு தாழாதவரைத்தாழ்கிறாய்
மயக்கமோ கைக்குள் விளக்கைப்பிடித்துக் கிணற்றிலே ஏன்
ஆதிமூர்த்திதானே உத்தண்ட விழுகிறாய்
மாகவந்தான் அரக்கரைமண்ட
சீதையைவிட்டுப் பிழைஅடாகண்ட
சேதியைச்சொன்னேன் வீரகோதண்ட(ராம)

இதுவுமது.

22. தந. ராகம்-பைரவி; தாளம்-ஆதி.

பல்லவி.

ஏழைக்கஎன்றுல்வாடா-நான்சொன்ன-பேசைக்கேள் அடாமூடா

அனுபல்லவி.

பழிக்கெல்லாம்நீதானே ஆளா
படைத்துக்கொண்டாயே சண்டாளா தப்பிப் (பிழை)

சரணங்கள்.

1. வேதன்முதல்விண்ணோர்கள் குறைநீங்க-ஆதி
விஷ்ணுவேபுவனம்எல் லாம்தாங்க-ஒரு
கோதண்டராமன்என்னும் பேர்ஓங்க-வந்து
குதித்தாயே சரத்தால்உன் உயிர்வாங்க
ஆதவன்முன் இருள் கிட்டுமோ-மூட
வஞ்சக்குக்கொம்புத்தேன் எட்டுமோ அந்த
சீதைஆப்தெய்வம்உனக் கொட்டுமோ இந்தத்
திருட்டுப்புத்திஅலைக் கட்டுமோ தப்பிப் (பி)

2. வினைசெய்வதற்குச்செய்யும் வகைஎதோ ராமன்
விடுங்கணைஒன்றுனக்குப் போதாதோ மிக
இனிதாகரன்சொல்வதெல் லாம்நீதோ சற்றும்
இணக்கம்இல்லாதஉன் னுடன்வாதோ
உனதுதங்கைகொங்கை போய்அடா பாவி
உனக்கிதன்மேல்என்ன வாய்அடா அந்த
தனிஉலகுக்கெல்லாம் தாய்அடா அவள்
தனைஉன்குலம்சுடும் தீய்அடா தப்பி (பி)

3. புவிமேல்உன்னைவென்ற கார்த்தவீரன் விழப்
புடைத்தானேபரசுராமன் எனும்சூரன் எதிர்த்
தலையும்வென்றரகு குலதீரன் தேவி
அவளைவிட்டால்லீலங்கைக் கதிகாரன்
தவறில்லாவரத்தோ டகஸ்தியமுனி முன்னம்
தந்தவில்லுக்குன்சேனை வெய்யிற்பனி அங்கே

எவர்களுக்கும் ஏழை ஆனதனி நான்
எனக்குமிஞ்சும்வானரர் அனேகர்இனி தப்பிப் (பி)

அனுமாரைக் கொல்லாதபடி ராவணனை விபீஷணர் விலக்குதல்.

என்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

போதரவா அனுமன்இந்தப் புத்திசொல்ல
பொங்கியவாள் அரக்கன்விழிப் பொறிகள் சிந்தி
நீதிவச னம்குரங்கே நீயோ சொல்வாய்
நேர்த்தியிது நேர்த்தியிது என்று சீறிப்
பாதகரால் இவனைவெட்டும் என்ருன் அங்கே
பணிந்துவிபீ ஷணன் அண்ணன் பாவம் கண்டாய்
தூதரைக்கொல் லுவதென்று ஞாயம் சொல்லித்
தலைக்குவான் ராவணனை விலக்கு வானே. (38)

2ஆம் தரு. ராகம்-சாவேரி; தாளம்-ஆதி.

பல்லவி.

இவனைக்கொல்லுமேவன்என்று-நீஎழுந்ததுமெத்த
இகழ்ச்சி அடா அண்ணன்

அனுபல்லவி.

தவம்தானேமிகுந்த இலங்கேசனே அந்த
சாதிமனிதன்சொந்த தூதுவன் என்றுவந்த (இ)

சரணங்கள்.

1. தூசம்கட்டும்கீர்த்திக்கு அழிவுவந்ததிப்போதா
சாஷாக்கொல்வேன்என்னு துடிக்கிறாய்என்னசூதா

தொசுவைப்பொருட்டாயெண்ணிக் கருடன்எதிர்ப்பதேதோ
குரங்கைநீஎதிர்ப்பாற் புதம்பெரும்நகையாதோ (இ)

2. அந்நாள்நம்தங்கையைக் கொல்லாமல் நரர்தாமே
அவர்பலம்வெளிஆக அனுப்பினதறிந்தோமே
இந்நாள்நமதுபலம் வெளிஆம்என்றெண்ணிகாமே
இந்தக்குரங்கைக்கொன்றால் எங்கெங்கும்வசைஆமே (இ)

3. பொறுக்காக்கோபம்வந்தாலும் குரங்கைக்கொல்வதோசத்தி
புலிபசித்தாலும்என்ன புல்லைத்தின்னுமோ நத்தி
அறிக்கைசெய்தேன்இனி நீயே அறிவாய்புத்தி
ஆக்கினைசெய்தப்பால் இதை அகற்றுவதுவேவெற்றி (இ)

அனுமார்வாலில் தீ சுடாதிருக்கும்படி அக்கினிபகவானை சீதை வேண்டல்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

தம்பிவிபீ ஷணன்சொலரா வணனும் கேட்டான்
தையலார் தாலியிலே கயிறில் லாமல்
வம்புபடி கயிறெல்லாம் முறுக்கிச் சுற்றி
வாலிலே கிழிசுற்றித் தீயை யிட்டான்
மூன்றிருநூ றாயிரம்பேர் இழுத்தோர் வீழ
முனைந்தெழுந்த அனுமன்தன் கனைத்தொடாதே
பொன்பொறிபோ லேஇருப்பாய் நெருப்பே யென்று
போற்றுவாள் சீதைசொல்லி ஆற்று வாளே. (29)

24. தந்த, ராகம்-ஆனந்தபைரவி; தாளம்-ஆதி.

பல்லவி.

அக்கினிபகவானே-வருந்தாதே-அனுமானைநீதானே

அனுபல்லவி.

திக்குவேறில்லைநீயே திக்குப்புடவைசோர்ந்தால்
கைக்குண்டோஉபகாரம் காக்கஉனதுபாரம் (அக்)

சரணங்கள்.

இத்திசைவந்தானே-என்பிராணேசன்கை முத்திரைதந்தானே
சத்தியம்ஆகச்சர்வ சாட்சிநீதானே ஆனால்
பத்தினிமார்க்குள்மேலாம் பத்தினிநானே ஆனால் (அக்)

2. விவரித்துள்ளதுசொல்லவோ உனதுமித்திரன்
தவப்புத்திரன்இவன் அல்லவோ
கவலைஅரக்கர்இரு கண்ணுக்கெல்லாம் நெருப்பாய்
இவனுடையவாலுக்குமாத்திரம்மலர்போல்இருப்பாய் (அக்)

3. தன்மத்தைக்குறியாயோராமதூதன்என்றின்னமும் அறியாயோ
மூன்னுள் என்சாமிகையை உன்னுல் அல்லவோதொட்டேன்
இந்நாளும்நான் அவர்கைஇணங்கவைப்பாய்கும்பிட்டேன் (அக்)

அனுமார் இலங்கையைக் கொளுத்துதல்.

எண்சீர்க்கழி நெடிலெடி ஆசிரியவிருத்தம்.

கோடையிலே கசங்குகின்ற மலர்போற் சீதை
குழைந்துகுழைந் திவ்வாறு புலம்பி ஏங்கி
வாடையிலே அக்கினியும் பயந்து செம்பொன்
மலர்போல வேஇருந்தான் நாலு திக்கும்
ஆடரங்கும் சாலையும்மூ லைகளும் தோப்பும்
அரசிருப்பும் திண்ணைகளும் படிக்கை வீடும்
மாடமும்கூ டமும்இலங்கை எங்கும் வாலை
வளர்த்தினன் அனுமன்தன் கொளுத் தினனே. (30)

28ஆந் தரு. ராகம்-தோடி; தாளம்-ஆதி.

பல்லவி.

பற்றிக்கொண்டது அனுமான் இட்ட அனல்
சுற்றிக்கொண்டதலங்கையை.

அநுபல்லவி.

வெற்றிப்பெண்சானகி உறைமரம்ஒன்றும்
விட்டுநீங்கித்திசை எட்டும்ஒக்கிமுட்டி (பற்றி)

சரணங்கள்.

1. எடுத்தபொற்கோ புரங்களும் மலர்
படுத்தபூஞ்சப் பரங்களும் ஈரி
அடுக்கமாயும்தா வரங்களும் சுவர்
கொடுத்தமணிஉத் தரங்களும்
உன்னத உப்பரிகையும் தங்கத்தாலே
மின்னியகொடி வகையும் ஆனசேனை
மன்னும்விமானத் தொகையும் நவரத்தினப்
பொன்அறைகளும் குகையும் திகுதிகெனக்
கொண்டல்கொண்டலாய்ப்புகை எறவே அத்தைக்
கண்டவர்சிவன்விட்டு மாறவே அவர்
பெண்டுபிள்ளைகள்பழி கூறவே பெண்கள்
கொண்டைகள்எல்லாம்சுடு நாறவே
உருவங்கள்தாறுமாறுய்ப் பருவங்கள்வேறுவேறு
யருகெங்கும்கீறுகீறுத் தெருவெங்கும்தூறுதூறுய் (பற்றி)

2. மூதெயில்வளைத்து சொலிக்கவே படும்
வாதைகண்டமரர் சலிக்கவே சொல்லும்
வேதசாஸ்திரங்கள் கெலிக்கவே எங்கள்
சீதைசொன்னபடி பலிக்கவே

சாகரங்களும் குறைய புகைப்படலம்
ஆகாயம்மட்டும் நிறைய பாதாளத்தில்
நாகரும்கூட இறைய ராவணனும்
மேகதலத்தில், மறைய இலங்கையிலே
கிணற்றுநீரும்சுண்டி வற்றவே செத்த
பிணத்தின்வெடிநாற்றங்கள் சுற்றவே வாலே
வணங்கிஎழுந்தெழுந்து மெத்தவே செங்
தணல்பொறிஆக அய்யன் எற்றவே
புரவியெல்லாம்*உவிய நிருதர்எல்லாம்அவிய
எனினியாக்கவிய கரிகரியாக்குவிய(பற்றி)

3. கைக்குழந்தைகளைப் போடுவார் பெற்ற
மக்களைவிட்டுவிட் டோடுவார் புகைச்
சிக்கினிலேதள்ள மாடுவார் ஒரு
மிக்கஅரக்கியர்கள் வாடுவார்
மலர்ச்சோலைபொரிந்த தென்பார் ராவணன்
கொலுக்கூடம்எரிந்த தென்பார் வீட்டின்மேல்வீடு
நிலத்தோடேசரிந்த தென்பார் வெட்டவெளியாத்
தலைக்கடைஎரிந்த தென்பார் தவிதவித்து
வேலைக்குள்ஓடிவிழச் செல்லுவார் பெண்கள்
மூலைக்குமூலைவாயை மெல்லுவார் அனல்
மேலிட்டிடாமற்குழி கெல்லுவார் அனுமான்
வாலுக்குத்தெண்டன்என்று சொல்லுவார்
மாடகூடம்ஆனேக கோடிகோடிநீறுக
மேடுமேடாகிப்போகக் காடுகாடாகிவேக (பற்றி)

* உவிய-மிதுதியாகச்சாக

வானரவீரர்கள் திரும்புகாலையில் மதுவனம் அழித்தல்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அக்கினியை இலங்கையில்இவ் வாறிட்டுச்
சீதைதலை அறிந்து போற்றி
மைக்கடல்வாய் மைந்தரகம் தணைக்கண்டான்
சேனைகளே வணங்கிக் கண்டான்
புக்கதுசொல் அணுமானும் அங்கதனும்
சேனைகளும் போய்ச்சுக் ரீவன்
தக்கமது வனம்கண்டு கிலேப்பட்டார்
மதுவைஉண்ணத் தலைப்பட்டாரே.

2. நாகு. ராகம்-அசாவேரி; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

வானரவீரர்எல்லாம் பாய்ந்தாரே-மது
வனம்எல்லாம்கொள்ளையிட்டு மேய்ந்தாரே
வாணும்சூரியபக வாணும்தரியாஅந்த
வனத்தினில்மிகுந்த தேனும்கனியும்தின்ற (வான)

சரணங்கள்.

1. திரளதானமாங் கனியும் ஆ
தினிபழுத்த தேங்கனியும் தேன்
உருகுகதலிப்பூங் கனியும் சுவை
ஒழிபடாவிளாங் கனியும் கையூற்
றிருகித்திருகிப் பறிக்கத் தினைதினை
பெருகிப் பெருகித்தெறிக்க வழிபோய்

வரும் இளைப்பினுல் வந்தடைக்கவே
இருவில்லாப்புற மும்புடைக்கவே (வானர)

2. வாயிலேஅளிப்பார் சிலபேர் தேன்
வாயிலேஒளிப்பார் சிலபேர்
வாயிலேஷிளிப்பார் சிலபேர் கடை
வாயிலேதுளிப்பார் சிலபேர்
சக்கள்மொய்த்தாற் போலே மொய்த்து
இரைச்சலிட் டொருகாலே பெரு
வாயிலேமதுவைவழியக் குதட்டிக்கொண்டு
ஓபகின்றவரைஉறுமி அதட்டிக்கொண்டு(வானர)

3. இக்கரன்வாலிக்கிட்ட தோட்டம் இப்போ
இதிலேசுக்கிரீவர்க்கு நாட்டம் என்று
வந்துபுகுந்துகடல் ஓட்டம் போதும்
மதுவைவளல்லாம்குடித் தாட்டம் செய்ய
அந்தவீரஹநுமான் எதிர்க்க அவனை
அடித்தானே அங்கதன் பதைக்க சொல்லும்
எக்தஆணஆக்கினைக்கும் இல்லாமலே
தக்கம்இச்சையில்தடை இல்லாமலே (வானர)

சீதையைத் தேடப்போனவர்களைக் குறித்து ஸ்ரீராமர் இரங்கல்.

வஞ்சி விருத்தம்.

ம் ராமசாமி—தெற்கினில் போனபேரை
க் காணுமேனென—னக்குறை கூறுவர்மேன.

26. திபை ஈ. ராகம்-ஆஹிரி; தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1 இக்குதிக்காச்சீதையைத் தேடிநொந்தாரோ-எந்த
இக்கிலுங்காணுமல்எங்கே வாடிவந்தாரோ

2. தெற்குத்திசையில் போனேரைக் காணேன்கண்ணுலே-அட-
சுக்கிரீவாகான்எதுக்கின்னம் இருந்தேன்மண்மேலே

3. கண்ணிச்சீதை இறந்தாளோ *எண்ணபட்டாரோ-இத்தை
என்னசொல்வோம்என்று சீவன்தன்னைவிட்டாரோ

4. நான்கணக்கைஎண்ணிஎண்ணி எக்கம்ஆனுரோ-உன்றன்
ஆக்கினைக்குப்பயந்ததவசு நோக்கப்போனுரோ

5. மற்றெருலோகத்தைச்சுற்றித் தேடுகின்ருரோ-சிறையில்
வைத்தஅரக்கரோடேபோர் ஆடுகின்ருரோ

6- தென்முகமேமுகம்ஆக இன்னம்செல்வாரோ-இங்கே
என்முகத்தில்சீதைசேதி என்னசொல்வாரோ

7. தன்வரவுபார்க்கும்என்னைத் தளரப்பார்ப்பானே-அனுமான்
என்வயிற்றில்என்றுவந்து பாலவார்ப்பானே

8. கவலைஎன் அனுமானிருக்கக் காரியம்போகுமோ-அய்யோ
அவனுல் ஆகாதகாரியம்மின் ஆரால்ஆகுமோ

ஸ்ரீராமருக்கு அனுமார் சீதையின் இருப்புக் கூறுதல்.

விருத்தம்.

வண்டேபோல் மனஞ்சுழல இந்த வண்ணம்
மடலேமேபால் சுக்ரீவ னுடனே சொல்லிக்

---

* தேடிப்போன வானரர்.

கொண்டேதென் முகத்திலே முகத்தை வைத்துக்
குளித்துரா கவன் இருந்த சபைக்கு முன்னே
பண்டேஅங் கதன்முதற்சே னைபின் செல்லப்
பறந்துவந்து கரங்குவித்துப் பணிந்து கண்டேன்
கண்டேன்சீ தையைஎன்று கூவிக் கூவிக்
கதிகொண்டான் அனுமன்வந்து குதிகொண்டானே.

26. தரு. ராகம்-முகாரி; தாளம்-அடசாப்பு.

பல்லவி.

கண்டேன் கண்டேன் கண்டேன் சீதையைக் கண்டேன்ராகவா.

அனுபல்லவி.

அண்டருங்காணுத இலங்காபுரத்திலே
அரவிந்தவேதாவைத் தரவந்தமாதாவைக்(கண்

சரணங்கள்.

காவிவிழிகளில் உன்உருவெளிமின்ன
கனிவாய்தனிலேஉன் திருநாமமேபன்ன
ஆவித்தரணையைப் பிரிந்தமட அன்ன
மானல்நான் சொல்லுவதென்ன
பூவைத்திரிசடை நித்தநித்தம்சொன்ன
புத்திவழியேதன் புத்திலேமன்ன
பாவி அரக்கியர் காவல்சிறைதன்ன
பஞ்சுபடிந்தப முஞ்சித்திரம்என்ன (கண்)

பனிக்கால்வாரிசும் போலநிறம்கூசி
பகல்ஒருயுகம்ஆகக் கழித்தாளேபிரியாசி
னைத்தங்கோவணன் அந்நாள்வரச்சீசி
னில்லடா என்றேசி

கனித்துத்தன்உயிர்தன்னைத் தான்விடமகராசி
சாரும்பொழுதுகாணும் சமயமிதுவேவாசி
இனித்தாமதம்செய்யல் ஆகாதென்றிடர்வீசி
இராம ராம ராம ராமனென்றெதிர்பேசி (க

3. அடல்சேருமவ்வாலியை வாலுலகிலேகூட்டி
அவனியைச்சுக்ரீவன் ஆளமுடிசூட்டி
உடனேநீதூதுபோ என்றசொல்அமுதூட்டி
உன்னுழில் பாராட்டி
விடவந்தஅனுமந்தன் தான்என்றுசீராட்டி
விவரம்சொல்லஉயிர்கொண் டிருக்கிறுள்சீமாட்டி
திடமாலட்சுமனன்செய்த பர்ணசாலைவீட்டில்
தேவாதிதேவாஉன் திருவாழிதனைக்காட்டி (க

ஸ்ரீராமர் சீதாதேவியின் சூடாமணி கண்டு மகிழ்தல்.

தரவு கொச்சகக்கலிப்பா.

மணிஅனுமான் இதுசொல்லிப் பாவைஉத வியசூடா
மணிஅடையா ளம்கொடுத்தான் வள்ளல்இரா கவன்கண்டான்
அணிஉடலம் புளகித்தான் அகம்குளிர்ந்தான் முகம்மலர்ந்தான்
துணியும்அந்த மணிவாங்கித் துதித்தான்சம் மதித்தானே.

24½ தரு. ராகம்-சாவேரி; தாளம்-அடசாப்பு.

ப ல் ல வி.

சூடாமணிகண்ட-போதேசாமிக்குவந்த-சுகமேஅனந்தசுகம்.

அ னு ப ல் ல வி.

வாடி அனுமான்சொல் ஆடிமூட்டமுட்ட
நாடிச்சீதையம்மை சூடிவரவிட்ட

சரணங்கள்.

1 பலமாமணிதன்னை வாங்கினன் உயிர்செய்
அமிர்தசஞ்சீவிபோல் தாங்கினன் சீதை
நலக்கைபோற்பிடித் தோங்கினன் கவலை
கதிர்கண்டபனிபோல் நீங்கினன் கண்டு
கண்இரண்டும் குளிர்ந்தான் மேல்வரும்
எண்ணங்களும் தெளிந்தான் அந்த (சூடா)

2. மடித்துவாயிதழ் கடித்தான் மேனி
மயிர்ப்புளகம் பொடித்தான் வேர்வை
பொடிக்கத்துடி துடித்தான் அனுமான்
புத்திசொல்லிப் படித்தான் சேனையைப்
போர்க்குச்செல்லும் என்றான் அடிக்கடி
சேர்க்கச்சொல்லும் என்றான இப்படி(சூடா)

3. அரக்கர்ஆம்இருள்எல்லாம் ஓடவே தர்மம்
ஆனபயிர்வளர்ந்து கூடவே கீர்த்தி
விரித்தாரம்பையர்கீதம் பாடவே தேவர்
வீசும்பூமலர்எங்கும் மூடவே வரவர
மேனி பாரிக்கவே துர்க்காப
வானி பூரிக்கவே அந்த (சூடா)

ஸ்ரீராமர் தென்சமுத்திரக்கரையைக் காணுதல்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

இந்தவண்ணம் சாமிமன மகிழ்ந்து தேறி
இலங்கையைப்போய் வளைந்திடவே சேனை சூழ
அந்தஅனு மான்மேலே தானும் தம்பி
அங்கதன்தோள் மேலும்எழுந் தருளிச் சென்று

தொந்தம்உள்ள படைத்தலைவர் முன்னும் பி
சூழ்ந்துவரச் சுக்ரீவன் அருகே இன்று
முந்திவழி காட்டிஇட ராமச் சந்தின்
முறைகொண்டான் தென்கடலின் துறைகண்டான்

சுந்தரகாண்டம்.

முற்றிற்று.

விருத்தம்-32-கொச்சகம்-3-ஆக-35.

திபதைகள்-6-தருக்கள்-27-ஆக-33. (35)

யிரம்-1-க்கும்-காண்டங்கள்-5-க்கும் கூடியகொச்சகம்-6.

வெண்பா-2-வசனம்-1-விருத்தம்-142-ஆக-145.

தோடயம்-1-திபதைகள்-40-தருக்கள்-96-ஆக-137.

சக்கரவர்த்தித் திருமகனர்

திருவடிகளே சரணம்.

